223307




| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 281-387 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 281,286,291,292, 294-297,299, 305,306, 310-311, 312-313, 327, 330, 334, 335, 348, 350, 359-360, 365-384 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 286-300 |
| திருமதி வாசுகி முருகேசன் | 300-302 |
| * திரு. கே. சுப்பராயன் | 303-313, 315-318 |
| * திரு. ஆ. நடராசன் | 318-325 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 325-333, 353, 354 |
| திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 308, 333-342 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 313, 314, 344-351 |
| திரு. வி.பி. சிங்காரவேலு | 351-355 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 356-361 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 361-365 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 388 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 7, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 ஏப்ரல் 19, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்

கோடாமை கோடா துலகு"

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *321,* திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**321—**

**வயர்லெஸ் கருவி**

***22588—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக வணிக வரித் துறையினர், பாதுகாப்பற்ற பகுதிகளில் பணியில் ஈடுபடும்போது, பாதுகாத்துக்கொள்ள வாகனத்திற்கு wireless கருவி ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 7, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 ஏப்ரல் 19, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்

கோடாமை கோடா துலகு”

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**321—**

**வயர்லெஸ் கருவி**

***22588—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக வணிக வரித் துறையினர், பாதுகாப்பற்ற பகுதிகளில் பணியில் ஈடுபடும்போது, பாதுகாத்துக்கொள்ள வாகனத்திற்கு wireless கருவி ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையில் பாதுகாப்பற்ற பகுதிகள் என்று குறிப்பிடத்தக்க பகுதிகள் எதுவும் இல்லை. வரி ஏய்ப்பைத் தடுத்திடும் வகையில் தற்போது ஏற்படுத்தப்படும் சுற்றும் குழுக்களின் (Roving Squad) வாகனங்களுக்கு wireless கருவி பொருத்துவதற்கு அரசு தக்க ஆணை பிறப்பித்துள்ளது. செயலாக்கப் பிரிவைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே "wireless" கருவிகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரத்திற்கு அவசியத்திற்குப் பயன்படுத்தப்படும் wireless கருவிகளை, வட்டார, மாவட்ட அரசு மருத்துவமனைகளில் அவசர நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வகையில் உபயோகப்படுத்துகின்ற Ambulance ஊர்திகளில் பொருத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வணிக வரித் துறையைப்பற்றிக் கேள்வி கேட்டால், துணை வினாவிற்கு ஏதாவது தொடர்பு இருக்க வேண்டாமா? அது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்க வேண்டியது. நீங்கள் உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, வரி செலுத்தாதவர்களுடைய பட்டியலில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எவ்வளவு தொகை செலுத்த வேண்டியது இருக்கிறது? அப்படி வரி செலுத்தாதவர்களுடைய பட்டியலைத் தமிழக அரசு வெளியிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நல்ல கேள்விதான். ஆனால், இதிலே தொடர்புடைய கேள்வி அல்ல இது. தனியாக ஒரு கேள்வி கேட்டால், அது பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தர இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி. தாமரைக்கனி, நீங்களாவது ஒரு தொடர்புடைய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வணிக வரித் துறையினர், பாதுகாத்துக்கொள்வதற்கு wireless



2000 ஏப்ரல் 19]

கருவி வைக்கப்படுமா என்று கேட்கிறார்கள். இப்பொழுது ஒன்றுமே அப்படியெல்லாம் அவசியம் இல்லை, சோதனைச் சாவடிகள் எல்லாம் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் எல்லாம் வந்து தடுக்கிறார்கள், ஓரத்திலே நிறுத்தச் சொல்கிறார்கள், நிறுத்திவிடுகிறோம். அவர்கள் ஏதோ குசு, குசு என்று பேசுகிறார்கள், ஜோலியை முடித்துவிட்டு, அவர்கள் போய்க்கோண்டே இருக்கிறார்கள். முறைப்படி அவர்கள் கடமையை அவர்கள் செய்து கொண்டே இருக்கிறார்கள். எல்லோருமே செய்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. Cellular phone வணிக வரித் துறை அதிகாரிகளுக்கு கொடுக்கப்படுமா? இந்த ஆட்சி வந்த பிறகு, இந்த 4 ஆண்டு காலத்தில், வணிக வரித் துறையின் மூலமாக சோதனைச் சாவடிகளில் அபராதம் எவ்வளவு வசூலிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகளின், ஏப்ரல் 1999 முதல் மார்ச் 2000 வரையிலான கணக்கு என்னிடத்திலே இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தர விரும்புகிறேன். சோதனையிடப்பட்ட வாகனங்களுடைய எண்ணிக்கை 12,60,294. வசூலிக்கப்பட்ட இணக்கக் கட்டணம் 8.32 கோடி ரூபாய். வசூலிக்கப்பட்ட முன் வரி (Advance Tax) 9.09 கோடி ரூபாய்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரி மூலம் கிடைக்கிற வருவாயிலிருந்து மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி ஆதாரமானது அந்த மாவட்டங்கள் மூலம் கிடைக்கிற வணிக வரி அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. தனியாக இந்தக் கேள்வி கேட்டால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய கடைசிப் பகுதியான கன்னியாகுமரி மாவட்டத்தில், களியக்காவிளை என்ற ஊரில் ஒரு சோதனைச் சாவடி உள்ளது.

[2000 ஏப்ரல் 19

அதனுடைய எல்லை என்பது ஒரு பர்லாங் கேரளாவிற்குள் இருக்கிறது. சில நேரங்களில் இதிலே வருகின்றவர்கள் சோதனைக்கு உட்படாமல் சென்றுவிடுவதற்கான வாய்ப்பு இருந்து வருகின்றது. எனவே, காவல்துறை மூலமாக அதைக் கண்காணிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இப்போதே மேற்கொள்ளப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிணத்துக்கடவு பகுதியிலே, கேரள எல்லையோரம் அமைந்திருக்கிற அந்தச் சோதனைச் சாவடியிலே இருக்கிற காவலர்களுக்குக்கூட சில சமயங்களிலே பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஒருமுறை விபத்திலே அங்கே இருக்கிற காவலர்கள்கூட இறக்க நேரிட்டது. இப்படிப்பட்ட இடங்களிலே பாதுகாப்பான கட்டட வசதிகள் கட்டித்தரப்படுமா? அங்கேயிருந்து சில வாகனங்கள் நிற்காமல் செல்கின்றபோது, அவற்றைத் துரத்திப் பிடிக்கின்றவர்களுக்கு வாகன வசதி செய்து தரப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வணிக வரித் துறையினர் பாதுகாப்பற்ற பகுதிகளில் பணியில் ஈடுபடும்பொழுது, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வாகனங்களுக்கு Wireless ஏற்படுத்திக் கொடுக்க முடியுமா என்பது மூலக்கேள்வி ஆகும். துணைக் கேள்விகள் எழுவதைப் பார்க்கும்போது என்னை இப்போது பாதுகாத்துக்கொள்ள ஏதாவது Wireless கருவி தேவைப்படுமோ என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 322, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2000 ஏப்ரல் 19]

**322—**

### உயர்நிலைப் பள்ளி

***30422—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், பெரியசெவலை கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1999-2000 கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டம் பெரியசெவலை கிராமத்தில் இருந்த நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 323, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**323—**

### உறுதித் தன்மை

***31834—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அரசு பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையைப் பொதுப் பணித் துறையின் பொறியாளர்களைக் கொண்டு ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 ஏப்ரல் 19

(அ) மற்றும் (ஆ) பொதுவில் அரசுப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை வழங்கப்பட்டு, பொதுப் பணித் துறையால் வரைபடம், வடிவமைப்பு, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறைப் பொறியாளர்களின் நேரடிப் பொறுப்பில் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டு, முடிவடையும்போது செயற்பொறியாளர்/ கண்காணிப்புப் பொறியாளர் அளவில் கட்டுமான உறுதிக்குச் சான்றிதழ் அளிக்கப்பட்டு பிறகு பயனுக்காகக் பள்ளிக் கட்டடம் அனுமதிக்கப்படுகிறது. மேலும், பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் கொண்டு வரப்படும் மேற்குறித்த பள்ளிக் கட்டடங்கள் ஆண்டுதோறும் ஆய்வு செய்யப்பட்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலின், இப்பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுசெய்ய வேண்டியது என்ற அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சியிலுள்ள பள்ளிகள் எல்லாம் திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து நமது அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டவை. ஆனால், இதுவரை பராமரிப்புப் பணிகள் எதுவுமே பத்துப் பதினைந்து ஆண்டுகளாக நடைபெறவில்லை. ஓட்டுக் கட்டடமாக இருக்கிறது. தனியார்ப் பள்ளிக் கட்டடங்களுக்கு பொதுப் பணித் துறைப் பொறியாளர் சான்றிதழ்—Stability Certificate—வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. ஆனால், அரசுப் பள்ளிகளுக்கு அதுபோன்ற சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசுப் பள்ளிக் கட்டடங்களுக்கும் இதுபோன்ற சட்டம் இருக்கிறதா? அரசுப் பள்ளிக் கட்டடங்களுக்கும் கண்டிப்பாக இதுபோன்ற சட்டம் வேண்டும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வதோடு, நிறைய அரசுப் பள்ளிக் கட்டடங்கள் கேட்பாரற்ற நிலையில் இருக்கின்றன என்பதையும் தெரிவித்து, அரசுக் கட்டடங்களையும் செங்கோட்டை நகராட்சியிலுள்ள பள்ளிகளையும் உடனடியாகப் பராமரித்துத் தருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளுக்காக, பொதுப் பணித் துறையால் கட்டப்படுகிற கட்டடங்கள் அவர்களுடைய பட்டியலிலே



2000 ஏப்ரல் 19]

இடம்பெற்று, தொடர்ந்து ஆண்டுதோறும் அது பரிசீலனைக்கு உள்ளாகிற ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஒருவேளை, இன்னோர் அரசிலேயிருந்து தமிழக அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால், அந்தக் கட்டடங்கள் பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, அவர்களுடைய மேற்பார்வையில் இருக்கின்றனவா அல்லவா என்பது இப்போது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினா அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்வி குறித்துத் துறையினருக்குத் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கோட்டூர்புரம், அதேபோன்று அம்பத்தூர் மேற்கிலே இருக்கின்ற பாடிக்குப்பம் பகுதிகளிலே எல்லாம் இருக்கின்ற பள்ளிகளை, ஒரு சின்ன மழை பெய்தாலே இரண்டு நாட்களுக்கு நடத்த முடியவில்லை. காரணம், உள்ளே இருக்கிற தரைகளும் முறையாகச் செப்பனிடாமல் மண்ணும் குழியுமாக இருக்கின்றன. அதேபோல, மேலே வானம் பார்த்த பூமிபோல் ஓடுகளெல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஜன்னல்களை எல்லாம் அங்கு உள்ளூரில் இருக்கின்ற மக்கள் யாரோ இரவு நேரங்களில் வந்து எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். ஜன்னலே இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே பள்ளியிலே காலையிலே மாணவர்கள் வந்தவுடன் அதையெல்லாம் சுத்தம் செய்துவிட்டுத்தான் உட்கார்ந்து படிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அம்பத்தூர் பகுதியிலே இருக்கின்ற பள்ளிகளின் நிலை குறித்து ஆய்வு செய்து அந்தக் கட்டடங்களைப் புதுப்பித்துத் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடம் இருப்பதுதான் எனக்குத் தெரியுமே தவிர உள்ளே இருக்கிற குண்டும் குழியும் எனக்குத் தெரிய வாய்ப்பு இல்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியிலே ஜன்னல்களை எல்லாம் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அவருடைய தொகுதியிலே அப்படி இருப்பார்களானால் அதை அவர் காவல்துறைக்குத் தெரிவித்து அதைக் கண்டுபிடிக்க வேண்டும். இதையெல்லாம் அமைச்சர் நேரடியாகப் பார்த்துச் செய்ய முடியாது

என்ற காரணத்தினாலேதான் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. அதைக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பள்ளியில் என்னென்ன செய்ய வேண்டுமென்று ஆணையிட்டால் அதை நிறைவேற்ற அந்தத் துறை தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 324, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**324—**

**மருத்துவமனை**

***21274—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வடபாதிமங்கலத்தில் மருத்துவமனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலத்தில் ஓர் அரசு மருத்துவமனை அமைப்பது தற்போது சாத்தியமில்லை. இக்கிராமத்தில் துணைச் சுகாதார நிலையமும், 3 கி.மீ. தொலைவில் சாத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் 9 கி.மீ. தொலைவில் புன்னவாசல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும் வடபாதிமங்கலம் கிராமம் அடங்கிய மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்குப் போதுமான அளவில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே, மத்திய அரசின் வரையறையின்படி வடபாதிமங்கலத்தில் ஒரு மருத்துவமனையோ அல்லது ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையமோ அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து வடபாதிமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் தோற்றுவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியினுடைய வளர்ச்சி முன்னேற்றத்தைக் கருதி ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றாலும் ஓர் அரசு மருத்துவமனை வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒருவகையிலே ஓர் அரசு மருத்துவமனை—துணை மருத்துவமனை போதுமான அளவிலே அந்தப் பகுதி மக்களுக்கு பயன்பாடு உடையதாக இருக்காது என்ற காரணத்தினாலே அரசு மருத்துவமனை—தொடங்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகை 1,34,142. 30,000 மக்களுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் ஏற்கெனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்த ஒன்றியத்தில் உள்ளிக்கோட்டை, சாத்தனூர், தலையாமங்கலம், புன்னவாசல் ஆகிய இடங்களிலே செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அந்த மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தாலும்கூட மருத்துவமனை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனென்றால் மக்கள் தொகை அடிப்படையிலேதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்துகிறது. மேலும் இப்போது அங்கே அரசு மருத்துவமனை தொடங்குவதற்கு நிதிநிலையும் அனுமதிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 325, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 19

**325—**

### துணை மின் நிலையம்

***32207—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், விட்டலபுரம் கிராமத்தில் துணை மின நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், விட்டலபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. துரை. சந்திரசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள 40 கிராமங்களில் குறைந்த மின் அழுத்தம் இருப்பதைத் தாங்களே அறிவீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து—அரசு புறம்போக்கு நிலம் விட்டலபுரத்தில் 8 ஏக்கர் இருக்கிறது. மின்துறை அதிகாரிகளோடு, வருவாய்த் துறை அதிகாரிகளோடு அந்த இடத்தையெல்லாம் பார்த்து வந்திருக்கிறோம். எனவே குறைந்த மின் அழுத்தத்தைப் போக்குகின்ற வகையில் இந்த ஆண்டு புதிய துணை மின் நிலையம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விட்டலபுரம் பகுதிக்கு திருக்காட்டுப்பள்ளி வீரமரசன்பேட்டை 66 கிலோவோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்தபோது குறைந்த மின் அழுத்தம் நிலவி வந்தது உண்மை. ஆனால் திருவையாற்றில் ஒரு புதிய 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு அங்கிருந்து



2000 ஏப்ரல் 19]

விட்டலபுரம் பகுதிக்குத் தற்போது மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் விட்டலபுரம் பகுதியில் மின் அழுத்தம் சீரடைந்து இப்போது திருப்திகரமாக இருக்கிறது என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமானால் அதுபற்றி அரசு ஆராயும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 326, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**326—**

### குடிநீர்த் திட்டம்

***7952—திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி கொடைக்கானல் ஒன்றியம் பூம்பாறை மக்களுக்கு குண்டாற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் அடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்தப்பட்ட விடையை இங்கே அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) குடிநீர் வழங்கும் திட்டம் சரிவரத் தான் நிறைவேற்றப்பட்டு பூம்பாறை கிராமத்திற்கு 80,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு 13-10-1990-ல் பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மீண்டும் ஊராட்சி ஒன்றியத்தின் வேண்டுகோளுக்கிணங்க ரூ.1.70 இலட்சம் செலவில் ஈர்ப்பு நீரோட்டக் குழாய்கள் பழுது பார்க்கப்பட்டு மீண்டும் பராமரிப்புக்காக 10-9-1996-ல் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 15 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 327 திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**327—**

### குடிநீர் வசதி

***31589—திரு. வி.கே. லட்சுமணன்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயம்புத்தூர் நகருக்கு மட்டும் தனியாக பில்லூர் அணையிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர்க் குழாய் வழியாகத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகராட்சி, 26 பேரூராட்சிகள் மற்றும் 620 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு தனியாக ஒரு குடிநீர்த் திட்டம் பில்லூரிலிருந்து செயல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவைக்கு சிறுவாணியிலிருந்தும், பில்லூரிலிருந்தும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சிறுவாணியிலிருந்து வருகின்ற தண்ணீரானது gravity-யிலே வருகின்ற காரணத்தினாலே, அதிலே எந்தவிதமான குழாய்கள் உடைவதற்கும் வாய்ப்பு இல்லை. ஆனால், பில்லூரிலிருந்து வருகிற தண்ணீரைப் பொறுத்தவரை அடிக்கடி குழாய் உடைந்துபோகிற காரணத்தினாலே சில சமயங்களில் 10, 15 நாட்கள் கூட தண்ணீர் இல்லாமல் போகின்ற நிலை ஏற்படுகிறது. ஒருமுறை அதுபோல ஏற்பட்டு, நான் முதல்வருடைய இல்லத்தோடு தொடர்பு கொண்டு அவர்கள் உடனே திருச்சியில் இருந்து வெல்டர்களை அனுப்பி அந்தக் குழாயைச் சரி செய்ய ஏற்பாடு செய்து அதற்குப் பின்னாலே அங்கு குடிநீர் கிடைத்தது. அதனாலே இந்தப் பிரச்சினை தீர்வதற்காக வேண்டி பில்லூரிலிருந்து, கோவை மாநகராட்சிக்கு மட்டும் தனியாக ஒரு குடிநீர்க்



2000 ஏப்ரல் 19]

குழாய் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மக்கள் தொகை எண்ணிக்கை அதிகரித்து வருகிற காரணத்தினாலும், அவர்களுக்குரிய அளவுக்குக் குறையாமல் எதிர்காலத்திலும், அந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் பயனை கொடுக்கின்ற நிலையை மனதில் வைத்து நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 15 லிட்டர் என்ற அளவில் தற்போது கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் வேகமாக வளர்ந்துவரும் மக்கள்தொகைக்கு எதிர்காலக் குடிநீர்த் தேவையைக் கருத்திற்கொண்டு முதலாவது குடிநீர்த் திட்டம் பயன்பெறும் 22 பேரூராட்சிகள், மற்றைய 523 வழியோரக் கிராமங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு 1996 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில்தான் திட்டம் தீட்டி தற்சமயம் குடிநீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த 22 பேரூராட்சிகளும் மற்றும் சுமார் 523 வழியோரக் கிராமங்களிலுள்ள குடியிருப்புகளும் கோவையைச் சுற்றி அமைந்திருப்பதால் அங்கு வளர்ந்து வரும் மக்கள் தொகை காரணமாக குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு, பில்லூர் அணையிலிருந்து கோவை மாநகராட்சியின் 22 பேரூராட்சிகள் மற்றும் விடுபட்ட சுமார் 97 குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 620 வழியோரக் குடியிருப்புகளுக்கும் இரண்டாவது கூட்டு குடிநீர்த் திட்டத்தில், அவசியமாகிறது எனக் கருதி அனைத்து பயன்பெறும் பகுதிகளுக்கும் 2026 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதைத் தயார் நிலையில் எடுத்து பின்னர் அதற்கடுத்த திட்டங்களைப் பற்றிப் பரிசீலிக்க அரசு விரும்புகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் எனக்கு திருப்தி; காரணம், இந்தப் பில்லூர் குடிநீர்த் திட்டம் முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளுக்காக, குறிப்பாக என்னுடைய பொங்கலூர்த் தொகுதிக்காகவே போடப்பட்ட திட்டம். இப்போது அதில் தண்ணீர் சரிவர வரவில்லை என்று நான் பலமுறை இதே மன்றத்திலே சொல்லியிருக்கின்றேன். ஆகவே புதிதாக இணைப்புப் போடுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை

[2000 ஏப்ரல் 19

இல்லை. ஆனால் இப்போது இருக்கின்ற இந்தத் திட்டத்தை இன்னும் கொஞ்சம் செம்மைப்படுத்தி முழுக்க முழுக்க அந்தக் கிராமங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ததற்குப் பின்னால், இதிலிருந்து நகரங்களுக்குத் தண்ணீர் எடுக்கும் சாத்தியக்கூறு இருக்கிறது. எனவே அமைச்சர் அதை ஆழ்ந்த கவனத்திலேகொள்ளுமாறு நான் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை விஸ்தரிப்பதாக இருந்தாலும், புதிதாகத் திட்டம் தீட்டுவதாக இருந்தாலும் அல்லது இணைத்துக் கொடுப்பதாக இருந்தாலும் எப்படி இருந்தாலும்கூட—பூர்வாங்கமான ஒரு பரிசீலனை செய்த பிறகுதான் அந்த முடிவுக்கு வருவதை இந்தக் குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இப்போது ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கூடுமானவரை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடுவதை மனதில் வைத்துத்தான் தண்ணீரை ஓர் இடத்திலிருந்து கொடுக்கிறபோது ஏற்கெனவே பெற்றுக் கொண்டிருந்தவர்களுக்குப் பாதகமின்றிக் கொடுக்க வேண்டுமென்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி, இந்த வினாவிற்குத் தொடர்பாகத்தான் கேள்வி கேட்க வேண்டும்.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு சிறுவாணியிலிருந்தும், அத்திக்கடவிலிருந்தும் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. புறநகர் அதிகமாக வளர்ந்து வருகிற காரணத்தால் அதிகமாகக் குடிநீர் தேவைப்படுகிறது. ஆகவே, கோவை மாநகருக்கு சிறுவாணியிலிருந்து மட்டும் குடிநீர் கொடுத்துவிட்டு, புறநகருக்கு அத்திக்கடவிலிருந்து தண்ணீர் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, எங்கிருந்து குறைவான செலவில் அதிகமான நீர் வரத்து இருக்கிறதோ அங்கிருந்து அந்த நீர் வரத்தைப் பயன்படுத்தித் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைப் பரிசீலித்துத்தான் திட்டங்கள் அறிவிக்கப்படும்.



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூரிலிருந்து கோவை மாநகராட்சிக்கு மட்டும் தனியாக steel pipe மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவது என்றால் 8 கோடி ரூபாய் செலவாகும் என்றும், மாநகராட்சியே அந்தச் செலவினத்தை ஏற்றுக்கொண்டால் அதைப் பரிசீலிக்கலாம் என்றும் ஒரு திட்டம் இருப்பதாக நான் அறிந்தேன். அதை மனதிலேகொண்டு கோவை மாநகராட்சிக்கு மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சர் முன்வருவாரா என்றும் மீண்டும் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாநகராட்சி ஆனாலும் நகராட்சியானாலும் கடன் பெறாமல் சுய நிதியில் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற சாத்தியகூறுகள் தற்போது எந்த நகராட்சியிலும் மாநகராட்சியிலும் இல்லை. அப்படிப் பார்க்கிறபோது கோயம்புத்தூர் நகராட்சிக்கு மட்டும் தனியாக பில்லூரிலிருந்து குடிநீர் கொண்டு வந்து வினியோகம் செய்வதானாலும் அமைப்புச் செலவு கூடுதலாகி, கடனைத் திருப்பிச் செலுத்துவதில் மாநகராட்சிக்கு நிதிச் சுமை அதிகரிக்கும். எனவேதான் வழியோர மற்றும் அருகில் அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகள் இவற்றையெல்லாம் இணைத்து இவற்றுக்கும் சேர்ந்தாற்போல் ஒரு நல்ல, சிறப்பான திட்டத்தை நீர் ஆதாரம் இருக்கிற காரணத்தால் செயல்படுத்தலாம் என்று இருக்கிறோம். அப்போது பிரிவினை செய்து கொடுக்கிறபோது, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அவர்கள் நிதி ஒதுக்கீட்டைக் கட்டுகின்ற நிலை வரும். அப்போது குறைந்த செலவில் அது அமையும் என்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 328, திரு. டி. மணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**328—**

**சரணாலயம்**

***23560—திரு. டி. மணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 19

(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியல், கிளாமலை, பேச்சிப்பாறை ஆகிய வனச்சரகப் பகுதிகளில் விசேஷ விலங்குகள் வாழும் பகுதிகளில் வனவிலங்குகளின் சரணாலயம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) இதுசம்பந்தமாக, வனத் துறை அதிகாரிகளிடமிருந்து பரிந்துரை பெறப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில், களியல், கிளாமலை, பேச்சிப்பாறை வனச்சரகப் பகுதிகளை வன உயிரினச் சரணாலயமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. 1972 ஆம் ஆண்டு வன உயிரினப் (பாதுகாப்புச்) சட்டத்திற்குத் தக்க திருத்தங்களை மத்திய அரசு வெளியிட்டவுடன் இதுகுறித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக விசேஷமான சில உயிரினங்கள் பாதுகாக்கப்படும். குறிப்பாக பேச்சிப்பாறைக்கு அருகில் கோதையாறு மலைப் பகுதியில் உள்ள ஒரு வகை ஆடு வரையாடு என்பது. இது ஒரு விசேஷமான ஜந்து. அதுபோன்று நம்முடைய கிளாமலை களியல் கிராமத்திலேயுள்ள கிளாமலை Reserve Forest-லேயும் இந்த வகையான ஆடுகள் காணப்படுகின்றன. அதோடு எறும்பைத் தின்னுகின்ற ஒரு ஜந்து; ஆமையினுடைய ஓடு மாதிரி அதனுடைய புறப்பகுதி இருக்கும்; அதுவும் அழிந்து வருகின்ற ஓர் இனமாக மாறி வருகின்றது. எனவே இவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற வகையில் இந்தச் சரணாலயத்தை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்வதற்கு அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல பல அபூர்வ பிராணிகள், ஊர்வன, நடப்பன, இப்படி சகல மிருகங்களும் பறவைகளும் எல்லாம் இருக்கிற காரணத்தால்தான் அதை அரசு வனச் சரணாலயமாக அமைக்க வேண்டுமென்று கருதுகிறது. ஆனால் 1972 ஆம் ஆண்டு, வன உயிரின (பாதுகாப்புச்) சட்டத்திற்கு ஒரு திருத்தத்தை மத்திய அரசு வெளியிட வேண்டும். அப்படி வெளியிட வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது; பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பதில் வந்த பிறகு அதுகுறித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் குமரி மாவட்டம் இருந்த நேரத்தில் கோதையாறு மேல் திட்டத்தில் முத்துக்குழி என்ற அந்த இடம் ஒரு பெரிய Health Resort ஆக வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சரணாலயத்தோடு அதையும் இணைத்து, ஒரு பிரதான Tourist Centre ஆக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புதிய செய்தியைச் சொல்லியிருக்கிறார். எங்கள் துறை இந்தச் சரணாலயத்தை அமைக்கிறபோது, சுற்றுலாத் துறையையும் கலந்தாலோசித்து அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினா எண் 329, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**329—**

### பெரிய ஏரிகள்

***28060—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் மற்றும் முல்லையூர் பெரிய ஏரிகளைப் பொதுப் பணித் துறையின் நிர்வாகத்திற்குள் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. செந்துறை ஒன்றியம், சேந்தமங்கலம் ஏரியின் பாசனப் பரப்பு 100 ஏக்கருக்கும் குறைவாக உள்ளதால், இதனைப் பொதுப் பணித் துறை வரைமுறைப்படி பொதுப் பணித் துறையின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ள இயலாது.

2. முல்லையூர் ஏரி என்பது அயன் தத்தனூரில் பெரிய ஏரியாகும். அந்த ஏரி ஏற்கெனவே பொதுப் பணித் துறை பராமரிப்பின்கீழ் உள்ளது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியில் உள்ள செந்துறை ஒன்றியத்திலுள்ள சேந்தமங்கலம் ஏரியும், முல்லையூர் ஏரியும் பல ஆண்டு காலமாக, அதற்கான தண்ணீர் வரத்துக் கால்வாய்ப் பகுதிகள் எல்லாம் சீரமைக்கப்படாமல் தூர்ந்து போய் இருக்கின்றன. ஆகவே அந்த ஏரிகளால் பல 100 ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற காரணத்தினாலே இவற்றைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா? அதேபோல, ஒரு ஏரியைப் பொதுப் பணித் துறையின் மூலமாக மராமத்துச் செய்வதற்கு அரசு என்ன அளவுகோல்களை வைத்து எடுத்துக்கொள்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கு ஒரு ஏரி என்று பொதுப் பணித் துறையின் மூலமாக ஒதுக்கப்பட்டது. அவ்வாறு என்னுடைய தொகுதியிலே செந்துறை ஒன்றியத்திலே கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட தளவாய் ஏரிப் பணிகள் நிறைவேற்றப்படாமல் அதிலே ஒப்பந்தங்கள் போடுவதிலேகூட பல இடையூறுகள் இருப்பதாக எனக்குப் புகார்கள் வந்துள்ளன. எனவே அரியலூரிலே உள்ள பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அந்தத் தளவாய் ஏரிப் பணிகளை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி செந்துறை ஒன்றியத்தைச் சார்ந்த சேந்தமங்கலம் ஏரியைப் பற்றியது. 100 ஏக்கர் பாசனப் பரப்பு இருந்தால்தான் பொதுப் பணித் துறை அதை எடுத்துக்கொள்ளும். பல நூறு ஏக்கர் பாசனப் பரப்பு அல்ல இந்த ஏரி. இந்த ஏரிக்குப் பாசனப் பரப்பே 67.61 ஏக்கர்தான். எனவே அதை நாங்கள் பொதுப் பணித் துறையின் கீழ் எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் நீங்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த முல்லையூர் பெரிய ஏரி ஏற்கெனவே பொதுப் பணித் துறையின் பாசனப் பரப்பில் இருக்கிறது. மூன்றாவதாக, ஏதோ ஒரு ஏரியைப் பற்றிக் கேள்வி கேட்டு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது என்னவென்று சரியாக எழுதிக் கொடுத்தால், அதுகுறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கலாம்.



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 330, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**330—**

### சுற்றுச் சுவர்

***24989—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் பேருந்து நிலையமும், அதன் சுற்றுப்புறமும் சீர் செய்யப்படாமல் கழிவு நீர் தேங்கி அசுத்தமாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்பட்டு, பேருந்து நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அடிக்கடி சுத்தம் செய்யப்படுகின்றது. இருப்பினும் இவ்விடம் பொதுமக்களால் அசுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதனைத் தவிர்க்க இவ்விடத்தில் பொது இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடமாக அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வில்லிவாக்கம் பேருந்து நிலையத்தை விரிவாக்கும்பொருட்டு, அருகில் உள்ள தனியார் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவு உள்ளது. கையகப்படுத்தப்பட்ட இடத்தில் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள இடத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர்தான் சுற்றுச் சுவர் அமைக்க இயலும்.

[2000 ஏப்ரல் 19

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே ஒரு பெரிய கோவில் இருக்கிறது. ஏறத்தாழ 50,000-க்கும் மேற்பட்ட புதிய குடியிருப்புகள் அந்தப் பகுதியிலே வந்து இருக்கின்றமையால், காலையிலே பார்ப்பீர்களேயானால், சுமார் 5000 பேர் பேருந்துக்காக நிற்பார்கள். ஆனால் பேருந்து நிலையத்தின் உள்ளே யாரும் நிற்க மாட்டார்கள். சாலையிலேயே நிற்பார்கள். ஒரு பேருந்து நிற்கிறது, பின்னாலே இன்னொரு பேருந்து நிற்கிறது என்று சொன்னால், முன்னாலே இருக்கின்ற பேருந்திலே ஏறுவார்களே தவிர, பின்னாலே இருக்கின்ற பேருந்துக்குப் போவதற்கே முடியாது. காரணம் அந்த அளவிற்கு அங்கு சரியான சூழ்நிலை இல்லை; சுற்றுச்சூழல் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு இருக்கிறது. உடனடியாக நமது Transport Department-ல் இருந்து யாரும் போய் அந்த இடத்தைச் சுத்தம் செய்வதே கிடையாது. மாலை நேரங்களில், 6.00 மணிக்கு மேல் போய்ப் பார்த்தால் ஒரு மின்விளக்குக் கூட அங்கு எரிவதில்லை. அதனால் அங்கு இளைஞர்களெல்லாம் கூடுகின்ற ஒரு குழுமமாக அந்த இடம் மாறி விடுகிறது. ஆகவே அதையெல்லாம் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து பயணிகள் பேருந்து நிலையமாக இருக்கும் அந்த முக்கியமான பேருந்து நிலையத்தைப் பொதுமக்களுடைய உபயோகத்திற்கேற்றதாக மாற்ற, முழுமையாக மாற்ற ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையம் 0.92 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்துள்ளது. கையகப்படுத்தப்பட்ட இடத்திலே சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இன்னொரு பகுதியிலே சுற்றுச் சுவர் அமைப்பதற்குத் தடையாக அங்கே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள், Court சென்று Stay வாங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர். தயவு செய்து அவர்களிடம் பேசி அந்த இடத்தை மீட்டுக் கொடுக்கின்ற வாய்ப்பு இருக்குமானால், நிச்சயமாக, உறுதியாக அந்தப் பகுதியில் உடன் மதில் சுவரும் கட்டி, அது பராமரிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 331, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 19]

**331—**

### பேருந்து வசதி

***29940—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மிகப் பெரிய கிராமமான பெரிய கொழப்பலூரிலிருந்து வட்டத் தலைநகரமான வந்தவாசிக்குச் செல்ல நேரடிப் பேருந்து வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெரிய கொழப்பலூரிலிருந்து வந்தவாசி செல்ல அவனியாபுரம் கூட்டுச்சாலை வழியாகவும், பெரணமல்லூர் வழியாகவும் பகுதி வாரியாகப் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. இப்பேருந்துகளில் பயணிகள் அடர்வு குறைவாக உள்ளது. எனவே, பெரியகொழப்பலூர்—வந்தவாசி தடத்தில் நேரடிப் பேருந்து இயக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வினா எண் 332, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**332—**

### வட்டச் சாலை

***24741—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 19

(அ) திண்டுக்கல் தொகுதி, சிறுமலை மலைப் பகுதியிலுள்ள பல்வேறு கிராமங்களை இணைத்திடும் வகையில் வட்டச் சாலை அமைத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மலை கிராமத்தில் சிறுமலை பழையூரிலிருந்து தென்மலை செல்கிற வழியில் தவிட்டுக்கடை, தாளக்கடை போன்ற 4, 5 கிராமங்களை இணைக்கக்கூடிய சாலை அந்த வட்டச் சாலை. அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக அந்தக் கோரிக்கையை விடுத்து வருகிறார்கள். சமீபத்தில் சிறுமலை ஊராட்சியிலே தீர்மானம் நிறைவேற்றி 10 அடி அகலம் அல்லது 15 அடி அகலத்திற்கு அந்தச் சாலையைப் போடலாம் என்று நிதியுதவி கேட்டு, ஊராட்சிமன்றமும் அந்த நிதியை ஒதுக்கித் தருவதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இதில் நெடுஞ்சாலைத் துறை மட்டுமல்லாமல் வனத் துறையும் சம்பந்தப்பட்டிருப்பதால் சில இடங்களிலே குறுக்கீடு இருக்கிறது. அந்த வனத் துறை அதிகாரிகளும் அந்த இடத்தைத் தருவதாகச் சம்மதித்திருக்கிறார்கள். எனவே இந்த இடத்தை ஆய்வு செய்து அங்கு மலை கிராமச் சாலை அமைப்பதன் மூலமாக மலை கிராம மக்கள் ஆயிரக்கணக்கான மக்கள் பயன் பெறுவதற்கு வசதியாக இருக்கும். எனவே இதனை ஆய்வு செய்து அந்தச் சாலையைப் போட்டுத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல சிறுமலைப் பகுதி முழுவதும் வனத் துறைக்குச் சொந்தமான பகுதி; பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக இருக்கிறது. வனப் பகுதியில் சாலை அமைப்பதற்கு இப்போது உள்ள சட்டப்படி அனுமதி மறுக்கப்படுகிறது. அவசியமான இடங்களில்கூட சாலை அமைப்பதற்கு வனத் துறையின் அனுமதி கேட்டால் அதற்கு



2000 ஏப்ரல் 19]

மத்திய அரசு வரை சென்று அனுமதி பெற வேண்டும் என்றும் இருக்கிறது. குறிப்பாக, வனப் பகுதிகளில் சாலை அமைப்பதற்கே மறுப்புத் தெரிவிக்கின்ற வகையிலும் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இந்தப் பகுதி கிராமங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியிலே இருக்கிற காரணத்தினால் வனத் துறை, தாங்கள் சொல்வதைப் போல அனுமதி அளித்தால் சாலை அமைக்கலாம். ஆனால் அனுமதி கிடைப்பதற்கே ஒரு மாமாங்கம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமலைப் பகுதியிலே உண்மையிலேயே சாதாரண மக்கள் சிறிய, சிறிய விவசாயிகள் வசித்து வருகின்றார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடியவை வாழை, ஆரஞ்சு, சாத்துக்குடி; அது மாத்திரம் இல்லை, இன்னும் சில கிழங்கு வகைகளையும் உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பழ வகைகளை எல்லாம் வெளியில் கொண்டு வரமுடியாமல் மிகவும் பரிதாபமான ஒரு நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே தனிச் சலுகையாக-மத்திய அரசை நீங்கள் கேட்டால்—முதல்வர் இருக்கிறார், மத்திய அரசைக் கேட்டால்—அதற்கு Permission கொடுப்பார்கள். ஆகையால் தனிச் சலுகையின் அடிப்படையிலே—அந்த permission-ஐ வாங்கி அந்தச் சாலைகளைப் போட்டுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஏற்கெனவே சாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு வனத் துறையினுடைய அனுமதி கிடைக்காமல் அந்தச் சாலைகளை அமைக்கமுடியாத சூழ்நிலை கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக நிலுவையிலே இருக்கிறது. அப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கும்—இந்தப் பிரச்சினைகளுக்கும்கூட—மாண்புமிகு வனத்துறை அமைச்சரோடு என்னுடைய துறையும் சேர்ந்து ஒரு கூட்டுக் கூட்டம் நடத்தி, கலந்துரையாடி இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி காணலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களோடு பேசிய பிறகு இதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[2000 ஏப்ரல் 19

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனப் பகுதியிலே கிராமங்களை அமைத்துக் கொண்டு வாழ்கிற மக்களை அனுமதித்திருக்கிற இந்த வனத் துறை அவர்களுக்கான போக்குவரத்து வசதியையும் செய்து தருவதற்கு முன்வரவேண்டும் என்பதுதான் நியதி என்கிற முறையிலே என்னுடைய பகுதியிலேகூட ஒரு கிராமம் இந்தச் சிறுமலையிலே இருக்கிறது. அதற்குச் சாலை வசதிகளே இலலை. எனவே அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல வனத் துறை அமைச்சரும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும் கலந்து பேசி இந்த வனப் பகுதிகளுக்கெல்லாம் சாலை அமைப்பதற்கு முன்வர வேண்டுமாய்த் தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் அந்தக் கலந்துரையாடல் கூட்டம் விரைவிலே நடைபெற இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக மாவட்ட வனத்துறை அதிகாரிகளுடன் கலந்து பேசியபோது ஊராட்சிமன்றம் தீர்மானம் நிறைவேற்றியும், அந்தத் திட்டச் செலவிற்கான தொகையும் அந்த ஊராட்சி மன்றமே தருமேயானால் நாங்கள் அதைப் பரிந்துரை செய்கிறோம் என்றும் சென்னையிலே இருக்கக்கூடிய வனத் துறை உயர் அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்குவதற்கான விதிவிலக்கு இருக்கிறது என்றும் சொல்லி இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். ஊராட்சி மன்றத்தில் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் இப்போது இருப்பு இருக்கிறது. அந்தப் பணத்தை வீண் செலவுகள் செய்யாமல் இதுபோன்ற நல்ல காரியங்கள் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல வனத் துறையும் நெடுஞ்சாலைத் துறையும் கலந்து பேசி ஒரு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இதிலே என்ன கஷ்டம் என்று கேட்டால், யாராவது ஒருவர் பிரசவத்திற்கு வரவேண்டுமென்றால்கூட தொட்டில் கட்டி வரவேண்டிய ஒரு சூழ்நிலை அல்லது குதிரையிலே ஏற்றி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதன் அவசர அவசியத்தைக் கருதி உரிய நடவடிக்கையை உரிய காலத்தில் அரசு எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 19]

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது போல ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு கோடி ரூபாய் பணம் இருக்கிறது. அதைச் செலுத்துவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றால் அந்தப் பணத்தை முதலில் நெடுஞ்சாலைத் துறைக்கு அவர்கள் deposit செய்யட்டும் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே deposit செய்யட்டும். அதற்குப் பிறகுதான் வனத் துறையிடம் நாங்கள் அனுமதிகேட்டு, உரிய படிவத்திலே அவர்களிடத்திலே நாங்கள் கோரிக்கை தர வேண்டும். உரிய படிவம் என்றால், 500 படிவங்களை ஒரே நேரத்திலே கொடுக்க வேண்டும். அது ஒரு பெரிய process. ஆகையினாலே நீங்கள் பணம் கட்டிய பிறகுதான் அந்த முயற்சியிலே நாங்கள் ஈடுபட முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்திலே சொல்லி, அந்தப் பணத்தை முதலில் deposit செய்வதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**333—**

**பாதையை அகலப்படுத்துதல்**

***26786—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலத்திற்கு சாத்தங்குடி, பன்னிக்குண்டு வழியாக உசிலம்பட்டிக்குச் செல்லும் பாதையை அகலப்படுத்திச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

[2000 ஏப்ரல் 19

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலத்திலிருந்து சாத்தங்குடி, பன்னிக்குண்டு வழியாக உசிலம்பட்டி செல்லக்கூடிய சாலை இது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகரிலிருந்து வரக்கூடியவர்கள் தேனி, பெரியகுளம் செல்ல வேண்டுமானால், மதுரைக்குச் செல்லாமலே இதன் மூலம் விரைவாகச் சென்றுவிடுகிறார்கள். அரசு மற்றும் தனியார் பேருந்துகள் சுமார் 100 தனி trips அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிகம் கார்களும் மற்றும் மோட்டார் பைக்குகளும் அதிலே செல்லக்கூடிய காரணத்தாலும், மேலும் இந்தச் சாலை 3 மீட்டர் அகலம்தான் இருப்பதாலும், அதிலே அதிகமான இடங்கள் குண்டும் குழியுமாக இருக்கிற காரணத்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தச் சாலையை, இருவழிச் சாலையாக அகலப்படுத்தி, புதுப்பித்துத் தர இந்த ஆண்டே எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய பல்வேறு தரச் சாலைகளில், இது மாவட்ட முக்கிய சாலை என்ற பகுதியிலே வருகிறது, Major District Roads என்ற பகுதியிலே வருகிறது. உண்மையில் இது இரண்டு தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய முக்கியமான சாலைதான். ஆனாலும் நம்முடைய அரசு கடந்த மூன்று ஆண்டுகளாகக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பது, ஏற்கெனவே பேருந்து ஓடிக்கொண்டிருக்கக்கூடிய சாலைகளைச் செப்பனிடுவது, பாலங்கள் கட்டுவது என்று இவற்றுக்குத்தான் முன்னுரிமை அளித்து வருகிறது. ஏற்கெனவே இருக்கிற பெரிய சாலைகளைச் சரியாகப் போடுவதற்கும் paver போன்ற இயந்திரங்களை வைத்துச் சாலை அமைப்பதற்கும் சிறப்பான நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட சாலைகளை அகலப்படுத்துவது என்ற அந்தப் பணிக்கு நிதியாதாரம் பகுதி-2 திட்டத்திலேதான் கிடைக்கிறது. பகுதி-2 திட்டத்திலே கிடைக்கக்கூடிய தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தச் சாலையினுடைய நீளம் 26 கிலோமீட்டர். 90 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. எனவே வருங்காலத்தில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து பரிசீலனை செய்து ஆவன செய்யலாம்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் இந்தச் சாலைக்கும் என்ன சம்பந்தம்? இந்தச் சாலை சம்பந்தமான துணைக் கேள்வி என்றால் கேட்க அனுமதிப்பேன், வேறு கேள்வி என்றால் அனுமதி கிடையாது.

வினா எண் 334, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**334—**

### திருக்கோயில்கள்

***31790—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்தில் இணைக்கப்படாத திருக்கோயில்களை அறநிலையத் துறையின்கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர், மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள திருக்கோயில்கள் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களின் நிர்வாகத்தின்கீழ் செயல்படுகின்றன.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தை தாய்த் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்று சொல்லி மக்கள் பெரிதும் தியாகம் செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தை தாய்த் தமிழகத்தோடு இணைத்திருக்கிறோம். அதைப் பாராட்டி அந்தத் தியாகிகளுக்கு

[2000 ஏப்ரல் 19

அரசாங்கம் வெகுமதியும் வழங்கியிருக்கிறது. அதே வேளையில் பல துறைகளும் தமிழக அரசோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இந்து அறநிலையத் துறையின் ஆலயங்கள் மட்டும் தனியாக இயங்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டதன் காரணமாக அந்தக் கோவில் நிர்வாகிகளுக்கு தமிழக அரசினுடைய, அதாவது மற்ற மாவட்டங்களிலுள்ள ஆலயங்களுக்கு உண்டான அந்த வசதி வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்று குறைபட்டுக்கொள்கிறார்கள். எனவே அந்த ஒரு துறையை மட்டும் அப்படித் தனியாக வைத்திருப்பதைவிட அறநிலையத் துறையோடு இணைப்பதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய அந்த வினாவில் ஒரு தவறு இருக்கிறது. இது ஏற்கெனவே 1975 ஆம் ஆண்டு முதல் இந்த சமய அறநிலையத் துறையின் கீழ்தான் இருக்கிறது. முதலில், 1956-ல் எடுக்கப்பட்டபோது 490 கோவில்களும் கன்னியாகுமரி தேவஸ்வம் கழகம் என்ற அமைப்பின்கீழ் இருந்தன. பிறகு, 1-1-1975 முதல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் துணை ஆணையர் நியமிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகிறது. ஆனால் இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால், கன்னியாகுமரி தேவஸ்வம், அதேபோல சிவகங்கை தேவஸ்தானம், இராமநாதபுரம் சமஸ்தானம், புதுக்கோட்டை சமஸ்தானம் என்று நான்கும் இந்த நிலையில்தான் இருக்கின்றன. அனைத்திற்கும் தனி நிர்வாகம் இல்லாமல் ஒரே நிர்வாகத்தின்கீழ் தனித் தனியாக இயங்குவதுதான் காரணம். எனவே அந்த அடிப்படையிலே, உங்களுக்கு மட்டுமல்ல அந்தச் சிக்கல், புதுக்கோட்டைக்கும் இருக்கிறது; சிவகங்கைக்கும் இருக்கிறது; இராமநாதபுரத்திற்கும் இருக்கிறது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 335. திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 19]

**335—**

### கல்விப் பணிக்குக் கோயில் நிலங்கள்

***32338—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்விப் பணிகளுக்காகக் கோயில் நிலங்களை வழங்க அரசு தடை விதித்துள்ளதா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்விப் பணிகளுக்காகத் திருக்கோயில் நிலங்களை விற்பனை செய்யத் தடையேதும் விதிக்கப்படவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப மகிழ்ச்சி. அதேநேரத்தில், பழுத்த ஆன்மீகச் செம்மலான தங்கள் மூலம் நான் ஒரு விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழுத்தவன் என்றால் வயதானவன் என்று அர்த்தமா? (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மீகத்தில் பழுத்திருக்கிறீர்கள்; வயதால் என்று நான் சொல்லவில்லை. தங்கள் மூலம் நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், அப்படி எந்தத் தடையும் இல்லையென்று, மகிழ்ச்சிதான். ஆனால் நடைமுறையில் வேறு சில சிக்கல்கள், தடைகள் இருக்கின்றன. அவை என்னவென்றால், கல்வியைப் பொறுத்தவரையிலும், அது பேராசிரியர் அவர்களுடைய துறையாக இருந்தாலும்கூட, கல்வி, இந்து ஐதீகத்தில் சரஸ்வதியினுடைய துறையாகும். எனவே, கல்விக் கடவுளான சரஸ்வதியினுடைய துறைக்கு, நம்முடைய அறநிலையத் துறையின் நிலங்களை இலவசமாக வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரஸ்வதி அவர்களைக் கேட்டுச் சொல்கிறேன். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சரஸ்வதிதான் என்னிடம் சொன்னார்கள். இதை நிச்சயம் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சரஸ்வதியிடம் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. சரஸ்வதி நேற்று சொல்லித்தான் நான் இன்று கேட்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எந்த சரஸ்வதி? தாராபுரம் சரஸ்வதியா? (பலத்த சிரிப்பொலி)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் சரஸ்வதி அல்ல. கலைமகள் சரஸ்வதியை நான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரஸ்வதி அநேகமாக இன்றைக்கு என்னிடம் பேசுவார் என்று எதிர்பார்க்கிறேன். (சிரிப்பு) அதை நான் நாளைக்குச் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, மகிழ்ச்சி. அப்படிப் பேசுகிறபோதாவது ஒத்துவாருங்கள்; இலவசமாகக் கொடுக்க ஒத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்காவது சுப்பராயன் அவர்கள் எல்லார் உள்ளங்களிலும் இறைவன் இருக்கிறார் என்பதை ஒத்துக்கொண்டு, சரஸ்வதி அவருடைய உள்ளத்திலே புகுந்து இந்த இடத்தைக் கேட்கச் சொன்னதாகச் சொன்னார்கள். இதுவரை அவருடைய உள்ளத்திலே வேறு துர்தெய்வம் இருந்தது. ஏனென்றால் எப்பொழுது பார்த்தாலும் கோயில் நிலங்களை ஆக்கிரமிக்கவேண்டும், எடுக்கவேண்டும் என்பதிலே மட்டும் குறியாக இருந்தார்கள். இன்றைக்காவது சரஸ்வதி இருக்கிறார், அவருக்காக ஒரு நிலம் வேண்டுமென்று கேட்டதற்கு தங்கள் மூலம் அவருக்கு என் வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறான கருத்து பதிந்துவிடும் . . .



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றும் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லையே? அதற்குள் நீங்கள் எழுந்து நிற்கிறீர்களே?

**திரு. கே. சுப்பராயன்:** கலைமகள் பெயரால் அனுமதி கேட்கிறேன்; மீனாட்சியின் பெயரால் அனுமதி கேட்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சொல்கிறபோதே எச்சரிக்கையாகத்தான் சொன்னேன். இந்து ஐதீகப்படி கலைமகள் சரஸ்வதி, கல்விக்கான தெய்வம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். நான் அப்படியே அதை ஏற்றுக்கொண்டேன் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் பணியாற்றக்கூடியவர்கள் பலருக்குக் குறைந்த அளவாக மாதம் 150 ரூபாய் சம்பளமாக வழங்கப்படுகிறது. காரணம் என்னவென்றால் வருமானம் இல்லை என்று அரசில் சொல்கிறார்கள்; உண்மைதான். அப்படி 150 ரூபாய் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது, ஆலய நிலங்களைச் சும்மா கொடுக்கக் கூடாது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினா இல்லை. உட்காருங்கள். வினா எண் 336, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**336—**

## விடுதிக்குக் கட்டடம்

***26244—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும்?

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூரில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் கல்லூரிக்குச் செல்லும் மாணவியர்களுக்கும் மாணவர்களுக்கும் இரண்டு விடுதிகள் உள்ளன. அவற்றில் தனியார் கட்டடங்களில் உள்ள விடுதியில் போதுமான வசதிகள் இல்லை என்று அந்த மாணவியர் தெரிவிக்கிறார்கள். ஆகவே மாணவியர்களுக்கு மட்டுமாவது அரசின் சொந்தக் கட்டடத்தில் விடுதி கட்டித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் எட்டு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ மாணவியர் விடுதிகள் இயங்குகின்றன. அவற்றில் ஒரு மாணவியர் விடுதி மட்டும் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. நிதி ஆதாரத்தின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் சில விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. மேலும் விடுதிக்கான கட்டடம் கட்டும்போது அதற்குரிய தகுதியான அரசு புறம்போக்கு நிலங்களாகவும் அல்லது நன்கொடை அளிக்கப்படும் நிலங்களாகவும் கிடைக்கும்பட்சத்தில் கட்டடங்கள் அரசால் கட்ட ஆணையிடப்படுகிறது. மேற்சொன்ன கருத்துகளின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப கரூரில் விடுதிக்குக் கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 337, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 19]

337—

## கட்டட வசதி

***28019—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, வடுவூர் கிராமத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடுவூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு சட்டப் பேரவைத் தொகுதி, வடுவூர் கிராமத்தில் இருக்கிற சார்பதிவாளர் அலுவலகம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்தக் கட்டடமும் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. கிராம மக்கள் இனாமாக, தேவையான இடத்தை வாங்கித் தந்திருக்கிறார்கள். எனவே மக்களுடைய கோரிக்கையை ஏற்று அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா, நிரந்தரக் கட்டடம் கட்ட முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே கடந்த ஆண்டு பழுதடைந்திருக்கிற கட்டடங்களை எல்லாம் எடுத்துக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்து அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனுடைய அடிப்படையிலேதான் இந்தத் துறை மிக முக்கியமாகக் கருத்திலே கொள்வது, முதலிலே பழுதடைந்து இருப்பது; இரண்டாவது வருவாய்; மூன்றாவது, அங்கே ஆவணங்கள் எந்த அளவிற்குப் பதிவாகின்றன என்பதைப் பொறுத்து அல்லது பெரிய ஊரைப் பொறுத்து, இருக்கக்கூடிய நகராட்சி மற்றும்

[2000 ஏப்ரல் 19

இருக்கக்கூடிய பேரூராட்சிப் பகுதிகளைப் பொறுத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு வரைமுறையை வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே வருங்காலத்திலே அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 338, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**338—**

### துணை சார்பதிவாளர் அலுவலகம்

***29530—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, அரூர் வட்டம், தீர்த்தமலையில் ஒரு துணை சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரூர் தொகுதி, அரூர் வட்டம், தீர்த்தமலையில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தமலை அரூரிலிருந்து சுமார் 16 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சிட்லிங், சித்தேரி போன்றவை மலைவாழ் மக்கள் பெரும்பாலும் வாழும் பகுதிகள் அதுமட்டுமின்றி மாவட்டத்தின் கடைக் கோடியிலுள்ள மலைவாழ் மக்கள் மற்றும் அந்தப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, ஒரு சிறப்பு நேர்வாக வரும் நிதியாண்டில் தொடங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிற பகுதி, கடைக் கோடிப் பகுதி என்று சுட்டிக்காட்டியதுடன் சிறப்பு நேர்வாகவும் கருத வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை எதிர்காலத்திலே அரசு கருத்திற்கொண்டு பரிசீலிக்கும்.



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 339, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**339—**

### கால்நடை மருத்துவமனை

***27345—திரு.ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிபட்டியிலுள்ள பகுதி நேரக் கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூசாரிபட்டி கிராமத்தில் பல்வேறு குக்கிராமங்கள் அடங்கியுள்ள விவசாயம் நிறைந்த பகுதி. இங்கே கால்நடைகளை மருத்துவத்திற்காக மிகவும் தொலைவில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு இந்தப் பகுதியிலே முழு நேர கால்நடை மருத்துவமனையைத் திறக்க அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிபட்டி கிராமம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. பூசாரிபட்டியில் கால்நடைக் கிளை நிலையமும், அக் கால்நடைக் கிளை நிலையத்திற்கு, மாட்டுக்காரன்புதூர் என்ற இடத்தில் பார்வைக் கிளை நிலையமும் தற்போது செயல்பட்டு வருகின்றன. காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் காடையாம்பட்டி, காரவள்ளி ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பூசாரிபட்டி கால்நடைக் கிளை நிலையத்தைத் தவிர, கே.என். புதூர்,

டேனிஷ்பேட்டை ஆகிய இரண்டு இடங்களில் கிளை நிலையங்களும், அவற்றிற்கு முறையே கணவாய்ப்புதூர், பொம்மியம்பட்டி ஆகிய இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பூசாரிபட்டி கால்நடைக் கிளை நிலையத்திற்குச் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கையையும் நிதிநிலையையும் கருத்திற்கொண்டு கால்நடை மருந்தகமாக மாற்றுவது குறித்து எதிர்வரும் காலங்களில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 340, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**340—**

**மாணவர் விடுதி**

***10901—திரு.மு. பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் ஆதிதிராவிட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் வழங்கியிருக்கிறார்கள். இப்போது ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் எனது தொகுதியில் ஒரு விடுதிகூட இல்லை. குறிப்பாக மாணவர்கள் சென்று படிக்க வேண்டும் என்று சொன்னால் ஈரோடு, காங்கேயம் அல்லது தாராபுரம் போன்ற பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. அதனால் வெள்ளக்கோவிலில் ஒரு விடுதியும் அதேபோல ஒன்றியத்தினுடைய தலைநகரமான மூலனூரில் ஒரு விடுதியும் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் கட்டுவதோ, புதிய விடுதிகள் தொடங்குவதோ இந்த ஆண்டு இல்லை. ஆனால் இருக்கிற விடுதிகளை, அவற்றினுடைய தரத்தை உயர்த்த வேண்டும். அங்கே தங்கிப் படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்கள் எந்தவிதக் குறையும் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி 1055 விடுதிகள் இந்தத் துறையின் சார்பாக இயங்கி வருகின்றன. 615 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. 440 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆகவே மூன்று ஆண்டு கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாடகைக் கட்டடங்களில் உள்ள விடுதிகளையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் இயக்குவதற்கு அரசு முடிவு எடுத்து அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப ஆய்ந்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகரில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவியர் விடுதி, 50 மாணவியர்களுக்கென்று கட்டப்பட்டது. தற்போது எல்லா வசதிகளும் செய்து கொடுத்தாலும் 150 மாணவியர்கள் தங்கியிருக்கிறார்கள், போதிய வசதிகள் இல்லாமல் மிகவும் இடைஞ்சலான சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். எனவே இந்த ஆண்டு கூடுதலாகக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் கட்டப்பட்ட கட்டடங்களில் போதுமான வசதிகள் இல்லை என்பது உண்மைதான். இப்பொழுது கட்டப்பட்டு வருகிற விடுதிகளை சகல வசதிகளுடன் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். தாராபுரம் மாணவியர் விடுதியில் போதுமான அளவுக்கு இட வசதிகள் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இதை மாவட்ட ஆதிதிராவிட நலத் துறை அலுவலர் மூலம் ஆய்வு செய்து, அது உண்மையாக இருந்தால், தக்க நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப ஆய்வு

செய்து கூடுதல் கட்டடம் கட்டிக் கொடுக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான அரவக்குறிச்சியில் ஆதிதிராவிட மாணவர்களுக்கென்று தங்கும் விடுதி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாணவியருக்கென்று தங்கும் விடுதி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதேபோல என்னுடைய தொகுதியில் சின்னதாராபுரம் ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே ஒரு மாணவியர் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை சார்பாகக் கட்டிக் கொடுக்கப்படும் கட்டடங்களில் ஆதிதிராவிட மாணவியர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுத்துக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. கடந்த நான்காண்டு காலத்தில் 124 விடுதிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த 124 விடுதிகளில், 81 விடுதிகள், மாணவியர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அந்த அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப மாணவியர் விடுதி கட்டிக் கொடுக்க ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலையை மத்திய அரசு உயர்த்தியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து...

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் அரிசி, எரிவாயு விலை, அதுபோன்று மண்ணெண்ணெய் விலையை





ஏற்கெனவே மத்திய அரசு உயர்த்தியதை, வாபஸ் பெற மாநில அரசு, வற்புறுத்த வேண்டுமென்று ஏற்கெனவே நான் அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன். ஏற்கெனவே கேரள அரசில்கூட, நாயனார் அவர்கள் எதிர்க்கட்சிகளையும், ஆளும் கட்சிக்காரர்களையும் கூப்பிட்டுக்கொண்டு போய் நேற்று பிரதமரைப் பார்த்து இருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை மீண்டும் வலியுறுத்தி எழுப்ப வேண்டுமென்பதற்காக அறிவிபபு கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா அல்லது இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதற்கட்டமாக, நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ், C.P.I., C.P.M. மற்றும் இங்குள்ள எல்லா கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு கேரளா சென்று, பெரியாறு அணை பற்றி நாயனார் இடத்திலே தூதுக்குழு ஒன்றை அனுப்பி வைத்து நம்முடைய பிரச்சினையை அவர்களிடத்திலே எடுத்துக் கூறி, நியாயங்களை எடுத்துச் சொல்லி, அந்தக் கட்டத்திற்குப் பிறகு, இந்தக் கட்டத்தைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி பிரச்சினை மண்ணெண்ணெய் பிரச்சினை என்பது உயிர் பிரச்சினை. ஆகவே இதை முதன்முதலாக எடுத்துக்கொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து, டெல்லிக்குச் சென்று, பிரதமரைச் சந்தித்து...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அரிசி பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் எல்லா மாநிலங்களையும்விட குறைவாக ரூ.3.50-க்குத்தான் அரிசி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அரிசி பற்றிய அந்தப் பிரச்சினை இதிலே இல்லை. மண்ணெண்ணெய் பிரச்சினை, மற்ற சமையல் எரிவாயு பிரச்சினைகளையெல்லாம் விவரமாக இரண்டு நாளைக்கு முன்பு இந்த அவையிலே நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். எனவே அதற்கு மேல் எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் விவரமாக எடுத்துச் சொல்வதை நான் நேற்றே சொன்னேன். ஆனால் நம்முடைய மத்திய நிதியமைச்சர் சொல்ல வேண்டியதை எல்லாம் நம்முடைய

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2000 ஏப்ரல் 19

முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொல்கிறார்கள். இது தமிழ்நாட்டு பிரச்சினை. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தை எதிர்த்து குறைந்தபட்சம் ஒரு கண்டனத் தீர்மானமாவது போடுவதற்கு தயாராக இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது இந்தியாவின் பிரச்சினை என்பதால்நான் இங்கே இதைப் பற்றிப் பேசினேன். இந்தியாவைப் பற்றி அவர்களுக்கு இப்பொழுது கவலையில்லை என்றால், நான் அதற்காக வருத்தப்படமாட்டேன்.

முற்பகல் 10-25

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். நான் பல முறை சொல்லிவிட்டேன், விதிகளுக்கு உட்பட்டுத்தான் நான் அவையை நடத்துவேன் என்று. அனுமதி பெறாமல், என்னிடம் அறையிலே அனுமதி பெறாமல் இப்படி எழுந்து பேசுவது முறையல்ல. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவரிடம் அனுமதி பெறாமல் எழுப்புகின்ற கேள்விகளுக்கு தயவுசெய்து அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் இன்று தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் மண்ணெண்ணெய் விலை கூடியதைப் பற்றியும், gas விலை கூடியதைப் பற்றியும் எண்ணி மிகவும் கொந்தளிப்போடு இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானம்கூட போடத் தயாராக இல்லாத நிலையில் நாங்கள் இந்த அவையைவிட்டு வெளிநடப்பு செய்கிறோம். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணெண்ணெய், gas விலையைப் பொறுத்தவரை, நேற்று



2000 ஏப்ரல் 19] [திரு. பி.ஆர். சுந்தரம்]

நாடாளுமன்றத்திலே, நாடாளுமன்றத்திற்கு முன்பாக தர்ணா போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் கண்டனத் தீர்மானம்கூட போடுவதற்கு மறுக்கின்றார்கள். ஆகவே, இதை எதிர்த்து நாங்களும் வெளிநடப்பு செய்கின்றோம்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

## 3. கவன ஈர்ப்பு

### (அ) ஈரோடு, ஊத்துக்குளி ஒன்றியம், நொய்யல் ஆற்றுக் கரையோரப் பகுதிகளில் குடிநீர் மாசடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் திரு. நா. பெரியசாமி அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டுவருவார்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு, பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்தில் நொய்யல் ஆற்றுக்கரைப் பகுதிகளில் உள்ள ஊராட்சிகளில் குடிநீர் மாசுபட்டுவிட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்தின் வழியாக நொய்யல் ஆறு செல்கிறது. ஆற்றின் கரையில் ஆனைப்பாளையம், முரட்டுப்பாளையம், சர்க்கார் பெரியபாளையம், கவுண்டன்பாளையம் மற்றும் பல்லவராயன்பாளையம் ஆகிய 5 ஊராட்சிகள் பெருந்துறை சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ளன. நொய்யல் ஆற்றில், திருப்பூர் மற்றும் சுற்று வட்டாரங்களில் அமைந்துள்ள பனியன் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர் கலந்து விடுகிறது. இதனால் மேற்குறிப்பிட்டுள்ள 5 ஊராட்சிகளில் 30 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

2. நேரடி ஆய்வில் நொய்யல் ஆற்றுக் கரையில் உள்ள ஆனைப்பாளைத்தின் 10 குடியிருப்புகளும் பல்லவராயன்பாளையத்தில்

[திரு. கோ.சி. மணி] [2000 ஏப்ரல் 19

6 குடியிருப்புகளும் கழிவு நீரால் பாதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சர்க்கார் பாளையத்தில் 2 குடியிருப்புகள், கவுண்டன்பாளையத்தில் 3 குடியிருப்புகள் மற்றும் முரட்டுப்பாளையத்தில் 9 குடியிருப்புகளுக்கும் நிலத்தடி நீரில் பாதிப்பு ஏதும் இல்லை. பாதிக்கப்பட்ட 16 குடியிருப்புகளில் உள்ள மக்கள் தற்சமயம் பக்கத்தில் உள்ள குடியிருப்புகளிலிருந்து குடிப்பதற்கு மட்டும் நீர் சேகரித்துக் கொள்கின்றனர் ஊராட்சியின் பயனில் உள்ள குடிநீர்த் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நீர் மற்ற உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. நேரடி ஆய்வின்போது தற்சமயம் குடிநீர்ப் பிரச்சினையில் பதட்ட நிலை ஏதும் இல்லை என்பது தெரிகிறது. மேற்கண்ட 30 குடியிருப்புகளில் தற்பொழுது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 12 முதல் 25 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

3. இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பவானி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு தற்சமயம் பயனில் உள்ள குன்னத்தூர். கொளப்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீட்டிப்புச் செய்து, பிரிவு 2-லிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும் இத்திட்டத்தினால் மேற்கூறிய 30 குடியிருப்புகளைச் சார்ந்த 15,905 மக்கள் பயன் பெறுவார்கள். இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.320 இலட்சங்களாகும்.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற 5 ஊராட்சிகளோடு, ஆனைப்பாளையம் ஊராட்சியை நீராதாரமாகக் கொண்டு வடுகபாளையம் ஊராட்சி, ரெட்டிப்பாளையம் ஊராட்சி, ஊத்துக்குளி பேரூராட்சிகளில் சில குடியிருப்புகள், சர்க்கார் கத்தாங்கன்னி பகுதிகளுக்கெல்லாம் இந்த ஆற்றங்கரைப் பகுதியிலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படுகிற தண்ணீர் தற்போது மாசுபட்ட காரணத்தினாலே நிறுத்தப்பட்டுவிட்டது. ஊத்துக்குளி பகுதியிலே, கடுமையான வறட்சி இருக்கிற அந்தப் பகுதியிலே கொடிமேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தான் நீர் ஆதாரமாக இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, இதிலே முனைப்பான கவனம் செலுத்தி பல நல்ல முயற்சிகளை மேற்கொண்டிருப்பதனால் குடிநீர் ஆதாரம் மக்களுக்கு ஓரளவுக்குக் கிடைத்திருக்கிறது. குறிப்பிலே 12 முதல் 25 லிட்டர் வரை குடிநீர் ஆதாரம் மக்களுக்கு கிடைப்பதாகக் குறிப்பிட்டிருப்பது ஓரளவுக்கு யதார்த்தமான நிலையைக் குறிப்பிடுவதாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், இந்தப் பகுதியிலே தண்ணீர் மாசுபட்டிருப்பதன் காரணமாக



2000 ஏப்ரல் 19] [திரு. நா. பெரியசாமி]

மக்களுக்கும், கால்நடைகளுக்கும் எந்தவிதமான குடிநீர் ஆதாரமும் இல்லாத ஒரு யதார்த்த நிலை இருக்கிறது. நடப்பாண்டிலேயே மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிற ரூ.320 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்பு என்பதை நான் ஒரு நினைவூட்டாகவே ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே, இரண்டு முறை அதைப் பற்றி நான் நேரிலும் தெரிவித்திருக்கிறேன். கூடுமானவரையில் நேரடி ஆய்வில் எனக்குக் கிடைத்த தகவல் நொய்யல் ஆற்றங்கரையில் உள்ள ஆனைப்பாளையத்தின் 10 குடியிருப்புகளும், பல்லவராயன் பாளையத்தில் 6 குடியிருப்புகளும் கழிவுநீரால் பாதிக்கப்பட்டுள்ளன என்பது உண்மை. மீதமுள்ள சர்க்கார்பாளையத்தில் 2 குடியிருப்புகள், கவுண்டன்பாளையத்தில் 3 குடியிருப்புகள் மற்றும் மொரட்டுபாளையத்தில் 9 குடியிருப்புகளுக்கும் நிலத்தடி நீரில பாதிப்பு ஏதும் இல்லை. பாதிக்கப்பட்ட 16 குடியிருப்புகளில் உள்ள மக்கள் தற்சமயம் பக்கத்திலுள்ள குடியிருப்புகளில்தான் தண்ணீர் பெற்று, குறைந்த அளவுக்குத்தான் தண்ணீர் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்காகத்தான் ஒரு நிரந்தரமான முடிவை அரசு எடுத்து அதை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் பவானி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு தற்சமயம் பயனில் உள்ள குன்னத்தூர், கொளப்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீடிப்புச் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தினால் மேற்கூறிய 30 குடியிருப்புகளைச் சார்ந்த 15,985 மக்கள் பயன்பெறும் வகையில் நான் குறிப்பிட்டதைப்போல 320 இலட்சம் செலவில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-30

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் நடப்பாண்டில் நிறைவேற்றப்படுகிற திட்டமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் அறிவித்திருக்கிறேன். எடுத்துக்கொள்ளப்படும். கூடுமானவரையில்

இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே முடித்துவிடுவதற்கான சூழ்நிலை ஏற்படும். ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்கள் இடையிலே வந்தால் சற்று நீடிக்கலாம்.

## (ஆ) கோவை, குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சிகளுக்கு சிறு வாணி குடிநீர் வழங்க கிளைக் குழாய்கள் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆ. நடராசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை - பேரூர் தொகுதி, குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சிகளுக்கு சிறுவாணி குடிநீர் வழங்க பைபாஸ் குழாய்கள் அமைப்பது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கோவை மாவட்டத்தைச் சார்ந்த குறிச்சி, குனியமுத்தூர் பேரூராட்சிகளுக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டத்திலிருந்து தினசரி குறிச்சி பேரூராட்சிக்கு 38.20 இலட்சம் லிட்டரும், குனியமுத்தூர் பேரூராட்சிக்கு 22.50 இலட்சம் லிட்டருமாக மொத்தம் 60.70 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சூலூர், இருகூர் பேரூராட்சிகள் மற்றும் சூலூர் விமான படைத்தளம் ஆகியவற்றிற்கு பில்லூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்படுவதால், சிறுவாணி திட்டத்தில் மீதமாகும் 23 இலட்சம் லிட்டர் குடிநீரில் குறிச்சி பேரூராட்சிக்கு தினசரி 15 இலட்சம் லிட்டரும், குனியமுத்தூர் பேரூராட்சிக்கு 8 இலட்சம் லிட்டரும் அதிகப்படியாக வழங்குவதற்காகக் கூடுதலாக ஒரு குடிநீர்க் குழாய் சிறுவாணி திட்டத்திலிருந்து அமைப்பதற்கு ரூ.122.60 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தைப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் கோரின. மேற்கொள்ளப்பட வேண்டிய இப்பணிகள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த வாய்ப்பில்லாததால் இத்திட்டத்தை 50 விழுக்காடு வைப்புத் தொகை மற்றும் 50 விழுக்காடு ஹட்கோ கடன்



அடிப்படையில் செயல்படுத்த வாரிய ஆணை எண் 70, நாள் 8-3-2000-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. 50 விழுக்காடு வைப்புத் தொகையான ரூ.61.30 இலட்சத்தில் குறிச்சி பேரூராட்சி ரூ.38.58 இலட்சமும், குனியமுத்தூர் பேரூராட்சி ரூ.22.72 இலட்சமும் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளன. தற்பொழுது குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பேரூராட்சிகள் இத்திட்டத்திற்குத் தேவையான மீதமுள்ள 50 விழுக்காடு தொகையை ஹட்கோ கடன் பெற்றுச் செயல்படுத்தினால் தங்களால் கடனை திருப்பிச் செலுத்த இயலாது என்றும், எனவே ஹட்கோ கடனுக்குப் பதிலாக அரசு மானியத்தில் திட்டத்தைச் செயல்படுத்துமாறும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளன. எனவே, பேரூராட்சிகளின் நிதி நிலையினைக் கருத்தில்கொண்டு மேற்படி திட்டத்தை பொன்விழா திட்டத்தின்கீழ் நலிவுற்ற உள்ளாட்சிகளுக்கு 30 விழுக்காடு அரசு மானியம் மற்றும் மீதி கடன் உதவி அளித்து நிறைவேற்றும் அடிப்படையில் இத்திட்டத்தை நடப்பு நிதியாண்டில் (2000-2001) செயலுக்கு எடுத்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி பேரூராட்சி தமிழகத்திலேயே மிகப்பெரிய பேரூராட்சியாகும். அங்கும் குனியமுத்தூர் பேரூராட்சியிலும் தண்ணீர் தட்டுப்பாடு மிக அதிகமாக உள்ளது. பொதுமக்கள் எட்டு நாட்கள் முதல் பத்து நாட்களுக்கு ஒரு முறைதான் சிறுவாணி குடிநீர் பெறுகின்றார்கள். எனவே, அரசு இத்திட்டத்தை எப்போது நிறைவேற்றும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அதைப்பற்றிய ஆய்வுப் பணிகள் எல்லாம் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இதிலே நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரைதான் சில பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 50 விழுக்காடு பேரூராட்சிகள் செலுத்தி 50 விழுக்காடு கடனாகப் பெற்று, இந்த நிதியைச் சரி செய்து இந்தத் திட்டத்தைத் துவங்கலாம் என்று ஆரம்பத்தில் முடிவெடுக்கப்பட்டு, 6-3-2000-ல் நிர்வாக ஒப்புதல்கூட வழங்கப்பட்டுவிட்டது. அது சம்பந்தமாக 50 விழுக்காடு வைப்புத் தொகையான 61 இலட்சத்து 30 ஆயிரத்தை— குறிச்சி பேரூராட்சி 38 இலட்சத்து 58 ஆயிரமும், அதுபோலவே, குனியமுத்தூர் பேரூராட்சி 22 இலட்சத்து 72 ஆயிரமும்—வாரியத்திற்குச்

[திரு. கோ.சி. மணி] [2000 ஏப்ரல் 19

செலுத்தியுள்ளன. ஆனால் தற்போது குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பேரூராட்சி இத்திட்டத்திற்குத் தேவையான மீதம் உள்ள 50 விழுக்காடு தொகையை ஹட்கோ கடன் பெற்றுச் செயல்படுத்தினால், தங்களால் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாது என்று கூறி அரசே முழு மானியமும் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இரண்டாவது கட்டமாகத்தான் இதைத் தெரிவித்திருக்கிறார்கள். முதல் கட்டத்தில் இந்தத் திட்டத்தை ஹட்கோ மூலமும், பஞ்சாயத்து வைப்புத் தொகை மூலமும் செய்வதென உறுதி செய்யப்பட்ட காரணத்தால் மறுபடியும் புதிதாக இதை உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே மேற்படி திட்டத்தைப் பேரூராட்சியின் நிதி நிலையினைக் கருத்தில்கொண்டு, பொன்விழாத் திட்டத்தின்கீழ், நலிவுற்ற ஊராட்சிகளுக்கும் உள்ளாட்சிகளுக்கும் 30 விழுக்காடு அரசு மானியம் மற்றும் மீதி கடன் என உதவிகளை அளித்து நிறைவேற்றும் அடிப்படையில், இத்திட்டம் நடப்பு நிதியாண்டில், அதாவது 2000-2001-ல் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் வழங்குகிற சூழ்நிலையில் தற்போது இருக்கிறது.

## 4. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து எட்டு முதல் இருநூற்று நாற்பத்து இரண்டு வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன் வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுடிவுகள் அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்

### கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.132,46,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1942, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள தோல் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பாக்கித் தொகையினை உடனே தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3178, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர்-பால்காட் காகித ஆலைத் தொழிலாளர் பிரச்சினை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1667, திரு. கே. சுப்பராயன்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3595, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1633, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3813, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழிலாளர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு போனஸ் வழங்குவதைப் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண். 2750, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3113, திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, ``To discuss the need to improve the relationship between the labourers and the Management in Tamil Nadu" I Move—

``that the sum of Rs.132,46,54,000/- allocated under Demand No.28-Labour including Factories be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3742, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2822, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2462, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடப்படும் நிலையிலிருக்கும் திருநெல்வேலி மாவட்டம் பேட்டை



தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலைக்குத் தேவையான நிதியுதவி அளித்து சிறப்புற இயங்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1749, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1735, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஆலைகள் மூடப்பட்டு, அதனால் வேலையிழந்த தொழிலாளர்கட்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் பிழைப்பூதியம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,46,54,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3551, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள பீடித் தொழிலாளர்களின் சிக்கல்களைத் தீர்க்கவும் முறையாகச் சம்பளம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 132,46,54,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டிலே பதித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விவாதம் தொடங்குகின்றது. ஏறத்தாழ 11 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். ஒவ்வோர் உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன என்பதை அறிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய பொருளாதாரக் கொள்கை அமல் செய்யப்பட்ட பின்பு ஏறத்தாழ 13 பெரிய தொழிற்சாலைகள் இந்தியாவுக்கு வந்தன. அதில் முன்பு மாண்புமிகு நிதி அமைச்சராக இருந்த திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய முயற்சியாலும், மாண்புமிகு தொழில் அமைச்சராக இருந்த திரு. முரசொலி மாறன் அவர்களுடைய முயற்சியாலும் 3 தொழிற்சாலைகள் தமிழகத்திற்கு வந்தன. ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் முதலிலே ஒரு பெரிய பிரம்மையை உண்டு

---

@ 389 முதல் 508 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



பண்ணினாலும், அந்தத் தொழிற்சாலைகளின் வாயிலாக குறுந்தொழில்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளே இல்லாமல் போய்விட்ட உண்மையை நாம் உணர வேண்டும். அதன் வாயிலாக இப்போதும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 70 கோடி ரூபாய் செலவிலே ஹூண்டாய் தொழிற்சாலையினுடைய ancillary unit-ஐத் திறந்து வைத்தார்கள். ஆனால், அந்தத் தொழிற்சாலையிலே ஏனைய உபகரணங்கள் எல்லாம் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதனால் அங்கே தொழிலாளர்களுக்கான சிறிய தொழில்கள் தொடங்கவோ அல்லது குறுந்தொழில்கள் வளரவோ வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை கிடைக்கின்ற வாய்ப்பினை இழந்துவிடுகின்றார்கள். ஆகவே இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலமாக அந்தத் தொழிற்சாலையினால் எந்தப் பலனும் தமிழகத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிகின்றவர்களுக்கு இன்னும் பணி நிரந்தரம் முறையாகச் செய்யப்படாமல் இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர்களை எல்லாம் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அயல்நாடுகளில் எங்கெல்லாம் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, எங்கெல்லாம் தொழிற்பேட்டைகள் இருக்கின்றனவோ, அங்கே தொழிலாளர்கள் ஒரு point வரை பேருந்திலே வந்து இறங்கிவிடுகிறார்கள். அங்கே இருக்கின்ற தொழிலாளர் நலத் துறை அவர்களுக்கு Intercot Bus Service விடுகிறார்கள், அம்பத்தூர் தொழிற்பேட்டை 1500 ஏக்கரிலே அமைந்திருக்கிற ஒரு மிகப் பெரிய தொழிற்பேட்டை. அங்கே தொழிலாளர்களை ஒரு point-ல் இரயில்வே ஸ்டேஷனில் இறக்கிவிட்டார்கள் என்றால், அல்லது கொரட்டூரில் இறக்கிவிட்டார்கள் என்றால், அல்லது அம்பத்தூரில் இறக்கி விட்டார்கள் என்றால், அல்லது வில்லிவாக்கத்தில் இறக்கிவிட்டார்கள் என்றால், அங்கிருந்து, தொழிலாளர்கள் ஒரு point-க்கு போவதற்கு 3 கிலோமீட்டர் அல்லது 3 1/2 கிலோமீட்டர் வரை நடக்க வேண்டி வருகிறது. ஒருவர் 20 வயதில் வேலையில் சேர்ந்தார் என்றால், 40, 45 வயது வரை நடப்பார்; 45 வயதிலிருந்து 60 வரை, அவர் நடப்பது சிரமமாகப் போய்விடுகிறது; பல பேர் மயக்கம் போட்டுக் கீழே விழுகின்ற நிலைமைகூட இருக்கின்றது. ஆகவே எங்கெங்கெல்லாம்

[திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்] [2000 ஏப்ரல் 19

தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் தொழிலாளர் நலத் துறை சார்பாக Intercot Bus Service இயக்க வேண்டும்.

முற்பகல் 10-40

50 பேருக்கு மேல் எங்கெங்கெல்லாம் தொழில் நடக்கின்றதோ, அந்தத் தொழிற்சாலைகளிலே முறையான சுகாதார வசதிகள் இல்லை. முறையான கழிப்பிட வசதியில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு உணவு வழங்கக்கூடிய அளவிலே அங்கே கேன்டீன் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். தொழிலாளர் நலத் துறையின் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய தொழிலாளர் கோரிக்கைகள் நிறைய இருக்கின்றன. தொழிலாளர் நலத் துறையின் சார்பாக எங்கெல்லாம் தொழிற்பேட்டைகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் உற்பத்தி நிறைய இருக்கிறது. ஆனால் அங்கே விற்பனை குறைந்து கொண்டே வருகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இப்போது அயல் நாட்டிலிருந்து பல பொருட்கள் வர வாய்ப்பிருக்கின்றன. நாங்களெல்லாம் கோரிக்கை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சைக்கிளுக்கான வரியைக் குறைத்திருக்கிறார்கள். சீனாவிலிருந்து சைக்கிளை இறக்குமதி செய்கிறார்கள். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற சைக்கிளின் விலை 1,200 ரூபாய், 1,300 ரூபாய், 1,400 ரூபாய் என்ற அளவில் உள்ளன. ஆனால் வெளிநாடுகளில் இருந்து, சீனாவிலிருந்து அந்த சைக்கிள் இறக்குமதி செய்யப்பட்டால், அங்கிருந்து வரும் சைக்கிளின் விலை 780 ரூபாய்தான். அந்த சைக்கிளை மடக்கி, மெத்தையிலே, மாடியிலே கொண்டு போகலாம். கீழே வைத்திருந்தால் திருடி விடுவார்களே என்பதற்காக போல்டு செய்து மேலே எடுத்துச் செல்லலாம். மடக்கி வைக்கும் வகையில் சைக்கிள் வருகிறது. ஆகவே, இந்த இறக்குமதிக் கொள்கையினால், தாராளமயமாக்கல் கொள்கையினால் உள்ளூர்த் தொழில்கள் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன அதேபோன்று பம்பு செய்யும் தொழிற்சாலைகள், சுகுணா பம்பு—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறக்குமதிக் கொள்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் அவர்கள் பேசுகிறார்கள். இப்போது மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிற இறக்குமதிக் கொள்கை குறித்து நம்முடைய மாண்புமிகு முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் பாராட்டியிருக்கிறார்களே? அது. தமாகா. கருத்து இல்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 19]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு ஒரு விளக்கம் கொடுக்க நான் விரும்புகிறேன். கடந்த 15 ஆம் தேதி சேலத்தில் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடந்தது. அதில் சிதம்பரம் அவர்கள் கலந்து கொண்டார்கள். சிதம்பரம் அவர்களிடத்திலே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர்கள் மிக விளக்கமாகச் சொன்னது என்னவென்று சொன்னால், 'தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையும் இந்த தாராளமயமாக்கல் திட்டத்தில் சேரக் கூடாது என்பதிலே நான் மிக அழுத்தமாக இருக்கிறேன். அதையும் சொல்லியிருக்கிறேன்' என்பதை அவர்கள் விளக்கமாக எங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரில் உள்ள டன்லப் தொழிற்சாலையைத் திறப்பதாகச் சொன்னார்கள். அங்கே, பழுதுபார்ப்பு, பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதாகச் சொன்னார்கள். கடைசியில் பார்த்தால் அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டும் இன்னும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்படவில்லை. காரணம் கேட்டால், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் இலாக்காவிலிருந்து மின்சாரம் கிடைக்காததால், இந்தத் தொழிற்சாலை இயங்கவில்லை என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே கடந்த ஓராண்டு காலமாக 4,000 தொழிலாளர்கள், 5,000 தொழிலாளர்கள் பசியினாலும், பட்டினியினாலும் வாடிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலைமையிலே அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையிலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு மின்சார இணைப்பு வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் மின்சாரம் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஆனால் இவர்கள் ஏராளமான பாக்கியை மின்சார இலாக்காவிற்கு வைத்திருக்கிறார்கள். அந்தப் பாக்கியைக் கட்டிவிட்டால் நாங்கள் உடனே மின்சாரம் தருகிறோம் என்று சொல்கிறோம். ஒரே நேரத்தில் கட்ட முடியாவிட்டாலும்கூட, நான்கைந்து தவணைகளில் பாக்கியைக் கட்டுவதற்கு அவர்கள் மின்சார வாரியத்தை அணுகினாலும்கூட,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 ஏப்ரல் 19

அதற்கும் நாங்கள் ஒப்புதல் அளிக்கத் தயாராக இருக்கிறோம். பாக்கியைச் செலுத்தாமலே, உடனே மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டால் யாருக்கும் மின்சார இணைப்புக் கொடுக்க முடியாது.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** அங்கே 5,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பத்தில் எத்தனை பேர் இருப்பார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த அரசு தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ளது. ஆகவேதான் கடனைப் பிறகு வசூலித்துக் கொள்ளலாம். ஆண்டுதோறும் Legal and Recoveries Department மூலமாக வங்கிகளில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை வரி வஜா செய்கிறார்கள். அதைப்போன்று மின்சார வாரியத்திலும் நிறைய ரூபாய் தள்ளுபடி செய்யப்படுகிறது. தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டுள்ள நீங்கள், இந்தத் தொழிலாளர்களின் மீதும் கருணை கொண்டு ஏன் இதைச் செய்யக் கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் எந்தத் தொழிற்சாலை செலுத்த வேண்டிய பணத்தையும் தள்ளுபடி செய்யவில்லை. விவசாயிகளுக்கு, குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் தருகிறோமே தவிர, தொழிற்சாலைகள் கொடுக்க வேண்டிய பாக்கியை, எங்கேயும் தள்ளுபடி செய்யவில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத் அவர்கள் நலிவடைந்த தொழிற்சாலைகளை மீண்டும் திறந்து அதிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்காக, அந்த ஆலை முதலாளிகளுக்கு package, credit systems என்பதன்கீழ் சில ஆண்டுகளில் மின்சாரப் பாக்கியைச் செலுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த உரிமையாளர்களுக்கு ஏதாவது வாய்ப்புகள் வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை தொழிலாளர் சங்கத்தினுடைய பிரதிநிதிகள்தான் என்னைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டிருக்கிறார்கள். முதலாளிகள் என்னைக்கூடச் சந்திக்க வேண்டியதில்லை. மின்சார வாரியத் தலைவரைச் சந்தித்து ஒரு கடிதம் கொடுத்து எங்களால் ஒரே



2000 ஏப்ரல் 19] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நேரத்தில் இந்தப் பணத்தைச் செலுத்த முடியாது. இத்தனை தவணைகளில் நாங்கள் கட்டுகிறோம் என்று சொன்னால் அதிகபட்சம் 10 தவணைகளில் அவர்கள் பணத்தைக் கட்டுவதற்கு மின் வாரியம் அனுமதி வழங்கும்.

முற்பகல் 10-45

**திரு. ஜே. எம்.ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே மிகப் பெரிய தொழிற்சாலைகள் ஏறத்தாழ 10, 15 தொழிற்சாலைகள் மூடப்பட்டிக்கின்றன. சிறிய தொழிற்சாலைகள் என்று எடுத்துக்கொண்டோமேயானால், 1500 தொழிற்சாலைகள் உள்ள தொழிற்பேட்டையிலே 600-க்கு மேற்பட்ட (மணியடிக்கப்பெற்றது) நேரத்தைப் பார்க்காதீர்கள். என்னை டென்ஷனில் ஆக்கிவிடாதீர்கள். நான் பேசத் தெரியாத ஆள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பார்ப்பதற்குத்தான் அந்தக் கடிகாரம் இருக்கிறது.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. 600-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக Kunal Engineering Works, Southern Switch Gears, அதேபோன்று அருகிலே Sivananda Steels, Best & Crompton, Binny and Company, Metal Box Company இப்படிச் சொல்ல வேண்டுமென்றால் நிறைய தொழிற்சாலைகளைச் சொல்லலாம். கும்முடிப்பூண்டி, கிண்டி, எண்ணூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் எல்லாம் நிறைய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. அ. இ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். ஒரு உண்மையைச் சொல்லிவிட்டு பல உண்மைகளை மறைக்கிறார். இதற்குக் காரணம் அரசாங்கச் சட்டத்தின்படி மூடுவதற்கு அனுமதி கொடுத்ததினாலோ அல்லது தொழிலாளர் - முதலாளிகள் பிரச்சினையின் காரணமாகவோ மூடப்படவில்லை. அவர்களுடைய சொந்த நிதி நெருக்கடியின் காரணமாக, Marketing Competition, Liquidation, BIFR இப்படிப் பல

காரணங்கள்; அதையும் சொல்லிச் சொல்லுங்கள். அரசைக் குற்றம் சொல்ல வேண்டாம்.

**திரு ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சகம் என்பது அரசன் இல்லாத கோட்டையாக, தண்ணீர் இல்லாத அகழியாக, அதிகாரம் இல்லாத போலீசாக— வேலூர் போலீசைச் சொல்வார்கள்; அந்த மாதிரிதான்—இன்றைக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய அமைச்சகம் இருக்கிறது. தினம் தினம் அமைச்சருடைய அறையிலே சென்று பார்த்தால், தினமும் பஞ்சாயத்து நடக்கிறது. கட்டப் பஞ்சாயத்து என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து பஞ்சாயத்து பண்ணுகிறார்கள். ஆனால் அந்த பஞ்சாயத்தின் முடிவை தொழிற்சாலைகளில் உள்ள முதலாளிகள் ஏற்றுக் கொள்ளுவது கிடையாது. இவர் போடுகின்ற திட்டத்தை, ஒரு தீர்மானத்தை, அந்த சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உத்தரவை அந்தத் தொழிற்சாலை முதலாளிகள் ஏற்றுக் கொள்ளாததனால் பல பேர் இன்னும் வேலைக்குப் போகாமல் இருக்கிறார்கள். இவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சுகிறார்கள். ஆனால் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, சட்டப்பூர்வமான அதிகாரங்களைக் கொடுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய உத்தரவை ஏற்காத, தொழிற்சாலைகளை நடத்துகிற அதிபர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். atleast 15 நாட்கள் சிறைத் தண்டனையோ அல்லது 1 மாத சிறைத் தண்டனையோ வைத்தால் பயப்படுவார்கள். ஏறத்தாழ இப்போதுகூட ஒரு தொழிற்சாலை சம்பந்தமாக ஒரு....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்குத் தகவல்கள் தெரியாது என்று கருதுகிறேன். 18(1) ஒப்பந்தத்தையோ 12 (3) ஒப்பந்தத்தையோ அல்லது அரசு போடுகிற உத்தரவையோ மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க அரசுக்குத் தொழிற் சட்டங்களின்கீழ் அதிகாரம் இருக்கிறது. அந்த அடிப்படையிலே பல முதலாளிகள்மீது பல தொழிற்சங்கங்கள் சார்பாக மட்டுமல்லாமல் அரசாங்கத்தின் சார்பாகவே வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். Prosecution cases தொடரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.



**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆரூண் ரஷீத் அவர்களுடைய கேள்விகளுக்கு அல்லது அவருடைய பேச்சுகளுக்கு பதில் அளிக்கிறபோது 12 (3) செட்டில்மெண்ட், 18(1) செட்டில்மெண்ட் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் பி & சி ஆலை நிர்வாகம், முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பின்பும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு அந்தத் தொழிற்சங்கத் தலைவருக்கும், நிர்வாகத்திற்கும் இடையிலே சமாதானம் செய்துவிட்ட பின்பும் இதுவரையில் அவர்கள் ஏற்றுக்கொண்ட, முதலமைச்சர் அறிவித்த அந்தத் திட்டத்திற்கு இன்னும் செயலாக்கம் தரவில்லை. அந்தத் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையையும் இதுவரையிலும் தரவில்லை. அந்த முதலாளிகள் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்த ஒப்பந்தத்தின்படி, முதலாளிகள் முதற்கட்டமாக ஒரு தொகையைத் தொழிலாளிகளுக்குக் கொடுத்துவிட்டார்கள். மீதம் உள்ள சுமார் 3500 தொழிலாளர்களுக்கு அந்த நிர்வாகத்தினுடைய உரிமையாளர்கள் உடனடியாகப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தியது. அந்தத் தொழிற்சாலை சங்கத்தினுடைய தலைவரும் அதனுடைய நிர்வாகிகளும் என்னையும், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இரகுமான்கான் அவர்களையும் குறைந்தது 40 அல்லது 50 தடவையாவது சந்தித்தார்கள். அப்படிச் சந்தித்த ஒவ்வொரு முறையும், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே வங்கிகளின் மூலம் கடன் பெற்று அதற்கு BIFR மூலமாக நிவாரணம் தேடுவது என்று முதலிலே முடிவு செய்தார்கள். பிறகு வங்கிகள் எல்லாம் நீங்கள் சொல்வதன் அடிப்படையிலே நாங்கள் செய்ய முடியாது. அரசாங்கம் guarantee கொடுத்தால் நாங்கள் கடன் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். பிறகு முதலமைச்சரிடத்திலே இதைத் தெரிவித்து அரசாங்கம் 40 கோடி ரூபாய்க்கு guarantee கொடுத்தது. அதன் பிறகு insurance கம்பெனியிலிருந்து 10 கோடி ரூபாய் அவர்களுக்குப் பணமாகக் கிடைத்தது. அந்தப் பணத்தை

முதலிலே தொழிலாளர்களுக்குக் கொடுத்து விடலாம் என்று 5 வங்கிகளுடைய நிர்வாகிகளை அழைத்து நானும், நம்முடைய மாண்புமிகு அமைச்சரும் பேசினோம். அதிலே 2 வங்கிகள் அதனை ஒத்துக் கொள்ளவில்லை. இந்த 10 கோடி ரூபாயை நாங்கள் பகிர்ந்து கொள்வோம். இதிலேயிருந்து கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இதனால் பிரச்சினை தீராமலேயே இருந்தது. இறுதியாக 4 தினங்களுக்கு முன்னாலே முதலாளிகளை அழைத்து, இப்படியே பிரச்சினை நீண்டுகொண்டு போனால் தொழிலாளிகளுடைய வாழ்வு என்ன ஆவது என்று கடுமையாகப் பேசி அவர்கள், நாங்கள் டிசம்பர் மாதத்திலே நிச்சயமாக அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்துவிடுகிறோம்; அதற்கும் முன்னதாகவே முயற்சிக்கிறோம்; ஆனால் அந்த டிசம்பர் மாதத்திற்குள் கொடுப்பதற்கான chequeஐ இப்போது கொடுத்து விடுகிறோம் என்று சொல்லி cheque கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தொழிற்சங்கத் தலைவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். டிசம்பர் மாதம்தான் கடைசி தேதியே தவிர முடிந்தால் ஜூலை மாதத்திலே கூட அந்தச் cheque ஐ honour செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். என்று தெரிவித்திருக்கிறார்கள். தொழிலாளிகளும், முதலாளிகளும் இருவரும் கலந்து பேசி இந்த முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. BIFR-க்கு செல்லும்போது அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்களும் ஒத்துழைப்பதாகச் சொல்லி இருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை நீங்கள் அப்புறம் பேசப் போகிறீர்கள், அவர் பேசட்டும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுந்தொழில் வளர்ச்சி என்பது ...

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஒரே ஒரு வார்த்தை; அது சம்பந்தமாக அந்த தன் விருப்பத்தின் பேரிலே அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய திட்டம் (VRS) முதலமைச்சர் முன்னாலே 12 (3) போடப்பட்ட settlement; ஏறத்தாழ அவர்கள் 736 trainees-க்கு தலைக்கு 50,000 ரூபாய் வீதமாகக் கொடுத்து விட்டார்கள். இரண்டு instalment-லே மீதி இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு



instalment-லேயும் ஒரு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதிதான் 40 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதற்காகத்தான் இந்த முயற்சிகள்; விரைவிலே நடைபெற்றுவிடும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசு uniform tax என்று சொல்கிறார்கள். Uniform salary கொண்டு வந்தால் எப்படி இருக்கும்? தொழிலாளர்களுக்கு ஒருமுனைப்படுத்திய salary திட்டம் கொண்டு வரவேண்டும். இப்போது பெரிய பெரிய கனரக இன்ஜினியரிங் கம்பெனியெல்லாம் மூடி—ஒவ்வொரு Government Industrial Estate-லேயும் பார்த்தால் garment industries தான் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, பெண்களும், சிறார்களும் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். அவர்களுக்கு தொழிலாளர் நல அமைச்சகம் மூலமாக ஊதியம் நிர்ணயம் செய்கின்ற முயற்சிகளை தொழிலாளர் நல அரசு மேற்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)—நான் 5 நிமிடம் கூடப் பேசவில்லை, சார்.

சென்னையை அடுத்துள்ள அம்பத்தூர் பகுதி தொழிற்பேட்டை பகுதி என்பதனால், அதை நகராக ஆக்கினால் அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு HRA கிடைக்கும், DA கிடைக்கும், வீட்டு வாடகைப்படி, இதரப் படிகள் எல்லாம் நல்ல முறையில் கிடைக்கும்போது அவர்களுக்கு salary 1,000 ரூபாய் அதிகமாகும். சென்னை நகருக்கு அருகில் இருக்கின்ற டி.வி.எஸ். industry யைப் பார்த்தால் அந்தச் சாலை முழுவதையும் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அங்கு தொழிலாளி ஒருவர் நாங்கள் recreation club வைத்துக் கொள்கிறோம் என்று கேட்டவுடன் அவர்களை suspend பண்ணிவிடுகிறார்கள். டி.வி.எஸ். தொழிற்சாலைக்கு அரசாங்கம் கொடுத்த நிலம் எவ்வளவு? இப்போது ஏறத்தாழ 500 ஏக்கர் நிலத்தை அபகரித்திருக்கிறார்கள். இது குறித்து அரசு முறையான நடவடிக்கை எடுக்குமா? அதற்கான பணத்தை இந்த அரசுக்குச் செலுத்தியிருக்கின்றதா? ஏறக்குறைய 500 ஏக்கர் நிலத்தை அபகரித்த அந்த டி.வி.எஸ். நிர்வாகம் இப்போது தொழிலாளர் விரோதப் போக்கினைக் கடைப்பிடித்து, அவர்கள் தி.மு.க. கூட்டத்தில் பேசினாலும், த.ம.கா.கூட்டத்தில் பேசினாலும் உடனே suspend பண்ணிவிடுகிறார்கள். ஒரு சின்ன Police complaint Section 75-லே வந்தால்கூட, சைக்கிள் தகராறு என்று போட்டு—சைக்கிளில் ஒருவரை ஒருவர் மோதிக் கொள்கிற தகராறில் போலீசில் complaint பண்ணினால் உடனே பணி

நீக்கம் செய்துவிடுகிறார்கள். இது அநியாயமாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கு வெளியில் ஆயிரம் பிரச்சினை இருக்கும். இதில் தொழிற்சாலை நிர்வாகம் தலையிட வேண்டிய அவசியமில்லை. ஒரு தொழிற்சாலை நிர்வாகம் என்பது—தொழிற்சாலையின் உள்ளே நடக்கின்ற நிலைமைக்குத்தான் பொறுப்பு வகிக்க வேண்டுமே தவிர வெளியே ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் பொறுப்பு ஏற்பதிலே எந்தவிதமான நியாயமும் இல்லை. பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை அபகரித்திருக்கின்ற டி.வி.எஸ். நிர்வாகத்தின் மீது, தொழிலாளர் விரோதப் போக்கினைக் கடைப்பிடிக்கின்ற டி.வி. எஸ். நிர்வாகத்தின்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சார் ஒரு நிமிடம் இருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Constant Numatics என்ற ஒரு தொழிற்சாலையில் ஜி. கருணாநிதி என்ற தொழிலாளி இறந்துவிட்டார். அவருக்கு இதுவரை compensation சரியாகத் தரப்படவில்லை. அவருக்கு L.I.C. பணம் கட்டியிருக்கிறார்கள்; P.F. கட்டியிருக்கிறார்கள். அங்கே சென்று பார்த்தால், தொழிற்சாலையில் தொழிலாளிகளிடமிருந்து பிடித்த பணத்தை முதலாளி கட்டாமல் இருக்கிறார். தொழிலாளர் நல அமைச்சகம் இது குறித்து முறையாக நடவடிக்கை எடுத்து—அந்த Constant Pneumatics அத்திப்பேடு ரோட்டில், அம்பத்தூரில் இருக்கின்ற அந்த என்ஜினியரிங் கம்பெனியில் electrical parts எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்—இந்த மாதிரி எந்தெந்த கம்பெனிகள் தொழிலாளர்களிடமிருந்து P.F. பிடிக்கிறார்கள், எந்தெந்த கம்பெனிகள் insurance தொகை பிடிக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்கள் அவ்வாறு பிடிக்கின்ற பணத்தை ஒழுங்காகக் கட்டுகின்றார்களா என்பதைத் தொழிலாளர் நல அமைச்சகம்...

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத் அவர்களுக்கு என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை என்று கருதுகிறேன். E.S.I. Commissioner, P.F. Commissioner இவர்களை எல்லாம் அடிக்கடி அழைத்து எத்தனை எத்தனை Closure Mills அல்லது மற்ற Millகளில் தொழிலாளர்களுக்குச் சட்டரீதியாகச் செலுத்த வேண்டிய E.S.I.ஐயோ, Provident Fund



தொகையையோ கொடுக்கவில்லை என்ற பட்டியலைப் பெற்று அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, பல வழக்குகள் போடப்பட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து, அதைப் பெறுவதற்கான முயற்சிகளை இந்தத் துறை தெளிவாகச் செய்து கொண்டிருக்கிறது. நானே இதில் நேரடியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** நிறைய கம்பெனிகளில் கட்டாததை நான் சொல்கிறேன். அதேபோல பல தொழிலாளர்கள், ஏற்கெனவே இருக்கின்ற கோயில் நிலங்கள் போன்ற இடங்களில் குடியிருப்புகளைக் கட்டியிருக்கிறார்கள். அந்த ஏழைத் தொழிலாளர்கள் கட்டியிருக்கின்ற குடியிருப்புகளுக்கெல்லாம் முன்பு 10 ரூபாய் வாடகையை வாங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பார்த்தால், 1400 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். 1400 ரூபாயை மாதத்திற்குப் போட்டிருக்கிறார்களா? பாடியில் திருவல்லீஸ்வரர் கோயில் பராமரிப்பு நிலத்தில் 30, 40 வருடங்களாக அவர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 வருடங்கள் இருந்தால் போதும்; பட்டா கொடுத்து விடுகிறோம் என்று சொன்னார்கள். இந்த மாதிரி இடங்களுக்குப் பட்டா...(குறுக்கீடு)

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ முறை இந்த அவையிலே விளக்கம் சொன்னதற்குப் பிறகும் இன்னும் குழப்புகிறார்கள் என்பதுதான் வருந்தத்தக்கது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது வருவாய் துறையைச் சார்ந்த புறம்போக்கு நிலங்களுக்கு. இதில் எந்த வகையிலும் கோயில் நிலங்கள் இடம்பெறாது என்பதை நீங்கள் உறுதியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், கோயில் நிலங்களில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்தாலும் அது ஆக்கிரமிப்பாகத்தான் கருதப்படும். அப்படிக் கருதப்படக் கூடாது என்பதற்காகத்தான ஏழை, எளிய மக்களுக்கு வாடகை நிர்ணயம் செய்து, முறைப்படி, விதிமுறைகளின்படி வாடகை நிர்ணயம் செய்கிறோம். அந்த வாடகை நிர்ணயத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்கு போனபோது, உயர்நீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்புச் சொல்லியிருக்கிறது, அரசு முறையான விதிகளின்படி இயன்றவரைக்கும் நியாயமான வாடகையை நிர்ணயம் செய்திருக்கிறது; எனவே இதைக் கட்டுவதுதான் முறை; இதை மறுப்பதற்கு இல்லை என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. பத்து, பதினெட்டு ஆண்டுகளாக எந்த

வாடகையும் ஏற்றப்படாமல் 10 ரூபாயிலிருந்து நீண்டகாலம் நீங்கள் தெய்வத்தை ஏமாற்றிக்கொண்டு வரும்போது, இப்போதாவது நாங்கள் ஏமாறாமல் இருப்பதற்காகத்தான் இதைப் போட்டிருக்கிறோம்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்; நான் ஒரு சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவன், அங்கே இருப்பவர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தெய்வத்தின் முன் அனைவரும் சமம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 535-ன்படி உறுப்பினர் கேட்கிற விஷயம் என்னவென்றால், அந்த வாடகைக் கட்டணம் என்பது மாதத்திற்கா, அல்லது வருடத்திற்கா என்ற பிரச்சினை இருக்கிறது. காரணம் 10 ரூபாய் செலுத்திக் கொண்டிருந்தவர்கள்...

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** எப்போதுமே வாடகை மாதத்திற்குத் தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரை 21 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மீது அக்கறை கொண்ட இந்த அரசு தொழிலாளர்களுக்காக, கட்டுமானத் தொழிலாளர்களுக்காக, குறிப்பாக ஆட்டோ ஓட்டுகின்ற தொழிலாளர்களுக்காக நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் 3 முறை மத்திய அரசு பெட்ரோல் விலையை உயர்த்தியபோதும் மாநில அரசு ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யவில்லை. முதலில் 50 ரூபாய் Spot fine என்று போட்டதை நீங்கள் 100 ரூபாயாக ஆக்கியிருக்கிறீர்கள். வேலைக்கு வேறு வழி இல்லாமல் இருக்கின்ற பாமர மக்கள்தான் ஆட்டோ ஓட்டுகிறார்கள். நீங்கள் ஆட்டோ Spot



fine 100 ரூபாய் என்று போடுவதால் அவர்கள் போலீஸ்காரரையும் தனியாகக் கவனிக்க வேண்டும். Fine-ஐயும் கட்ட வேண்டும் என்று பெரிய அவதிக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, இதைக் குறைக்க வேண்டும்.

அதேபோன்று, தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். நிறையத் தொழிற்சாலைகளில், ஒரே ஒரு முஸ்லீம் கூட வேலை செய்யாத தொழிற்சாலைகள் இருக்கின்றன. குறிப்பாக நண்பர் பேரூர் நடராசன் அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரு தொழிற்சாலையில் 5000 பேர் வேலை செய்கிறார்கள். நான் அவரிடத்திலே வேண்டுகோள் வைத்தேன். 5 ஆயிரம் பேர் வேலை செய்கின்ற ஒரு கம்பெனியில் ஒரு முஸ்லீம்கூட இல்லாத நிலைமை இருக்கிறது. இஸ்லாமியர்கள் விலக்கப்பட்டவர்களா? அவர்களுக்கு இட ஒதுக்கீடு தருகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே...

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்கம், மதம், சமுதாய வழிகாட்டி என்ற முறையிலே நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் எந்த தொழிற்சாலையிலாவது, ஆலையிலாவது முஸ்லீம்கள் வேலை பார்க்கக்கூடாது, பணிக்கு வரக்கூடாது என்று ஏதேனும் தடை இருக்கிறதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவு செய்து uniformஆக ஒரு இடஒதுக்கீடு கொடுத்து, எல்லோருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும். நானேகூட சில தொழிற்சங்கங்களிலே பொறுப்பிலே இருக்கின்றேன்; கௌரவப் பொறுப்பிலே இருக்கின்றேன். அந்தத் தொழிற்சாலைகளிலே பல 100 பேர் வேலை செய்கிறார்கள். ஒருவர்கூட minority கிடையாது. ஆகவே, இடஒதுக்கீட்டை இந்த அரசு அமல்படுத்த வேண்டும். தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்டு பலப்பல நலத் திட்டங்களைக் கொண்டு வருகின்ற இந்த அரசு, குறிப்பாக ஆட்டோ தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள், அதேபோல மரபுசாரா தொழிலாளர்கள், குறுந்தொழில் செய்பவர்கள் ஆகியோருக்கு

 முக்கியத்துவம் கொடுத்து, அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற வகையிலே, சாதாரண நிலையிலே உள்ள அவர்களுக்கு E.S.I. திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு பற்றிய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தங்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகளைத் திறப்பதில் முனைப்புக் காட்டி, வாடிக்கிடக்கின்ற தொழிலாளர்களின் வாழ்வில் விளக்கு ஏற்றி வைக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒரு வாரியத்தை உருவாக்கியுள்ளார்கள். அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக இதுவரை எந்த முதல்வரின் மனதிலும் தோன்றியிராத, விவசாயத் தொழிலாளர்கள், தையல் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் போன்றவர்களுக்காக நல வாரியம் கண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அந்தத் தொழிலாளர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹூண்டாய் கார் தொழிற்சாலை, ஃபோர்டு கார் தொழிற்சாலை போன்ற பல்வேறு தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் உருவாக்கி, தொழிலாளர்களுக்குப் பெரிதும் வேலைவாய்ப்பு அளித்த நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தமிழக மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

1993 ஆம் ஆண்டு என்னுடைய கரூர் தொகுதியில் புகளூர் சர்க்கரை ஆலையில் தொழிலாளர்கள்மீது துப்பாக்கிச்சூடு, அன்றைய முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது. 1996 ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அரசு பொறுப்பேற்றதும் இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவந்தேன். நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட அரசு உத்தரவின்மீது சர்க்கரை ஆலை நிர்வாகம் தடையாணை பெற்றது. நம்முடைய தலைவர் கலைஞர்

223307



ஆட்சியில் 1997 ஆம் ஆண்டு தடையாணை விலக்கப்பட்டது. இப்போது நிர்வாகம் அமர்வு நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது. இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சுமார் 700 பேர். இதில் 200-க்கு மேற்பட்டவர்கள் ஓய்வு பெற்றவர்கள், இறந்தவர்கள் அதிகமாக அடங்குவார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிலாளர்கள் பிரச்சினையில் நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து அரசு appeal-க்குப் போகாது என்று ஒரு முடிவு செய்து, கடைப்பிடித்து வருகிறார்கள். இதனைக் கலைஞர் கோட்பாடு என்றே அனைவரும் பாராட்டுகிறார்கள். இந்த புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் நீதிமன்றத்தின் நீதியை அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட முதலாளி வர்க்கத்தை அழைத்து, நீதிமன்றத்திற்கு வெளியே ஒரு சமரச ஏற்பாடு செய்து, ஜெயலலிதா அரசின் காலத்தில் நிகழ்த்தப்பட்ட அநீதிக்கு நீதி வழங்க வேண்டுமென்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் சார்பாகக் கோரிக்கை வைக்கிறேன்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய காகித ஆலை என்னுடைய கரூர் தொகுதியில் அமைந்துள்ளது. 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த ஆலையில் 2,000 contract தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு 1990 ஆம் ஆண்டு மாண்புமிகு கலைஞர் ஆட்சியில்தான் முதன்முதலாக ஒப்பந்தம் போடப்பட்டது. இந்தக் காகித ஆலையில் 30 contract பிரிவில் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அதிகபட்சமாக 1986 ஆம் ஆண்டிலிருந்து 2000 வரை, 14 வருடங்கள் contract தொழிலாளர்கள் அனுபவத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்குக் குறைந்தபட்சத் தினக்கூலி ரூ. 95/- அதிகபட்சத் தினக்கூலி ரூ.175/- இதில் நேரடியாக ஆலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 189 பேர். மறைமுகமாக, petty contract-ல் பணிபுரிகிறவர்கள் 500 பேர். இவர்கள் முதன் முதலில் போனஸ் வாங்கியது 1986 ஆம் ஆண்டு. இந்தத் தொழிற்சாலையில் sweeper-களை contract-லிருந்து, கம்பெனி தொழிலாளர்களாக நியமனம் செய்தது, 1991 ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சியில்தான் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் காகித ஆலை ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தத் தொழிலாளர்களாகப் பணி நிரந்தரம் செய்து தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது மின்சார வாரியத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தப்படுத்தி வருவதுபோல, எங்கள் காகித ஆலைத்

[திருமதி வாசுகி முருகேசன்] [2000 ஏப்ரல் 19

தொழிலாளர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒப்பந்தப் பணியாளர்கள் குறித்து ஆய்வு செய்த ஆய்வுக குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, காத்துக் கிடக்கின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

சென்ற ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பொதுக் கணக்குக் குழுவில், கல்கத்தாவிற்கு நாங்கள் ஆய்வுப் பயணம் சென்றிருந்தோம். அங்கு போனதும் எனக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் நினைவுதான் வந்தது. காரணம் என்னவென்றால், கை ரிக்ஷாக்கள்; நெருக்கடி நிறைந்த அந்த நகரத்தில் இன்னும் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்படவில்லை. காரணம், அங்கு கலைஞர் ஆட்சி இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்பில் உள்ளவர்கள்தான் ஆட்சிமன்றத்தில் இருக்கிறார்கள். சட்டமன்றத்தில் பல்வேறு மாநிலங்களை உதாரணம் காட்டிப் பேசுகின்ற உறுப்பினர்கள், கை ரிக்ஷாக்களை ஒழித்த தலைவர் கலைஞர் அவர்களை, மூடிக்கிடக்கின்ற ஆலைத் தொழிலாளர்களுக்கும் மாதம் ரூ.250 கொடுத்துக் காப்பாற்றும் முதல்வர் அவர்களை வெளிப்படையாகப் பாராட்டிப் பேசமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இன்றைய சூழ்நிலை அப்படி. ஆனால், தமிழக அரசை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அனுதினமும் அவர்கள் மனதாரப் பாராட்டிக் கொண்டுதான் இருப்பார்கள் என்று நம்புகிறேன். வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் சமுதாயத்திற்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சமுதாயத் தொழிலாளி என்ற முறையில் பணிபுரிந்து வருகிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் தொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் முனைப்புக் காட்டி ஒவ்வொரு நாளும் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள். ஆகவே என்னுடைய கோரிக்கையையும் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. சுப்பராயன்.



2000 ஏப்ரல் 19]

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையைச் சார்ந்த இந்த மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே ஆறரை வரியிலே மாநில அரசின் தொழிலாளர் கொள்கை விளக்கப்பட்டிருக்கிறது. வேதத்திற்கு பாஷ்யம் எழுதியவர்களைப் பிடித்துத்தான், இதற்கு பாஷ்யம் எழுத வேண்டுமென்று நான் கருதுகிறேன். உண்மையிலேயே, இந்த மாநில அரசுக்கு என்ன தொழிலாளர் கொள்கை என்றே விளங்கவில்லை. விளங்காத அளவுக்கு அது விளக்கப்பட்டிருக்கிறது. நான் அதுபற்றிய விவரத்திற்குள்ளே இப்போது விரிவாகப் போக விரும்பவில்லை.

**[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை]**

இதற்கு என்ன காரணம் என்றால், வேறொன்றும் இல்லை. இன்றைக்கு மாநிலத்தை ஆளுகின்ற கட்சி மட்டுமல்ல திராவிட முன்னேற்றக் கழகம்; மத்தியிலும் நாடாளுகின்ற கட்சி. எனவே, மத்தியில் நாடாளுகின்றவர்கள் வகுத்துக் கொண்டிருக்கிற கொள்கை நிலைகளிலேயிருந்து சிந்திக்கின்ற காரணத்தால், இத்தகைய விபத்து ஏற்படுகிறது என்று நான் கருதுகிறேன். மத்தியிலே இருக்கக்கூடிய நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. ஜாட்டியா அவர்கள் சொல்கிறார் இப்போது தொழிற் தகராறு சட்டங்களில், தொழிலாளர்களை முதலாளிகள் எளிதாக நீக்குவதற்கு வழிவகை இல்லை; எனவே, எளிதாக நீக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று. இதைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா என்று எனக்குத் தெரியவில்லை. அவர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்! அதேபோல், மத்திய நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்ஹா அவர்கள் என்ன சொல்கிறார் தெரியுமா? தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்கள், உற்பத்தித் திறனைப் பாதிக்கும் வகையில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருக்கின்றன; இவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் குறிப்பிடுகிறார்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இந்த இரண்டு விஷயங்களிலேயும் நம்முடைய மாநில தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்ன நிலை எடுத்திருக்கிறார் என்பது எனக்குத்

[திரு. கே. சுப்பராயன்] [2000 ஏப்ரல் 19

தெரியாது. ஏனென்றால் சொன்னவர் மத்திய அமைச்சர்; அந்த மத்திய அமைச்சரவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கட்சி. எனவே திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளடங்கிய அந்த மத்திய அமைச்சரவையில், நிதியமைச்சரும், தொழிலாளர் நலத் துறை அமைச்சரும், தொழிலாளர்களின்பால் இப்படி ஒரு கருத்தை—எதிரான கருத்தை—வெளியிட்டிருக்கிறபோது, ஓர் ஆறரை வரியிலே தமிழ் மாநில அரசாங்கத்தினுடைய தொழிலாளர் நலத் துறை கொள்கை விளக்கப்பட்டிருப்பதில் ஒன்றும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ இல்லை.

இங்கே நம்முடைய இந்தப் புத்தகம் முழுவதையும், கொள்கை விளக்கக் குறிப்பு முழுவதையும் படித்தால், எந்த விஷயத்தைத் தொடுவது, எந்த விஷயத்தை விடுவது என்றே தெரியவில்லை. தொடுவதற்கு ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. ஆனால், தொடுவதற்கு உரிய வாய்ப்புகள் குறைவாக இருக்கிற காரணத்தால், நான் குறிப்பான சில விஷயங்களை மட்டுமே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, மொத்தம் 11,816 தாவாக்கள் வந்ததாகவும், அவற்றில் 6,910 தாவாக்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 4,906 தாவாக்கள் முடிக்கப்படவில்லை. இதில் சில விஷயங்கள் மறைக்கப்பட்டு விடுகின்றன. தொழிலாளர்கள் கணக்கு முடித்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு கணக்கு முடிப்பதிலே தொழிலாளர் நலத் துறையே சட்ட விரோதமாகத் தலையிடுகிறது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டிய தொழிலாளர் நலத் துறை, தொழிலாளர்களின் கழுத்தை நெறிப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்கின்ற குரு பீடமாக மாறி இருக்கிறது என்று நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அதற்குரிய ஆதாரங்களோடுதான் குற்றம் சாட்டுகிறேன். அதற்குரிய விவரங்களையெல்லாம் என்னால் முழுமையாக, விரிவாக வைக்க முடியும். அந்த விவரங்களோடுதான் நான் இருக்கிறேன். அதைப் பின்னர் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறேன். இவற்றில் தொழிலாளர் நலத் துறை என்ன பங்களிப்பு செய்திருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

முற்பகல் 11-10



2000 ஏப்ரல் 19] [திரு. கே. சுப்பராயன்]

அதேபோல கொள்கை விளக்கக் குறிப்பிலே போனஸ் காலம் அமைதியாகக் கழிந்தது தொழிலாளர் நலத் துறையின் சாதனை என்று ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. போனஸ் காலம் அமைதியாக முடிந்ததாம். போனஸ் வழங்கப்படாமலேயே பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதே தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுப் பஞ்சாலைகள் 8.33% கூட போனஸ் வழங்குவதில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவாரா? அறிந்துதான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எழுதி இருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. அதேபோல தனியார் கம்பெனிகள் பலவற்றில் 2 ஆண்டு, 3 ஆண்டு, 4 ஆண்டுகூட போனஸ் கொடுக்கப்படவில்லையே. இவற்றையெல்லாம் தொழிலாளர் நலத் துறையின் சாதனையாக அமைச்சர் கருதுகிறாரா என்றும் தெரியவில்லை. இதற்கு...

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை பற்றிக் கேட்டார். கொள்கை விளக்கக் குறிப்பிலே சரியான விளக்கம் இல்லை என்றும் சொன்னார். அதை என் பேச்சிலே நான் சொல்கிறேன். நீண்ட நேரம் சொல்லவேண்டும். அடுத்து, போனஸ் சம்பந்தமாகப் பேசினார். எப்பொழுதுமே போனஸ் ஒரு பிரச்சினையாகத் தொழிலாளர் நலத் துறைக்கும், மற்ற துறைகளுக்கும் இருக்கிறது. ஆனால், தொழிற்சங்கங்கள் எல்லாம் கூடி ஒரு முடிவு எடுத்து, அதைப் பிரச்சினை ஆக்காமல் ஏற்றுக் கொண்டு கையெழுத்துப் போட்டதற்குப் பிறகு அவர்களும் முதலாளிகளின் கைக்கூலிகள் என்று சொல்கிறாரா? இந்த போனஸ் பிரச்சினையிலே உடன்பாடு இல்லையென்று சொன்னால் உங்களுடைய கட்சியின் நிலை என்ன? நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள்?

**திரு. கே. சுப்பராயன்:** எங்கள் கட்சியின் நிலையை நான் பொதுக் கூட்டத்திலே விளக்குகிறேன். இப்போது நான் கொள்கை விளக்கக் குறிப்பைப் பற்றி மட்டும்தான் பேசிக்கொண்டு....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** இதுதான் உரிய இடம். இது மக்களுடைய சபை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் நிலை என்ன என்பது குறித்து அல்ல இப்போது நடைபெறுகிற விவாதம். அதற்கும் நான் தயார். தொழிலாளர் நலத் துறையினுடைய...

[2000 ஏப்ரல் 19

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அப்படியானால் ஒன்றை நினைவூட்டுகிறேன். இன்றல்ல, அன்றல்ல; emergency இருந்த நேரத்திலேயே, கோவையிலே தொழிலாளர்களுக்கு போனஸ் கிடையாது என்று ஒரு சட்டத்தைக் காரணம் காட்டியபோது, நீங்கள் போனஸ் கொடுக்க வேண்டாம், advance-ஆகக் கொடுங்கள் என்று சொல்லி, முதலாளிகளிடத்தில் வாங்கிக் கொடுத்த பாட்டாளிகளின் பாதுகாவலர் கலைஞர்.

**திரு. கே. சுப்பராயன்:** ** அது எங்கள் வேலை அல்ல.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத வார்த்தைகளை நம்முடைய சுப்பராயன் பேசுகிறார்.

**திரு. கே. சுப்பராயன்:** தேவையில்லாத வார்த்தையைத் தொடங்கி வைத்தவர் அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் இரகுமான்கான் சொன்னது, emergency-யைக் காட்டி...

**திரு. கே. சுப்பராயன்:** **

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை, முதலாளிகளை அழைத்துப் பேசி, போனஸ் கொடுக்க மாட்டோம் என்று சொன்னபோது, முதலமைச்சர் அவர்கள், அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, தொழிலாளர்களுக்கு நீங்கள் போனஸ் வழங்க இப்போது தயாராக இல்லாவிட்டாலும்கூட, ஒரு advance ஆகவாவது கொடுங்கள் என்று தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுத்தார் என்று சொன்னாரே தவிர, ** அவர் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்புச் சகோதரர், ** என்னுடைய அருமை நண்பர் சுப்பராயன் அவர்கள் இதுபோன்ற வார்த்தைகளைப் பேசுவது சரியல்ல.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, இது அவருடைய ** அவருடைய இயல்பான குறும்புத்தனமா? அல்லது வேறு ஏதாவது என்று எடுத்துக்கொள்வதா? முதலாளிகளை....

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களை ** என்று சொன்னதையும், அதைப் போலவே, அவர் அமைச்சர் ** என்று சொன்னதையும், இரண்டையும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், இரண்டு பேரும் உணர்ச்சிவசப்படாமல் அமைதியாகப் பேசுங்கள், இவை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து தொழிலாளர் பிரச்சினையால் ஆலைகள் மூடப்படவில்லை. தொழிலாளர்களுக்கு எதிராக closure-க்கு 25(0) அடிப்படையிலே எந்த அனுமதியும் மாநில அரசு வழங்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரொம்ப சரி ஆனால், முதலாளிகள் எப்போதுமே blade மாதிரி கூர்மையாகச் சிந்திக்கக் கூடியவர்கள். சட்டத்தின் சந்து பொந்துகளை, இண்டு இடுக்குகளை எல்லாம் எப்படிப் பயன்படுத்துவது, சட்டத்தைக் காப்பாற்றுகின்ற அதிகாரிகளைக் கரையான் அரிப்பது போல எப்படிச் செல்லரிக்க வைப்பது என்பனவற்றிலேயெல்லாம் தேர்ந்தவர்கள் முதலாளிகள். எனவே அவர்கள் இப்போது என்ன கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்றால் closure என்பதற்குப் பதிலாக suspension of operation என்ற ஒரு வார்த்தை இன்றைய industry-யிலே வந்திருக்கிறதே அதற்கு என்ன பொருள்? Suspension of Operation என்று சொல்வது closure. இது குறித்து மாநில தொழிலாளர் நலத் துறை கண்டுகொண்டதா? கவலைப்பட்டதா? இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிற முதலாளிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

அதேபோல இன்னொரு மிக முக்கியமான ஒரு விஷயம். தொழில் நீதிமன்றங்கள், தொழில் தீர்ப்பாயங்கள், இவற்றில் என்ன நடக்கின்றன என்றால், பெரும் பகுதியும் retiring stage-லே தான் Judges போடப்படுகிறார்கள். retiring stage-லே இருக்கிற Judge என்ன செய்வார் என்ற விரிவான விஷயத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. அத்தகைய Judges, அங்கே போடப்படுகின்ற காரணத்தால், பல்வேறு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரச்சினைகள் வருகின்றன. மேலும், மூன்று மாதங்களுக்குள் இந்த வழக்கு முடிக்கப்படவேண்டுமென்றுதான் reference கொடுக்கப்படுகிறது. ஆனால் முதல் விசாரணை தொடங்குவதற்கே மூன்று மாதமாகி விடுகிறது. ஐந்தாறு ஆண்டுகள் காலதாமதம் ஆகிறது. இவற்றைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை தொழிலாளர் நீதிமன்றங்களில் உருவாக்குவதற்கான நடைமுறைகளை மாநில அரசு செய்ய வேண்டும்.

அடுத்து பல்வேறு சட்டங்களின் சாரங்கள் பற்றி இங்கே கூறப்பட்டிருக்கின்றன. சட்டங்களின் சாரங்களைத் தெரிந்துகொள்வதைக் காட்டிலும், சட்டங்களின் உரிமைகளைத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் அனுபவிக்க, எந்த அடிப்படையில் உதவி இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதும், அவற்றை எடுத்துச் சொல்வதும்...

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள். ஏதோ, ஓய்வு பெறுகிற நீதிபதிகளைத்தான், அந்தத் தொழிலாளர் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக நியமிப்பதாகச் சொல்கிறார்கள். பொதுவாக, உயர் நீதிமன்றத்தில், sub-judge-ஆக இருந்து promotion ஆகியவர்களை முதன் முதலாக நியமனம் செய்வது அல்லது promotion ஆனவுடன் அவர்களுக்குப் பதவி தருவது, Labour judge ஆகத்தான். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், அவர்களுடைய மாவட்டமான கோயம்புத்தூரிலேகூட, என்னுடைய ஜீனியராக இருந்தவர் திரு. இராமமூர்த்தி என்பவர், sub-judge-ஆகி முதன்முதலாக district judge-ஆக மாறி இருக்கிறார். அவர்தான், இப்போது, அந்த labour court judge-ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை அவர்களுக்கு விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர்களால் அனுபவிக்க முடியாத எட்டாக்கனியாக, நடைமுறையில் இருக்கிறது. அவற்றை, நடைமுறையில் தொழிலாளர்கள் அனுபவிப்பதற்கு என்ன செய்வது என்பது குறித்தும் இந்த அரசு சிந்திக்க வேண்டும்.

அடுத்து, மோட்டார் தொழிலாளர்; மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் குறித்து விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஐந்துக்கும் குறைவான தொழிலாளர்களைக் கொண்ட எல்லா மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களுக்கும், இந்தச் சட்டம்



பொருந்தும் வகையில் இந்தச் சட்டத்தைத் திருத்த முன்மொழிவு மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பு குறிப்பிடுகிறது. அப்படி, அனுப்பப்படாமலேயே, இவற்றை, இந்த மாநிலத்தில் செய்வதற்கு நடைமுறைச் சட்டத்திலேயே இடம் உண்டு. அதாவது இந்தச் சட்டத்தில் இருக்கிற பிரிவு-1, துணைப் பிரிவு-4-ன் படி, ஐந்து தொழிலாளர்களுக்கும் குறைவாக வேலை செய்யும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களுக்கு இந்தச் சட்டம் முழுவதுமாகவோ, அல்லது சில குறிப்பிட்ட பிரிவுகளுக்கோ பொருந்தும் என, மாநில அரசு இரண்டு மாத notice என்று Gazette-ல் பிரசுரித்து, notification விடலாம் என்று உள்ளதே, அதை ஏன் மாநில அரசு பயன்படுத்தவில்லை? அதைப் பயன்படுத்த வேண்டும். இதுகுறித்து, எங்களுடைய A.I.T.U.C., SLAB-லேயே பிரச்சினையை எடுத்துச் சொல்லியிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து contract, அநேகமாக, contract, என்பது மாநிலம் முழுவதும் எல்லா தொழில் துறைகளிலும் இருக்கிறது. இந்த contract, முறை பல பரவி, ஒருவிதமான நோய் போல இருந்து கொண்டிருக்கிறது. பல ஆண்டு காலம் பணிபுரிந்த பின்னரும் கூட, நிரந்தரம் செய்யப்படாத நிலை தொடர்ந்து அரசு நிறுவனங்களிலேகூட நிலவுகிறது. இப்போது 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரம் என்று சட்டம் இருந்து என்ன பிரயோஜனம்? கோவில்பட்டியில், லாயல் மில் இருக்கிறது. அந்த லாயல் மில்லில் இதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். இதே மாநில தொழிலாளர் நலத் துறையின்கீழ் 1981-ல் இயற்றப்பட்ட சட்டம், 480 days முடிந்திருந்தால், அவர்களை permanant செய்ய வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், கோவில்பட்டி, லாயல் மில்லிலே, அந்தத் தொழிலாளிகள் 18 ஆண்டு காலமாக, தினக் கூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்களே, இது என்ன நியாயம்? இது குறித்து, மாநில தொழிலாளர் நலத் துறை முன்னாலும், அந்தப் பிரச்சினை வந்தது அல்லவா? இந்தப் பிரச்சினை அங்கே கிளப்பப்பட்டு, அது விவாதத்திற்கு வந்து, பின்னர் 4ந் தேதி அன்றைக்கு வேலைக்குச் செல்கிறபோதும், அந்த நிர்வாகம் வேலைகொடுக்க மறுத்துவிட்டதே; இந்தக் கொடுமையைத் தடுப்பதில், இந்தத் தொழிலாளர் நலத் துறை என்ன பங்களிப்புச் செலுத்தியிருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இது ஓர் இடத்தில் மட்டுமல்ல; லாயல் மில்லில் மட்டுமல்ல; அந்த லாயல் மில் தொழிலாளி, 18 ஆண்டு காலம், 5 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகளாக தற்காலிகப் பணியாளர்களாகப் பணியாற்றியதை எதிர்த்தும், அவர்களுக்கு ஓரளவுக்காவது நியாயமான சம்பளம் கொடுக்க

[திரு. கே. சுப்பராயன்] [2000 ஏப்ரல் 19

வேண்டுமென்றும் போராடியதற்காகக் கைது செய்யப்பட்டு, 14 தொழிலாளர்கள் வழிப்பறி செய்த குற்றவாளிகளைப் போல, கைகளில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட கொடுமை, சகித்துக்கொள்ள முடியாத ஒரு கொடுமை கோவில்பட்டியிலே நடந்திருக்கிறதே, அது நியாயம்தானா?

முற்பகல் 11-20

நியாயத்திற்குப் போராடிய தொழிலாளிகளின் கையிலே விலங்கிட்டு அழைத்துச் செல்கிற முறை சமீபகாலத்திலே நான் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் இந்தத் தமிழகத்திலே நடந்திருக்கிறதே, அதுவும் சட்ட விரோதமாகச் செயல்படுகிற லாயல் மில்லை எதிர்த்து, சட்டத்தை நிலைநாட்டப் போராடிய குற்றத்திற்காக criminals போல கையிலே விலங்கிட்டு அழைத்துச் செல்லப்பட்டது நியாயம்தானா, நேர்மைதானா, முறைதானா, அடுக்குமா என்று நான் கேள்வி கேட்க விரும்புகின்றேன். இத்தகைய கொடுமை தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. பட்டியலில் நிறைய இருக்கின்றன.

அதேபோல் தொழிற்சங்கப் பதிவுச் சட்டம்; மிகுந்த வேதனையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளைக்காரன் காலத்திலே 1926 ஆம் ஆண்டு, தொழிலாளி தன் நெஞ்சில் எழுகிற உணர்வை வடித்துக்கொள்ள தொழிற்சங்கத்தை அமைத்துக்கொள்கிற உரிமை உண்டு என்ற சட்டம் இயற்றப்பட்டுவிட்டது; சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இப்போது 2000 ஆண்டில் தொழிலாளர்கள் தங்கள் வேதனைகளை வெளிப்படுத்த தொழிற்சங்க இயக்கத்தைத் தொடங்கினால் தண்டிக்கப்படுகிறார்கள்; இது மறுக்க முடியாத ஓர் உண்மை. நான் ஏராளமான விவரங்களைக் கொடுக்க முடியும். Fundamental Rights மறுக்கப்படுகின்றன அல்லவா? இந்தத் தொழிலாளர் நலத் துறை என்ன தூங்கிக் கொண்டிருக்கிறதா? இந்த தொழிலாளர் நலத் துறை செயல் இழந்த ஒரு துறை...

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே Advisory Board என்று வைத்து, அரசுப் பிரதிநிதிகள், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், நிர்வாகத்தினுடைய பிரதிநிதிகள், இவர்கள் அடங்கிய அந்தச் சபையிலே அரசு, தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் Agenda-விலே வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு



2000 ஏப்ரல் 19] [திரு அ. இரகுமான்கான்]

முக்கியத்துவம் கொடுக்கக் கூடிய ஓர் அமைப்பு இந்தியாவிலே, பல மாநிலங்களிலே இல்லை. நம்முடைய தமிழ்நாட்டிலே கலைஞர் ஆட்சியிலேதான் அது இருக்கிறது. அது ஒன்று. இரண்டாவது, பல்வேறு Union-கள் சிறப்பாக இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது AITUC செயல்படவில்லையா? CITUC செயல்படவில்லையா? பல இடங்களில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அவர்களும் அதிலே வந்து கலந்துகொள்கிறார்கள். சில இடங்களில் முதலாளிகளுக்கும், இவர்களுக்கும் இடையே தொழிற்சங்கம் அமைப்பதிலே பிரச்சினை எழுமேயானால், அந்த ஜனநாயக உரிமையை நிர்வாகம் மறுக்குமேயானால், சட்டத்திலே unfair labour practice என்று இருக்கிறது. அதன் மீது அவர்கள் வழக்குத் தொடுத்தால் 6 மாதம் சிறைத் தண்டனை அளிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இதுவரைக்கும் நான் என் அருமை நண்பர் சுப்பராயன் அவர்களைக் கேட்கிறேன், 4 ஆண்டு காலமாக கலைஞருடைய ஆட்சியிலே இதுமாதிரி எத்தனை புகார்கள் (complaints) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்? இருந்தால் ஆதாரத்தோடு இங்கே சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவரம் இல்லாமல் இல்லை. மிகுந்த விவரத்தோடு அடுத்த விஷயத்திற்குப் போகிறேன். தொழிற்சங்கச் சட்டம் நிறைவேறவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. தொழிற்சங்கச் சட்டத்தை நடைமுறையில் தொழிலாளர்களால் அனுபவிக்க இயவில்லை. அந்தச் சட்டமும் திருத்தப்படவிருக்கிறது. அதற்குள் போனால் வெகு நேரமாகும். அந்தச் சட்டமும் W.T.O.வின் நிர்பந்தம், தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்கிற மூதேவிகளின் காரணமாக, இந்த மூதேவிகளை வழிகாட்டிகளாக இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் பல்வேறு தீய ஷரத்துகள் தொழிலாளர் நலச் சட்டங்களில்....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசைக் குறை கூறினார், தொழிற்சங்க உரிமை இல்லை என்று சொன்னார். வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டு வரப்பட்ட Trade Union Act-லே Recognition of Trade Union இல்லை, அதைக் கொண்டு வரவேண்டும் என்று அவர்கள்தான் முன்மொழிந்து இருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலை தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடிப்பது நல்லதல்ல.

இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும். தொழிலாளி தொழிற்சங்கத்தை வைத்துக்கொள்கிற உரிமையை நிலைநாட்டுவோம், நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த ஆதாரங்களை நாங்கள் பின்னர் வெளியிடுகிறோம்.

அடுத்து, குறைந்தபட்ச ஊதியத் தொழில்; இது ஊதிய பாதுகாப்பு வளையம் என்று வேறு சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே குறைந்தபட்ச ஊதியத் தொழில்கள் என்று 73 தொழில்கள் பட்டியலிடப்பட்டு அதில் 50 தொழில்களை மட்டுமே தொழிற்சாலை ஆய்வகம் enforce செய்கிறதாம். மீதி 23 தொழில்களும் என்ன அநாதை ஆசிரமத்திலே சேர்க்கப்பட்டு விட்டனவா, அந்த 23 தொழில்கள் ஏன் enforce செய்யப்படவில்லை? செய்யப்படுவதிலே இருந்து ஏன் விலக்கு அளிக்கப்பட்டு விட்டது? என்ன காரணம் என்று புலப்படவில்லை. Enforce செய்யப்பட்டு இருக்கிற இந்த 50 தொழில்களிலும்கூட இந்த ஓராண்டு காலத்தில் 15 claime தான் வந்திருக்கின்றன. அவற்றில் 10 மட்டுமேதான் தொழிற்சாலை ஆய்வகம் முடித்திருக்கிறது. இதற்கு எவ்வளவு பேர் தெரியுமா? 4 இணை ஆய்வாளர்கள், 29 துணை ஆய்வாளர்கள், 51 ஆய்வாளர்கள், 45 உதவி ஆய்வாளர்கள், 'சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்', இந்த கதி.

அடுத்து பார்த்தீர்களேயானால், கட்டடத் தொழிலாளர் பிரச்சினை என்பது ஒரு serious.....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நேரம் கிடைக்காது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியத்தின் கீழே இந்த அரசின் மீது மாண்புமிகு உறுப்பினர் புகார் சொல்வது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம். காரணம் Committee method மூலமாக notification method மூலமாக ஏறத்தாழ 24 occupation-களுக்கு மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, அதிகப்படியாக குறைந்தபட்ச ஊதியத்தை (minimum wages) நிர்ணயித்திருப்பது இந்த அரசுதான். என்னுடைய நண்பர் கிருஷ்ணசாமி இருக்கிறார். அவர் எதை மறுத்தாலும் இதை மறுக்க மாட்டார். அவர் கேட்பது வேறாக இருக்கலாம். ஆனால் குறைந்தபட்ச ஊதியம் இந்தியாவிலேயே வங்காளத்தில் இல்லை; பீஹாரில் இல்லை; அசாமில் இல்லை; கேரளாவில் இல்லை; தமிழகத்திலேதான் 23 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.



நீங்கள் மாற்று முகாமிற்குப் போங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உண்மைக்கு இரும்புத் திரையிட்டு மறைக்காதீர்கள், கலைஞருடைய ஆட்சியிலே பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மறைக்காதீர்கள்.

முற்பகல் 11-25

**திரு. கே. சுப்பராயன்:** நான் எதையும் மறைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறைக்கிறார்கள். மேற்கு வங்கத்தில் 500 ரூபாய் பிழைப்பு ஊதியம் கொடுக்கிறார்களே நீங்கள் ஏன் 250 ரூபாய் கொடுக்கிறீர்கள். அதுகுறித்து அமைச்சர் அவர்கள் வாய் திறப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** இலவச மின்சாரம் மேற்கு வங்கத்திலே இல்லை. நாங்கள் கொடுக்கிறோம். பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கிறோம். இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம். ஆகையினால் இதுவும்கூட நம்முடைய கலைஞர் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் இந்த 250 ரூபாயை கருணை உள்ளத்தோடு கொடுத்திருக்கிறார்கள். இருக்கிற நிதிநிலையை ஒட்டித்தான் சில சிந்தனைகள் செய்ய முடியும். நான் கேட்கிறேன், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொடுத்தால் தொழிலாளிகளுக்கு விரோதமானதா? பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் பால் கொடுத்தால் சமுதாய விரோதமா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தை அடிக்கடி இங்கே சுட்டிக்காட்டி பலவற்றைச் சொல்கிறார். 20 ஆண்டுகாலமாக மேற்கு வங்காளத்திலே இருக்கிற அரசு, அதனுடைய தலைவர், அந்தக் கட்சி தொடர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பிலே அமர்த்தப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கே என்ன கொடுக்கப்பட வேண்டும் என்பதும் என்ன வாங்கப்பட வேண்டும் என்பதும் அந்த மாநிலத்திலே இருக்கிற மக்கள் முடிவு செய்து அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்குத் தேவையானதை அந்த அரசு கொடுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த மக்கள் அதை ஏற்றுக்கொண்டு அந்த அரசை ஆட்சிப் பொறுப்பிலே வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** நான் பாட்டுக் கச்சேரி நடத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சிகூட நீண்டகாலம் இருந்திருக்கிறது.

[2000 ஏப்ரல் 19

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** காங்கிரஸ் கட்சி 10 ஆண்டு காலம் தான் இருந்தது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். 1947-ல் ஆட்சிக்கு வந்தது. 1957-லே கேரளாவிலே கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலே ஓர் அரசு வந்தது. அதற்குப் பிறகு 1967-லே பல மாநிலங்களிலே காங்கிரஸ் ஆட்சி போய்விட்டது. ஆனால் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே கட்சி இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சி பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் அவருக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, சைக்கிள் ரிக்ஷா மேற்கு வங்கத்திலே இருப்பதனாலே இவர் இங்கே அதை வரவேற்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக சட்டப் பேரவையினுடைய Public Accounts Committee கல்கத்தாவிற்குச் சென்ற நேரத்திலே......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து நேரத்தினுடைய அருமையைக் கருதி மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசி, பிறகு மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டியிருக்கிற காரணத்தினாலே அவையின் நேரத்தையும் மனதிலே கொண்டு நடந்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் சொல்லிவிட்டீர்கள். நீங்களும் பதில் சொல்லிவிட்டீர்கள். அவரும் சொல்லிவிட்டாரே.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஏற்கெனவே Public Accounts Committee கல்கத்தாவிற்குப் போய் அங்கேயிருக்கிற முதல்வர் ஜோதிபாசு அவர்களைச் சந்தித்து, நம்முடைய உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இதே கேள்வியைக் கேட்டார். அவர் என்ன பதில் சொன்னார் என்றால் எங்களுடைய மாநிலத்திலே பங்களாதேஷிலிருந்து தினசரி நூற்றுக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். பீஹாரிலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்ற தொழில் இந்த ரிக்ஷா. நாங்களும் தமிழகத்திலே செய்ததைப்போல சைக்கிள் ரிக்ஷாவை implement பண்ணினோம். ஆனால் பார்த்தால் தினசரி இப்படி வந்துகொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது இந்த கருத்தையெல்லாம் சொல்லலாம். திரு. சுப்பராயன், நீங்கள் 4 நிமிடத்தில் உரையை முடித்துவிட வேண்டும்.



2000 ஏப்ரல் 19]

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, 4 நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிழைப்பு ஊதிய பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் 500 ரூபாய் என்பதை ஒப்புக்கொண்டு அதை இந்த மானியத்திலேயே அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில் மிக முக்கியமான ஒரு சிக்கல் இருக்கிறது. இப்போது அரசாங்கமே 28-6-1999 அன்றைக்கு அரசு ஆணை நிலை எண்.88-ன்கீழ் பயன்பெறத் தகுதி உள்ளவர்கள் பற்றி பட்டியலிட்டபோது 40,088 பேர் பயன்பெறக்கூடும் என்று ஒரு அனுமானம் சொல்லப்பட்டது. ஆனால் நடைமுறையில் 6,166 தொழிலாளர்கள்தான் பயனடைந்திருக்கிறார்கள். எனவே அப்படி பயனடையாமல் பல்வேறு சிக்கல்கள் வந்ததற்குக் காரணம் இதிலே சாதாரணமாக ஆலை 1-5-1998-க்குப் பின்னர் மூடப்பட்டிருந்தால் இல்லை என்று இருக்கிறது. இந்த நிலையை மாற்றி தொழிலாளி மனு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

முற்பகல் 11-30

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை, இல்லை, இன்னும் இரண்டுமூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. தொழிலாளி மனு செய்கிற தேதியிலிருந்து ஓராண்டுக்குள் மூடப்பட்டால் என்ற முறையில் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடத் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றியும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன். (குறுக்கீடு) சுப்பராயன், நீங்கள் 26 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீட்டிலே நிறைய நேரம் போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் நான்கு நிமிடத்தில் என் பேச்சை முடித்துவிடுகிறேன் என்று சொல்லி இருக்கிறேன். தயவுசெய்து அதை அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு) Mike வேலை செய்யமாட்டேன் என்று சொல்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு நிமிஷம். இரண்டு முக்கியமான pointகள்தான். ஆகவே, இல்லையென்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரொம்ப நேரம் நீங்கள்தான் பேசியிருக்கிறீர்கள். அதிக நேரம் நீங்கள்தான் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** நான் அதிக நேரம் பேசவில்லை..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்களிலே என் பேச்சை முடித்துவிடுகிறேன். கட்டடத் தொழிலாளர்களுடைய நியாயமான பிரச்சினை அது. முதலமைச்சர் அவர்கள் எங்கிருந்தாலும் இந்தப் பேரவையோடு அவருடைய காதுகள் இணைக்கப்பட்டிருக்கும் என்கிற காரணத்தினால் நான் இந்த விஷயத்தை வெளியிட விரும்புகிறேன். அதில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதனால்தான் இவ்வளவு உரக்கப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** அவரேதான் தீர்வு செய்ய வேண்டும்; அவரே தீர்வு செய்வதற்கு உரியவர் என்கிற காரணத்தினால் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது கட்டடத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 10 ரூபாய்; ஆனால் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு (அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு) மாதம் 20 ரூபாய் என்று தீர்மானித்திருப்பது எந்த வழியில் நியாயம்? எந்த வழியில் நடைமுறையில் பொருந்தும்? எனவே அது பெரும் சிக்கல், கட்டடத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு 10 ரூபாய் என்பதும் இந்தச் சாதாரணத் தொழிலாளர்களுக்கு மாதம் 20 ரூபாய் என்பதும் சரியல்ல. தயவு செய்து ஆண்டுக்கு 100 ரூபாய் என்று அதை மாற்றியமைக்க வேண்டுமென்பதை உறுதியாக நான் வலியுறுத்துகிறேன். அதேபோல...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன் (குறுக்கிடு) இல்லை, இல்லை, நேரம் அதிகம் ஆகிவிட்டது.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு பிரச்சினை...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பொழுது தோறும் புனலுக்கும், அனலுக்கும், சேற்றினுக்கும்

கக்கும் விடப் பாம்பினுக்கும், கடும் பசிக்கும்

இடையறா நோய்களுக்கும் பலியாகி, கால் கைகள்

உடல்கள் சிந்தும், பச்சை இரத்தம் பரிமாறி இந்த நாட்டைச் சலியாத வருவாயும் உடையதாகத்

தந்தது எவர்? தந்தது உழைப்பாளரே...

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம். ஒரு முக்கியமான பிரச்சினை இருக்கிறது. அதை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மட்டும் சேர்ந்தாற்போல் பேசிக்கொண்டிருந்தால் மற்றவர்கள் யாரும் பேச வேண்டாமா?

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு நிமிஷம். ஒரேயொரு வரியில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே 25 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஏற்கெனவே திரு. நடராசன் பேச ஆரம்பித்து பாதியாகிவிட்டது.

**திரு. ஆ. நடராசன்:** உழைக்கும் மக்கள் உரிமையைப் பாதுகாக்க அல்லும் பகலும் பாடுபடும் தமிழக முதல்வர் அவர்கள், கடந்த காலத்திலே பாட்டாளிகளின் நன்மைக்காக நல்ல பல செயல்களை ஆற்றியவர். எந்த நிலையிலேயும் உழைப்பாளிகளுக்கு ஆதரவாக இருந்து இழந்தது ஏராளம், பெற்றது உழைப்பாளிகளுடைய ஆதரவு.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பளத்தை வழங்கினார்கள். அதைப்போல நெடுஞ்சாலைத் தொழிலாளர்கள், பொதுப் பணித் துறை தற்காலிகத் தொழிலாளர்கள் ஆகியோரை நிரந்தரப்படுத்தினார்கள்.

(திரு. கே. சுப்பராயன் அவர்கள் ஒரேயொரு நிமிஷம் பேசுவதற்கு அனுமதி வேண்டுமென்று சொல்லிக்கொண்டே நின்றுகொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நடராசன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) சுப்பராயன் நீங்களும் உட்காருங்கள் (குறுக்கீடு) உறுப்பினர் கோபப்படக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மிக முக்கியமான பிரச்சினை. அதனைப் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். முக்கியமற்ற பிரச்சினைகளைப் பேசுவதற்கு அனுமதிக்கிற நீங்கள் முக்கியமான பிரச்சினையைப் பேச அனுமதிக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரேயொரு வரி, ஒரேயொரு வரி என்று சொல்லி 26, 27 நிமிடங்களுக்கும் மேலே நீங்களே பேசிக் கொண்டிருக்கிறீர்களே? மற்ற உறுப்பினர்கள் பேசக்கூடாதா, சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** இது ஒரு முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது முக்கியமான பிரச்சினை என்றால் அதை முதலில் நீங்கள் பேசியிருக்க வேண்டும். அதை முதலில் பேசிவிட்டு மற்றவற்றைப் பின்பு பேசியிருக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு வரியில் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு வரி என்றால் நன்றி, அவ்வளவுதான்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, நிறுத்தக் குறி வந்தால்தான் அது வரி.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ன விஷயம் என்றால் இப்போது கட்டடத் தொழிலாளர்களுக்கும் 60 வயதைக் கடந்தால்தான் அவர்களுக்கு 25 சதவீத gratuityயும் அதேபோல 12 சதவீத வட்டியும் வழங்கப்படும் என்று நல வாரியத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 58 வயது மற்றவர்களுக்கு; இதற்கு 60 வயது என்பது சரியல்ல. அதற்கு இல்லை என்றால், 25 சதவீதத்துக்கு பணிக்கொடையும் 12 சதவீத வட்டியும் இல்லை என்பது அநியாயம், அது ஒரு மகா அநியாயம். அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



பொழுது தோறும் புனலுக்கும், அனலுக்கும், சேற்றினுக்கும்

கக்கும் விடப் பாம்பினுக்கும், கடும் பசிக்கும்

இடையறா நோய்களுக்கும் பலியாகி, கால் கைகள்

உடல்கள் சிந்தும் பச்சை இரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்

தந்தது எவர்? தந்தது உழைப்பாளரே.

உழைக்கும் மக்கள் உரிமையைப் பாதுகாக்க அல்லும் பகலும் பாடுபடும் தமிழக முதல்வர் அவர்கள் கடந்த காலத்திலே பாட்டாளிகளின் நன்மைக்காக நல்ல பல செயல்களை ஆற்றினார். எந்த நிலையிலேயும் உழைப்பாளிகளுக்கு ஆதரவாக இருந்து இழந்தது ஏராளம், பெற்றது உழைப்பாளிகளினுடைய ஆதரவு.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பளம்; அதைப்போல நெடுஞ்சாலைத் தொழிலாளர்கள், பொதுப் பணித் துறை தற்காலிகத் தொழிலாளர்கள் நிரந்தரமாக ஆக்கப்பட்டது, மே நாள் விழாவிற்கு சம்பளத்துடன் விடுமுறை இந்தியாவிலேயே முதல்முறையாக வழங்கியது. மத்திய அரசும் தமிழக அரசை ஒட்டி அந்த நாளுக்கு சம்பளத்துடன் விடுமுறையும் வழங்கியது. அதைப்போல, அமெரிக்காவின் சிக்காகோ நகரத்திலே நடைபெற்ற மே தினப் போராட்டத்தை, தொழிலாளிகளுடைய போராட்டத்தை நினைவுகூர்கின்ற வகையிலே மே நாள் நினைவுத் தூண் நேப்பியர் பூங்காவிலே எழுப்பியவர் நம்முடைய கலைஞர் அவர்கள்.

போனஸைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன அவர்கள் சொன்னார்கள். நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், 4.16 என்கிற குறைந்தபட்ச போனஸை 8.33 சதவிகிதமாக மாற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அவசர காலத்திலே 20 சதமான போனஸுக்கு உச்சவரம்பை மத்திய அரசாங்கம் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து அவசர காலத்தில் தன்னுடைய ஆட்சியை இழந்தாலும் உழைக்கின்ற மக்களுக்கு அந்த உரிமையைப் பெற்றுத் தந்து 20 சதமானத்திற்கு மேல் போனஸை வழங்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்

முற்பகல் 11-35

[திரு. ஆ. நடராசன்] [2000 ஏப்ரல் 19

இப்போது தமிழ்நாட்டிலே ஏராளமான தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற வகையில் கடலூரிலே தொழிற்பூங்காவை 950 ஏக்கரிலே உருவாக்கி வருகிறார்கள். அதைப்போல ஆடைகளைத் தயாரிக்கும் பூங்காவை 200 ஏக்கராவிலே ஏற்றுமதி வளர்ச்சி மையத்தை உருவாக்கி ஏராளமான பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி வருகிறார்கள். எண்ணூரிலே சுமார் 6000 கோடியில் பெட்ரோ கெமிக்கல்ஸ் தொழிற்சாலை. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும், ஜப்பானிய கம்பெனியான Mitusi-யும் இப்போது இணைந்து அந்தத் தொழில் பூங்காவை உருவாக்கி வருகிறார்கள். இப்படி ஏராளமான தொழிற்சாலைகளை, தொழிற் பூங்காக்களை உருவாக்கித் தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்விலே வளத்தை நம்முடைய ஒப்பற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கி வருகிறார்கள். அதை நாம் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதைப்போல தமிழ் மக்களுக்காகத் தமிழ்நாட்டிலே உழவர் சந்தையை உருவாக்கி விவசாயிகளுடைய வாழ்விலே இப்போது மறுமலர்ச்சியை உருவாக்கி வருகிறார்கள். கோவையிலே நடைபெறுகின்ற உழவர் சந்தையிலே தினசரி ஏறத்தாழ 30 டன் காய்கறிகளை விவசாயிகளே கொண்டு வந்து உண்ணுகிறவர்களுக்கு வழங்குகிற காட்சியை நாம் பார்க்கிறோம்.

அதேபோல நமக்கு நாமே திட்டத்தின் மூலம் தொகுதியிலே ஏராளமான வளர்ச்சிகள். வருமுன் காப்போம் என்கிற ஒரு முகாமை ஏற்பாடு செய்து, மருத்துவ முகாமை ஏற்பாடு செய்து அதன் மூலம் தினசரி ஆயிரக்கணக்கான, ஒவ்வொரு முகாமிலேயும் பங்கேற்கிற நோயாளிகள் பயனடைவதைக் காண்கிறோம். இங்கேகூட நம்முடைய நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு விசுவநாதன் அவர்கள் சொன்னார்கள், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நிர்வாகிகளோடு பேசித்தான், அந்தப் பேச்சைக் கேட்டுத்தான் இந்த ஆட்சி இதைக் கொண்டு வந்தது என்று. நம்முடைய தலைவர் கலைஞரைப் போல எதையும் ஆராய்ந்து செய்கிறவர்கள் உலகிலேயே வேறு யாரும் கிடையாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்கிறேன், 5 ஆண்டு கால ஆட்சியிலே ஏன் இப்படிப்பட்ட முகாம்களை உங்களாலே தொடங்க முடியவில்லை. எனவே தொடங்குவதைப் பார்த்து ஏளனம் பேசுவது முறையாக இருக்காது.



2000 ஏப்ரல் 19] [திரு. ஆ. நடராசன்]

அதைப்போல கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை [illegible] Lions Club-பிலே நடத்தினார்கள் என்று சொல்கி[illegible]. நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முகாமைத் தமிழ்நாடு முழுவதும் அரசாங்கத்தின் சார்பிலே கொண்டு வந்து ஏழை விவசாயிகள் வாழ்க்கையிலே நல்ல உற்சாகத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். ஒவ்வோர் ஆண்டும், ஒரு தொகுதியிலே ஒரு கிராமத்தை ஒவ்வொரு ஒன்றியத்திலும் சேர்த்து அங்கே அடிப்படை வசதிகளை ஏராளமாகச் செய்து வருகிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் இப்போது கிராமத்திலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளும் அதைப்போல மக்களும் இப்போது மகிழ்ச்சியோடு கலைஞரை வாழ்த்துவதை நாம் பார்க்கிறோம். சமத்துவபுரம் கண்டவர் கலைஞர் அவர்கள். இப்படி ஏராளமான காரியங்களை கலைஞர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்காகச் செய்து வருகிறார்கள்.

என்னுடைய தொகுதி குறிச்சியிலே சிட்கோ தொழிற்பேட்டை, நம்முடைய மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் மாதவன் அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டது. அதைப்போல தனியார் தொழிற்பேட்டை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் தொடங்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு மலுமிச்சம்பட்டியிலே நம்முடைய கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது தொடங்கப்பட்ட தொழிற்பேட்டை; மீண்டும் அவரே முதலமைச்சராக தமிழ்நாட்டிலே பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் அந்தத் தொழிற்பேட்டையில் இப்போது அங்கே பல்வேறு தொழிற்சாலைகளை நிர்வாகங்கள் தொடங்கி வருகின்றன. இப்படி ஏராளமான காரியங்களை ஒவ்வொரு தொகுதியிலும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

அதைத் தொடர்ந்து அமைப்பு சாராத் தொழிலாளர்கள். நம்முடைய சுப்பராயன் அவர்கள்கூடச் சொன்னார்கள். கட்டடத் தொழிலாளர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 25 ரூபாய், 2 வருடம் கழித்து 10 ரூபாய் என்று போட்டிருக்கிறீர்களே நியாயம்தானா என்று சொன்னார். ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. ஒரு வாரியத்தை உருவாக்கியிருக்கிறோம். அந்த வாரியத்திலே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். வேலையிழந்த தொழிலாளர்களுக்கு மேற்கு வங்காளத்திலே 500 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் என்ன நிலைமை? 500 ரூபாயை 6

[திரு. ஆ. நடராசன்] [2000 ஏப்ரல் 19

மாத காலமாக அந்த அரசாங்கத்தாலே கொடுக்க முடியவில்லை. 50 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிவிட்டுத்தான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய சுப்பராயன் அவர்கள் இதே அவையிலே கடந்த ஆண்டு கூறினார்கள். மேற்கு வங்கத்திலே 500 ரூபாய் வழங்குகிறார்கள் என்று. அப்போது மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்கள் எழுந்து நிச்சயமாக நான் அதைப் பரிசீலிக்கிறேன் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு வழங்கியுள்ளதை இவர்கள் பாராட்டி இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக "250 ரூபாய் ஏன் 6,166 பேருக்கு? 6,166 பேர்தான் இந்தத் தொழிலாளிகளா?" என்று கேட்டார். அதிலேகூட எண்ணிக்கையிலே வேறுபாடு இருக்கலாம். ஆனால் எண்ணத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுக் கட்சியின் கோரிக்கையாக இருந்தாலும் அவற்றைச் செய்வதற்கு மாண்புமிகு தலைவர் முதல்வர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எதைக் கேட்டாலும் அதைச் செய்வார்கள்.

*முற்பகல் 11-40*

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற ஒவ்வொரு வார்த்தைக்கும் சுற்றிலும் மேசையைத் தட்டுவதற்கு ஒரு set-up செய்து கொண்டு, தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஆ. நடராசன்:** எப்போதுமே ஆட்கள் இருக்கிற ஆளுக்கு வசதியாகத்தான் இருக்கும். உங்களுக்கு ஆட்கள் இல்லை, நான் என்ன பண்ணுவது? (சிரிப்பு)

கட்டடத் தொழிலாளர் வாரியத்திலே இருக்கிற நிறைபாடு குறைபாடுகளை அடுத்த ஆண்டு சட்டமன்றத்திலே அவர்கள் பங்கேற்றால் நிச்சயமாகப் பேசிக்கொள்ளலாம். ஆனால் அடுத்த ஆண்டும் நம்முடைய தமிழக முதல்வராக ஐந்தாவது முறையாக மாண்புமிகு கலைஞர் அவர்கள்தான் பொறுப்பு ஏற்பார். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய சுந்தரம் வருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...



2000 ஏப்ரல் 19]

**திரு. ஆ. நடராசன்:** நீங்கள் சொன்னீர்கள், அம்மாதான் என்று; ஏன் நான் ஐயா என்று சொல்லக்கூடாதா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் தமிழகத்தின் முதல்வராக வருவார்கள், வருவார்கள் என்று நான் எங்கள் கட்சியின் சார்பில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** வெளியே இருந்தால்-நிச்சயமாக வருவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை. (சிரிப்பு)

அதைப்போல விவசாயத் தொழிலாளர்கள் வாரியம்; விவசாயத் தொழிலாளர்களுக்கு. என்று ஒரு வாரியத்தை உருவாக்கி, அதன்மூலம் நாட்டிலேயிருக்கின்ற விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்திருக்கிறார்கள் மாண்புமிகு கலைஞர் அவர்கள்.

அதேபோல திராவிட இயக்கத்தை வளர்த்தவர்கள், முடிதிருத்துகின்ற தொழிலாளர்கள். அவர்கள் தங்களுக்கு என்று ஒரு வாரியம் வேண்டும் என்று கேட்டபோது அவர்களுக்கும் தனி வாரியத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதைப்போல சலவைத் தொழிலாளர்களுக்கும் தனிவாரியம். ஆட்டோ மற்றும் ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தனி வாரியம் வேண்டும் என்று அந்தத் தொழிலாளர்கள் கேட்டார்கள். அதற்கும் வாரியம் அமைத்துத் தந்தார்கள்.

அதைப்போல இந்த மானியத்திலே நானும் ஒரு கோரிக்கையை வைக்கிறேன். பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு இலட்சக்கணக்கிலே இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டங்கள் எதிர்காலத்திலே சிறப்பாக நடைபெறுவதற்கு நம்முடைய அரசாங்கம் நிச்சயமாக நல்ல பல காரியங்களைச் செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னார்கள். குறை சொல்ல ஒன்றுமே இல்லை என்று நான் எடுத்துக்கொள்கிறேன். ஆம், 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே உங்களுக்கு ஒன்றுமே இல்லை என்பது நிரூபணமாகியிருக்கிறது என்பதைக் கடந்த மூன்று தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத்தேர்தலின் முடிவிலிருந்து நாங்கள் பார்த்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

வாரிய உறுப்பினர் கட்டணம் இப்போது D.D.யாகத் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். அதை அஞ்சல் துறை அலுவலகத்தின் மூலம் சிறு சேமிப்பு போல் கட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல Road Tax. வாகனங்களுக்கு வரி செலுத்துகிறபோது இந்த வாரியங்களுக்கு ஒரு சதவீத வரியை காசோலையாக வழங்காமல் அதை challan மூலமாகக் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். முன்னால் ஆண்டவர்கள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னாலே பல்வேறு போராட்டங்களை நடத்தி, அவர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று பல கவர்ச்சியான ஏமாற்றமான வாக்குறுதிகளையெல்லாம் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் ஏமாறவில்லை. அருமையான ஒப்பந்தத்தைக் கொடுத்து 500 கோடி ரூபாய் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அள்ளி வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது அரசு ஊழியர்களுக்கு எப்படி **pension** தருகிறோமோ அதைப்போல நம்முடைய அரசாங்கம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் 1¼ இலட்சம் பேருக்கு வழங்கயிருக்கிறார்கள் என்பதற்காக நான் தொழிலாளர்கள் சார்பிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மத்திய அரசிலேயிருந்து இதற்கு இன்னும் விதிவிலக்கு பெறப்படவில்லை. உடனடியாகப் பெற்று போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு pension திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் பணியில் நிரந்தரமும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





சேலம் உருக்காலை; இதைப் பொறுத்தளவிலே நாம் இங்கே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால், தீக்கதிர் பத்திரிகை, ஏதோ தமிழ்நாடு அரசாங்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தை தனிமைப்படுத்திவிடுவார்களோ என்று பயந்துதான் இப்போது அரசாங்கம் தீர்மானம் போட்டிருக்கிறது என்று சொல்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கு வங்காளத்திலே 20 மத்திய பொது நிறுவனங்கள் இருக்கின்றன. 12 பொது நிறுவனங்கள் B.I.F.R. நிறுவனத்திலே இப்போது விசாரணையிலே உள்ளது. 5 பொது நிறுவனங்களை கடந்த கால மத்திய அரசு மூட முடிவு செய்து இருக்கிறது. அதற்காக C.I.T.U. எடுத்த நடவடிக்கை என்ன என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

கடந்த பிப்ரவரி மாதம் ஒன்றாம் தேதி, சென்னையிலே இருக்கிற Modern Foods என்ற மத்திய அரசு நிறுவனத்தின் 74% பங்குகளை இந்துஸ்தான் லீவர் என்ற தனியார் நிறுவனம் வாங்கியுள்ளது. அந்த நிறுவனத்தில் C.I.T.U. தொழிற்சங்கம் 300 தொழிலாளர்களைக் கொண்ட சங்கத்தை வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

சேலத்திலே இருக்கிற உருக்காலை பொதுத் துறை நிறுவனமாக இருக்கவேண்டுமென்று நம்முடைய பொதுவுடைமைவாதியான முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கே தீர்மானம் போட்டதில் அரசியல் நோக்கமில்லை, யாருக்கும் பயந்து இல்லை. எல்லா முதலாளிகளையும் எல்லாக் கட்டத்திலும் எதிர்ப்பதற்கு அவர் என்றும் பயந்தது இல்லை என்பதை நான் சுட்டிக்காட்டி, பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கக் குறிப்பில், புதிய தமிழகம் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்றும் இல்லாத அளவுக்கு தொழிலாளர் மத்தியிலே இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய விழிப்பினுடைய அடிப்படையில், ஒரு நல்ல

தெளிவான கொள்கை விளக்கக்குறிப்பு இந்த ஆண்டு வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் வர்க்கப் பார்வை இல்லாமல் இன்றைய தொழில் கொள்கை சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர் இல்லாமல் எந்தத் தொழிலும் விருத்தியடைய முடியாது. மூலதனம் எப்படி முக்கியமோ அதேபோல தொழிலாளர் நலனும் உரிமையும் மிக முக்கியம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரும் துணைத் தலைவரும் எப்போது பதவி மாறினார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தொழிலாளர் வர்க்கப் பார்வை இங்கே இல்லாதது வேதனை அளிக்கக்கூடிய விஷயம். இங்கே முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சமரசம் செய்து வைக்கக்கூடிய அமைப்பாக தொழிலாளர் நலத் துறை இருந்துகொண்டிருக்கிறது, இருந்து வருகிறது. அப்படி இருக்கக்கூடாது என்பதுதான் புதிய தமிழகத்தினுடைய நோக்கம். ஏற்கெனவே தொடங்கப்பட்ட பல்வேறு ஆலைகள் மூடப்பட்டு தொழில் அமைதியின்றி இருக்கக் காரணம், தொழிலாளர் நலச் சட்டங்கள் முறையாக அமலாக்கப்படாததுதான். ஏறக்குறைய 50 வருடங்களுக்கு, 60 வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், colony ஆதிக்க மனோபாவத்தைக் கொண்டதாக இருக்கின்றனவே தவிர, ஒரு சுதந்திர நாட்டில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய மரியாதையை, உரிமையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. எனவே இன்றைய தேவையினுடைய அடிப்படையிலே அனைத்துத் தொழிலாளர் நலச் சட்டங்களும் மாற்றப்படவேண்டும். அப்படி மாற்றப்படவில்லை என்றால் தொழில் அமைதி என்பது கேள்விக்குறியாகிவிடும் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. சி.டி. தண்டபாணி தலைமை)**

முற்பகல் 11-50

1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டம், இன்று சுதந்திரம் பெற்று 53 ஆண்டுகள் கழிந்தும் கூட எந்தத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலேயும் அமலாக்கப்படாமல் அது வெறும் காகிதத்திலே எழுதப்பட்ட சட்டமாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, தங்களுடைய சொந்தங்களை பந்தங்களை, தாங்கள்





பிறந்த இடங்களை விட்டு விட்டு, கடும் வெயில், கடும் மழை, பனி என்று பாராமல் அதுதான் வாழ்க்கை என்று வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட எந்தச் சட்டமும் அவர்களுடைய உரிமைகளை வழங்கவில்லை. அந்தச் சட்டங்களை எல்லாம் அமலாக்குவதற்கு இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. 8 மணிநேர வேலை கூட இன்றுவரையிலும் அமலாக்கப்படவில்லை. நான் மாஞ்சோலையைப் பற்றி இந்த அவையிலேயே பலமுறை சுட்டிக்காட்டியிருக்கின்றேன். 8 மணிநேரத்திற்குப் பதிலாக 10 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள் என்று சொன்னேன். வால்பாறையில் அதே குற்றச்சாட்டு. ஹைவேஸ்லே 8 மணி நேரத்திற்குப் பதிலாக 9 மணி நேரம், 10 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள் என்று சொன்னேன். நீலகிரியிலே, கோத்தகிரியிலே, குன்னூரிலே 10 மணி நேரம், 12 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள் என்று சொன்னேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சட்டங்கள், 8 மணி நேரம் வேலை வாங்க வேண்டுமென்று இருந்தும் அதை அமலாக்குவதற்கு இந்த அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அமலாக்குவதற்கு தயக்கம் காட்ட வேண்டிய அவசியம் என்ன? 8 மணி நேரத்திற்கு மேலாக வேலை வாங்கியதற்காக எத்தனை முதலாளிகள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தொழிலாளர் நலத் துறை சட்டங்களை அமலாக்கவில்லை, தொழிலாளர்களுக்கு விரோதமாக 10 மணி நேரம், 12 மணி நேரம் என்றெல்லாம் முதலாளிகள் வேலை வாங்குகிறார்கள்; என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அவரைப்போலவே பல்வேறு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. அவருடைய சங்கங்களும் இருக்கின்றன. எங்களிடத்திலே முறைப்படி புகார் எழுப்பினால் விசாரிக்கப்படும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று வேண்டுமானாலும், வால்பாறைக்கும், முடீஸ்-க்கும் குன்னூருக்கும் செல்லலாம். மாலை 6 மணிக்கும்கூட தேயிலை பறித்துக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களைப் பார்க்க முடியும். எனவே அந்த அளவிற்கு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக இப்போது சமீபத்திலே தோட்டத் தொழிலாளர்களுக்கும், தொழில் சங்கங்களுக்கும் சம்பளப் பேச்சுவார்த்தை ஒப்பந்தம் நடந்தது. இதிலே தமிழ்நாடு அரசு, தோட்டத் தொழிலாளர்களைக் கைவிட்டுவிட்டது என்று நான் கருதுகிறேன்; அதை வேதனையோடு சுட்டிக்காட்டுகிறேன். ஏனென்றால் பரம்பரை பரம்பரையாக, ஏறக்குறைய நான்கு தலைமுறைகளுக்கு மேலாக தோட்டத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் இன்றும் தினக்கூலிகளாகவே நடத்தப்படுகிறார்கள். இந்தக் கொடுமை தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் ஏன் நீடிக்க வேண்டும்? தோட்டத் தொழிலாளர்களுக்குப் பின்பு தொடங்கப்பட்ட ஆலைத் தொழிலாளர்கள் மாதச் சம்பளம் பெறுகிறபோது, தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் ஏன் தினக் கூலிகளாக நடத்தப்பட வேண்டும்? இதற்கென்று தனிச் சட்டத்தை தமிழ்நாடு அரசு ஏன் கொண்டு வரக்கூடாது? அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்கு தமிழ்நாடு அரசு சட்டம் கொண்டு வருவதற்கு என்ன தயக்கம்? நாங்கள் 150 ரூபாய்....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு உறுப்பினர், அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். காரணம், The Plantations Labour Act என்பதே மத்திய அரசினுடைய சட்டம். அதுமட்டுமல்ல, 750 ரூபாய் மாத வருமானம் வரவில்லை என்று சொன்னால், அந்தச் சட்டத்தை அமல் நடத்த முடியாது. அது திருத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பள உயர்வு சம்பந்தமாக, 18(1) அல்லது வேறு முறைகளிலோ நிர்வாகத்தோடு பேசி, நீங்கள் எவ்வளவு போட்டுக் கொண்டாலும் நாங்கள் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. உங்கள் முறையை மாற்றினால் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் முன்பே சொன்னேன். 1951-லே இயற்றப்பட்ட பல சட்டங்கள் இன்றைய காலகட்டத்திற்கு ஒவ்வாதவையாக இருக்கின்றன. எனவே மத்திய அரசினிடத்திலே மாநில அரசு வற்புறுத்த வேண்டும். தமிழ்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசே தனிச் சட்டம் ஒன்று கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே அந்த நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு இறங்க வேண்டும்.

அடுத்தது இப்போது சம்பளப் பேச்சுவார்த்தையிலே நாங்கள் 150 ரூபாய் கோரிக்கை வைத்தோம். தொழிலாளர் சங்கங்களும் முதலாளிகளும்



நீங்கள் எத்தனை ரூபாய்க்கு வேண்டுமானாலும் ஒப்பந்தம் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்றைய தொழிற்சங்கங்கள் எப்படி இருக்கின்றன? தொழிலாளர்களின் உண்மையான ஆதரவு பெற்ற தொழிற்சங்கங்களா முதலாளிகளோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றன? முதலாளிகளே தொழிற்சங்கங்களை உருவாக்குகிறார்கள். 7 பேர் இருந்தால் தொழிற்சங்கத்தை உருவாக்கி விட முடியும். அந்த அடிப்படையிலே 50 சங்கங்கள், 60 சங்கங்கள், 100-க்கும் மேற்பட்ட சங்கங்களை முதலாளிகளே உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களைத்தான் அவர்கள் அங்கீகரிக்கிறார்கள். தொழிலாளர் ஆதரவு பெற்ற தொழிற்சங்கங்களை முதலாளிகள் அங்கீகரிக்க மறுக்கிறார்கள். அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை. எப்படித் தொழிலாளர்களுக்காகப் பேசுவது? இதற்கு இந்த அரசு என்ன தீர்வு காணப் போகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். தொழிலாளர்களுடைய ஆதரவு....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள். 10 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

முற்பகல் 11-55

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இன்னும் மாஞ்சோலைப் பிரச்சினை இருக்கிறது. அதாவது தொழிலாளர்களுடைய ஆதரவு பெற்ற தொழிற் சங்கங்களை முதலாளிகள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதில்லை. அப்படி இருக்கிறபோது 12(3) ஒப்பந்தம் போடுவதை எப்படி ஏற்றுக்கொள்வது? ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளாத தொழிற்சங்கங்களை மட்டுமே முதலாளிகள் அழைக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்துகிறீர்கள். அப்படியென்றால் தொழிலாளர்களுக்கு ஆதரவாக இருக்கிறீர்களா அல்லது எதிராக இருக்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அவர் சொல்லிவிட்டு சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுகிறார். அதனால் நான் எழுந்து பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்களே பேசுங்கள். சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும். இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அரசு தெளிவுபடுத்தவேண்டும். எந்தெந்தத் தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுப்பது? தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுப்பது முதலாளிகளா? அரசா? தொழிற்சங்கத்திற்கு எந்த அடிப்படையில், எந்த முறையைக் கையாண்டு அவர்களை அங்கீகரிப்பது? ஜனநாயக முறைப்படி தேர்தல் வையுங்கள். எப்படி போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு தேர்தல் வைத்து ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு தொழிலாளர்களுடைய ஆதரவு பெற்ற சங்கங்கள் பேச்சுவார்த்தையிலே கலந்துகொள்வது என்று முடிவெடுத்த காரணத்தாலே அங்கு பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்து இருக்கிறது. ஆனால் பத்து பேர்கூட ஆதரவு இல்லாத, 7 பேர்கூட ஆதரவு இல்லாத தொழிற்சங்கத் தலைவரைக் கொண்டு வந்து முதலாளிகள் அமரவைத்து அவர்களுக்கு...

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் - தலைமை)**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** போக்குவரத்தில் உள்ள முறை மாதிரி தொழிற்சங்கத் தேர்தல் இருக்கவேண்டுமென்று சொன்னால் சுப்பராயன் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அவர்கள் ஏற்றுக்கொள்வது...

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய I.N.T.U.C.யின் நிலை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தொழிற்சங்கத் தலைமை தீர்மானிக்கப்படுகிறது; தொழிலாளர்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அவர்களைத்தான் தொழிற்சங்கத் தலைவராக அங்கீகரிக்க வேண்டுமென்பதுதான் எங்களின் நிலை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சகோதரர் சுப்பராயன் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை ஆழமாகச் சிந்தித்து, பல தொழிற்சங்கப் பிரச்சினைக்குக் காரணமே, அந்த . . .

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்றுக்கொள்வது என்பதே பிரச்சினையில்லை. எங்கள் இயல்பான நிலையே அதுதான். புதிதாக ஏற்றுக்கொள்வது அல்ல.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனவே இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாங்கள் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் தொழிற்சங்கத்தைத் தொடங்குவதற்கு, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்கென்று சில estate-க்குப் போகிறபோது, சிவசைலம் போன்ற பெரிய முதலாளிகள் எல்லாம் அவர்களுடைய மேனேஜர்களை ஏவிவிட்டு, தடை போடுகிறார்களே, கொடியேற்றத் தடை செய்கிறார்களே, கொடிக் கம்பத்தைக் கட்டினால், அந்தக் கம்பத்தை அகற்றுகிறார்களே, காவல் துறையிடத்திலே புகார் கொடுத்தால்கூட அதைக் கண்டுகொள்வதில்லையே, இதற்கெல்லாம் எப்படி நாங்கள் தீர்வு காண முடியும்? இதற்கு அரசு அல்லவா தீர்வு காணவேண்டும். இதைப்பற்றி நான் இந்தநேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து தோட்டத் தொழிலாளர்களில், நிரந்தரத் தொழிலாளர்கள், பகுதி நேரத் தொழிலாளர்கள் மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் என்று இலட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். தற்காலிகத் தொழிலாளர்களாக ஏறக்குறைய 20, 25 வருடங்களாக பணிபுரிபவர்கள் இருக்கிறார்கள். ஒரு வருடத்தில் 240 நாட்கள் அல்லது இரண்டு வருடத்தில் 480 நாட்களுக்கு மேல் வேலை செய்யக்கூடிய அத்தனை தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஏறக்குறைய கடந்த இரண்டு வருடங்களாக நான் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றி பேசி வருகிறேன். அங்கே 50 முறைக்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 12(3) ஒப்பந்தம் போட்டுவிட்டு, நிர்வாகம் அதைக் கடைபிடிக்கவில்லை என்றால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கைது செய்வோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் மாஞ்சோலைத் தோட்ட நிர்வாகம் இன்றுவரையிலே கடந்த 50 முறை நடத்திய பேச்சு வார்த்தை எதையுமே அமல்படுத்தவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னாலே ஒப்புக்கொண்டபடி இயந்திரத்தை இலை பறிப்பதற்கோ, கவாத்து வெட்டுவதற்கோ பயன்படுத்தமாட்டோம் என்று சொல்லிக்கொண்டு, இப்பொழுது இயந்திரத்தைப் புகுத்தி இருக்கிறார்கள். அந்த இயந்திரத்தை உபயோகித்து காயம்பட்டுவிட்டால், காயம்பட்டதற்கு

அரசு மருத்துவமனையில் சிகிச்சை பார்ப்பதற்குக்கூட அனுமதி மறுக்கிறார்கள்.

இன்றும் ஏறக்குறைய இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாத காரணத்தால் வேலையிழந்து இருக்கிறார்கள். இன்னும் எத்தனை காலத்திற்கு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருப்பது? இதற்கு ஓர் எல்லை வேண்டாமா? இதற்கு ஒரு தீர்வு காண வேண்டாமா? இந்த நாட்டிலே வன்முறை கூடாது என்று சொல்கிறோம். அமைதி திரும்ப வேண்டுமென்று சொல்கிறோம். பட்டினி கிடக்கக்கூடிய தொழிலாளர்கள் எத்தனை காலத்திற்குப் பேச்சுவார்த்தைக்கு வருவது? சென்னையிலே பேச்சுவார்த்தை; மதுரையிலே பேச்சுவார்த்தை; நெல்லையிலே பேச்சுவார்த்தை என்று பட்டினி கிடக்கக்கூடிய தொழிலாளர்கள் பேச்சுவார்த்தைக்கே வந்து கொண்டிருந்தால் இந்தப் பிரச்சினை எப்படித் தீரும்? அதுவும் அரசு நிலத்தை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய அந்தத் B.P.T.C. நிருவாகத்திற்கு ஒரு கால எல்லை நிர்ணயம் செய்ய வேண்டாமா? எனவே அந்தக் கால எல்லையை நிர்ணயம் செய்து அந்த மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையிலே தீர்வு காண வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

நண்பகல் 12-00

அடுத்தது குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு. இந்தக் குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பில் இன்னும் அரசு தீவிரம் காட்ட வேண்டும். குறிப்பாக தீப்பெட்டித் தொழிற்சாலை மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் இன்னும் எண்ணற்ற சிறார்கள் 10 வயது, 12 வயதிற்குட்பட்டவர்கள்கூட அதிகாலை 4 மணிக்கு, 5 மணிக்கு வேலைக்குப் போகக்கூடிய கொடுமை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அடுத்தது, விவசாயத் தொழிலாளர்களுக்காக, அவர்களுடைய நலனை மேம்படுத்துவதற்காக போடப்பட்ட கோலப்பன் கமிட்டி அறிக்கை இன்றும் சட்டமன்றத்திலே வைக்கப்படவில்லை. அந்த அறிக்கையையும் இந்த மாமன்றத்தில் வைக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

முறைசாரா தொழிலாளர்களுடைய பட்டியலிலே கல் உடைக்கும் தொழிலாளர்களும் சேர்க்கப்பட வேண்டும்.



நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது தோட்டத் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க தனி வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

அதேபோல தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதற்கு இந்த அரசு தனிச் சட்டம் கொண்டு வர வேண்டும். எண்ணற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு, தோட்ட முதலாளிகள் இன்னும் குறைந்தபட்சக் கூலியை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலியே 150 ரூபாய் என்று தமிழ்நாடு அரசு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு எனும் இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துகளைக் கூறலாம் என்று கருதுகிறேன். அதற்கான வாய்ப்புத் தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கருத்துகளைக் கூறுவதற்கு முன்னால், இங்கே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கு ஒரு வரியில் பதில் சொல்லிவிட்டு என்னுடைய கருத்தைத் தெரிவிக்கவிரும்புகிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் தொழிலாளர்களுக்காக மிக ஆவேசமாக வாதிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னாலே குறிப்பிட்டதைப்போல, அவர்களுடைய தலைவர் திரு. நல்லக்கண்ணு அவர்களே, முதலமைச்சராக வந்து நம்முடைய சுப்பராயனே தொழிலாளர் நலத் துறை அமைச்சராக வந்தால்கூட, இந்த அளவுக்கு கலைஞரும், இரகுமான்கானும் நிறைவேற்றிய திட்டங்களில் கால்வாசிகூட நிறைவேற்ற முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே ஆணித்தரமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமசந்திரன் அவர்கள் மேற்கு வங்காளத்தைப் பற்றிச் சொன்னார்கள். 20 ஆண்டு காலம் அங்கே ஆட்சி இருப்பது உண்மைதான். எங்கேயும் இல்லாத அளவு பழைய டிராம் வண்டி ஓடுவது அங்கேதான். பாதாள இரயில் (Tube Railway) இருப்பதும் அங்கேதான். 20 ஆண்டு காலமாக ஆட்சியிலே இருக்கின்றவர்கள் கண்காட்சியிலே வைக்கக்கூடிய அந்தக் கை ரிக்ஷாவை இன்னும் ஓடவிட்டுக்கொண்டிருப்பது ஏன் என்பதற்கு அவர்கள் விளக்கம் சொல்லவில்லை. அவர்தான் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 19

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் A.L.S. கூறும்போது நவீனமாக கல்கத்தா நகரிலே எதுவும் இல்லையென்று சொன்னார். அங்குதான்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. பாதாள இரயில்வே இருக்கிறது என்று சொன்னார். Metro train இருக்கிறது என்று சொன்னார். நீங்கள் சரியாகக் கேட்கவில்லை. (குறுக்கீடு) இல்லை அவர் correct-ஆகச் சொன்னார். கல்கத்தாவில் ஏற்கெனவே பல சிறப்புகள் இருக்கின்றன. டிராம் வண்டி ஓடுவது இருக்கிறது. அதேபோல Metro train கல்கத்தாவில் இருக்கிறது. அதேபோல காட்சிப் பொருளாக வைக்க வேண்டிய கை ரிக்ஷாவும் அங்கேதான் இருக்கிறது என்று சொன்னார். அதுதான், வேறு ஒன்றும் இல்லை. உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** நீண்ட காலத்திற்கு முன்பு பார்த்திருப்பீர்கள். இப்போது இல்லை. தமிழ்நாட்டில் சில இடங்களில் கை ரிக்ஷாவும் இருக்கத்தான் செய்கிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அண்மையில் கல்கத்தா சென்றிருந்தேன். இன்னும் கை ரிக்ஷா அங்கே ஓடிக்கொண்டிருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** மதுரை மாநகரிலே கை ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. தமிழகத்திலும் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருக்கு எந்த அளவுக்கு மதுரையைப் பற்றித் தெரியுமோ அந்த அளவுக்கு எனக்கும் தெரியும். அங்கே அப்படியெல்லாம் கிடையாது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்று மட்டும் எனக்குச் சரியாகத் தெரிகிறது. கை ரிக்ஷாவும் ஓடிக்கொண்டிருந்தாலும் ஒரு மாற்றம் இல்லாத ஆட்சி அந்த மாநிலத்திலே இருக்கிறது. ஆனால், இங்கே ரிக்ஷா ஓடிக்கொண்டிருக்கிற இடத்திலே ஆட்சியாளர்கள் மாறி மாறி வருகிறார்கள் என்பது தெரிகிறது.



2000 ஏப்ரல் 19]

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் நேற்று அம்மையார் அவர்களைச் சந்தித்ததாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதனுடைய விளைவு உடனடியாகத் தெரிகிறது. (சிரிப்பு)

பிற்பகல் 12-05

**திரு. லா. சந்தானம்:** அம்மையாருக்கும் மேற்கு வங்கத்துக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து உறுப்பினர் அவர்கள்தான் விளக்கவேண்டும். அம்மையார் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். நான் பேசிக்கொண்டிருப்பது மேற்கு வங்கத்திலே இருக்கிற அரசைப்பற்றி.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** அம்மையாருக்கும் மேற்கு வங்கத்திற்கும் உள்ள தொடர்பைச் சொல்லவில்லை. அம்மையாருக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பைத்தான் அவர் சொன்னார்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக ஒரு வாரியத்தை அமைத்திருக்கிறார்கள், இந்தியாவிலேயே முதன் முறையாக. அதிலே சென்ற முறைகூட நான் அவர்களிடத்திலே ஒரு மனுவைத் தந்தேன். முடி திருத்துவோருக்காக அவர்கள் முடிதிருத்தகம் அமைப்பதற்கு நீங்கள் பாதி மானியம், பாதி கடனில் கடன் தரவேண்டும்; அதைப்போல, சலவைத் தொழிலாளர்களுக்கு டோபி கானா கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கை எல்லாம் வைத்தேன். அதை உள்ளடக்கி, அவர்கள் முடி திருத்துவோருக்கு ஒரு வாரியத்தையும், சலவைத் தொழிலாளருக்காக ஒரு தனி வாரியத்தையும் அமைத்ததற்காக நான் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில் அமைப்பு சாராத் தொழிலாளர்கள் வாரியத்தினுடைய பட்டியலைப் பார்க்கின்றபோது, ஒரு சில தொழில் செய்கிறவர்கள் அதிலே விடுபட்டுப் போயிருக்கிறார்கள். குறிப்பாக என்னிடத்திலே மனு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் வான்புகழ் வள்ளுவருக்கு 133 அடியில் சிலை வைத்து உலகமே வியக்கத்தக்க அளவுக்கு ஒரு சாதனை புரிந்தவர்கள். அந்தச் சிலையைச் செய்கின்ற கல் தச்சர்கள் இந்த அமைப்புசாரா வாரியத்தில் அவர்கள் பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே அவர்களைச் சேர்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ.லெ. சுப்பிரமணியன்] [2000 ஏப்ரல் 19

அடுத்து, பீடித் தொழிலாளர்களுக்காகப் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் 34 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டுகிறார்கள். மத்திய அரசு 20 ஆயிரம் அல்லது 34 ஆயிரத்தில் பாதி, (50 %) மானியம், எது குறைவோ அதை தருகிறார்கள். மீதி ஹட்கோ கடனாகத் தருகிறது. நெல்லை மாவட்டத்தில் மேலப்பாளையத்தில் 439 வீடுகள் கட்டுவதற்கும், முக்கூடலில் 535 வீடுகள் கட்டுவதற்கும் இந்தத் துறை ஆணையிட்டு, 13-3-2000 அன்று, 148 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் திறப்பு விழா நடத்தினார்கள். மாண்புமிகு அமைச்சர் ஆலடி அருணா அவர்களும் கலந்துகொண்டார்கள். நானும் கலந்துகொண்டேன். நான் அதிலேயே கோரிக்கை வைத்தேன். அதை மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பாளையங்கோட்டையிலே மேலப்பாளையத்தில் பீடி எப்படி முக்கியமான தொழிலோ, அதைப்போல திருநெல்வேலி தொகுதியில் எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும், பிள்ளையாக இருந்தாலும், யாதவராக இருந்தாலும், மூப்பனாராக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், எல்லாத்தரப்புப் பெண்களும் பீடி சுற்றுகிறார்கள். ஆகவே, திருநெல்வேலி தொகுதிக்கு ஆயிரம் வீடுகளாவது கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அல்லது உறுதிமொழி தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேலைவாய்ப்புப் பற்றி மட்டும் நான் ஒரு சில கருத்துகளைக் கூறுவதற்காகத்தான் இந்த மானியத்திலேயே பேசுகிறேன். இன்று வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் Private Colleges Regulation Act இருக்கிறது கல்வி நிலையங்களுக்காக: அதிலே minority-களைப் பொறுத்தவரையில் அவர்கள் Employment Exchange-ல் list அதாவது panel கேட்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களாகவே போட்டுக்கொள்ளலாம். அதிலே ஒன்றும் கருத்து வேறுபாடு எனக்குக் கிடையாது. நான் வரவேற்கிறேன். அது அவர்களுக்கு அரசமைப்புச் சட்டம் தந்த உரிமை. ஆனால் அதே நேரத்தில் நிதி உதவி பெறுகிற Non-minority Hindu Institutions-க்கு Employment Exchange-ல் list கேட்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் இப்போது திருநெல்வேலியை எடுத்துக்கொண்டால், 5 கல்லூரிகள், ஜான்ஸ் கல்லூரி, சாரான் டக்கர் கல்லூரி டையோஸிஸ் நடத்துகிறார்கள்—செயின்ட் சேவியர்ஸ்



2000 ஏப்ரல் 19] [திரு. அ.லெ. சுப்பிரமணியன்]

கல்லூரி-நான் படித்த கல்லூரி, அதை பாதிரிமார்கள் நடத்துகிறார்கள்—சதகதுல்லா காலேஜ்-Muslim Educational Trust, நடத்துகிறது M.D.T. இந்து காலேஜ் - நான் தாளாளராக இருக்கிறேன் - இந்த 5 கல்லூரிகளில் நான்கு minority கல்லூரிகள். ஆனால் உண்மையிலேயே பார்த்தால், ஐந்திலே இந்து கல்லூரி மட்டும்தான் minority என்கிற அளவிலான ஒரே ஒரு கல்லூரியாக இருக்கிறது. நாங்கள் மட்டும் Employment Exchange-ல் list கேட்க வேண்டிய அவசியம் என்ன என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். ஆகவே இந்த ஆணை வந்தவுடன், எங்கள் கல்லூரி சார்பாக உயர் நீதிமன்றத்தில் ஒரு writ மனு தாக்கல் செய்தோம். அந்த மனுவில், Single Judge இப்படி நிதியுதவி பெறுகின்ற கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், அது non-minority-ஆக இருந்தாலும், அவர்கள் Employment Exchange-ல் list கேட்கத் தேவையில்லை. அவர்களாகவே நியமித்துக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கினார்கள்.

பிற்பகல் 12-10

அங்கே ஒரு கேடு என்ன வந்தது என்றால், Hindu Management Institution அவர்கள் ஒரு Association வைத்திருக்கிறார்கள், அவர்கள் intervener என்று அந்த writ மனுவிலே வந்தார்கள். Writ Appeal-ஐ எம்.ஜி.ஆர். அரசாங்கம் இருந்தபோது—நம்முடைய அரசாங்கம் அல்ல, எம்.ஜி.ஆர். அரசாங்கம் இருந்தபோது—நான் போட்டேன். writ appeal வருகின்றபோது எங்களுக்கு Notice தரவில்லை. அந்த அசோசியேஷன் நடத்தினார்கள். பிறகு writ மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு, writ-ல் Single judge தீர்ப்பு வந்தது. பின்னர் அது தள்ளுபடி செய்யப்பட்டு உயர் நீதிமன்ற Bench தீர்ப்பு வந்தது. அது அரசுக்கு சாதகமாகப் போனது. அதன்பின் S.L.P. போட்டார்கள்; அது admit ஆகவில்லை. ஆனால் வேறு ஒரு வழக்கில் Semi Government—அரசு சார்ந்த நிறுவனத்தில் (மணி அடிக்கப்பெற்றது) 2,3 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்; அரசு சார்ந்த நிறுவனத்தில் ஒரு கருத்துச் சொல்லி இருக்கிறார்கள். அது Supreme Court தீர்ப்பு; வேறு மாநிலம் பற்றியது; அதில் Employment Exchange-லும் கேளுங்கள்; அதேநேரத்தில் Open advertisement பத்திரிகைகள் மூலமும் கொடுங்கள்; இரண்டையும் இணைத்து, அதிலே இருந்து பொறுக்கி எடுத்து, நல்ல ஆட்களை நியமித்துக் கொள்ளுங்கள் என்று உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. அதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இப்போது தனியார் கல்லூரிகள் minority என்றால், அவர்கள் நல்ல

ஆட்களை பொறுக்கி எடுத்துக் கொள்கிறார்கள்; அவர்கள் கல்வியிலே மிக முன்னணியிலே இருக்கிறார்கள். இங்கே Standard இல்லை என்று சொல்வதில் பொருள் இல்லை. ஆகவே இந்த இரண்டில் ஒன்று, aided கல்வி நிலையங்களுக்கு இந்த விதி விலக்குத் தர வேண்டும்; அல்லது Supreme Court சொல்வது போல, Employment Exchange-லும் பத்திரிகையிலும் அறிவித்து, பின்னர் இரண்டையும் இணைத்து ஒரு panel தயார் பண்ணி அதிலே இருந்து நல்ல ஆட்களைப் போட்டுக்கொள்வதற்கு நீங்கள் சட்டத்தில் வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இரண்டே இரண்டு கருத்துகளை மட்டும் சொல்லி விடை பெறுகின்றேன். இப்போது உதவியாளர்களை Private college-ல் போடுகிறார்கள். அதற்கு வயது வரம்பு கிடையாது. ஒரு நிகழ்ச்சியைச் சொன்னால் உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். நான் தாளாளராக இருக்கின்ற மேல்நிலைப் பள்ளியிலே peon போடுவதற்காக நாங்கள் Employment Exchange-ல் list கேட்டோம்; ஒருவர் வந்தார்; அவர் எனக்கு மிகமிக வேண்டியவர்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த நாட்டில் minority என்பவர்கள் 10 சதவீதம்தான். majority இந்துக்கள் என்பவர்கள் 90 சதவீதம். இந்த 90 சதவீதத்தில் உங்களைப் போன்ற (குறுக்கீடு) நான் உறுப்பினர் அவர்களைச் சொல்லவில்லை. கல்லூரி நடத்துபவர்கள் அந்தந்த சாதிகாரர்களுக்கே வேலை கொடுத்துவிட்டால், இந்த 90 சதவீத மக்கள் என்ன செய்வார்கள் என்ற விளக்கத்தையும் நீங்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்னிடத்தில் விளக்கம் கேட்பதற்குப் பதிலாக பக்கத்தில் இருக்கின்ற திரு. வி.கே. லட்சுமணன் அவர்களிடத்தில் கேட்டால் நல்லது. அவரும் ஒரு கல்லூரி தாளாளர்; எனவே, அவரிடத்திலே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த interview-க்கு, கேட்டோம்; வந்தார்கள்; 48 வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்தார்; எனக்குப் பழக்கமானவர்; எனக்குத் தேர்தலில் வேலை



செய்தவர்; எங்கள் ஊர்ப் பழக்கத்தில் வயது குறைந்தாலும்கூட அண்ணாச்சி என்று சொல்வது வழக்கம்; interview Committee கூடிய நேரத்தில் முதலிலே அவர் வந்தார்; அவரிடம் அண்ணாச்சி உட்காருங்கள் என்றேன்; அவர் கொஞ்சம் தயங்கிக்கொண்டு நின்றார். என்ன என்று கேட்டேன். இல்லை, இல்லை interview என்றார். ஏன் உங்களுடைய பையன் யாராவது peon interview-க்கு வந்து இருக்கிறாரா என்றேன். இல்லை, நானே அதற்காக வந்து இருக்கிறேன் என்றார். அவர் வயது 48,49 என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். அதற்கு வயது வரம்பு கிடையாது. அவரை Peon-ஆகப் போட்டு நாம் என்ன செய்வது? 49 வயதில் அவருக்கு உதவியாளர் வேலைக்கு interview-க்கு வந்து, வயது வரம்பு இல்லை என்ற காரணத்தால், வந்தால், அவருக்கு வேலை போட முடியாது. ஆகவே இப்படிப்பட்ட சில இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தாலேதான், அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி விடைபெற விரும்புகிறேன். ஒரு வேலைக்கு 20 பேரை அனுப்பலாம் என்று முன்பிருந்தே அரசாணை இருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளில் Employment seniority-படி போடுகிறோம், அது வரவேற்கத்தக்கது, அதனால் லஞ்ச லாவண்யம் நின்றுபோனது. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரை அதற்குப் பெரிய அனுபவம் எதுவும் தேவையில்லை. யாரையும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கல்லூரியிலோ அல்லது மேல்நிலைப் பள்ளியிலோ விஞ்ஞான ஆசிரியர் தேர்வு என்றால், 1:20 என்று இருந்ததை இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் 1:5 என்று மாற்றி அதற்கு ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை.

*** மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்தில் ஆசிரியர்கள் 100 பேரை அழைத்து, 5 பேரை எடுக்கிற முறையில் நீண்ட தாமதம் ஆகிறது; 100 பேரில் 5 பேரைத் தேர்வு செய்ய வேண்டிய நிலைமை இருப்பதால், தகுதி படைத்தவர்கள் என்ற காரணத்தால், 5 பேருக்கு ஒருவராக எடுக்கின்ற நிலைமை இருந்தால், விரைவாக பணி முடிக்க முடியும் என்று 6 மாதம் ஆகிற பணியை 2 மாதத்தில் நிறைவேற்று வதற்காக இந்த interview எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அந்த வழிமுறை காணப்பட்டது. 5 பேரில் தகுதி உள்ளவர்கள் இல்லை என்ற நிலைமை; ஏதோ தாழ்த்தப்பட்ட சமூகம் போன்ற சமூகத்தில், ஆதிதிராவிடர்

சமூகத்திலே அவ்வளவு பேர் இருக்கமாட்டார்களே தவிர, மற்ற எல்லா வகையிலேயும் தேர்வைக் குறைந்த காலத்திலே முடிப்பதற்கும் ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கும் வாய்ப்பாக இருக்கிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அதற்காகவே ஒரு தேர்வு எழுதுகிறார்கள்; அகில இந்திய U.G.C. அறிவித்து இருக்கிற அடிப்படையில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அந்தத் தகுதிபெறவும் ஒரு தேர்வு எழுதுகிறார்கள். அவர்களிலேயும் ஒருவரை எடுக்க 20 நபர்களுக்கு ஒருவராக அழைக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் 5 பேரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கிற முறை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

*பிற்பகல் 12-15*

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி 2 நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன். பேராசிரியருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால் ஒன்றை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1:5 என்று தற்போது இருக்கிறது. இட சுழற்சி முறையில் வரும்போது 1:5 என்பது Open Competition-ல் வருகிற போது 5-ல் ஒருவர் கூட Forward Community-யைச் சேர்ந்தவர்கள் இல்லை. வேலை தருகிறவர்கள்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தவறான கருத்து. Open Competition is permitting any community to enter. அதனால் Open Competition என்பது உயர் சமூகத்தினருக்காக வைக்கப்பட்டது அல்ல. Open Competition என்பதில் யாராக இருந்தாலும், தகுதியிருந்தால் அந்த இடத்தினைப் பெறலாம்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** என்னுடைய கருத்து என்று வருகின்றபோது, 5 பேர்கள் என்று சுருக்குகின்றபோது Forward Community-க்கு, எங்களுக்கு interview-வே வருவதில்லை. ஆகவே, வேலை கிடைக்கிறதோ இல்லையோ, interview-க்கு அழைக்கவில்லையே, வரவில்லையே, என்று அந்த மன நெருக்கமாவது இல்லாமல் போக வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதுகூடத் தவறு. நான்கூட Forward Community தான். அந்த இலக்கணத்திலே BC, SC என்கிற தகுதி





எனக்கில்லை. அது ஒரு தகுதி. அது எனக்கு இல்லை. இருந்தாலும் கூட நான் சொல்ல விரும்புகிறேன். Employment Exchange-ல் Open Competition என்று எடுக்கிறபோது, முதலில் யார் காத்திருக்கிறார்களோ, அவர்களைத்தான் அனுப்புவார்கள். அதிலே, They cannot select non-BC, non-MBC, non-SC அப்படி அனுப்பாமல் சில நேரங்களிலே தவறு நடைபெற்று இருக்கிறது. அவைகூட திருத்தப்பட்டிருக்கிறது. யார் முன் வரிசையிலே இருக்கிறார்களோ, காத்திருக்கிறார்களோ அவர்கள்தான் OC. இன்னும் சொல்லப்போனால் Open Competition என்பது BC அல்லாதவர்கள் அல்லது MBC அல்லாதவர்கள் என்கிற இலக்கணத்திற்குரியதல்ல.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாணையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் Writ Petition No. 586 of 2000 என்ற மனு போடப்பட்டு, அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கல்லூரிக்கு இப்போது 1:20 என்று அனுப்புகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கும் இன்னும் மற்ற எல்லாவற்றிற்கும் 1:20 என்ற வகையில் அனுப்புவதற்கு ஏற்ற வகையில் அந்த அரசாணை திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய கல்லூரியில் roaster முறைப்படி கணிதப் பேராசிரியருக்கான ஒரு காலியிடம்—UGC norms வேண்டும்— நாங்கள் 19-2-1999-ல் pannel கேட்டு, சென்னையிலே இருக்கிற Professional Employment Exchange-க்கு கடிதம் அனுப்பினோம். 7 பேர் கொண்ட பட்டியல் அனுப்பினார்கள். 6 பேர் Interview-க்கே வரவில்லை. ஒரே ஒருவர் வந்தார். அவருக்கு U.G.C. சொல்கின்ற அந்தத் தகுதிகள் இல்லை. ஆகவே, அவரைப் போட முடியவில்லை. அந்த Employment Exchange-க்கு நானே மீண்டும் மீண்டும் பல முறை எழுதியிருக்கிறேன். அங்கேயிருந்து பதில் இல்லை. இல்லையென்று, non-availability certificate தந்தால் நாங்கள் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தி, 4 State-களிலும் யாராவது SC இருந்தால் போடலாம் என்றிருக்கிறோம். ஓராண்டு, ஒன்றரையாண்டு காலமாக அந்தச் சான்றிதழையும் அந்த Employment Exchange தரவில்லை. நேற்று அதை அமைச்சரிடத்திலே தந்திருக்கிறேன். *(டாக்டர் க. கிருஷ்ணசாமி எழுந்து நின்றார்)*

நான் அவருக்காகத்தான் வாதாடுகிறேன், நான் போடத் தயாராக இருக்கிறேன். இதிலே Employment Exchange எங்களுக்கு உதவவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தால் அருள்கூர்ந்து நம்முடைய அமைச்சர் அவர்கள் முத்தரப்புக் கூட்டம் கூட்டி, எல்லோருடைய கருத்துகளையும் அறிகின்ற அளவில் ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துருப்பிடித்த பழைய சட்டங்களையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, நடைமுறையிலே நல்ல சட்டங்களை, நல்ல விதிகளை உருவாக்குவதற்கு, எல்லாத் தரப்பு மக்களும் அதன் மூலம் பயனடைகிற விதத்தில், ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*(டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) இரண்டு பேர் எழுந்து நிற்கிறீர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.L.S. அவர்கள் பேசுகின்றபோது M.Sc. (Maths) பட்டதாரிகள், தகுதி வாய்ந்தவர்கள் இல்லையென்று சொன்னார்கள். அது உண்மைக்கு மாறானது.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** M.Sc. (Maths) தகுதி கொண்ட வேலைவாய்ப்புக்கு பட்டியல் கேட்டோம். 7 பேர் கொண்ட பட்டியலை அனுப்பினார்கள். 6 பேர் interview-க்கு வரவில்லை. ஒருவர் வந்தார் UGC சொல்கிற விதிமுறையின்படி அந்த test-ஐ அவர் Pass செய்யவில்லை. ஆகவே போட முடியவில்லை. மீண்டும் நாங்கள் Employment Exchange-ல் கேட்டோம். List தரவில்லை. Non-availability certificate தந்தால் 4 States-க்கு, சேர்த்து Indian Express பத்திரிகையிலே விளம்பரப்படுத்தி போடத் தயாராக இருக்கிறோம். இன்னும் ஓராண்டு காலம் அந்த இடத்தை அப்படியே வைத்திருக்கிறோம். நான் போடத் தயார். அதற்கு Employment Exchange ஒத்துழைப்பு தரவில்லை. ஆகவே, நான் உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமிக்காகத்தான் பேசுகிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.L.S. அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்களைச் சந்தித்ததைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்கு அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் எங்களுடைய கூட்டணிக்கு தன்னுடைய ஆதரவைத் தெரிவித்துள்ளார். இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அவரைச் சந்தித்து தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார் என்ற செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தானம் அவர்களுடைய கூட்டணியிலே சேர்ந்துதான் இந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்ற ஒரு நிலை அ.தி.மு.க.விற்கு வந்திருப்பதற்காக வருந்துகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னீர்கள், அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தானம் அவர்கள் கூட்டணியிலே சேர்ந்துதான் ஆட்சியை அகற்ற வேண்டுமென்ற நிலைக்கு வருந்துகிறேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால் சந்தானம் அவர்கள் சேர்ந்திருக்கிற கட்சிக்கு எதுவுமே இந்தத் தமிழகத்தில் இல்லை என்கிற அர்த்தத்தில் குறிப்பிட்டார்களா? இன்றைக்கு இந்த மன்றத்திலே மிக மூத்த கட்சி அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சிதான்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தானம் அவர்களுடைய கட்சியை நான் புகழ்ந்துதான் சொன்னேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் அப்படி நினைப்பீர்களேயானால் நானும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எங்கள் இயக்கத்தினுடைய முடிவு பிரகாரம் ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல விளக்கக் குறிப்பிலே அரசினுடைய Broad policy என்ன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இந்த மாநில அரசு உலகமயமாக்குதலையும் தாராளமயமாக்குதலையும் ஆதரிக்கிற ஒரு நிலையை எடுத்ததன் காரணமாக இன்று அரசினுடைய தொழிலாளர் கொள்கையிலும் அதனுடைய பிரதிபலிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒருசில நடைமுறை விவகாரங்களை வைத்துப் பார்த்தால் ஏற்கெனவே இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல மத்திய அரசினுடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஜாட்டியா அவர்களால் சொல்லப்பட்ட கருத்தினை இந்த அரசு நடைமுறைப்படுத்துகிறதோ என்ற ஐயப்பாடு எங்களுக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் இன்று வளர்ந்து வருகிற பிரச்சினைகளின் நடுவில் அரசு தொழிற்சங்கங்களை அங்கீகாரம் செய்வதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவரப்போவதாகச் சொல்லி State Labour Advisory Board Meeting-ல் அதற்கான நகலைத் தாக்கல் செய்தார்கள். ஆனால் அது இப்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கிடைக்கிற தகவல்கள் சரியாக இருந்தால் மத்திய அரசினுடைய சில அமைச்சர்கள் இங்கேயிருக்கிற அதிகாரிகளோடு பேசியிருக்கிறார்கள். தொழிற்சங்கமே இப்போது மாறி வருகிற சூழ்நிலையிலே இன்று இந்திய நாடு ஏற்றுக்கொண்டிருக்கிற அரசியல் பொருளாதாரப் பின்னணியிலே தொழிற்சங்கங்கள் எல்லாம் இருக்க வேண்டுமா என்பதே பெரிய கேள்விக்குரிய விஷயமாக மாறியிருக்கிறது. ஆகவே தொழிற்சங்கங்களுக்கு அங்கீகாரம் கொடுக்கிற சட்டத்தை எல்லாம் பின்னால் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அதனுடைய அடிப்படையில் அந்த அங்கீகாரச் சட்டம்கூட இப்போது பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இது மிகவும் துரதிருஷ்டமான நிலை.

பிற்பகல் 12-25

இன்று நடைமுறையிலே நான் பார்க்கிற நேரத்திலே இந்த மாநில அரசு அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஒரு நல வாரியத்தை ஏற்படுத்தியிருப்பது என்பதை முழுமையாக நான் ஏற்றுக்கொள்கிறேன், பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அதற்காக ஏற்கெனவே ஏப்ரல் 3 ஆம் தேதி நாங்கள் நடத்திய பிரம்மாண்டமான பேரணிக்கு முன்னால்



2-ஆம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, C.I.T.U. சார்பில் சந்தித்து அந்தப் பிரச்சினை குறித்து விளக்கம் கூறும் முறையில் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறோம். எங்களுடைய நிலை என்ன என்பதை அதிலே விளக்கியிருக்கிறோம்.

நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிற நேரத்திலே நிச்சயமாக நமது Labour Commissioner-ம் அதேபோன்று பல தொழிலாளர் இலாகாவைச் சார்ந்தவர்களும் கடுமையாக இன்று அந்த அரசாங்கத்திலே தங்களால் இயன்ற அளவுக்கு வேலை செய்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த ஒரு வாரியத்தை அமைத்துக் கொண்டு 54 தொழில்களில் இருக்கக்கூடியவர்களின் நலனைப் பாதுகாக்க முடியுமா? இப்போது 5 வாரியங்களைத் தனியாக அமைத்திருக்கிறீர்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் 50 தொழில்களுக்கு ஒரு வாரியம் என்பது நடைமுறையில் அந்தத் தொழிலாளிகளின் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவாது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைய தொழிலாளர்களைப் பதிவு செய்வதில்கூட பல பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. ஒரு மாத காலமாக—எனக்கு கிடைக்கப்பட்டிருக்கின்ற தகவல்கள் சரியாக இருந்தால்—ஒரு மாவட்டத்தில் 10 ஆயிரம் பேர்களுக்கு உள்ளே உள்ள ஆட்களைத்தான் பதிவு செய்ய முடிகிறது. ஆகவே இன்று தனித்தனி வாரியங்களை எங்கெங்கேயெல்லாம், எந்தெந்தத் தொழில்களுக்கெல்லாம் தேவையோ—ஒரு தொழிலுக்கு என்று மட்டும் சொல்லவில்லை. ஒருவேளை ஒரு Group of தொழில்களுக்கு ஒரு வாரியம்; உதாரணமாக மோட்டார், ஆட்டோ ரிக்ஷா அந்த மாதிரி உள்ள வகையறாக்கள் எல்லாம் சேர்த்து ஒரு வாரியம். அந்த முறையிலே—அங்கெல்லாம் தேவையான வாரியங்களை அமைத்துகொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிறு தோட்டங்கள் இருக்கின்றன. பெரிய தோட்டங்கள் இருக்கிற அதே காலவரிசையில்தான் இந்த சிறு தோட்டங்களில் இருக்கிற தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். ஆனால் Plantation Labour Act-லே வராத தொழிலாளர்கள் என்ற காரணத்தினாலே அவர்களுக்கு எந்தச் சலுகையும் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட தொழிலாளிகளையும் இந்த நல வாரியத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அதே போன்று தனியார் மருத்துவமனைகள்; ஏராளமான மருத்துவமனைகள் இப்போது தனியார் துறையிலே நம்முடைய மாநிலத்திலே இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே 300 ரூபாய், 200 ரூபாய் சம்பளத்திற்கு செவிலியர்களாக, ஊழியர்களாக இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வாழ்க்கைப் பாதுகாப்பும் கிடையாது. பணிப் பாதுகாப்பும் கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு நல வாரியத்தை ஏற்படுத்த வேண்டியது மிகத் தேவை என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அமைச்சர் அவர்களும் அரசும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதை நாங்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்த நேரத்திலேயும் அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். அந்த முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது அரசே E.S.I. மருத்துவமனைகளை வைத்திருக்கிறது. மருத்துவமனைகள் சரியான முறையிலே இல்லை. உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே முந்திரி ஆலைத் தொழிலாளிகளுக்காக ஒரு மருத்துவமனை கட்ட அனுமதிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆயிற்று. இன்னும் சரியான முறையிலே அந்த மருந்துவமனை செயல்பாட்டுக்கு வரவில்லை. அதன் காரணமாக அந்தத் தொழிலாளர்களால் அதை அனுபவித்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே அந்த நிலையை மாற்றவேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையில் பிரதானமாக கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்ற முறையில் சிலவற்றை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு, தொழில் நலிவு, ஆலை மூடல், பொதுத் துறைப் பாதுகாப்பு, வேலையை நிரந்தரப்படுத்துவது, contract ஒழிப்பு, முறைசாராத் தொழிலாளிகளைப் பாதுகாப்பது, பெண் தொழிலாளிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, தொழிற்சங்க ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வது, கூட்டுறவுத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்வது, மூடப்பட்ட ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குச் செல்ல வேண்டிய நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றவை முக்கியமானவை. அதேபோன்று சம ஊதியம்; சம வேலைக்கு சம ஊதியம் என்ற சட்டத்தை அமல்படுத்துவது, வேலை வாய்ப்பை உருவாக்குவது, சிறு தொழில்களை பாதுகாத்துக் கொள்வது, தொழிலாளர் சட்டங்களைச் சரியான முறையில்



அமல்படுத்துவது, அதேபோன்ற பரம்பரையான (Traditional Industries) என்று சொல்லுகிற கைத்தறி, பஞ்சாலைகள், தோட்டங்கள், பனியன் தொழில் ஆகிய இவையெல்லாம் இப்போது அழிந்து கொண்டிருக்கின்றன. இவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுப்பதிலே தொழிலாளர் நலத் துறை எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும். நான் இதிலே உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே இங்கே பி & சி மில் சம்பந்தமாகப் பேசப்பட்டது. பி & சி மில்லிலே 4000-க்கும் அதிகமான தொழிலாளிகள் நான்கு ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டு நிற்கிறார்கள். 1996-லேயும், 1998-லேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தைக் கூட சரிவர அமல்படுத்தி வைப்பதற்கு தொழிலாளர் நல இலாகாவால் முடியவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

இன்று தொழிலாளர் நல இலாகாவினுடைய மிகப் பெரிய பலவீனத்தை இது காட்டுகிறது. அதற்கு மேலே, V.R.S. ஸ்கீம் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் ஒரு கருத்துப் பரிமாற்றம் ஏற்பட்டது. அதுவும் அமல்படுத்தப்படவில்லை. அதற்கு மேலாக மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையான 250 ரூபாய்கூட பி & சி மில்லிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை.

அதேபோன்று அந்த நிர்வாகத்தைப் பொறுத்த அளவில், அவர்கள் அவர்களுடைய சரக்குகளை எல்லாம் எடுத்துச்செல்லுகிறார்கள். அதற்கு எந்தத் தடையும் தொழிலாளர்கள் ஏற்படுத்தவில்லை. இப்போது அவர்கள் Machineries-ஐக் கூட மாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை அதை அனுமதிக்கலாமா? தொழிலாளர் நலத் துறை இதைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு ஏதாவது செய்திருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோன்று இந்த நேரத்தில் இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நூற்றுக்கணக்கான பொதுத் துறை ஸ்தாபனங்கள் மூடப்படுகின்ற அபாயத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. உதாரணமாக

மேலூர், விழுப்புரம், வேலூர் போன்ற பகுதிகளில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மூடுவதற்கு சட்டப்படி, Industrial Disputes Act-ன்படி permission வாங்க வேண்டும். அதைக்கூட வாங்காமல் மூடப்படுகின்றன. Lay-off நடத்துவதற்கு Labour Department அனுமதி கொடுக்கிறது. இது எப்படிச் சரியாக இருக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோன்று, தொழிலாளர் நலச் சட்டங்களைப் பொறுத்த அளவில் தோட்டத் தொழிலாளர்

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹேமச்சந்திரன் அவர்கள் சபைக்குத் தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. Lay-Off கொடுக்கக்கூடாது என்று எந்த சட்டத்திலும் இல்லை. Lay-off கொடுப்பதற்குக் காரணங்கள் இருந்தால் கொடுக்கலாம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தமட்டில், Union அனுமதித்தாலொழிய, 18 (1) ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை நிர்வாகமும், Union-னும் பிரச்சினைகளின் தன்மையைக் கருதிக் கேட்டாலொழிய Lay-off என்பதோ Retrenchment என்பதோ Closure என்பதோ கொடுப்பதில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல் மதுரையிலே இருக்கின்ற ஒரு மில்லில் Lay-off செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன பின்னணி என்று தெரியவில்லை. அது சம்பந்தமான விவரங்களை நான் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ரப்பர் கார்ப்பரேஷன், TANTEA, TWAD Board போன்ற பொதுத் துறையிலே இருக்கின்ற ஸ்தாபனங்களிலேயே தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியான முறையிலே அமல்படுத்தப்படவில்லை. நான் ஒரு விவரத்தை அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.



இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்திலே 1996ஆம் வருடத்திலே போடப்பட்ட ஒப்பந்தங்கள் அமல்படுத்தப்படவில்லை. தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று Award-கள் வாங்கியதற்குப் பிறகும் அதை implement செய்யாமல், இவர்கள் Appeal கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய Appeal-ஐ எல்லாம் High Court நிராகரித்ததற்குப் பிறகும் காலதாமதத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களைக் கஷ்டப்படுத்துகின்ற நிலையில்தான் அந்தப் பொதுத் துறை ஸ்தாபனம் நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, Labour Department-லேகூட, அந்த சம்பந்தப்பட்ட தொழிற்சங்கம் தொழிற் தகராறு சட்டம், பிரிவு 29-ன்கீழ் வழக்குப் பதிவு செய்திருக்கிறது. அதிலும் எந்த நடவடிக்கையும் தொழிலாளர்களுக்குச் சாதகமாக வரவில்லை. ஆகவே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Settlement-களைப் பொறுத்த அளவிலே அமல்படுத்துவதிலே பல குறைபாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)

அதற்கு மேலே ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தைப் பொறுத்த அளவில் அதுகூடச் சரியான முறையிலே அமல்படுத்தப்படாத துரதிருஷ்டவசமான நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக காதி Board; காதி Board தொழிலாளர்களைப் பொறுத்த அளவில், இப்போது குறைந்தபட்ச ஊதியம்கூட அவர்களுக்கு அமல்படுத்தப்படவில்லை. அதுசம்பந்தமான வழக்குகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னொன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் சட்டங்களிலே இருக்கின்ற ஓட்டைகளைப் பயன்படுத்தி சென்னையிலே ஏற்றுமதி வளாகத்திலே இருக்கிற தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கூலி மற்றும் சலுகைகள் கொடுக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்த அளவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கிடைப்பதைவிடக் குறைந்த கூலி கிடைக்கின்ற ஒரு துரதிருஷ்டவசமான நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் 5 ஆண்டு காலத்திற்கு ஒரு தடவை revision என்று சொல்லி, பல வருடங்கள் ஆனதற்குப்

பிறகும் revision செய்யப்படாத நிலை இருக்கிறது. Indian Labour Conference-ல் கூட இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒரு முறை இதை revision செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் கடைப்பிடிக்கவில்லையென்றால் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கிடைக்காத ஒரு அவல நிலை ஏற்படும். உயர் அதிகாரிகளுக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை revision செய்து கொடுக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் பல ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

*முற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தவறான தகவலைச் சொல்கிறார். According to Minimum Wages Act, once in five years, revision and refixation is to be done; But as far as this Government is concerned இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நாங்கள் review பண்ணுகிறோம். சட்டத்தில் 5 வருடம் என்றுதான் இருக்கிறது.

* **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அமைச்சர் அவர்கள் ஒரு தகவலைக் கொடுத்திருக்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அதை review பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று. அவர்கள் அதை review என்றுதான் சொல்கிறார்களே தவிர, revise பண்ணுவதாகச் சொல்லவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், சட்டப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அதைப் புதுப்பித்து நிர்ணயிக்கின்ற ஒரு நிலை வரவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

இந்த அரசினுடைய ஒரு இலாகா இன்று செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள். இன்று அங்கே தனியார் முதலாளிகள் போய், தேயிலைத் தொழிலாளர்களுக்குப் போடப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்குத் தடை வாங்கிய நேரத்திலே இவர்களுக்குத் தடை இல்லையென்று இருந்தாலும், இவர்களும் அந்த முதலாளிகளுக்குச் சாதகமான நிலை எடுத்து, அமல்படுத்தவில்லை. இதுசம்பந்தமாக தொழிலாளர்கள் முறையிட்டதற்குப் பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.



அதாவது இன்று Employment Exchange-ல் பெயர்களைப் பதிவு செய்து பல ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் இன்னும் வேலைவாய்ப்புக் கிடைக்கப்பெறாத நிலை இருக்கிறது. உதாரணமாக 15 ஆண்டு, 16 ஆண்டு காலம் ஆசிரியர் வேலைக்கு, அதேபோன்று தட்டச்சர்கள், அதேபோன்று Electricity Board-லே Apprentice வேலை பார்த்தவர்கள், இவர்களுக்கெல்லாம் பல ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும், Employment exchange-லே இருந்து ஒரு interview கூட வரப்பெறாத நிலை இருக்கின்றது. அந்த நிலை ஏன் வருகிறது? பள்ளிக்கூடங்களிலே தேவையான ஆசிரியர்கள் இல்லை என்ற நிலை ஒரு பக்கத்திலே இருந்துகொண்டிருக்கிற நேரத்திலே, எம்.ஏ. படித்தவர்கள், எம்.ஏ., பி.எட். படித்தவர்கள் எல்லாம், பதிவு செய்து 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் ஆனதற்குப் பிறகும் வேலைவாய்ப்புக் கிடைக்காத நிலை இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன், வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளின்கீழ் சில கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த, வரலாற்றுச் சிறப்புமிக்க நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே எந்தவொரு தொழிலாளிக்கும் எந்தப் பாதகமும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில் செயல்பட்டுவரும் இந்தத் துறை தொழிலாளர் நலத் துறையினுடைய அனைத்து அலுவலர்களையும் முடுக்கிவிட்டு சிறப்பான முறையில் இருக்கக்கூடிய 29 தொழிற்சட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை மிகுந்த நல்லெண்ணத்தோடு பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையின் சார்பில் 1999 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட 11,816 தொழில் தகராறுகளில் சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் 6,910 தீர்வுகள் காணப்பட்டுள்ளதையும் நலிவடைந்த 79 மில்களிலே பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு, 6,000 பேருக்கு ரூ.88 இலட்சம்.

[திரு. வி.பி. சிங்காரவேலு] [2000 ஏப்ரல் 19

அரசின் சார்பிலே உதவித் தொகை வழங்கப்பட்டதற்கும், பண்டிகைக் காலத்திலே நீண்டகாலம் மூடிக்கிடந்த 35 நிறுவனத் தொழிலாளர்களுக்கு 70 இலட்ச ரூபாய் உதவித் தொகை வழங்கியதையும், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல் நம்முடைய வாழ்வில் அன்றாடம் பங்கேற்கக்கூடிய சலவைத் தொழிலாளிகள், சவரத் தொழிலாளிகள், தையற் கலைஞர்கள், விவசாயக் கூலிகள் ஆகிய அவர்களுக்கு நான்கு வாரியங்களை தந்ததோடுமட்டுமல்லாமல், 54 தொழில்கள் அடங்கிய, தொழில் செய்யக்கூடிய முறைசாராத் தொழிலாளர்களையும் இணைத்து 5 வாரியங்களை ஒரே ஆண்டில் அறிவித்து, அந்த வாரியங்களில் உறுப்பினர்களாகச் சேரக்கூடிய தொழிலாளர்களுக்கு, அவர்கள் மரணம் அடைந்தால் 1 இலட்சம் ரூபாய், அவர்களுக்கு விபத்திலே காயம் ஏற்பட்டால் அந்தக் காயத்திற்கேற்ப உதவித் தொகை, அவர்கள் ஈமச் சடங்கிற்கு உதவித் தொகை, பிள்ளைகளைப் பெற்றெடுத்தால், அந்தப் பெண்மணிகளுக்கு 1,000 ரூபாய், அவர்களுடைய பிள்ளைகள் 10 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால், 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு 1,000 ரூபாய், ப்ளஸ் 2 தேர்ச்சி பெற்றிருந்தால் 2,000 ரூபாய் என்று சொல்லி, பல்வேறு உதவித் திட்டங்களை, அந்தத் திட்டத்தின் கீழே அறிவித்திருக்கிற நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களையும், தொழிலாளர் நலத் துறையினையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

1972 ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள், தொழிலாளர் நல வாரியத்தை ஆரம்பித்து வைத்தார்கள். அந்த வாரியம், இன்று நிதி நெருக்கடியில் இருக்கிறது என்பதை தொழிலாளர் நலத் துறை அமைச்சர்தான் அதனுடைய தலைவராக இருக்கிறார் என்ற காரணத்தால் அவர் நன்றாக அறிவார். இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த வாரியத்தில் அதிக அளவிலே ஊழியர்களைச் சேர்த்திருக்கிற காரணத்தால் அந்தத் தொழிலாளர் நல வாரியத்திலே இருக்கக்கூடிய ஊழியர்களைப் பணி நியமனம் செய்கின்றபோது, இப்போது புதிதாக அமைக்கும் வாரியங்களில் அமர்த்தினால் அந்த வாரியத்தினுடைய நிதி நெருக்கடி குறையும் என்பதைக் கணக்கிலே கொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, வால்பாறையில் 6 மணிக்கு



2000 ஏப்ரல் 19] [திரு. வி.பி. சிங்காரவேலு]

மேல் வேலை செய்கிறார்கள்; 8 மணி நேரத்திற்குமேல் வேலை வாங்குகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அப்படிப்பட்ட நிலைகள் அங்கே இல்லை என்பதை இந்த மன்றத்திற்குத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் திரு. சிங்காரவேலு அவர்கள் பேசுகின்றபோது வால்பாறையிலே தோட்டத் தொழிலாளர்கள் 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மைக்கு மாறானது. நான் பேசுகின்றபோதே சொன்னேன்; இப்போது வேண்டுமானாலும் வால்பாறைக்குச் செல்லலாம்; மாலை 4½ மணிக்கு மேலாக பலபேர் தேயிலைத் தோட்டங்களிலே பணிபுரியக்கூடிய நிலை இன்றும் நீடித்துக் கொண்டிருக்கிறது. அவர் அங்கு தோட்டத் தொழிலாளர்களைச் சென்று கவனிப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால்தான் அங்கே தோட்டத் தொழிலாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் எந்த அளவுக்கு அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது என்னுடைய தொகுதி மக்களுக்குத் தெரியும். தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியில் நாங்கள் செயல்படுகிற காரணத்தால்தான், வால்பாறை, மாஞ்சோலையாக ஆகவில்லை. நீங்கள் அங்கேயும் மாஞ்சோலையாக்க நினைத்தீர்கள்; அதை ஆக்குவதற்கு நாங்களும் விடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக நீங்கள் டெல்லி வரை சென்று, மனித உரிமை கமிஷனுடைய இயக்குநர் திரு. கார்த்திகேயன் அவர்களை, வால்பாறைக்கு அழைத்து வந்து, என்னையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் வைத்துக்கொண்டு, நீங்கள் குற்றச்சாட்டுக்களைச் சொன்னீர்கள். ஆனால் அங்கேயிருந்த அத்தனைத் தொழிற்சங்கத் தலைவர்களும், நீங்கள் சொல்வது முற்றிலும் மாறான கருத்து; நாங்கள் இங்கே 24 தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறோம் என்று சொல்லி, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மனித உரிமை கமிஷனின் இயக்குநர் திரு. கார்த்திகேயன் ஆகியோர் முன்பாக, அந்தச் சம்பவம் நடைபெற்று, உங்களுடைய கூற்று முறியடிக்கப்பட்டது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள்

எத்தனை முறை வால்பாறைக்கு வந்து, என்ன பொய்யைச் சொன்னாலும், அங்கே மக்கள் கேட்பதற்குத் தயாராக இல்லை. இன்னும் சொல்ல வேண்டுமேயானால் தொழிலாளர் துறை ஆணையர் வால்பாறைக்கு 2 மாதங்களுக்கு ஒரு முறை வருகிறார். எந்தத் தொழிற்சங்கத் தலைவரும், அங்கே தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தக் குறையும் இருப்பதாகச் சொல்லவில்லை.

இன்னொன்றையும் சொல்கிறேன்; இங்கே கடந்த ஆண்டு நான் பேசுகிறபோது, கேரளாவுக்கு இணையான சம்பளம், தமிழகத்திலே, தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டேன். ஆனால் நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், 11 முறை அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி — ஏன் உங்களுடைய சங்கமும்கூட, புதிய தமிழகத்தின் சார்பிலே இருந்த உங்களுடைய சங்கமும்கூட— கூட்டத்திலே கலந்துகொண்டு, பேச்சுவார்த்தை முடியாமல் இருந்த நேரத்தில், அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், தோட்ட நிர்வாகிகளைக் கூப்பிட்டு, அவர்களை மிரட்டியதன் காரணமாக இன்றைக்கு தோட்டத் தொழிலாளர்கள் கேரளாவைவிட அதிகமாக, தமிழகத்திலே சம்பளம் பெறுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் மறந்துவிட வேண்டாம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. தீரன்....

**திரு. வி.பி. சிங்காரவேலு:** இன்னும் ஒரே நிமிடத்தில்.....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வால்பாறை, மாஞ்சோலையாகவில்லை என்று சொன்னார். வால்பாறை, மாஞ்சோலையான காரணத்தால்தான், 53 ரூபாய் கூலி பெற்றுவந்த தொழிலாளர்கள் இப்போது 73 ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சகோதரர் சிங்காரவேலுவைப்போல, ** நிச்சயமாக 73 ரூபாய் வந்திருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன் அவர்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**திரு. வி.பி. சிங்காரவேலு:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 50 ஆண்டுகளாக, தோட்டத் தொழிலாளர்களின் Estate பகுதிகளுக்குத் தெரு விளக்குகள் போட முடியாமல் இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய மாவட்ட அமைச்சர், இளைஞர் நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, இப்போது 810 தெரு விளக்குகள், Estate பகுதிகளிலே போடுவதற்கு சிறப்பு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்த மக்களுடைய சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரே ஒரு கோரிக்கை; வால்பாறையை மலைப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று, 1996 ஆம் ஆண்டு நம்முடைய அரசால், மத்திய அரசுக்கு எழுதப்பட்டு, இன்றுவரையில், அது மலைப் பகுதியாக அறிவிக்கப்படாமல் இருக்கிறது. இதனால், அங்குள்ளவர்களுக்கு, கூனூர், உதகையிலே கிடைக்கக்கூடிய 10 லிட்டர் மண்ணெண்ணெய், gas connection 2 போன்றவை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு ஆவன செய்து, மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தி, வால்பாறையை மலைப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு....

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும், சிங்காரவேலு அவர்களுக்கும் நடந்த விவாதத்தில் ஒரு சொல் யாருடைய காதிலும் படாமல் போய் இருக்கிறது. அது பதிவாகி விடக்கூடாது என்பதற்காக என் காதிலே பட்டதைத் தங்களுக்குச் சொல்லி, அதைப் பதிவு செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். வால்பாறை, மாஞ்சோலை என்ற இரு கருத்துகள் பரிமாறப்பட்டபோது கிருஷ்ணசாமி அவர்கள், வால்பாறை மாஞ்சோலையாக ஆகி இருக்கும் அல்லது மாஞ்சோலை வால்பாறையாக ஆகி இருக்கும் என்ற வார்த்தை பேதங்களை வைத்துச் சொல்லும்போது சொன்னார். சிங்காரவேலுவைப்போல ** அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த இரண்டு வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே என்னுடைய கருத்துகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இப்போது உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் ஆகிய கொள்கைகளினாலே, உலகச் சந்தையோடு போட்டியிடுகின்ற அளவிற்கு நாம் போட்டியிட வேண்டும் என்ற நோக்கத்தில் சில முறைகள் புகுத்தப்பட்டாலும், கடைப்பிடிக்கப்பட்டாலும், தொழிலாளர்களுடைய நலன்கள் என்று பார்க்கிறபோது, உண்மையிலேயே V.R.S. என்று சொல்லக்கூடிய—Voluntary Retirement Scheme—விருப்ப ஓய்வுத் திட்டத்திற்குப் பதிலாக, கட்டாய ஓய்வுத் திட்டத்தின்படி பல தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கின்ற ஒரு கொடிய சூழ்நிலைதான் இப்போது உருவாகிக் கொண்டு இருக்கிறது. இதையெல்லாம் மத்திய மாநில அரசுகள் திட்டமிட்டுத் தடுக்காவிட்டால், எதிர்காலத்திலே வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும்தான் பெருகும் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இப்போது பல தொழிலாளர் நலச் சட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன; திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்துகிறபோது சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போதுக்கூட, குழந்தைத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே ஜெனிவாவில் உள்ள அகில உலக தொழிலாளர் அமைப்பும், குழந்தைத் தொழிலாளர் சார்பிலான அந்த முறையினைத் தடுத்து நிறுத்துகின்ற அமைப்புகளும் சேர்ந்து பல திட்டங்களை, தமிழகத்தினுடைய சிவகாசி, திருப்பூர் போன்ற பகுதிகளிலே மட்டும் நம்முடைய அரசு நடைமுறைப்படுத்தி இருப்பதாக அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகம் முழுவதும் உள்ள குழந்தைத் தொழிலாளர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், கட்டாயக் கல்வி முறை அமலாக்கப்படுகிறபோதுதான், அது சாத்தியமாகும் என்பதை நான்





இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது Hague-லே உள்ள மனித உரிமை ஆணையம்கூட, இந்தியா போன்ற வளரும் நாடுகளிலேதான், இத்தகைய பிரச்சினைகள் பூதாகரமாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே அரசு இவற்றிலே கவனம் வைத்து, குழந்தைத் தொழிலாளர் முறைகளுக்கான சட்டங்களை ஆங்காங்கே சரியாக அமல்படுத்துகிறார்களா என்று கண்காணித்துத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக கிராமப்புறங்களிலேதான் இப்போது அந்த வேலைவாய்ப்பு முறைகள் மிகமிகக் குறைந்து அருகிக் கொண்டே வருகின்றன. நாட்டு மக்களிடையே வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி வருகிற காரணத்தினாலே இதனைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அண்மையிலே தென் மாவட்டக் கலவரங்கள் குறித்து வெளியிடப்பட்ட குழுவினுடைய அறிக்கையிலேகூடத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைகள் நிலவுகின்ற காரணத்தாலேதான், சாதி, மத மோதல்கள் எல்லாம்கூட வருகின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, என்னுடைய பெரம்பலூர் மாவட்டத்திலே கூட இளைஞர்களுக்கு இடையே அமைதியின்மை நிலவுகிறது என்று சொன்னால் அதற்கு இந்த வேலையில்லாத் திண்டாட்டம்தான் காரணமாக அமைகிறது. ஆகவே இன்றைக்கு, குறிப்பாக கிராமப்புற வேலைவாய்ப்புகளைப் பெருக்கக்கூடிய அளவிற்கு அரசு சிறப்பான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதிலே குறிப்பாக தனியார் துறைகளிலேதான் வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. எனவே தனியார் துறைகளிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு தமிழ்நாடு சட்டமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி, அதை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி, மத்தியிலே அதற்கும் ஒரு தனிச் சட்டம் இயற்றுகின்ற ஒரு நிலைமை வந்தால்தான், தனியார் துறைகளிலேயும் வேலைவாய்ப்பைத் தருகின்ற, ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால்தான், இந்த வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையானது, ஓரளவிற்குக் குறைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2000 ஏப்ரல் 19 பிற்பகல் 12-50

அதேபோல தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்குவது அரசினுடைய கொள்கையாக இருக்கிறது என்று முன்னுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான், பலமுறை, ஏற்கெனவே கொண்டுபோய் இருக்கிற ஒரு பிரச்சினையை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தூத்துக்குடி ஸ்பின்னிங் ஆலையிலே தொழிலாளர்கள் பலபேர் பாதிக்கப்பட்டார்கள். அவர்களைப் பணிநீக்கம் செய்தார்கள். குறிப்பாக அங்குள்ள தொழிலாளர்கள் மத்தியிலே என்ன குறைபாடு இருக்கிறது என்று சொன்னால் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே, தங்களை, தரக்குறைவாக நடத்துகிறார்கள் என்றெல்லாம் சொல்லி, அவர்கள் பலமுறை புகார் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக தொழிலாளர் நலத் துறை ஆணையர் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அழைத்துப் பேசியதற்குப் பின்னாலும்கூட, அவர்கள், இந்தத் தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதற்கு, அந்த வேலையைவிட்டு நீக்கியவர்களுக்குப் பணி தருவதற்கு இன்னும் மறுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், கர்நாடகத்திலே, உள்ள தொழிற்சாலைகள், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தவில்லையென்றால், உரிய முறையிலே, அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு, தகுந்த பாதுகாப்பு முறைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அதுபோல தமிழ்நாட்டிலும், இந்தத் தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிற்சாலைகளில், கட்டாயமாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஏதேனும் சிறப்புத் திட்டம் வகுத்து, செயல்படுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக சிறுதொழில்கள் மூலமாக 40% ஏற்றுமதி வாய்ப்பும், 60% வேலைவாய்ப்பு முறைகளும் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், இந்தச் சிறுதொழில்கள் பல பேர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகின்ற காரணத்தால், சிறப்பான திட்டங்கள் தீட்டி, அந்தத் தொழில்கள் நலிவடையாமல் பாதுகாக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு, சிறு தொழில்கள் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக, எந்த ஒரு திட்டத்தையும்



2000 ஏப்ரல் 19] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

அறிவிக்கவில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு நடைபாதைக் கடை வியாபாரிகளுடைய பிரச்சினை பூதாகரமாக இருந்துகொண்டு இருக்கிறது. நகராட்சி, மாநகராட்சி போன்றவற்றின் தொல்லைகளுக்கும், காவல் துறையினுடைய தொல்லைகளுக்கும் பலமுறை ஆளாக்கப்பட்டு, அந்த நடைபாதை வியாபாரிகள் தங்களுடைய பிழைப்பை, ஜீவனத்தை நடத்துவதற்குக்கூட இயலாத சூழ்நிலைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்காக, மேட்டுப்பாளையத்திலே, அண்ணா மார்க்கெட்டிலே, நடைபாதையிலே, வியாபாரம் செய்யக்கூடிய அந்தச் சிறு வியாபாரிகளை, காவல் துறையினர், அடிக்கடி அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அந்த நடைபாதை வியாபாரிகள் அச்சுறுத்தப்பட்டால், அவர்களுடைய எதிர்காலம், அவர்களுடைய குடும்பங்கள், எந்த அளவுக்கு வறுமை நிலைமைக்குத் தள்ளப்படும் என்பதைக் கருத்திலேகொண்டு, இந்த நடைபாதை வியாபாரிகளுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களுக்குப் பாதுகாப்பான முறைகள் ஏற்படுத்துவதற்கு ஒரு தனி நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய பட்டியலிலே, தனியார் மருத்துவமனை ஊழியர்கள், தற்போது உள்ளார்களா என்பது தெரியவில்லை. அவர்களும் அந்தப் பலனைப் பெறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூர் சிப்காட்டிலேயுள்ள எல்காட் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்து அரசு இதற்கு முன்னாலே பல அறிவிப்புகளைச் செய்திருக்கிறது. Corporation-களிலே அவர்களுக்கு மாற்று வேலை தரப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் 10 மாதங்கள் ஆனதற்குப் பின்னாலும்கூட, இதுவரையிலே தரப்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு....

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மே மாதம் 4 ஆம் தேதி இது குறித்து, மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களும் நானும்

அதுபோலவே தொழிற்சங்கத் தலைவர்களும், corporation அதிகாரிகளும் பேசவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 161 தொழிலாளர்கள் குடும்பங்கள்—எல்காட் தொழிலாளர்கள் குடும்பங்கள் — அரசு அறிவித்த அந்தத் தொகையினைக்கூட, இன்னும் பெறாமல் அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு மாற்று வேலையை அளிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஆட்டோ தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைக்கப்பட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்திலே, இங்கே ஆட்டோ ஓட்டுநர்களுக்கே permit தேவை என்கிற நிலை இப்போது இல்லை. அந்த நிலைமை உருவாக்கப்பட வேண்டும். சில financierகளிடமே அந்த permit உள்ளது. permits வாங்கப்பட்டு அவர்கள் வைத்திருக்கிறார்கள். எனவே அதனை மாற்றி அமைக்க வேண்டும்.

தென் மாநிலங்களிலே குறைந்தபட்சம் ஒன்றரை கிலோமீட்டராக, தூரத்தை நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலே மட்டும், இரண்டு கிலோமீட்டர் தூரமாக இருக்கிறது. இதையும், இங்கே மாற்றி அமைக்க வேண்டும். ஏனென்றால், பெட்ரோல் விலை மிக அதிகமாக உயர்ந்திருக்கிற காரணத்தாலே, ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களுடைய வருமானத்தில், மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12-55*

இப்போது முதற்கட்டமாக 7 பொறியியல் தொழில் பிரிவுகளிலே கருத்தியல் மற்றும் செயல்பாடு குறித்து பாடப் புத்தகம் தமிழாக்கம் செய்யப்படுவதை வரவேற்கிறேன். அனைத்து பொறியியல் தொழில் பிரிவுகளையும் ஓரிரு ஆண்டுகளுக்குள் தமிழ் வழியில் நடத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயத் தொழிலாளர்களுக்காகப் போடப்பட்டு இருக்கிற கோலப்பன் குழு அறிக்கையை அரசு அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறையின் மூலமாக என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே பெண்களுக்கான ஒரு தொழிற் பயிற்சி மையத்தைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகப் பேசுவதிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நாளில் கேள்வி நேரம் முடிந்த பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய விலைவாசி உயர்வுப் பிரச்சினை குறித்து பதில் அளித்த முதலமைச்சர் அவர்கள் முல்லை பெரியாறு அணை குறித்த உங்கள் கருத்தைத் தெரிவிக்க உங்கள் கூட்டணிக் கட்சிகளைக் கூட்டிக் கொண்டு ஈ.கே. நாயனார் அவர்களைப் பார்ப்பதுதானே என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தினுடைய அனைத்து நலன்களையும் பேணுவதிலே கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடியவர்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவசரத்திலும், ஆத்திரத்திலும் அருமை நண்பர் நம்முடைய இராமன் அவர்கள் நான் சொல்லாததைச் சொன்னதாக இங்கே பேசுகிறார். நான் சொன்னது, பார்க்கப் போகலாம் என்றுதான் அழைத்தேன். ஞானசேகரனுக்கு நன்றாகத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அப்படியே அடியோடு மாற்றி, ஏன் நீங்கள் போய் நாயனாரைப் பார்ப்பதுதானே என்று நான் கேட்டதாகச் சொல்கிறார். அது தவறு, நான் அப்படிச் சொல்லவில்லை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் சொன்னது, அவர் பின்னாலே இருந்ததனாலே அவருக்குச் சரியாகக் கேட்கவில்லை என்று நினைக்கிறேன். நீங்கள் சொன்னதுதான் சரி. அப்படித்தான் சொன்னீர்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு அணை குறித்து கேரள முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அது தோல்வி கண்ட பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகம் எங்கும் கண்டனப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று முடிவெடுத்து, அதன்பிரகாரம் நடத்தியது என்பதை நாம் செய்தியில் பார்த்தோம். மாநில நலனை மொத்தமாகப் பார்க்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்வ கட்சித் தலைவர்கள் அனைவரையும் அழைத்துப் பேசி, தீர்வு காண்பதுதான் சம்பிரதாயமாக அவர்கள் கையாண்டிருக்கக் கூடிய முறை என்பதனை நாடு அறியும், இந்த அவை அறியும். அனைத்துக் கட்சித் தலைவர்களும் வருகின்றபோது அவர்கள் வருகின்ற வாயிலிலே காத்திருந்து, அவர்களை அழைத்துச் சென்று, அவர்களை மரியாதையாக அமர வைத்து அவர்களுடைய கருத்தைக் கேட்டு, அதன்பிரகாரம் மாநிலத்தினுடைய நலனை மக்களிடம் எடுத்துச் செல்வதுதான் மாநில முதலமைச்சர் அவர்கள் இதுகாறும் கையாண்டிருக்கிற முறை ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையிலே அவர்கள் தான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக கண்டனப் பொதுக் கூட்டங்கள் நடத்தியது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. அதோடு, இந்த முல்லை பெரியாறு அணை குறித்து தமிழ் மாநில காங்கிரஸ் அதிக அக்கறை கொண்டிருக்கிறது. சென்ற 14 ஆம் தேதி சேலத்திலே நடந்த செயற்குழுக் கூட்டத்திலே நாங்கள் நிறைவேற்றிய முக்கிய தீர்மானமாக இந்த அணை குறித்த தீர்மானம் வந்திருக்கிறது என்பதனை நான் அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழிலாளர் நலத் துறையைப் பொறுத்தவரையிலே மனித வேலை நாட்கள் இழப்பு (Man days loss) — 1998 ஆம் ஆண்டு 30 இலட்சமாக இருந்தது என்றும் அது இந்த ஆண்டு 26 இலட்சமாகக் குறைந்திருக்கிறது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது மூடி இருக்கின்ற தொழிற்சாலைகள் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற நிலையா அல்லது இருக்கின்ற தொழிற்சாலைகளிலே வேலைநிறுத்தங்கள் எல்லாம் நடைபெறாமல் வந்த நிலையா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

அதேபோல தீர்வு செய்யப்பட்ட கதவடைப்புகள் 8 என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். தீர்வு செய்யப்படாத கதவடைப்புகள் எத்தனை என்பது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே



காணப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல மூடியிருந்த ஆலைகளைப் பொறுத்தவரை திறந்தவை 13 என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். திறக்கப்படாத ஆலைகளுடைய எண்ணிக்கை இந்தக் குறிப்பேட்டிலே இல்லை என்பதைக் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினை பொறுத்தவரையிலே அவர்களுடைய நலனைத் தேடுகின்ற முகத்தான் மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்து பல மருத்துவமனைகளைக் கட்டி இருக்கிறது. அதிலே நீலகிரி மாவட்டத்திலே சேரம்பாடி என்ற இடத்திலே நான் சென்று பார்த்தேன். எங்களுடைய குழு சென்று பார்த்தபோது, ஒரு மருத்துவர் என்ற முறையிலே அந்த மருத்துவமனையை, நான் சென்று பார்த்தபோது மிகவும் வருத்தம் அடைந்தேன். ஏறக்குறைய 2 கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்ட அந்த மருத்துவமனை, முறையாகத் திட்டமிடப்படாமல் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே மருத்துவர் இல்லாமலும் நர்சுகள் இல்லாமலும் உரிய பணியாளர்கள் இல்லாமலும் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இதுவே தனியார் மருத்துவமனை என்றால் கட்டுகின்றபோது பொதுவாகவே ஒரு திட்டமிடுதல் என்பது மிகவும் சரியாக இருக்கும். ஆனால் அரசாங்கத்தால் செய்யப்படுகின்றபோது மிகப் பெரிய ஒரு வீணான பணியாக அந்த சேரம்பாடி மருத்துவமனை விளங்கிக் கொண்டிருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட மருத்துவமனைகள் எல்லாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயன்பட்டால் நிச்சயமாகப் பெரும் அளவிலே பயன் இருக்கும். ஏனென்றால் பாம்புக்கடி போன்ற மிக மோசமான நிலைமைகள் அங்கே அடிக்கடி ஏற்பட்டு வருவதால் அத்தகைய மருத்துவமனைகள் உரிய முறையிலே அமைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-00*

மூடிய தொழிற்சாலைபற்றி நான் புதிதாக இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் அதிகம் இல்லை. ஏனென்றால் ஏற்கெனவே மூடியிருக்கின்ற, குறிப்பாக எங்கள் பக்கத்தில் இருக்கின்ற அரியலூர் கூட்டுறவு நூற்பாலைக்கு எங்களின் குழு சென்றபோது அங்கே உட்கார்ந்து பேசுவதற்கு மின் விளக்கு வசதி, மின் விசிறி கூடக் கிடையாது. மின் கட்டணம் கட்ட முடியாமல் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு இப்போது அங்கே வேலையிழந்து தொழிலாளர்கள் எல்லாம்

வாடிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் மேற்கு வங்கத்திலே வாழ்வு ஊதியமாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது; தமிழகத்திலே 250 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த 250 ரூபாய்கூட அங்கே வேலையிழந்த ஏறக்குறைய 250 தொழிலாளர்களுக்குக் கடந்த 6 மாத காலமாக வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே health hazard என்று சொல்லப்படுகின்ற சுகாதாரக் கேட்டினால் அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அவர்களைச் சரியான முறையிலே பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குழந்தைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே அபாயகரமான தொழிலிலே ஈடுபட்டு இருக்கின்ற 8 குழந்தைகளுக்கு மட்டும் 20,000 ரூபாய் வீதம் 1,60,000 ரூபாய் பெறப்பட்டிருக்கிறது என்று குறிப்பு இருக்கிறது. இது மிகக் குறைவான அளவீடு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) கட்டாயக் கல்வி வந்தால் நிச்சயமாக இந்தக் குழந்தைத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்வினைச் சிறப்பித்துக்கொள்ள உதவும் என்று மாண்புமிகு உறுப்பினர் தீரன் சொன்னதை நான் ஆதரிக்கிறேன்.

அதேபோல விழுப்புரம் மாவட்டத்தில் வானூர் கிராமத்தில் இருக்கின்ற ஆரோஃபுட் நிறுவனம் விதிகளுக்குப் புறம்பாக ஏறக்குறைய நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்திருக்கிறது. வெற்றிகரமாகச் செயல்படுகின்ற தொழிற்சாலை அது. ட்ரூ பிஸ்கட் என்று சொல்லப்படுகின்ற ட்ரேட் மார்க் உள்ள பிஸ்கட்டைத் தயார் செய்து விற்பனைக்குக் கொண்டுவருகின்ற அந்த நிறுவனம் எந்த ஒரு முறையையும் பின்பற்றாமல், seniority முறையைக்கூடப் பின்பற்றாமல், விருப்பு வெறுப்பு அடிப்படையிலே பணிநீக்கம் செய்திருக்கிறார்கள். இதனை உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு நேர் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இலாபகரமாக நடக்கின்ற தொழிற்சாலை என்பதால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய மாவு போன்ற உற்பத்திப் பொருட்களைத் தனியார் நிறுவனங்களிலே கொடுத்து உற்பத்தி செய்துகொண்டு தங்களுடைய ட்ரேட் மார்க் வியாபாரத் தொழிலை வெற்றிகரமாக நடத்தி இலாபகரமாகச் சம்பாதித்துக் கொள்கிறார்கள்



என்கிற குறிப்பை நான் இங்கே கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். முடித்துவிடுகிறேன்.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இதுவரை 5,438 நபர்களுக்கு வெளிநாடுகளிலே வேலைவாய்ப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக மேலை நாடுகளுக்கு அல்லது தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் செல்லுகின்ற நண்பர்கள் எல்லாம் அங்கே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அங்கே செல்கின்ற நபர்கள் முறைப்படியாக நம்முடைய அரசு நிறுவனத்தின் மூலமாகத்தான் செல்ல வேண்டும் என்ற கட்டாயத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

பொதுவாக என்னுடைய மனதைப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னை அண்ணா சாலையில் செல்லுகின்றபோது அமெரிக்க தூதரகத்திற்கு வெளியே இருக்கின்ற கும்பலைப் பார்க்கின்றபோது சுயமரியாதை இயக்கத்தில் இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லாம் எப்படி இதைப் பொறுத்துக் கொள்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். மிகப் பெரிய கொடுமையிலே, வெய்யிலிலே அவர்கள் காலையிலே ஏதோ கடன்பட்டவர்களைப்போல அந்த தூதரகத்தின் வாசலில் நிற்கின்றார்கள். இதற்கு ஏன் முறையாக ஒரு வழி காணக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். விசா பெறுகின்ற அந்த நண்பர்கள் வெய்யிலிலும், மழையிலும் மிக அநாகரிகமாக நடு road-லே நின்றுகொண்டிருப்பது நம்மைக் கேவலமாக நடத்துகின்ற முறையாக நான் கருதுகின்றேன். இதில் அரசாங்கம் தலையிட்டுச் சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியத்திலே இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையாக உரை நிகழ்த்துகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய எனது அன்பிற்குரிய தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. இரகுமான்கான்] [2000 ஏப்ரல் 19

இந்த மானியக் கோரிக்கையின்மீது 10 உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகளின் மூலமாகத் தங்களுடைய எண்ணங்களையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அரசு ஜனநாயகத்திலேயும், கருத்துச் சுதந்திரத்திலேயும் நம்பிக்கையுடைய அரசு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம் வேறுபாடு பார்க்காமல் சொல்லப்பட்டிருக்கக்கூடிய கருத்துகள் சரியாக இருக்குமேயானால் அவற்றை அமல்நடத்த இந்த அரசு பின்வாங்காது என்பதை மகிழ்ச்சியுடன் தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இங்கே நம்முடைய உறுப்பினர்கள் சொல்லியிருக்கக்கூடிய பல நல்ல கருத்துகளை எல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன். குறிப்பாக தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலே இருக்கக்கூடிய இந்த அரசுபற்றிச் சொல்ல வேண்டுமானால் — சரித்திரத்திலே இரண்டு காலத்தைப் பற்றிச் சொல்வார்கள். ஒரு காலம் இருண்ட காலம்; இன்னொரு காலம் பொற்காலம் என்று சொல்வார்கள். அந்த விதத்திலேதான் குப்தர் காலத்தைப் பொற்காலம் என்று சொன்னார்கள். அதுபோல இன்றைக்கு — நம்முடைய தலைமுறையிலே டாக்டர் கலைஞர் அவர்களுடைய இந்த ஆட்சி ஒரு பொற்காலம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம்; கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு, இந்த அரசின் சார்பாகச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும், விவசாயிகளாக இருந்தாலும் சரி, நெசவாளர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, — தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள், இப்படி நான் சொல்லிக்கொண்டே போகலாம் — அனைத்துத் தரப்பு மக்களுக்காகவும், அவர்களுடைய வாழ்க்கையிலே கண்ணீரைத் துடைத்து, அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய சிறந்த காரியங்களை இன்றைக்கு அரசாட்சியின் மூலமாக அவர்கள் செய்து வருகிறார்கள்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் விமர்சனம் செய்வது அவர்களுடைய ஜனநாயக உரிமையாக இருக்கலாம். ஆனால், ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டதைப்போல ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் ரோஜா ரோஜாதான் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



2000 ஏப்ரல் 19] [திரு. அ. இரகுமான்கான்]

அதைப்போலவே உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் வாடிய பயிரைப் பார்த்த போதெல்லாம் வாடினேன் என்று வள்ளலார் பாடினார். ஜாதிகள் இல்லையடி பாப்பா என்று சொன்ன பாரதி,

காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்

என்று பாடினார். மனித நேயத்திற்கு அதனுடைய எல்லைக்கு வரம்பே கிடையாது என்று சொன்னார். ஆகவேதான் கருணை மனு போட முடியாத கால்நடைகளைக்கூடக் கவனித்து அவற்றினுடைய வளர்ச்சிக்காகத் திட்டங்கள் கொண்டுவந்து ஒரு மாபெரும் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) மனிதாபிமானியாக இன்றைக்குக் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நடராசன் அவர்கள் எடுத்துச்சொல்லியதைப்போல, அவர்கள் உழைக்கும் வர்க்கத்திற்காக, பாட்டாளி வர்க்கத்திற்காக, தொழிலாளி வர்க்கத்திற்காக, சூரிய சந்திரர்கள் உள்ளவரைக்கும், அவர்கள் செய்திருக்கக்கூடிய சாதனைகள், சரித்திரத்திலே, வரலாற்றிலே நிச்சயமாக இருக்கும். காரணம், மே தினத்தை சம்பளத்துடனான விடுமுறையாக விடவேண்டுமென்று யாருமே சிந்தித்தது கிடையாது. மத்திய அரசை வலியுறுத்தி அதைச் செய்தார்கள்; நினைவுச் சின்னத்தை மே தினப் பூங்காவிலே ஏற்படுத்தினார்கள்.

தொழிலாளர் நல நிதி என்று ஒரு நிதியை 1972-லேயே கொண்டுவந்து Welfare Board உருவாக்கி இப்போது எல்லாத் தொழிலாளர்களுமே அதனுடைய நன்மைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏராளமான விளம்பரம் செய்யப்படவில்லை. எவ்வளவோ காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. 4 சதவீதமாக இருந்த போனசை 8.33 சதவீதமாக ஆக்கிய பெருமையெல்லாம் சாதாரண விஷயமல்ல. இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய காரியங்கள்.

அதுமட்டுமல்ல இன்னொன்றையும் இங்கே நினைவுபடுத்த நான் விரும்புகிறேன். ஒவ்வொரு தீபாவளியின்போதும் தொழிலாளர்களுக்கு நிதியுதவி, முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்தே தந்த பெருமைக்குரியவர்.

இப்போதுகூட உங்களுக்கெல்லாம் தெரியும்; 1989-90 ஆம் ஆண்டிற்குப் பிறகு மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள்

6166 பேருக்கு 1-5-1999 முதல் இதுவரை தலா 250 ரூபாய் வீதம் முதலமைச்சர் நிவாரண நிதியிலேயிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தொகை என்று கேட்டால், இதுவரைக்கும் 88 இலட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபாய். இன்றைக்குக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு — இது சிலருடைய வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், இதுவே தீர்வு இல்லை என்று அவர்கள் வாதாடலாம். ஆனால் இது சாதாரண விஷயம் அல்ல. இது ஒரு மிகப் பெரிய நிவாரணமாக அவர்கள்மீது கொண்ட இரக்கத்தின் காரணமாக அல்ல — அந்தத் தொழிலாளி வர்க்கத்தின் மீதுள்ள அக்கறையின் காரணமாகச் செய்து இருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை சொன்னார், அண்ணாவும், அதைப்போலவே பெரியாரும் தோன்றி திராவிட இயக்கத்தை உருவாக்கியிருக்காவிட்டால், நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகவே இருந்திருப்பேன் என்று. அண்ணா அவர்கள் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகமே உண்மையான தன்னாட்சியுடைய பொதுவுடைமைப் பூங்கா என்று.

பிற்பகல் 1-10

இப்போது தொழிலாளி வர்க்கத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் — இப்போது நாட்டிலே இலட்சோபலட்சம் மக்களில் பல பேர் மூட்டை சுமப்பவராக, முடி வெட்டுபவராக, சலவைத் தொழிலாளியாக, அப்பளம் பொரிப்பவராக, தையல் தொழிலாளியாக இலட்சக்கணக்கான அமைப்பு சாராத் தொழிலாளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். தொழிலாளிகளுடைய வர்க்கத்திலேயே இந்த Un-organised Sector என்று சொல்லக்கூடிய இலட்சக்கணக்கான அமைப்பு சாராத் தொழிலாளர்கள்தான் majority யானவர்கள் — அவர்களுக்காக ஒரு வாரியம் அமைத்திருக்கிறார்கள். வாரியம் அமைத்ததோடு, அவர்களுடைய நலத்திற்காகப் பல திட்டங்களை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். நம்முடைய மரியாதைக்குரிய தாகூர் ஒரு முறை ஆண்டவனைக் கோவிலிலே தேடாதே, கல் உடைக்கும் தொழிலாளியின் கண்ணீரிலும் வியர்வையிலும் இருக்கின்றான் என்று குறிப்பிட்டார்கள். நேரு பெருமான் ஒரு முறை தொழிற்சாலைகள்தான் என்னுடைய கோவில்கள், தொழிலாளிகள்தான் என்னுடைய வணக்கத்திற்குரிய தெய்வங்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது அவை எல்லாம் வெறும் கனவாக, கற்பனையாகப்



போய்விடாமல் இந்த இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் Organised Labour என்று சொல்லுகிறோமே, சார்புத் தொழிலாளி, அவர்களுக்கு Bonus Act பொருந்தும்; Gratuity Act பொருந்தும்; எல்லா சட்டங்களும் பொருந்தும். ஆனால் இந்தத் தொழிலாளிக்குப் பொருந்தாது. — வாழ்க்கையில் ஒளியை எப்படிக் காண்போம்? வேலை நிரந்தரம் அல்ல; தொழில் நிரந்தரம் அல்ல. அப்படிப்பட்ட அந்தத் தொழிலாளியின் கண்ணீரைத் துடைக்கின்ற விதத்திலே அவர்களுக்கு ஒரு வாரியத்தை அமைத்து ஒரு நலத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறார் என்று சொன்னால் இது சாதாரண விஷயம் அல்ல. 54 தொழில்களுக்கு— நான் அவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். ஏற்கெனவே இதுகுறித்து இங்கே நாம் பேசியிருக்கிறோம். நேரத்தின் அருமை கருதிச் சொல்லவில்லை. உங்களுக்கு எல்லாம் தெரியும். சுமை தூக்கும் தொழிலாளி, தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலாளி, கூட்டுறவுச் சங்கங்களில் இல்லாத கைத்தறித் தொழிலாளி, விசை சக்தி, செங்கல் தயாரித்தல், சாயம் ஏற்றுதல், முந்திரி உடைத்தல், கயிறு தயாரித்தல், பந்தல் கட்டுதல், அப்பளம் தயாரித்தல் ஆகிய தொழிலைச் செய்வோர், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர், மண்பாண்டம் செய்வோர் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இந்த ஒரு ஏற்பாட்டை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள்.

அண்மையிலே டெல்லியிலே அகில இந்திய தொழிலாளர்களுடைய மாநாடு நடைபெற்றது. பிரதமர் வாஜ்பாய் அதிலே கலந்துகொண்டார். முத்தரப்பு மாநாடு. நம்முடைய ஊரிலே இருந்துகூட C.I.T.U. அமைப்பைச் சேர்ந்த வரதராஜனும், சிம்சன் விஸ்வநாதனும் வந்திருந்தார்கள். தொழிற்சங்கத் தலைவர்கள், நிர்வாகிகள், மத்திய அமைச்சர், அதுபோல பல மாநிலங்களிலிருந்து வந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் இப்படி அந்த மாநாட்டிற்கு வந்தவர்களை நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். கலைஞர் அவர்களுடைய பெயரை அந்த மாநாட்டிற்கு வந்திருந்த அத்தனை மாநில அமைச்சர்களும் சொல்லி, அத்தனை சங்கத் தலைவர்களும் சொல்லி Un-organised Labourers என்பவர்களுக்காக இந்தியாவிலே மாபெரும் புரட்சி செய்த தலைவர் டாக்டர் கலைஞர் என்று பேசினார்கள். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. நல்ல காரியங்கள் செய்கிறபோது அவற்றை நிச்சயமாக மக்கள் போற்றுவார்கள்.

[திரு. அ. இரகுமான்கான்] [2000 ஏப்ரல் 19

அந்த விதத்திலே இப்போது விபத்து நிவாரணத் திட்டம். தொழிலாளி ஒருவர் இறந்துபோனால் 1 இலட்சம் ரூபாய், காயமடைந்தால் காயத்தின் தன்மைக்கேற்ப நிதி அளிப்பு. அதேபோல, அந்தத் தொழிலாளிப் பெண்ணிற்கு பிரசவமானால் அவர்களுடைய பிரசவச் செலவிற்காக 1000 ரூபாய். அதுபோலவே, Terminal benefits; பணிமுடிவு நலத் திட்டம். ஓராண்டிற்கு அவர்கள் சந்தா செலுத்த வேண்டும். சந்தா செலுத்தினால் அந்த மொத்தத் தொகையிலே 12 சதவிகிதம் வட்டித் தரப்படும். அந்தத் தொகைக்கு மேலே 25 சதவிகிதம் போட்டு அவர்களுக்கு ஆண்டு முடிவிலே தரப்படும். ஆண்டு முழுவதும் செலுத்த வேண்டும். ஆக இப்படிப் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, தனித் தனி வாரியங்கள். நான் கேட்கிறேன், சலவைத் தொழிலாளி எவ்வளவு சந்தோஷப்படுகிறான். ஆயிரக்கணக்கான மக்களின் அழுக்குகளை எல்லாம் நாம் அகற்றினோம்; நம்முடைய வாழ்க்கையின் அழுக்கை அகற்ற ஆள் இல்லையே என்று வருத்தப்பட்டான். பாரம் தூக்கும் தொழிலாளி பரிதவித்தான். என்னுடைய பாரத்தைக் கீழே இறக்கிவைக்க ஆள் இல்லையே என்று வருத்தப்பட்டான். முடி திருத்துகின்ற தொழிலாளி, ஆட்டோ தொழிலாளி அகமகிழ்கிறான். நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம் தொழிலாளி வர்க்கத்தினுடைய வரலாற்றிலே ஒரு மிகப் பெரிய புரட்சியை இப்போது பேனாவால் செய்து முடித்த ஒரு மாபெரும் தலைவராக நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால் அவருடைய பொற்கரங்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். எவ்வளவோ சட்டச் சிக்கல்கள். இதுவராமல் போய்விடுமோ என்றுகூட நான்கூட அஞ்சினேன். ஆனால் சட்டச் சிக்கல்களைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் மிகுந்த நம்பிக்கையோடு அந்தத் தொழிலாளர்களுக்காக இந்த வாரியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன், அண்மையில்தான் இந்த வாரியம் தொடங்கப்பட்டது. 1 இலட்சத்து 54 ஆயிரத்து 196 பேர் அந்தத் தொழிலாளர்கள் இந்த வாரியத்திலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நான் நினைவூட்ட விரும்புகிறேன், இப்போது ஏறத்தாழ 75 இலட்சம் ரூபாய் contribution-ஆக வந்திருக்கிறது. இப்படித் தொழிலாளர்களுக்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.



2000 ஏப்ரல் 19] [திரு. அ. இரகுமான்கான்]

அதுபோலவே கட்டடத் தொழிலாளர்கள். உங்களுக்கு எல்லாம் தெரியும். கட்டடத் தொழிலாளர்களுக்காக இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்த நலத் திட்டத்தின் பயன்கள் சென்னையிலே இருப்பவர்களுக்கும் மதுரையிலே இருப்பவர்களுக்கும் கோவையிலே இருப்பவர்களுக்கும் மட்டும்தான் போயின; ஆனால்; இப்போது அது தமிழ்நாடு முழுமைக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

அதுபோலவே ஒரு புள்ளி என்பதை மாற்றி இப்போது 0.1 என்ற அளவிற்கு contribution-ஐ உயர்த்தி ஏறத்தாழ 10 கோடி ரூபாய், 12 கோடி ரூபாய் அளவிற்கு contribution-ஐ உயர்த்தி, விபத்திலே இறந்தால் 1 இலட்சம் ரூபாய்; மகப்பேறு உதவி 1,000 ரூபாய்; அதுபோல பிள்ளைகள் படிப்பதற்கு 750 ரூபாய்; 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் 750 ரூபாய்; 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தால் 1,000 ரூபாய்; இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கட்டடத் தொழிலாளர்களுக்காக அறிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது இந்த அன்பளிப்பு (contribution) தொகையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, Construction Board இருக்கிறது. அந்த Board-லே எல்லா கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கூடி முடிவு எடுப்பதுதான். ஆனால், இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்....

**திரு. கே. சுப்பராயன்:** Clarification, Sir. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் கட்டடத் தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே மத்திய சட்டத்தில் ஒரு %க்குக் கீழ் இல்லாமல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இங்கே 0.3 % என்று இருப்பதை— மத்திய Act குறைந்தபட்சம் ஒரு % அளவு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. மத்திய சட்டத்திற்குக்கீழாக 0.3 என்று இருக்கிறது. அதை — ஒரு %ஆகவாவது உயர்த்தலாம். அப்படி உயர்த்துவது குறித்து அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்துக் குறித்து அரசு அதிகாரிகளோடும், நம்முடைய முதலமைச்சர் அவர்களோடும், ஏன் இன்னும் தேவைப்பட்டால் உங்களோடும் கலந்து நாங்கள் பரிசீலிக்கிறோம் என்ற விவரத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இந்த மன்றத்திலே இதுகுறித்துச் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலே இப்போது அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்த பெருமை இந்த அரசைத்தான் சாரும்.

தேராட்டம் காரினில் போவோரே,
எங்க ஏரோட்டம் நின்றுபோனால்,
உங்க காரோட்டம் என்னவாகும்,

என்று ஒரு கவிஞர் கேட்டார். நாம் சோற்றிலே கை வைக்க வேண்டுமானால், உழவன் சேற்றிலே கால் வைக்க வேண்டும். சேற்றிலே கால் வைக்காத நிலை உழவனுக்கு வருமா என்று ஒருவர் கேட்டார் வராது. ஆக, உழவன் சேற்றிலே கால் வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியும். அதைப்போலவே அய்யன் வள்ளுவன் சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் என்று பாடினான். அப்படிப்பட்ட அந்த விவசாயிகளுக்கு சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்— இப்போது National Minimum Wages 40 ரூபாயாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அவர்கள் 33 ரூபாய், 32 ரூபாய் தான் பெற்று வந்தார்கள். கோலப்பன், I.A.S. அவர்களைத் தலைவராகப் போட்டு, Committee போட்டு இந்தப் பிரச்சினையை ஆய்ந்து அந்த அறிக்கையைப் பெற்று பரிசீலித்து உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். உங்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். மொத்தமாக 55 ரூபாய்தான் சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்யும் விவசாயத் தொழிலாளிக்கு இருந்தது. இப்போது ஏறத்தாழ— 100 ரூபாய் நாள் ஒன்றுக்குத் தரப்படுகிறது. இப்படி அனைத்துப் பணிகளுக்கும் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, கோலப்பன் Committeeயின் பரிந்துரையின் அடிப்படையிலே விவசாயத் தொழிலாளிகளுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்த அரசு இந்த அரசு. இந்த அரசைப் பார்த்துத் தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், உங்களுடைய Labour Policy என்ன? தொழிலாளர்களுடைய கொள்கை என்ன என்று கேட்கிறார். Policy



Note படித்தேன், சரியாக விளங்கவில்லை, மிக மிகச் சுருக்கமாக இருக்கிறது என்று சொன்னார். திருக்குறள்கூடச் சுருக்கமாகத்தான் இருக்கிறது. அதற்காக, அதிலே தெளிவில்லை என்று பொருளா? ஆகையினாலே எத்தனை அடிகளில் சொல்கிறோம் என்பது முக்கியம் அல்ல, எதை எப்படிச் சொல்கிறோம் என்பதுதான் முக்கியம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இடையிடையே குறுக்கிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்? அவரைப் பேசவிடுங்கள், பிறகு நீங்கள் பேசலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஆழமாகச் சொல்லியிருக்கிற அந்த விஷயம் என்னுடைய சிற்றறிவின் எல்லைக்குப் புரியவில்லை. அதனால் சொன்னேன். (சிரிப்பு)

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** உங்கள் சிற்றறிவுக்கு இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்திலே குறிப்பிடப்பட்டிருப்பது புரியவில்லை என்றால் சொல்கிறேன். தொழில் வளம் பெருக வேண்டும்; தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்; தொழில் உறவை மேம்படுத்த வேண்டும்; Mutual trust and confidence of both employer and employee தொழிலாளர்களின் ஜனநாயக ரீதியான தொழிற் சங்க உரிமை பாதிக்கப்படக்கூடாது; தொழிலாளர்கள் சுரண்டப்படக் கூடாது; அச்சுறுத்தப்படக் கூடாது; தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகள், உரிமைகள், பயன்கள் உடனடியாக வந்து சேர வேண்டும்; தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், Awardகள் அமல்படுத்தப்பட வேண்டும்; மீறுவோர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்; தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நேரடியாகக் கலந்து பேசி 18 (1) ஒப்பந்தம் போட்டாலே போதும்; தொழில் பிரச்சினையில் அரசுக்கு வேலையே இல்லை;

அதுமட்டுமல்ல சலுகைகள், உரிமைகள், பயன்கள் என்பதோடு மட்டுமல்ல இன்னும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நம்பிக்கையை ஏற்படுத்தி கதவடைப்பைக் கைவிட்டு, நிர்வாகம் தொழிற்சாலையிலே வேலை செய்யக்கூடிய அத்தனை பேரும்

strike-ஐ கைவிட்டு, பொருள் உற்பத்தியைப் பெருக்கி, நல்லுறவோடு இருக்க வேண்டும்; தொழிலாளி இல்லையென்றால் தொழிற்சாலை இல்லை; தொழிலாளி இல்லையென்றால் உற்பத்தியில்லை; தொழிலாளி இல்லையென்றால் அந்நியச் செலாவணி இல்லை, இராமன் இல்லாமல் இராமாயணம் இல்லை என்று சொல்வதைப் போல. ஆகையினால், தொழிலாளர் உறவும் பாதுகாக்கப்பட வேண்டும், முதலாளிகளுடைய பொருளாதார நன்மையையும் உற்பத்தியையும் நாம் பாதுகாக்க வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று சொல்வது தொழிலாளர் விரோதக் கொள்கையா? ஸ்தாபன ரீதியற்ற (un-organised sector) தொழிலாளர்களுக்காக வாரியங்கள் கொண்டுவந்தது தொழிலாளர் விரோதக் கொள்கையா? நான் சுப்பராயன் அவர்களைக் கேட்கிறேன், விவசாயத் தொழிலாளர்களுக்காகக் குறைந்தபட்சக் கூலி அமைத்தது தொழிலாளர் விரோதக் கொள்கையா? நீங்கள் எதைத் தொழிலாளர் விரோதக் கொள்கை என்கிறீர்கள்? யார் யாரையோ புரட்சி என்று சொல்லிக்கொண்டு, பாதை தவறிப்போய் இருப்பதைப் புரட்சி என்று சொல்கிறீர்களா? எங்களுக்கு விளங்கவில்லை.

அதுமட்டும்மல்ல தொழில் வளர வேண்டும்; தொழில் வளம் பெருக வேண்டும்; தொழிலாளர் நலன் பெருக வேண்டும். இதுதான் இந்த அரசினுடைய தொழிலாளர் நலக் கொள்கை. இரயில் பாதை என்று சொன்னால், இரண்டு தண்டவாளம் இருக்க வேண்டும். ஒன்று நிர்வாகம், இன்னொன்று தொழிலாளி. அப்போதுதான் இரயில் போக முடியும். உறுதியோடு இருக்க முடியும்.

கடிகாரம் என்று சொன்னால், இரண்டு முட்கள், பெரிய முள், சிறிய முள் இருக்க வேண்டும். காலத்தைக் காட்ட வேண்டுமானால் அந்தப் பெரிய முள்ளும் சிறிய முள்ளும். நிர்வாகமும் தொழிலாளர்களும் மாதிரி — இயங்க வேண்டும். அந்த உறவு சரியாக இருந்தால்தான், கடிகாரம் சரியாக இருந்து காலத்தைக் காட்டுவதைப் போல இதுவும் சரியாக இருக்கும். இதுதான் எங்களுடைய கொள்கை. We are committed to the welfare of the labourers என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; தோட்டத் தொழிலாளர்கள் என்று சொன்னாலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தான் நினைவுக்கு வருகிறார். அவர்கள் இங்கே பேசினார்கள். அவருக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய





தனிப்பட்ட நிலையையும் நான் குறைத்துப் பேசவில்லை. ஆனால் அருள்கூர்ந்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில் இந்தச் சட்டங்கள் - சம்பளப் பட்டுவாடா சட்டம், மகப்பேறு நலச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகைகள் விடுமுறைச் சட்டம், பிழைப்பூதியப் பட்டுவாடா சட்டம், தொழிலாளர்களுக்கு நிறைந்த அந்தஸ்து வழங்கும் சட்டம், சம உரிமைச் சட்டம், பணிக்கொடை வழங்கு சட்டம், போனஸ் பட்டுவாடா சட்டம், தொழிலாளர் நல நிதிச் சட்டம், இவற்றை எல்லாம் எங்களுடைய அதிகாரிகள் பயன்படுத்தி சிறப்பாகச் செய்துவருகிறார்கள்.

அதுமட்டுமல்ல தேனியிலே, கோத்தகிரியிலே, பந்தலூரிலே, தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையைக் கவனிப்பதற்காக ஒரு தனி அலுவலகம் திறக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறார்கள். நான் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைக் கேட்கிறேன், இந்தியாவிலேயே தோட்டத் தொழிலாளர்களுக்கு 90 சதவீதம் வீடு கட்டிக் கொடுத்தது யார்? கலைஞருடைய அரசு அல்லவா? நான் கேட்கிறேன், இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்காக வாரியம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். மன்னிக்க வேண்டும்; நீங்கள் தொழிற் சங்கத் தலைவராக ஆனதற்குப் பிறகு, இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அது புரியாமல் இருப்பதற்காக. இரண்டு தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று, தோட்டத் தொழிலாளர்களுக்காக; இன்னொன்று வீட்டு வசதிக்காக. இது முத்தரப்பு வாரியம். உங்களைப் போன்ற தொழிற் சங்கத் தலைவர்களும் அதில் இடம் பெறலாம், முதலாளிகளும் இடம் பெறலாம்....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 50 ஆண்டு காலமாக, பல விஷயங்கள், சட்டத்திலே ஏட்டளவில் இருக்கின்றன. எதுவுமே செயல் அளவில் இல்லை; அமலாக்கப்படவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சொல்லக்கூடிய எதுவும் அமலில் இல்லை என்பதுதான். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் 20 வருடங்கள் 30 வருடங்களாகத் தற்காலிகத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் பாழடைந்த வீடுகளாக இருக்கின்றன. மருத்துவ வசதிகூட இல்லாமல் இருக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு Sheds கிடையாது; Canteen கிடையாது; Creche கிடையாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு

எத்தனையோ சலுகைகள் என்று சொல்லப்பட்டாலும், எதுவுமே அவர்களுக்கு இல்லை என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தோட்டத் தொழிலாளர் வாரியம் பற்றிச் சொன்னார்கள். அது செயலில் இருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு என்ன பதில் சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. காரணம் இங்கு இருக்கக்கூடிய அத்தனை தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் தெரியும்; மக்களுக்கும் தெரியும்; தொழிலாளர்களுக்கும் தெரியும். இப்போது இருக்கக்கூடிய அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வாரியத்திற்கு எங்களுடைய Commissioner தான் தலைவர், பல கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன; முத்தரப்புக் கூட்டம்; நிர்வாகம், தொழிலாளி, அரசு தரப்பு. அதைப்போலவே, வீட்டு வசதி வாரியம்; எங்களுடைய செயலாளர்தான் முத்தரப்புக் கூட்டத்தின் தலைவர். நீங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்குங்கள். ஆனால் பொய் சொல்லலாகாது பாப்பா என்பதை மட்டும் பணிவோடு உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், Plantation Labour Advisory Committee-யையும், அதேமாதிரி, Plantation Labour Housing Advisory Committee-யையும் தனி வாரியங்கள் என்ற முறையிலே எப்படிச் சொல்கிறார் என்பது புரியவில்லை. அவை வெறும் Advisory Nature-ல் உள்ள Committee-களே தவிர, நல வாரியத்திலுள்ள அதிகாரங்கள் படைத்த Committee-கள் அல்ல என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியாதா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டு வசதி வாரியம் என்பது தெளிவாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதுபோலத் தோட்டத் தொழிலாளர் வாரியம் செயல்படுகிறதா? அதனுடைய தலை முதல் கீழே இருக்கக்கூடிய அமைப்புகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? அப்படியென்றால் 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் அமலில் இருந்தும், 1955 ஆம் ஆண்டு விதிகள் இருந்தும் இன்றும்கூட எதுவும் அமலாக்கப்படாததற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.



**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Advisory Board என்பதைப்போல இங்கே நம்முடைய தோட்டத் தொழிலாளர்களுடைய நலத்திற்காக முத்தரப்புக் கூட்டம் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். அதன் மூலமாகத்தான் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன; பேசப்படுகின்றன. அது Recommendatory nature. எப்படி Advisory Board என்பதை recommendatory nature-ஆக இருந்தாலும் ஒரு Supreme Body என்ற முறையிலே ஏற்றுக்கொள்கிறோமோ அதுபோலத்தான்....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் என்று பார்க்கிறபோது, குடிசை மாற்று வாரியம் என்று சொல்கிறோம். அது குடிசைகளை எல்லாம் மாடி வீடுகளாக மாற்றக் கூடிய ஒரு வாரியம். தோட்டத் தொழிலாளர்களுடைய வாழ்நிலையை மாற்றி அமைப்பதற்குண்டான வாரியத்தைப் பற்றி அதனுடைய அமைப்புகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்க வேண்டும். யார் பொய் சொல்லக் கூடாது பாப்பா என்பதை அமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்கிறேன். Statutory Board என்பது வேறு; Advisory Board என்பது வேறு. Advisory Board-ஐத்தான் நான் சொல்கிறேன். அடுத்து, நீங்கள் கேட்ட கேள்வி....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, இருங்கள். நீங்கள் இரண்டு பேரும் விவாதம் செய்வதற்கு இது இடமில்லை. மாண்புமிகு அமைச்சர் நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** Statutory Body என்று சொன்னால் அது சட்டரீதியாக வரவேண்டும். சட்டத் திருத்தம் கொண்டு வந்தபின் வரவேண்டும். இப்போது நான் குறிப்பிடுவது ஏற்கெனவே உள்ள...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப அமைச்சர் அவர்கள் சொல்வதனால், அது உண்மையாக மாறிவிடக்கூடாது. ஏனென்றால் Advisory Board என்பது வேறு; வாரியம் என்பது வேறு. அது இரண்டும் ஒன்று என்று சொல்வது என்பது பொதுவாக அவை நடவடிக்கைக் குறிப்புக்கே ஒரு

தவறான தகவலை, ஓர் அமைச்சரே சொல்வதாகும். ஆகையால் அந்தமாதிரி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்காகத்தான் ஆங்கிலத்திலே Statutory Body, Advisory Body என்று பிரித்தே சொல்லிவிட்டேன்.

அடுத்து தோட்டத் தொழிலாளர்களுக்காக என்ன செய்து இருக்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 43,694 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன; 98 சதவிகிதம். தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி வாரியம் என்ற வார்த்தையைத்தான் இங்கே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்த அர்த்தத்தில் அல்ல. Advisory Board என்பது மட்டுமல்ல. இங்கே மருத்துவ வசதிக்காக 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் உள்ளன. தோட்டத்திற்கு அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் சென்றால் நிர்வாகம் அந்தச் செலவை ஏற்றுக்கொள்கிறது. மகப்பேறு வசதி; பேறுகால விடுப்பு-12 வாரம்; அதைப்போலவே குழந்தைகள் காப்பகம்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மொத்த வீடுகள் 43,694; மின்சார வசதி செய்யப்பட்டவை 41,055; கல்வி வசதிக்காக 109 பள்ளிக்கூடங்கள்; வருடம் ஒரு முறை bonus; இரண்டு வருடங்களுக்கு முறை காட்டுக் கம்பளி; உணவகங்கள் 104; நான் என்ன சொல்கிறேன் என்றால் சட்டத்தை அமல்படுத்துகிறோம்; அதை நிர்வாகம் அமல்படுத்தத் தவறினால் நடவடிக்கை எடுக்கிறோம்.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் மாறி, மாறி பேசுவதற்கு இது விவாதம் இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார். மாஞ்சோலையில் அந்த estate ஏறக்குறைய 150



வருடங்களாகச் செயல்படுகிறது. ஏழு Estate-கள் இருக்கின்றன. ஒரு Estateலும், கேண்டீன் கிடையாது. அதேபோல ஹைவேசிஸ் பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவருக்கே தெரியும். அங்கே ஏழு Estate-கள் இருக்கின்றன. ஒரு இடத்தில்கூட தொழிலாளர்களுக்கு கேண்டீன் கிடையாது. வால்பாறையில் கிடையாது. அப்படி இல்லாதபோது வெறும் எண்ணிக்கையை மட்டும் சொல்வது எந்தவிதத்தில் முறையாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை சாட்சியாகப் போடாதீர்கள். Estate இருப்பது எனக்கு தெரியும். கேண்டீன் இருக்கிறதா இல்லையா என்பது தெரியாது.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே தருகிற குறிப்புகள் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு உண்மையாகத் தரப்பட்டிருக்கிற குறிப்புகள் என்பதை மட்டும் சொல்லிப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, 2,562 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், நிறையச் செய்ய வேண்டுமென்பது வேறு; ஆனால் அதற்கு முரண்பாடாகச் செய்யாமல் போவது என்பது வேறு. நாங்கள் செய்யக்கூடிய பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம்.

குழந்தைத் தொழிலாளர்கள் பற்றி இங்கே எல்லோரும் சொன்னார்கள். குறிப்பாக ஒன்றை நான் இங்கே தெரிவிக்க வேண்டும். நம்முடைய அய்யன் வள்ளுவர் சொன்னார்;

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

புறநானூற்றிலே சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்று சொல்லப்பட்டுள்ளது. துரதிருஷ்டவசமாக இப்போது பல பகுதிகளிலே தமிழகத்திலே பல மாவட்டங்களில் குழந்தைச் செல்வங்களை வேலைக்கு—14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலைக்கு— அனுப்பக்கூடிய கொடுமை இருக்கிறது. ஒரு சமுதாயம் முன்னேறியிருப்பதற்கு அளவுகோல் பொருளாதார முன்னேற்றம் அல்ல. அது ஒரு ஆரோக்கியமான சமுதாயமாக இருக்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, இவை ஒழிக்கப்படாத வரையில் எதுவுமே நடக்காது. நாங்கள் குழந்தைத் தொழிலாளர்களை அனுமதிப்போம் என்ற சூழ்நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

[திரு. அ. இரகுமான்கான்] [2000 ஏப்ரல் 19

ஆனால், Supreme Court, இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய வாசகங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் இப்படிப் பல்வேறு அமைப்புகளின் மூலமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னும் சொல்லப்போனால் நான் நினைவூட்ட விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசின் சார்பாக இதற்காக 4 கோடிக்கு மேலே பெரிய தொகையை ஒதுக்கி—குழந்தைகளுக்கான Corpus—சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி எங்கேயாவது குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பார்களேயானால் அவர்களைக் கண்டுபிடித்து, அந்தக் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு வேலை கொடுக்கும் முயற்சியை எடுக்க வேண்டும், அல்லது 5000 ரூபாய் அளிக்க வேண்டும்; அவர்களை Informal School என்கிற பள்ளிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதிலே துரதிருஷ்டம் என்னவென்று கேட்டால், முதலாளிகள் தரப்பிலே, அவர்கள் 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று பலபேர் பொய்ச் சான்றிதழ் வாங்கி விடுகிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை. நீதிமன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். எனவே அவர்களுடைய நல்வாழ்விற்காக ஒதுக்கிய தொகையைக்கூட எங்களால் அதிகம் செலவழிக்க முடியாத நிலை இருக்கிறது. இப்போது ஜெனிவாவிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் சொல்லியதைப் போல, 2 கோடி ரூபாய் சிவகாசிப் பகுதிக்கும், இரண்டு கோடி ரூபாய் திருப்பூர் பகுதிக்கும் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக ஒரு சின்னக் குழந்தை பாடிய கவிதை; நேருவினுடைய பிறந்த நாளைப் பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும்; குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம். அந்தக் குழந்தையும் ஒரு குழந்தைத் தொழிலாளிதான். அந்தக் குழந்தைப் பாடியது. நீங்கள் குழந்தை தினம் கொண்டாடுகிறீர்கள், ஆனால் குழந்தையைக் கொண்டாடவில்லையே என்று வருத்தமாகப் பாடியது; வேதனையாகப் பாடியது. ஆக குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. அரசாங்கம் இதிலே முழு முயற்சி எடுத்து வருகிறது. எல்லோரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

அடுத்து இங்கே ஒன்றைச் சொல்லி என் பேச்சை நான் நிறைவு செய்ய விரும்புகிறேன். குறிப்பாக இங்கே பேசிய அத்தனை பேரும்



2000 ஏப்ரல் 19] [திரு. அ. இரகுமான்கான்]

(Closed mills) மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி இங்கே பேசினார்கள். நான் அவர்களுக்கு ஒரு தகவலை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அண்மையில் கிடைத்த தகவல். குஜராத் மாநிலத்திலே 53 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சபையின் தகவலுக்காகக் கொடுக்கிறேன். ஏறக்குறைய 86,651 தொழிலாளாகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மேற்கு வங்கத்தை நம்முடைய ஹேமச்சந்திரன், மணி போன்றவர்கள் முன்னுதாரணம் காட்டுவார்கள். இன்றைக்கு மேற்கு வங்கத்திலே மட்டும் B.I.F.R-க்கு அனுப்பப்பட்ட நிறுவனங்கள் 227. ஜோதிபாசு அவர்கள் இது தாங்காது, இதனுடைய காலதாமதத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாது. வேறு வழியில்லை. They are simply giving licence to sick mills. They have taken much inordinate time. என்று சொல்லி ஒரு Special Court கேட்டிருக்கிறார்கள். எனவே இது ஏதோ தமிழகத்திலே மட்டும்தான் ஏற்பட்டது போன்ற ஓர் அரசியல் உள்நோக்கத்தோடு இங்கே விமர்சனம் செய்வது முறையாகாது. நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, இங்கே விளக்கியதைப்போல, ஒரு தொழிற்சாலை அல்லது ஆலையை முடுவதற்கு பல காரணங்கள் உள்ளன.

அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினை வந்தபோது, அந்த முதலாளிகளையும், Union representatives அழைத்து வைத்து முதல்வரே பேசினார். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய ஆற்காடு வீராசாமி அவர்களும் அதிலே கலந்து கொண்டு பேசினார்கள். அப்படிப் பேசுகிறபோது Electricity; அதுபோலவே Sales tax, இந்த இரண்டு தான் மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை; மற்றபடி Export of Cotton-ஆக இருந்தாலும் Reserve Bank Policy-ஆக இருந்தாலும் பல்வேறு பிரச்சினைகள். மத்திய அரசினுடைய பிரச்சினைகள், மொத்தத்திலே இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் கலைஞர் அவர்கள் Technological Upgradation Fund-லே இதைச் சேர்க்க வேண்டும். என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் ரானாவுக்கு எழுதினார்கள்; பிரதமருக்கு எழுதினார்கள். நல்ல வேளையாக இப்போது சேர்த்துக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆக இவற்றை நான் ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால் நான் சொன்னதைப்போல, நாங்கள் எந்த மில்லையும் மூடுவதற்கு அனுமதிப்பதில்லை. தொழிலாளர் பிரச்சினையில்....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது ஏதோ சில ஆலைகளை மூடுவதற்கு அரசாங்கம் பொறுப்பல்ல என்று கூறுகிறார்கள்.

4 கூட்டுறவு நூற்பாலைகள், தமிழகத்திலே மூடிக் கிடக்கின்றனவே, அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்காமல், யார் பொறுப்பேற்பார்கள் என்பதை அவர்கள் இங்கே விளக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையானாலும், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. நான் சொல்வது நோயின் தன்மையைப் பற்றி; டாக்டரைப் பற்றி அல்ல.

அடுத்து இங்கே அறிவிப்புகளுக்கு வரலாம் என்று கருதுகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நூற்பாலைகள் மூடப்பட்டிருப்பதற்கு யார் பொறுப்பு என்றார்கள். 300 தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடத்தில் 750 பேரை வேலைக்கு நியமன செய்தார்களே அவர்கள்தான் பொறுப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I am not allowing any discussion. மாண்புமிகு அமைச்சர் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் இங்கே வந்து ஒழுங்காக நடத்தப் போகிறீர்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** சில அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். தொழிலாளர் நலத் துறை; 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தவறு இழைப்போர் மீது நடவடிக்கை எடுத்து வழக்குத் தொடுத்து அது முடிவுக்கு வருவதற்கு பல காலம் ஆவதுடன் அதில் பல இடையூறுகளும் இருந்தன. அத்தவறுகளை உடனுக்குடன் திருத்தி இணக்க முறையில் (compounding offence) அபராதம் வசூலிக்கும் குற்ற இசைவுத் தீர்வு முறை கடந்த ஆண்டின் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டு அம்முறை தற்போது சிறப்பாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறை சிறப்பாக நடைபெற்று வருவதைக் கருத்திலேகொண்டு, 1958 ஆம் வருடம் தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழும் 1958 ஆம் வருடம் தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் தேசிய பண்டிகைகள் மற்றும் விடுமுறை நாட்கள் சட்டத்தின் கீழும் அதேபோன்று குற்ற இசைவுத் தீர்வு முறையைக் கொண்டு வர மேற்படி சட்டங்களுக்கு உரிய திருத்தங்கள் கொண்டு வரப்படும்.



அடுத்தது கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களின் மகனோ அல்லது மகளோ 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூ.750; 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. கட்டுமானத் தொழிலாளர் குழந்தைகள் மேலும் கல்வி கற்பதை ஊக்குவிக்கும்பொருட்டு இனி இந்த உதவித் தொகை ரூ.750-க்குப் பதிலாக ரூ.1000 ஆகவும் ரூபாய் ஆயிரத்திற்குப் பதிலாக ரூ.1500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சலுகை இந்தக் கல்வியாண்டிலேயே, 1999-2000-லிருந்து அமலுக்கு வரும்.

பிற்பகல் 1-40

அடுத்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் மகன் அல்லது மகள் திருமணத்திற்குத் தற்போது ரூபாய் 1000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அது இனி ரூபாய் 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டுமானத் தொழிலாளர்களின் மகன் அல்லது மகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை இனி புதிதாகத் திருமணம் செய்துகொள்ளும் பதிவுபெற்ற ஆண், பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் சேர்த்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து கட்டுமானத் தொழிலாளர்களின் பிள்ளைகள், கலை மற்றும் விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டப் படிப்பு படித்தால் ரூபாய் 1500 என்றும் அதே படிப்பை விடுதியில் தங்கிப் படித்தால் ரூ. 1750 என்றும் வழங்கப்படும். மேலும் இவற்றில் பட்ட மேற்படிப்புப் படித்தால், முறையே ரூபாய் இரண்டாயிரமும் ரூபாய் மூன்றாயிரமும் வழங்கப்படும். சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை பராமரிப்பு, விஞ்ஞானம் மற்றும் அவை தொடர்புடைய தொழிற் கல்வி பயிலும் கட்டுமானத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூபாய் இரண்டாயிரம் உதவித் தொகையும் இதே படிப்பை விடுதியில் தங்கிப் படித்தால் ரூபாய் நான்காயிரம் உதவித் தொகையும் வழங்கப்படும்.

இந்தத் தொழிற் கல்வியில் மேற்படிப்பு படித்தால் முறையே நான்காயிரமும் மற்றும் ஆறாயிரமும் வழங்கப்படும். தொழில் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகள் Industrial and Technical Courses படிக்கும் கட்டடத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ரூபாய் ஆயிரம் உதவித்

[திரு. அ. இரகுமான்கான்] [2000 ஏப்ரல் 19

தொகையும், இதே கல்வியை விடுதியில் தங்கிப் படித்தால் ரூபாய் 1,200 உதவித் தொகையும் வழங்கப்படும். தாய் தந்தையரை இழந்த ஏழையெளிய மாணவர்களுக்கு, மாணவியர்களுக்கு, அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கையின்போது தேவையான கல்வித் தகுதி பெற்றிருக்கும் பட்சத்தில் சேர்க்கையில் முன்னுரிமை தரப்படும்.

அதேபோன்று உயர்நிலைப் பள்ளிகளில் மாநில அளவில் விளையாட்டில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்ற சிறந்த மாணவ மாணவியருக்கு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கையின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பகங்களில் வேலைவாய்ப்புத் தொடர்பான தகவல்கள் இணைய தளத்தில் பதிவு செய்து அனைவரும் தகவல்கள் பெற வழி செய்து தரப்படும். அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் பெற்றுவந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு பயிற்சி பெறும் அனைத்துப் பயிற்சியாளர்களிலும் ஐந்தில் ஒரு பகுதியினருக்கு அவர்களின் பெற்றோர்களின் வருமானத்தின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. கடந்த 37 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட இந்த உதவித் தொகை மிகவும் குறைவாக இருந்தது. அவ்வுதவித் தொகையை இந்த அரசு உயர்த்தி நிர்ணயித்து, அவ்வாறு புதிதாக நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகை தற்போது வழங்கப்பெற்று வருகிறது.

அடுத்து —அதையொட்டி— பர்மா மற்றும் இலங்கை அகதி பயிற்சியாளர்கள் தற்போது மாதம் ரூ.82.50 பைசா பெற்று வருகிறார்கள். அதேபோன்று சீர் மரபினர் பயிற்சியாளர்கள் மாதம் ரூபாய் 45 பெற்று வருகிறார்கள். இனி பர்மா மற்றும் இலங்கை அகதி பயிற்சியாளர்களுக்கு மாதம் 175 ரூபாயும், சீர் மரபினர் பயிற்சியாளர்களுக்கு 140 ரூபாயும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் அன்போடு திரும்பப்பெற்று இந்த மானியக் கோரிக்கையில் கேட்கப் பெற்றிருக்கக்கூடிய தொகையினைப் பெறுவதற்கு அனுமதி வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் பேசும்போது, அவர்கள் நீலகிரி மாவட்டத்திலே வீரம்பாடி E.S.I. மருத்துவமனைக்கு டாக்டர் என்ற முறையிலே சென்றதாகவும், அங்கே யாருமே பணியாற்றவில்லை என்றும் சொன்னார்கள். உடனடியாக Director of E.S.I.-ஐத் தொடர்புகொண்டு கேட்டபோது, இரண்டு மருத்துவர்கள், ஒரு நர்ஸ், ஒரு A.N.M., ஒரு Clerk ஆகியோர் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அதாவது டாக்டர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; நர்ஸும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்; A.N.M. பணியாற்றிக் கொண்டிருக்கிறார்; Clerk பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஒருசமயம், மாண்புமிகு உறுப்பினர் சென்றபோது, இல்லையோ என்னவோ, ஆனால் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 28.**

**தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண்.28, தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம் இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன். இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

பிற்பகல் 1-45

"தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய 28ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.132,46,54,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2000 ஏப்ரல் 19

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

*140.* தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1998-99) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

*141.* தமிழ்நாடு அரசின் 1998-99ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள் (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

*142.* தமிழ்நாடு அரசின் 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*96.* மானியக் கோரிக்கை எண் 28 - தொழிலாளர், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ் ஆங்கிலம்)

*97.* தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்ட செயலாக்கம், 2000-2001. (தமிழ் ஆங்கிலம்).

*98.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து எட்டாவது அறிக்கை. (1999-2000)

*99.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (1999-2000)

*100.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பதாவது அறிக்கை. (1999-2000)

*101.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (1999-2000)

*102.* பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (1999-2000)



2000 ஏப்ரல் 19]

(286 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 28—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## (2000-2001)

**முன்னுரை**

தொழில், பொருளாதார முன்னேற்றம் மற்றும் தொழில் அமைதி ஆகிய மூன்றும் ஒன்றையொன்று சார்ந்ததாகும். தொழில் முன்னேற்றம் இல்லையெனில், நமது நாடு பிற நாடுகளுடன் கூடிய பொருளாதாரப் பந்தயத்தில், பின்னே தள்ளப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும். தொழில் அமைதியை உறுதி செய்யும் அதே நேரத்தில், தொழில் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதும், தொழிலாளர்-நிர்வாகம் உறவு, தொழிலாளர் பணி நிலைமை மற்றும் வாழ்க்கைத் தரம், சமூகப் பாதுகாப்பு, மனித உரிமைகள், தொழிலாளர் நலச் சட்டங்களின் தீவிர அமலாக்கம் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவை உள்ளிட்ட ஒன்றுக்கொன்று ஒப்புமையுடைய பல தரப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதே இந்த அரசின் தொழிலாளர் கொள்கையாகும். மேற்கண்ட ஒவ்வொன்றும், வெவ்வேறாக தோற்றமளித்தாலும், தொழில் உறவுகளை மேம்படுத்துவதில் அனைத்தும் ஒன்று சேர்ந்து வலுவூட்டுவதாக அமைந்துள்ளன. அரசின் இவ்வகையான தொழிலாளர் கொள்கையின் மூலம் மாநிலத்தில் சிறந்த தொழில் அமைதி பராமரிக்கப்படுவதோடு, வேகமான தொழில் முன்னேற்றமும், சிறப்பான தொழிலாளர் நலனும் பாதுகாக்கப்படுகிறது. இந்த அரசின் தொழிலாளர் கொள்கை என்னும் நோக்கில் இதுவரை சரிவர கவனிக்கப்படாமல் இருந்த அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்கள் மீது இந்த அரசு கவனம் செலுத்த விரும்புகிறது. இந்த அரசு, அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக திட்டங்களை உருவாக்கியிருப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலை மேம்படும். அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான இந்த திட்டங்களை செயல்படுத்த ஒரு வாரியத்தை இவ்வரசு உருவாக்கியுள்ளது.

[2000 ஏப்ரல் 19

# அத்தியாயம்-1

## தொழில் உறவுகள்

1.1. ஆரோக்கியமான கட்டுப்பாடும், மேம்படுத்தப்பட்ட உழைப்பும் உடைய தொழிலாளர்களும், தொலைநோக்கும், முற்போக்கு சிந்தனையுடைய நிர்வாகங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுவதே சிறந்த தொழில் உறவிற்கு அடையாளமாகவும், மூலதனமாகவும் அமையும். தொழிலாளர் மற்றும் நிர்வாகத்திற்கிடையேயான நல்லுறவை பலப்படுத்துவதன் மூலம் தொழில் வளம் பெருகவும், தொழிலாளர் நலன் வளரவும், இத்துறை செயல்பட்டு வருகிறது. இந்த சமன்பாட்டு நிலை நிலவுவதை சீர்குலைக்கும் தொழிற் தகராறுகளை தீர்வு செய்வதில், தொழில் நுட்ப அறிவுடைய திறமையான பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அடிப்படை யுத்திகளைக் கையாண்டு, உரிய தருணத்தில் தலையிடுவதன் மூலமாகவும், தொழிலாளர் துறை அலுவலர்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றனர். தொழிலாளர் நல்லுறவை மேம்படுத்தும் வகையில், அரசு, திண்டுக்கல் மற்றும் குன்னூர் ஆகிய இடங்களில் பணிப் பெயர்ச்சி மூலம் இரண்டு தொழிலாளர் துணை ஆணையர் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் மற்றும் குன்னூரில் அவ்வலுவலகங்கள் முறையே 03-02-2000 மற்றும் 11-02-2000 ஆகிய தேதிகளிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளன. அரசு வேலூர் மாவட்டத்தில், தொழிலாளர் அலுவலர்-2, வேலூர் என்ற ஒரு புதிய தொழிலாளர் அலுவலர் பதவியினை பணியிடப் பெயர்ச்சி மூலம் ஏற்படுத்தியுள்ளது. தொழிலாளர் துறை அலுவலர்களின் திறமையான செயல்பாடுகளின் விளைவாக, வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளால் 1998-ல் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு 30.55 இலட்சத்திலிருந்து 26.54 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளின் மூலம் ஏற்பட்ட மனித நாட்கள் இழப்பு விவரம்:—

| வருடம் | வேலை நிறுத்தம் | கதவடைப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 1998 | 1718416 | 1337198 | 3055614 |
| 1999 | 1626966 | 1027175 | 2654141 |

1.2. இத்துறையின் சமரச அலுவலர்கள் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்பு தொடர்பான தொழிற் தகராறுகள் மட்டுமின்றி, வேலை



2000 ஏப்ரல் 19]

நேரங்களை மீறுதல், ஒழுங்கீனம் போன்ற இதர தொழிற் தகராறுகளையும், திறம்பட கையாண்டு தீர்வுகள் கண்டுள்ளனர். 1999-ம் ஆண்டில் எழுப்பப்பட்ட 11816 தொழிற் தகராறுகளில் 6910 தொழிற் தகராறுகள் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டன.

1.3. ஒவ்வொரு ஆண்டும், தீபாவளிப் பண்டிகை காலங்களில் போனஸ் பட்டுவாடா செய்வது குறித்து, எழுப்பப்படும் தொழிற் தகராறுகள் மாநிலம் தழுவிய அளவில், முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இத்தொழிற் தகராறுகள் மீது, உரிய காலத்தில் தீர்வுகள் காணப்படவில்லையெனில், மாநில அளவில், அதிக தொழிலாளர்கள் அதில் ஈடுபடக்கூடிய ஒரு பிரச்சினையாக மாறக் கூடும். எனவே, ஒவ்வொரு ஆண்டும், போனஸ் வழங்குவது குறித்து தொழிற் தகராறு எழுப்பப்படுவது முக்கியம் வாய்ந்ததாகும். உரிய காலத்தில் தொழிற் தாவா தீர்க்கப்படாவிட்டால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. தொழிலாளர் துறையைச் சேர்ந்த சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடனும், திறமையுடனும், தொழில் நுட்ப அறிவுடனும் இந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டதில் தொழில் அமைதி பாதுகாக்கப்பட்டது.

1.4. முக்கிய பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட கீழ்க்கண்ட வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்புகளில், இத்துறை சமரச அலவலர்கள் தலையிட்டதன் அடிப்படையில் பிரச்சினைகள் சுமூகமாகத் தீர்வு செய்யப்பட்டன;

### தீர்வு செய்யப்பட்ட முக்கிய வேலை நிறுத்தங்கள்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை, புரசைவாக்கம் ஹிந்து ஜனோபகார சாஸ்வத நிதி லிமிடெட், சென்னை-84 | 80 |
| 2 | டிரைடண்ட் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிட்டெட் | 280 |
| 3 | சண்முகராஜா ஸ்பின்னிங் மில்ஸ் லிமிட், சித்தோட் | 217 |
| 4 | காந்தகிரி ஸ்பின்னிங் மில்ஸ், யூனிட்-2 வாழப்பாடி, சேலம் | 400 |

[2000 ஏப்ரல் 19

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 5 | நாச்சியம்மை காட்டன் மில்ஸ் லிமிடெட், சேலம் | 170 |
| 6 | கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, கோயம்புத்தூர் | 554 |
| 7 | கன்னியாகுமரி வட்ட அனைத்து கைத்தறி நிறுவனங்கள், கன்னியாகுமரி மாவட்டம் | 2,000 |
| 8 | எஸ்.ஆர்.பி.மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 336 |
| 9 | மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை | 3,460 |
| 10 | கோட்ஸ் வியல்லா இந்தியா, மதுரை | 667 |
| 11 | ஜி.ஏ. பவர் கண்ட்ரோல் இந்தியா லிமிடெட், ஓசூர் | 258 |
| 12 | இந்துஸ்தான் மோட்டார் லிமிடெட், ஓசூர் | 161 |
| 13 | துல்யா அலாய் காஸ்ட்டிங்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் | 268 |
| 14 | அசோக் லேலண்ட் அண்டு யூனிட்-2, ஓசூர் | 509 |
| 15 | சிரியன் ஜிப் பேஷனர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிவகங்கை | 316 |
| 16 | சித்தார் இண்டஸ்ட்ரீஸ், திருச்சி | 574 |
| 17 | அரசு இரப்பர் கார்ப்பரேஷன், நாகர்கோவில் | 2,149 |
| 18 | மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட், மேட்டூர் அணை | 1,000 |



2000 ஏப்ரல் 19]

**தீர்வு செய்யப்பட்ட முக்கிய கதவடைப்புகள்**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்கள் |
|---|---|---|
| 1 | அத்வானி ஆர்லிகன் லிமிடெட், சென்னை | 73 |
| 2 | சாலிடெர் லிமிடெட், பெருங்குடி | 80 |
| 3 | ஹிர்ஷ்ச் வாட்ச் ஸ்ட்ராப்ஸ், ஓசூர் | 123 |
| 4 | ஸ்ரீவிசாலாட்சி மில்ஸ், ஏபிசி யூனிட், விலாங்குடி | 989 |
| 5 | மேக்னம் குளோத்திங், சென்னை | 359 |
| 6 | உமா மஹேஸ்வரி லிமிடெட், ஓசூர் | 675 |
| 7 | டெக்ஸ்டூல்ஸ் கம்பெனி லிமிடெட், கணபதி, கோயம்புத்தூர் | 1,100 |
| 8 | கிரீவ் லிமிடெட், இராணிப்பேட்டை | 345 |

**மூடிய ஆலைகளைத் திறத்தல்**

1.5 தொழிற்தகராறுகளுக்கு தீர்வு காணுவது மட்டுமின்றி மூடிய ஆலைகளைத் திறக்கும்பொருட்டு, கடின முயற்சிகளை இத்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். முத்தரப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஆலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்களைக் கண்டறிந்து ஆலைகளைத் திறப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் இது குறித்து நிர்வாகப் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு கூட்டம் நடத்தினார். 1999-ம் ஆண்டில் கீழ்க்கண்ட மூடிய ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன:

[2000 ஏப்ரல் 19

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொழிலாளர்களின் எண்ணிக்கை | மூடிய தேதி | திறக்கப் பட்ட தேதி |
|---|---|---|---|---|
| 1 | கொங்குரார் காட்டன் மில்ஸ், கோயம்புத்தூர் | 749 | 15-01-98 | 22-04-99 |
| 2 | சதர்ன் ஸ்விட்ச் கியர், சென்னை | 290 | 23-3-98 | 16-08-99 |
| 3 | முருகன் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், உடுமலைப்பேட்டை | 190 | 14-04-98 | 01-04-99 |
| 4 | கொங்குரார் காட்டன் அண்டு சிந்தெடிக்ஸ் லிமிடெட், உடுமலைப்பேட்டை | 197 | 25-05-98 | 17-03-99 |
| 5 | பவானி மில்ஸ், கோயம்புத்தூர் | 275 | 16-07-98 | 13-04-99 |
| 6 | லக்ஷ்மணா காட்டன் மில்ஸ், கோயம்புத்தூர் | 184 | 13-10-98 | 21-07-99 |
| 7 | பழனியாண்டவர் காட்டன் அண்டு சிந்தெடிக்ஸ் யூனிட்-2, பழனி | 318 | 14-12-98 | 26-04-99 |
| 8 | சீதா வெங்கடேஷ் மில்ஸ், புழல் | 210 | 23-06-98 | 01-08-99 |
| 9 | அழகப்பா ஸ்பின்னிங் மில்ஸ், இராஜபாளையம் | 700 | 14-07-98 | 01-07-99 |
| 10 | ருக்மிணி மில்ஸ், சிலைமான் | 189 | 19-02-98 | 16-10-99 |
| 11 | அமராவதி டையிங்ஸ், உடுமலைப்பேட்டை | 116 | 10-05-98 | 02-09-99 |
| 12 | அருண் ஸ்மெல்டர்ஸ், கும்மிடிப்பூண்டி | 27 | 24-10-98 | 03-08-99 |
| 13 | ஐயப்பன் டெக்ஸ்டைல்ஸ் | 500 | 06-09-99 | 15-03-2000 |



2000 ஏப்ரல் 19]

1.6 தமிழ்நாட்டில் தொழிற்தகராறு காரணமாக மூடப்பட்டு/நீண்டகாலமாக இயங்காமல் உள்ள நிறுவனங்கள் ஏதும் இல்லை. பெரும்பாலும், தொழிலில் ஏற்பட்டுள்ள மந்தநிலை, வெளிநாடுகளிலிருந்து ஏற்பட்டுள்ள போட்டி, போதிய ஆர்டர்கள் கிடைக்காதது போன்ற காரணங்களினால் ஏற்பட்ட நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்கு இடையே ஏற்படும் உட்பூசல் வழக்குகள் ஆகிய காரணங்களினால் இந்நிறுவனங்கள் இயங்காமல் உள்ளன. தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 25-ஓ-ன் கீழ் எந்த ஒரு நிறுவனத்தையும் மூடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

**நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கான நிவாரணம்**

1.7 நீண்ட காலமாக மூடியிருக்கும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை தருவது குறித்தான திட்டத்தினை 1999-ம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதுவரை, 79 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பயன்பெற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 6,166 தொழிலாளர்களுக்கு இந்த நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. ரூ.88,76,500 இதுவரை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்ட கருணைத் தொகை**

1.8 தீபாவளிப் பண்டிகை காலங்களில் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சினை சட்ட ஒழுங்கை பாதிக்கின்ற பெரிய பிரச்சினையாக உருவெடுக்கும் தருணங்களில் தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிக்க கவனத்துடனும், திறமையாகவும், தொழில் நுட்ப அறிவுடனும் செயல்பட்டு பேச்சுவார்த்தை மேற்கொண்டு, இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தொழில் அமைதியை காத்து வருகின்றனர். 1999-ம் ஆண்டு இதுபோன்ற பிரச்சினைகள் அதிக அளவில் தீர்க்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக மூடிக்கிடக்கும் 35 தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த 14051 தொழிலாளிகளுக்கு 1999-ம் ஆண்டு தீபாவளிப் பண்டிகை சமயத்தில் ரூ. 7025500-ம் அளிக்கப்பட்டது. இத்தொகை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டது.

### தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்

1.9 நலமார்ந்த தொழில் உறவை மேம்படுத்தும் முகத்தான், தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் சிறந்து விளங்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கும் வகையில், தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை அரசு உருவாக்கி செயலாற்றி வருகிறது. பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முறையே நான்கு பேர் கொண்ட ஒரு முத்தரப்பு உயர் மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இத்திட்டம், 1978-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற பரிசளிப்பு விழா கோவையில் 29-07-1998-ல் நடைபெற்றது. இவ்வருடம் சென்னையில் நடைபெற உள்ளது. ஒவ்வொரு வருடமும் நிர்வாகத்திற்கு 8 பரிசுகளும், தொழிற்சங்கங்களுக்கு 8 பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### அறிவிப்புகள் மீதான அமுலாக்கம்

1.10 கடந்த பட்ஜெட் தொடரின்போது, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அளித்த அறிவிப்பினைத் தொடர்ந்து, குன்னூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, இரு தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களும், தேனி, பந்தலூர் மற்றும் கோத்தகிரி ஆகிய இடங்களில் மூன்று தோட்ட நிறுவன ஆய்வாளர் அலுவலங்களும் புதியதாக உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்கக் கட்டண முறை 10-08-1999 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டுவது தொடர்பாக நிலம் ஆர்ஜிதப்படுத்துதல்

1.11 நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களின் நீண்ட நாள் கோரிக்கையின்படி, மதுரையில் அனைத்துத் தொழிலாளர் துறையின் அலுவலகங்களுக்கும், ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டுவதற்குத் தேவையான இடம் மதுரை நகரின் மத்தியில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நீதிமன்றம்

1.12 இம்மாநிலத்தில், 10 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழில் தீர்ப்பாயமும் இயங்கி வருகின்றன. தொழில் தீர்ப்பாயத்தின் தலைமையிடம் சென்னை ஆகும். தொழிலாளர்கள் சட்டபூர்வமான பலன்களை விரைவில் அடைய இவை உதவுகின்றன. இவற்றின் ஆட்சி எல்லை கீழ்க்கண்டவாறு உள்ளது:-



| வ. எண். | தொழிலாளர் நீதிமன்றங்கள். | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்). |
|---|---|---|
| 1 | முதன்மை தொழிலார் நீதிமன்றம், சென்னை. | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர். |
| 2 | முதல் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | |
| 3 | இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை. | |
| 4 | தொழிலாளர் நீதிமன்றம், வேலூர். | வேலூர் மற்றும் திருவண்ணாமலை. |
| 5 | தொழிலாளர் நீதிமன்றம், சேலம். | சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் நாமக்கல். |
| 6 | தொழிலாளர் நீதிமன்றம், கோவை. | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி. |
| 7 | தொழிலாலர் நீதிமன்றம், கடலூர். | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர். |
| 8 | தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி. | திருச்சி, கரூர், பெரம்பலூர், திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை |
| 9 | தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி. |
| 10 | தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி. |

[2000 ஏப்ரல் 19

## அத்தியாயம்-2

### அமலாக்கம்

2.1 தொழிலாளர் துறை சமரச முயற்சிகள் மூலம், தொழிற்தகராறுகளைத் தீர்ப்பதோடு மட்டுமின்றி 29 தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்யும் பணியினையும், தொழிலாளர் சட்டங்களின்கீழ் நீதிமுறை சார்புடைய பணிகளையும் செய்து வருகின்றது. 1999-லிருந்து தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்ட விதிகளின்கீழான குற்றங்களை இசைந்து தீர்க்கும் வகையில், இணக்கக் கட்டண முறை செயல்படுத்தப்பட்டதையடுத்து, சட்ட அமலாக்கம் தீவிரமாக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமல்) சட்டம், 1985 அமலாக்கம் மூலம் நுகர்வோர் தான் கொடுக்கும் விலைக்குரிய பொருளை வாங்க வகை செய்யப்படுகிறது. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழான அனைத்துப் பலன்களும் தொழிலாளர்களைச் சென்றடையச் செய்வதே தொழிலளர் நலச் சட்டங்களின் அமலாக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

2.2 கீழ்க்காணும் முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் துறையினரால் அமலாக்கம் செய்யப்படுகின்றன:

#### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

2.3 இச்சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். இச்சட்டம், கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை தொடங்கும் நேரம் மற்றும் முடியும் நேரங்களைக் கண்காணிக்க வழிவகை செய்கின்றது. இச்சட்டத்தின் மூலம், அனைத்து கடைகள் மற்றும் நிறுவனங்கள் வாரத்தில் ஒரு நாள் மூடப்பட வேண்டும். அதாவது, பணியாளர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்க வகை செய்கிறது. இச்சட்டத்தின்கீழ் காணப்படும் முரண்பாடுகளை இணக்க முறையில் தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடைகள் மற்றும் நிறுவனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் வைப்பதை வலியுறுத்துவதன் மூலம், இச்சட்டம் தமிழின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பெயர்ப்பலகைகள் தமிழில் பெரிய அளவில் எழுதப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம், தமிழிற்கு பெருமை சேர்க்கின்றது. மேலும், இச்சட்டத்தின்கீழ் விரைவில், நிவாரணம்



2000 ஏப்ரல் 19]

கிடைக்கவும் வேலையளிப்போர் இச்சட்ட செயலாக்கம் குறித்து, அவர்தம் கடமைகளை உணரவும், அரசு இச்சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வாளர்களுக்கு, அவர்களது ஆய்வின்போது, காணப்படும் முரண்பாடுகளுக்கு இணக்க முறையில் தீர்வு காண உரிய அதிகாரங்கள் வழங்கி உள்ளது. மேலும் இச்சட்ட அமலாக்கத்திற்காக இத்துறையில் 218 தொழிலாலர் உதவி ஆய்வாளர்களும், அதனை மேலாய்வு செய்திட 68 தொழிலாளர் துணை ஆய்வர்களும் மற்றும் 28 தொழிலாளர் ஆய்வர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

#### தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

2.4 இச்சட்டம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பினை முறைப்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும். இச்சட்டம் மூலம், உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் விடுமுறை தினங்கள், பணி நேரங்கள், விடுப்பு மற்றும் சம்பளம், மிகை நேர ஊதியம் போன்ற பயன்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்த தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் தொழிலாளர் ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

#### மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961

2.5 ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் அனைத்தும், இச்சட்டத்தின்கீழ் பதிவு சான்று பெறவேண்டும். இப்பதிவு ஒவ்வோர் ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். இச்சட்டம் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலைத் தன்மையை முறைப்படுத்துகிறது. 5 தொழிலாளர்களுக்குக் கீழ் பணிபுரியும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும் வகையில், மைய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தின் தொழிலாளர் துணை ஆணையர் (குறைந்தபட்ச ஊதியம்) அவர்கள், இச்சட்டத்தின் கீழ், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வராக நியமிக்கப்பட்டுள்ளார். இச்சட்டம், தொழிலாளர் ஆய்வர் மற்றும் தொழிலாளர் துறை ஆய்வர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

[2000 ஏப்ரல் 19

**உழைக்கும் பத்திரிகையாளர் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனை மற்றும் இதரப் பிரிவுகள்) சட்டம், 1955**

2.6 இச்சட்டம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்த ஏற்பட்டதாகும். இச்சட்டப் பிரிவை தொழிலாளர் ஆய்வர்களும், சென்னை, தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள மக்கள் தொடர்பு அலுவலரும் அமலாக்கம் செய்கின்றனர்.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

2.7 தோட்டத் தொழில் பழமையான தொழில்களில் ஒன்று. நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறையிலும், சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலையிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் மற்றும் தேனி மாவட்டத்திலும் தேயிலை, காப்பி, இரப்பர் மற்றும் ஏலக்காய் ஆகிய தோட்டப் பயிர்கள் பயிரிடும் தோட்ட நிறுவனங்கள் உள்ளன.

2.8 தமிழ்நாட்டில் தோட்ட நிறுவனம் உள்ள மொத்த பரப்பளவு 53,704 ஹெக்டேர் ஆகும். இதில் நேரிடையாகப் பணிபுரியும் மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,08,496 ஆகும். (45,840 ஆண்கள் மற்றும் 62,656 பெண்கள்). மலைத்தோட்ட பயிர்களில் தேயிலை முதலிடத்தையும், காப்பி அடுத்த இடத்தையும் வகிக்கிறது.

**சட்டம் மற்றும் விதிகள்**

2.9 தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், வேலையின் தரத்தை முறைப்படுத்துவதிலும் அங்கம் வகிக்கிறது. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலும், காபி, இரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்கள் அதில் 15 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால், அவற்றிற்கு இச்சட்டம் பொருந்தும்.

2.10 ஐந்து ஹெக்டேர் மற்றும் 15 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள தோட்ட நிறுவனங்களில் தொழிலாளர் நலனைப் பாதுகாக்க வேண்டி, அரசாணை மூலம் மேற்படி சட்டத்தை அது போன்ற தோட்ட நிறுவனத்திற்கு பொருந்தும் வகையில், அறிவிக்கை செய்ய அரசிற்கு அதிகாரம் உள்ளது.



2000 ஏப்ரல் 19]

**தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்தல்**

2.11 இச்சட்டம் தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் 7 தோட்ட நிறுவன ஆய்வர்களாலும், 2 உதவி மருத்துவ (தோட்டங்கள்) அலுவலர்களாலும், அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளில் உள்ள மருத்துவ ஷரத்துக்களை உதவி மருத்துவ அலுவலர்கள் (தோட்ட நிறுவனங்கள்) அமலாக்கம் செய்கின்றனர். சென்னை, தலைமை தோட்ட நிறுவன ஆய்வரின் கீழ் இந்த அமலாக்க அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள். தோட்ட நிறுவனங்களில் தோட்டத் தொழிலாளர் சட்ட விதி அமலாக்கத்தை தலைமைத் தோட்ட நிறுவன ஆய்வர் மேற்பார்வை செய்வதுடன் அவர் அடிக்கடி திடீர் தணிக்கைகள் மேற்கொண்டு இச்சட்ட விதிகள் சரிவர அமல் செய்யப்படுவதை உறுதி செய்து வருகிறார்.

2.12 தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளின் அமலாக்கத்தினை தீவிரப்படுத்தும் பொருட்டு, தோட்ட நிறுவனங்கள் அடிக்கடி ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், தற்போதுள்ள தோட்ட நிறுவன ஆய்வர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்ததன் அடிப்படையில், தமிழக அரசு மேற்படி கருத்தினை ஏற்றுக்கொண்டு, தேனி, கோத்தகிரி மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, மூன்று புதிய தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் ஏற்படுத்தி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்புதிய அலுவலகங்கள் 06-12-1999 முதல் செயல்பட்டு வருகின்றன. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மூன்று தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்களையும் சேர்த்து பத்து தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் குன்னூர், உதகை, கூடலூர், ஏற்காடு, வால்பாறை, வத்தலகுண்டு, நாகர்கோவில், தேனி, கோத்தகிரி மற்றும் பந்தலூர் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டும், உதகை மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டும் உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. தலைமைத் தோட்ட நிறுவன ஆய்வரின் கீழ் இந்த அமலாக்க அதிகாரிகள் பணியாற்றி வருகிறார்கள்.

2.13 பதிவு செய்யப்பட்ட தோட்ட நிறுவனங்களில் தோட்ட நிறுவன ஆய்வர்களால், கீழ்க்காணும் இதர தொழிலாளர் சட்டங்களும் அமல்படுத்தப்படுகின்றன.

1. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948
2. சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

[2000 ஏப்ரல் 19

3. மகப்பேறு நலச் சட்டம், 1961

4. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய மற்றும் பண்டிகை விடுமுறை) சட்டம், 1958

5. தமிழ்நாடு பிழைப்பூதியப் பட்டுவாடாச் சட்டம், 1981

6. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981

7. சம ஊதியச் சட்டம், 1976

8. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

9. போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1965

18. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972.

2.14 பதிவுபெறாத தோட்ட நிறுவனங்களுக்கும் கீழ்க்கண்ட இரு சட்டங்கள் பொருந்தும்:

1) குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948

2) தமிழ்நாடு தேசிய பண்டிகை விடுமுறைச் சட்டம், 1958.

### தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நல வசதிகள் வழங்குதல்

2.15 தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக, இலவச மருத்துவ வசதி, கம்பளி வசதி, குடிநீர் வசதி ஆகியவைகளுக்கு இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.

### வீட்டு வசதி

2.16 இச்சட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினர் வீடு கட்டித்தர வழிவகை உள்ளது. இத்தொழிலாளர்களுக்கு வாடகையின்றி, வாழ்க்கை நடத்த ஏதுவாக நல்ல நிலையில் வீடுகள் நிர்வாகத்தினரால் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும், ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகள் நிர்வாகத்தினரால், சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இத்தகைய வீடுகளின் தரம் குறித்து, அரசு விரிவான ஆணை வெளியிட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டப்படும் வீட்டின் அளவு 287 சதுர அடியாக இருக்க வேண்டும்.



2000 ஏப்ரல் 19]

தமிழ்நாட்டில் மொத்தம் 43,694 வீடுகள் தோட்டத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வழங்குதலில் மொத்தமுள்ள தோட்டத் தொழிலாளர்களில் 98 சதவீதம் தொழிலாளர்கள் வீட்டு வசதிபெற்று தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழ்கிறது.

### தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம்

2.17 வீட்டு வசதி தொடர்பாக பேசி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசுச் செயலர் அவர்களை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு நிர்வாகப் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய முத்தரப்பு குழுவாகும். இக்குழு 15-9-98 அன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டம் கடைசியாக 26-02-2000 அன்று குன்னூரில் நடைபெற்றது.

### மருத்துவ வசதி

2.18 தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினர் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு, தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளின்படி, இலவச மருத்துவ வசதிகள் செய்துத் தரவேண்டும். இம் மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதற்கு, தலைமைத் தோட்ட நிறுவன ஆய்வர் வழிவகை செய்ய வேண்டும். இதைச் செய்யாத நிர்வாகத்திடமிருந்து அதற்கான செலவை திரும்பப் பெறவும், அவர் வழிவகைச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் தற்போது 136 மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும் மற்றும் 4 தொகுப்பு மருத்துவமனைகளும் உள்ளன. மருத்துவமனை வசதிகள் இல்லாத தோட்ட நிறுவனங்களில், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அருகிலுள்ள அரசால் நடத்தப்படும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் பொழுது, அதற்கான செலவுத் தொகையை நிர்வாகத்திடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்கின்றனர். தோட்ட நிறுவனங்களில் உள்ள மருத்துவமனைகளில் வைத்துக்கொள்ளப்பட வேண்டிய மருந்துகள் விவரம் குறித்து அரசாணைகள் பிறப்பித்துள்ளது. உதவி மருத்துவர் (தோட்டங்கள்) அவர்களுக்கு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் உள்ளது.

**மருத்துவப்படி**

2.19 உடல்நிலை சரியில்லாத தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகத்தினரிடமிருந்து உடல் நிலை சரியில்லா நாட்களுக்கு சான்றிதழ் பெற்று, மருத்துவப்படி பெறத் தகுதியுடையவராகின்றனர். இம் மருத்துவப்படி அவர்களது தினக்கூலியில் 2/3 பகுதி பெறக்கூடியதாகும். இது ஆண்டிற்கு 14 தினங்களுக்கு மட்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

**மகப்பேறு வசதி**

2.20 தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் மகப்பேறு சலுகைகள் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். ஒவ்வொரு பெண் தொழிலாளியும் பிரசவிக்கும் தேதியின் முன்பிருந்து 80 நாட்கள் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால், 84 நாட்கள் சம்பளத்துடன் பேறுகால விடுப்பிற்கு (12 வாரம்) தகுதியுடையவராகிறார்.

**குழந்தைகள் காப்பகம்**

2.21 தோட்ட நிறுவனங்களில் 50 பெண் தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தாலும் அல்லது அப்பெண் தொழிலாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை 20-ம் அதற்கு மேலும் இருந்தாலும், குழந்தைகளின் பராமரிப்பு குறித்து, குழந்தைகள் நலம் பேணுவதில் பயிற்சிபெற்ற பெண் ஒருவருடன் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும். குழந்தைகள் காப்பகம் சுத்தமாக வைத்திருப்பதோடு, குழந்தைகள் விளையாட மைதானமும், விளையாடும் பொருட்களும் குழந்தைகள் உபயோகத்திற்காக வைத்திருக்க வேண்டும். குழந்தைகளுக்கு சுத்தமான பால் வழங்க வேண்டும் மற்றும் முறையான இடைவெளியில் குழந்தைகளுக்கு பால் புகட்ட தாய்மார்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களால் 335 குழந்தைகள் காப்பகங்கள் பயிற்சிபெற்ற பெண்களைக் கொண்டு, நடத்தப்பட்டு வருகின்றன.

**மின்சார வசதி**

2.22 தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மின்வசதி செய்து கொடுக்க வேண்டியது நிர்வாகத்தினரின் பொறுப்பாகும். தற்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கான 43,694 வீடுகளில் 41,055 வீடுகளுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு



மின் வசதி அளிப்பதில் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க மாவட்ட ஆட்சியரின்கீழ் நிர்வாகத் தரப்பினர், தொழிலாளர் தரப்பினர் மற்றும் அலுவலர்கள் அடங்கிய கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

**தோட்டத் தொழிலாளர் குழந்தைகளுக்கான கல்வி வசதி**

2.23 ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும், 6 வயதிற்கும், 12 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகள் 25-ம் அதற்கு மேலும் இருந்தால், அவர்களுக்கு நிர்வாகம் கல்வி வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். ஆயினும், தோட்ட நிறுவனங்களிலிருந்து 1.6 கிலோ மீட்டர் தொலைவு சுற்று வட்டாரத்திற்குள் அரசு கல்வி நிறுவனம் இருந்தால், நிர்வாகம் தனியாக கல்வி வசதி செய்ய வேண்டிய அவசியமில்லை. தோட்ட நிறுவனங்கள் மொத்தம் 109 பள்ளிக் கூடங்களை பராமரித்து வருகின்றன.

**குளிர்காலப் பாதுகாப்பு**

2.24 தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒரு காட்டுக் கம்பளியும், இரண்டு வருடங்களுக்கு ஒரு போர்வைக் கம்பளியும், குளிரிலிருந்து தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்க தோட்ட நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கம்பளிகளின் தரத்தினை நிர்ணயிக்க சம்பந்தப்பட்ட மண்டல தொழிலாளர் துணை ஆணையர்களுக்கு அதிகாரம் உள்ளது.

**உணவகம்**

2.25 தோட்ட நிறுவனங்களில் 150 தோட்டத் தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால், உணவகம் ஒன்று (கேண்டீன்) அமைக்கப்பட வேண்டும். அவ்வுணவகத்தில், காபி, டீ ஆகியவைகள் இலாப நஷ்டம் இல்லாமல் வழங்க வேண்டும். மொத்தம் 104 உணவகங்கள் தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் உள்ளன.

**குடிநீர் வழங்கல்**

2.26 தோட்டத் தொழிலாளிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது தோட்ட நிர்வாகத்தினரின் தலையாயக் கடமையாகும். இக்குடிநீர் சுகாதாரத் துறையின் சுகாதார அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

## தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு

2.27 தொழிலாளர் ஆணையர் தலைமையில் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இம்முத்தரப்புக் குழு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின் அமலாக்கத்தில் உள்ள இதர பிரச்சினைகளை பரிசீலிக்கும். இக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்ட கோரிக்கைகளை பரிசீலிக்க துணைக் குழுக்கள் அமைப்பதற்கும் வழிவகை உண்டு. மேற்படி குழு சென்னையில், 22-04-1999 மற்றும் 01-12-1999 அன்று கூடியது.

## மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் இதர சட்டங்களை அமல்படுத்த மேற்கொள்ளப்பட்ட சீராய்வு முயற்சிகள்

2.28 மலைத் தோட்டத் தொழிலில் தற்போது நிலவி வரும் தொழில் உறவுகள் சூழ்நிலையினை கருத்தில் கொண்டு, தோட்டத் தொழிலாளர் சட்ட விதிகளின் அமலாக்கம் தீவிரப்படுத்தப்பட்டது. வால்பாறை, மாஞ்சோலை, நாகர்கோவில் மற்றும் நீலகிரி மலைப்பகுதிகளில் உள்ள தோட்ட நிறுவனங்களில் தொழிலாளர் ஆணையர் மற்றும் மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வர் ஆகியோர் திடீராய்வு மேற்கொண்டனர். திடீராய்வுகளின்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு சட்ட விதிகளின்படி, அளிக்கப்பட வேண்டிய சலுகைகள் அவர்களுக்குச் சென்றடைவது குறித்தும், மேற்படி சலுகைகள் தொழிலாளர்களுக்குச் சென்றடைய தோட்ட நிறுவன ஆய்வர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு, சட்ட விதிகளின்படி, வழங்கப்பட வேண்டிய சலுகைகள் எந்தவித விடுபாடுகளுமின்றி, வழங்கப்பட வேண்டும் எனத் தொழிலாளர் ஆணையர் மற்றும் மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வர் ஆகியோர் தமிழ்நாடு தோட்ட உரிமையாளர்கள் சங்கம் உட்பட அனைத்து மலைத் தோட்டங்களின் உரிமையாளர் சங்கங்களுக்கும், நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் அறிவுரைகள் வழங்கியுள்ளனர்.

2.29. சட்ட விதிகளின் அமலாக்கம் தீவிரப்படுத்தப்பட்டதின் விளைவாக, தோட்ட நிறுவன ஆய்வர்கள், தகுதிபெற்ற 2,562 தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரம் செய்து, ஆணைகள் பிறப்பித்துள்ளனர். தொழிலாளர்கள் பறிக்கும் தேயிலைகளை எடையிடுகையில், சுரண்டல் நிகழாமல் தவிர்த்திட எடைகள் மற்றும் அளவைகள் சட்டத்தின்கீழ் 10 தோட்ட நிறுவன ஆய்வர்களுக்கும் ஆய்வு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

2.30 பணியாளர்களுக்கு ஊதியத்தை உரிய காலத்தில் வழங்கவும், பணியாளர்களின் சம்பளத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுத்திடவும், இச்சட்டம் தொடர்பான கேட்பு மனுக்களை விரைவில் தீர்த்திடவும், சம்பளப் பட்டுவாடாச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

2.31 இச்சட்டப் பிரிவுகள் மூலம், வேலையளிப்போர், 1,000 தொழிலாளர்களுக்குக்கீழ் பணிபுரியும் நிறுவனங்களில், பிரதி மாதம் 7-ம் தேதியோ, அதற்கு முன்போ, 1,000 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நிறுவனங்களில் பிரதி மாதம் 10-ம் தேதியன்றோ / அதற்கு முன்போ சம்பளப் பட்டுவாடாச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர், தோட்ட நிறுவன ஆய்வர், உதவி ஆய்வர்கள் மற்றும் துணை ஆய்வர்கள், இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்கீழ் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்க இத்துறையில் 9 வட்டாரத் துணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

2.32 தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறுவன தொழிலாளர்களுக்கு, சம்பளத்துடன் குறைந்தபட்சம் 5 பண்டிகைகள் மற்றும் 4 தேசிய விடுமுறைகள் (குடியரசு தினம், சுதந்திர தினம், மே தினம், காந்தி பிறந்த நாள்) அளிக்கவும், இச்சட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது.

2.33 மேலும், மே தினத்தை தேசிய பண்டிகை தினமாக அறிவித்த முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும். தொழிலாளர் உதவி ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள் மற்றும் மலைத் தோட்ட ஆய்வர்கள் இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

## ஒப்பந்தத் தொழிலாளர் (பணி வரன்முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

2.34 சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்தவும், சில தொழில்களை அவற்றின் தன்மையைப்

[2000 ஏப்ரல் 19

பொறுத்து நீக்கவும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு மேல் அதிகமான தொழிலாளர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தால், அந்த நிறுவனத்திற்கு இச்சட்டம் பொருந்தும். இதேபோல், கடந்த ஓராண்டில் எந்த ஒரு நாளிலாவது 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை பணியிலமர்த்தியிருந்த ஒப்பந்தக்காரர்களுக்கு இச்சட்டம் பொருந்தும். ஒவ்வோர் ஒப்பந்தக்காரரும் இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற வேண்டியவர்கள் ஆகிறார்கள். தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசுச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில (ஒப்பந்தத் தொழிலாளர்) ஆலோசனை வாரியம் இச்சட்டத்தில் எழும் பிரச்சினைகளில் அரசுக்கு அறிவுரை கூறும் தனது கடமையை ஆற்றி வருகிறது. 36-வது மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் கூட்டம் 16-12-1999 அன்று சென்னையில் நடைபெற்றது. வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் முதன்மை வேலை அளிப்போருக்கு பதிவுச் சான்று வழங்கும் அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் ஆய்வர்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாகப் பணிபுரிகின்றனர். முதன்மை வேலையளிப்பவர்கள் பதிவு செய்வதில் பதிவுச் சான்று அலுவலர்களுக்கு எந்த இடர்பாடும் ஏற்படுவதில்லை. இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் ஒபந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிக்கு வைத்துக் கொள்வதால், ஒப்பந்தக்காரர்களும் அவர்களாகவே முன்வந்து, உரிமம் பெற்றுக் கொள்கின்றனர். இவ்விதம் முதன்மை வேலையளிப்பவர்கள் சட்டப்படி பதிவு செய்து கொள்வதால், ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் கீழ் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்குதல் மற்றும் சட்ட ரீதியான சலுகைகளை வழங்குதல் முதலியவற்றை வழங்கத் தவறினால், இவற்றிற்கு சட்டப்படியான தார்மீகப் பொறுப்பாளிகளாகிறார்கள். சிற்றுண்டிச் சாலை, ஓய்வு அறை, குடிநீர் வசதி, போதுமான கழிவறை வசதிகள், சலவை வசதிகள் மற்றும் முதலுதவி வசதிகள் ஆகிய நலன்கள் பெற இச்சட்டம் வழிவகை செய்கிறது. பொறியியல் துறை சம்பந்தப்பட்ட 13 இனங்களுக்கு மாநில ஆலோசனை ஒப்பந்தத் தொழிலாளர் குழுவின் ஆலோசனையுடன் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 19]

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்கல்) சட்டம், 1981**

2.35 தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 20 மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின் கீழ், 24 காலண்டர் மாதங்களில் 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வகை செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தோட்ட நிறுவன ஆய்வர்கள் இச்சட்ட அமலாக்க அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

**தொழிலக வேலை வாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

2.36 இச்சட்டம், தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் தன்மைகளை குறித்து வேலையளிப்போர் அவர்களது கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக இத்துறையின் மூன்று மண்டல இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2.37 இச்சட்டம், 20 மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்துவதாக அமைந்துள்ளது. இச்சட்டத்தின் கீழ் வேலையளிப்போர் அவர்களது நிறுவனத்தின் நிலையாணைகளை குறித்து சான்று பெற வேண்டும். நிலையாணைகள் சான்றிதழ் பெறப்படாத தொழில் நிறுவனங்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள சட்டத்தில் உள்ள மாதிரி நிலையாணைகள் அத்தொழில் நிறுவனங்கள் சான்றிதழ் வழங்கும் அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெறும்வரை பொருந்தும்.

**தொழிற்சங்கங்கள் சட்டம், 1926**

2.38 தொழிற்சங்கங்கள் பதிவு செய்தல் குறித்தும், தொழிற்சங்கம் பதிவு செய்வது குறித்தான சட்டத்தை விளக்கவும், தொழிற்சங்கங்கள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சங்கப் பதிவாளர்களாக 9 மண்டல துணை ஆணையர்கள் செயல்படுகின்றனர். இச்சட்டத்தில், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து, விரிவாக கூறப்பட்டுள்ளது. இச்சட்டத்தில், பொது நிதி மற்றும் அரசியல் நிதிகளை உருவாக்கவும் அதனைப்

[2000 ஏப்ரல் 19

| | | |
|---|---|---|
| | (ஆ) திருப்பத்தூர் மற்றும் ஜோலார்பேட்டையைச் சுற்றியுள்ள கிராமங்கள் | 64 |
| 3. | ஈரோடு மாவட்டம் | |
| | பவானி வட்டம், அந்தியூர், கரட்டுப்பாளையம் | 76 |
| 4. | திருச்சி மாவட்டம் | |
| | (அ) 305. பி.எஸ். ஜாடி பீடி கம்பெனி தொழிலாளர்கள், அரியமங்கலம் கணபதி நகர் | 56 |
| | (ஆ) திருச்சி, சிப்பி பீடி கம்பெனி தொழிலாளர்கள், சமயபுரம், புரந்தாங்குடி மற்றும் மகிழம்பாடி | 58 |
| 5. | கோவை மாவட்டம் | |
| | பல்லடம் வட்டம், நாரணாபுரம், கல்லாங்குத்து. | 48 |
| | மொத்தம் | **1649** |

2.44 மேலும், மத்திய அரசு தற்போது பீடித் தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்கு வழங்கும் மானியத் தொகையை அதிகபட்சமாக ரூ.20,000 அல்லது வீடு ஒன்றின் கட்டுமானச் செலவில் 50% தொகை, இதில் எது குறைவோ அதனை வழங்குவதாக உத்தரவிட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வீட்டு வசதித் திட்டங்களுக்கு வீட்டின் கட்டுமானச் செலவு ரூ.34,000 என்பதால், ரூ.17,000 மானியத் தொகை பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985**

2.45 சென்னையில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) மாநிலம் முழுமைக்கும் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக துணை எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்-நிர்வாக



2000 ஏப்ரல் 19]

அலுவலர் (எடைகள் மற்றும் அளவைகள்) மற்றும் உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்-தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையிடம்) ஆகியோர் உள்ளனர். இவர் தொழிலாளர் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வருகிறார். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள், கூடுதல் எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். அதே போல், மாவட்ட அளவில், 28 தொழிலாளர் ஆய்வர்கள், துணை சட்டமுறை எடையளவு கட்டுப்பாடு அலுவலர்களாகவும், கோட்ட அளவில் பணிபுரியும் 68 தொழிலாளர் துணை ஆய்வர்கள், உதவி எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர்களாகவும் வட்ட அளவில் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், எடையளவு சட்டமுறை ஆய்வர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

2.46 எடையளவு சட்டமுறை கட்டுப்பாடு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களுக்கு 1985 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தரப்படுத்தப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும், முத்திரையிடப்படாத எடைகள் மற்றும் அளவைகளையும் வியாபாரம் மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பிரிவில் பயன்படுத்துதல் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

2.47 வியாபாரிகள் பயன்படுத்தும் எடைகள் மற்றும் அளவைகளைப் பரிசீலனை செய்து, முத்திரையிட மாநிலம் முழுமையிலும் 101 முத்திரை ஆய்வாளர்கள் உள்ளனர். நுகர்வோர் நலனைக் காப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ள இச்சட்டம் திடீராய்வுகள் மற்றும் காலமுறைப்படி மேற்கொள்ளப்படும் கூட்டாய்வுகள் அமல் படுத்தப்படுகிறது. இச்சட்டப் பிரிவுகளுக்கு, முரணாகச் செயல்படும் வியாபாரிகள் மீது குற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொட்டலப் பொருட்களின் நிகர எடையை பொட்டலம் செய்யப்படும் உற்பத்தியாளர்களின் இடங்களில் சோதனை செய்யும் பொருட்டு, துறையில் உள்ள மின்னணு எடைக் கருவிகள் போன்றவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படும் இன்றைய வியாபாரச் சந்தையில், பல்வேறு வகைச் சின்னங்களைக் கொண்ட பொருட்கள் விற்பனைக்கு வரும் நிலையில், நுகர்வோர் நலன் காக்க இந்த எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் பெரிதும் உதவுகின்றன.

[2000 ஏப்ரல் 19

## குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு

2.48 அபாயகரமான தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையை 1931 ஆம் வருட இராயல் கமிஷன் அறிக்கை மூலம் வெளிக் கொணர்ந்து காட்டியது. 1933 ஆம் வருடம் குழந்தைத் தொழிலாளர் சட்டம் (குழந்தைத் தொழிலாளர்களை அடகு வைத்தல்) முதன் முதலில் இயற்றப்பட்டது. அதன் பிறகு குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து, பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டம், 1951 ஆம் வருட தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1952 ஆம் வருட சுரங்கச் சட்டம், 1961 ஆம் வருட தொழில் பழகுவோர் சட்டம், 1966 ஆம் வருட பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிபந்தனைகள்) சட்டம், 1947 ஆம் வருட கடைகள், நிறுவனங்கள் சட்டம், 1958 ஆம் வருட உணவு நிறுவனங்கள் சட்டம் மற்றம் இறுதியாக 1986 ஆம் வருட குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டன. குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் பிரிவு 3-ன் படி அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்தில் பகுதி 3—3-ல் அபாயகரமற்ற தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் வேலைமுறை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டங்கள் தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைத் துறையின் ஆய்வர்களால் அமல்படுத்தப்படுகின்றன.

2.49 கீழ்க்காணும் காரணங்களினால் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள் என்று இந்த அரசு நன்றாக அறியும்:— (1) வறுமை (2) வேலையின்மை (3) தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி வழங்குதல் (4) நகரங்களுக்குக் குடியேறுதல் (5) கட்டாயக் கல்வி இல்லாமை (6) பெற்றோர்களின் அறியாமை மற்றும் கல்வி இல்லாதத் தன்மை (7) குழந்தைத் தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கங்கள் ஈடுபடாமை (8) மரபு பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல் (9) மக்கள் தொகைப் பெருக்கம்.

2.50 மேலும், உச்ச நீதிமன்றத்தினால் 10-12-1996 அன்று ரிட் மனு எண் 465/86-ல் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்து வரலாற்று சிறப்பு மிக்கத் தீர்ப்பு ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1997 ஆம் வருடம் ஏப்ரல் மாதம், இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அமல்படுத்தும்



2000 ஏப்ரல் 19]

முக்கிய நடவடிக்கையாக குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றி அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டது. அபாயகரமான தொழிலில் 8,970 குழந்தைகளும், அபாயகரமற்ற தொழிலில் 9,052 குழந்தைகளும் கண்டறியப்பட்டனர். 1997 ஆம் வருட ஏப்ரல் மாதக் கணக்கெடுப்பு மூலம் அறியப்பட்ட விவரங்களினால் திருப்தி ஏற்படவில்லை என்பதால் மாவட்டாட்சியாளர்களால் கூடுதல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி 1,148 குழந்தைத் தொழிலாளர்கள், அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. குழந்தைத் தொழிலாளர்களை அபாயகரமான வேலையில் ஈடுபடுத்தும் உரிமையாளர்களிடமிருந்து ரூ.20,000 வீதம் இழப்பீட்டுத் தொகை வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 8 குழந்தைத் தொழிலாளர்களுக்கு ரூ.1,60,000 வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதர உரிமையாளர்கள் குற்றத்தினை மறுத்து அபராதத் தொகையை கட்ட மறுத்துள்ளனர். மைய அரசின் அறிவுரையின்படி அவர்களது பட்டியல் உச்ச நீதிமன்றத்தில் அவர்களிடமிருந்து அபராதத்தை வசூலிக்கும் முறை குறித்து ஆணை வேண்டி தாக்கல் செய்யப்படும்.

2.51 அவ்வாறு குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள உரிமையாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு வேலையளிக்க வேண்டும். இல்லையென்றால் அரசு தன் பங்காக ரூ.5,000 அளிக்க வேண்டும். இதுவரை ரூ.4 கோடியே 75 இலட்சம் தொகை இதற்கான நிதி ஏற்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிதியிலிருந்து, மாநில அரசு, அபாயகரமான தொழில்களிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ரூ.5,000 வீதம் கணக்கிட்டு, சென்னை, புதுக்கோட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் மாவட்டாட்சியர்களுக்கு இதுவரை ரூ.7.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அபாயகரமற்ற தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தியுள்ள நிறுவன உரிமையாளர்களுக்கு சட்டபூர்வ அறிவிப்புகள் வழங்கப்பட்டவுடன், குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

2.52 தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் விருதுநகர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 327 சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, அவற்றில் 15405 குழந்தைகள் படிக்கின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 2000 ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர்களுக்குச் சிறப்புப் பள்ளிகள் திறக்கப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தைத் தொழிலாளர் குடும்பத்திற்கு உதவித் தொகையாக மாதம் ரூ.100 அளிக்கப்பட்டு வருகிறது. இத்துடன் குழந்தைகளுக்கு இலவச உணவு, நோட்டுப் புத்தகம் மற்றும் கல்விக்குரிய அனைத்துச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் 2000 ஆம் ஆண்டில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் சிறப்புப் பள்ளிகள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

2.53 யுனிசெப் நிறுவனம் 1998 ஆம் வருடம் ரூ.24,31,500 நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை பற்றிய விழிப்புணர்வுப் பேரணிகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், மனிதச் சங்கிலி ஆகியவை நடத்தப்பட்டன. தொழிலாளர் துறையின் மூலம் அகில இந்திய வானொலி நிலையத்தில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு விளம்பரங்கள் 60 நாட்களுக்கு ஒலிப்பரப்பப்பட்டன. மேலும், 20 இலட்சம் தபால் அட்டைகளில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான வாசகம் தபால் துறையின் மூலம் விளம்பரப்படுத்தப்பட உள்ளது. 1999 ஆம் வருடம் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பிற்காக விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு ரூ.6,50,000 நிதி ஒதுக்கீடு செய்தது.

2.54 குழந்தைத் தொழிலாளர் (ஒழிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1986, கடைகள் நிறுவனங்கள் சட்டம், 1947, உணவு நிறுவனங்கள் சட்டம், 1958, மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், 1961, பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966, இவற்றில் உள்ள குழந்தைத் தொழிலாளர் பிரிவுகளில் அமலாக்கமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொழிலாளர் ஆய்வாளர்கள் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். 1999 ஆம் வருடம் 370 வழக்குகள் நீதிமன்றத்தில் முடிக்கப்பட்டு, ரூ.2,52,165 அபராதத்தொகை நிறுவன உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது.

**அகில உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம் (ஐபெக்)**

2.55 குழந்தைத் தொழிலாளர்களை ஆபத்தான மற்றும் சுரண்டப்படும் நிலைகளிலிருந்து மீட்டெடுக்கும் ஒருங்கிணைந்த அணுகுமுறை திட்டம், திருப்பூர் மற்றும் சிவகாசி குழந்தைத் தொழிலாளர்களுக்குச்



செயல்படுத்துவதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் அகில உலக தொழிலாளர் அமைப்பு, ஜெனீவா மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டச் சங்கங்கள் கோவை மற்றும் விருதுநர் இவர்களிடையே கையெழுத்தாயின. மேற்படி ஒப்பந்தங்கள் குறிப்பாக சிவகாசி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டப் பகுதிகளிலுள்ள திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசியில் உள்ள 15000 குழந்தைகள் அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுக்கவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் போடப்பட்டது. மேலும், மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்குக் கூடுதல் வருமானம் அளிக்க சிறப்பு வருவாய் பேணும் திட்டங்கள் மூலம் வழி காணப்பட்டுள்ளது. சிறப்பு சேமிப்பு மற்றும் கடன் வசதி அளிக்கும் திட்டங்களின் மூலம் அவர்கள் பயன் அடைய சுழற்சி முறை நிதி உருவாக்கப்படும். அகில உலக தொழிலாளர் அமைப்பு திட்டங்களினை நிறைவேற்றுதற்காக சுமார் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இரண்டு வருடங்களில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். மேற்கண்ட திட்டத்தின்கீழ் 8 முதல் 12 வயதுள்ள 4000 குழந்தைகள் அபாயகரமான தொழில்களிலிருந்து மீட்டெடுக்கப்படுவர். பள்ளிகளில் சேர்க்கப்படாத 5 முதல் 7 வயதுள்ள 10000 குழந்தைகள் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு, பள்ளிகளில் சேர்க்கப்படுவர். மேலும், திருப்பூர் பகுதியிலுள்ள 400 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, அவர்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. நிவாரணம் பெற்ற குழந்தைத் தொழிலாளர்களின் 2400 தாய்மார்களுக்கு சேமிப்புக் கடன் வசதி மற்றும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். பணியிலிருந்து அப்புறப்படுத்திய குழந்தைத் தொழிலாளர்களின் 2200 தாய்மார்களுக்கு வருவாய் ஈட்டும் வாய்ப்புகள் வழங்கப்படும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிக்க தொழிலாளர்கள் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியவை ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்பதே. வட்டார அளவிலும், தேசிய அளவிலும். உலக அளவிலும், விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதற்கான சிறப்பான செயல் திட்டம் உருவாக்கப்படுவதுடன், தொடர்ச்சியான மதிப்பீடும் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் தேசிய அளவில் நான்காவதாகவும், தமிழகத்தில் முதன் முறையாகவும் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட இரு திட்டங்களில் சிவகாசிப் பகுதிக்கான திட்டம் 14-03-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. திருப்பூர் பகுதிக்கான திட்டமும் விரைவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

**மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்**

2.56 மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம், வேலையளிப்போர் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசு தரப்புப் பிரிதிநிதிகள் ஆதியோரை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு முதல்நிலை வாரியம் ஆகும். இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராவார். இவ்வாரியம் ஆண்டிற்கு 3 அல்லது 4 முறை கூடி தொழிலாளர்களின் பொதுப் பிரச்சினைகள் மற்றும் சட்ட/விதித் திருத்தம் போன்ற முக்கிய பிரச்சினைகளை விவாதித்து, அரசுக்குப் பயனுள்ள ஆலோசனைகளை வழங்குகிறது. இதுவரை 62 மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இறுதியாக, கூட்டம் 28-02-2000 அன்று சென்னையில் நடைபெற்றது.





# அத்தியாயம்-3

## குறைந்தபட்ச ஊதியம் என்ற பாதுகாப்பு வளையம்

3.1 குறைந்தபட்ச ஊதியச் சட்டம் என்பது ஒரு திருப்பு முனைச் சட்டமாகும். குறைந்தபட்ச ஊதியத்தை வழங்க உறுதி செய்வது என்பது நற்பாங்கான மனித வாழ்வை உறுதி செய்வது என்பதாகும். குறைந்தபட்ச ஊதியம் என்பது பொதுவாக பிழைப்பூதியம் போன்றதேயாகும். அதை வழங்க மறுக்கும் பட்சத்தில் வாழ்க்கையில் மனிதத் தன்மை என்ற மூலப் பொருளை எடுப்பதற்கு ஒப்பாகும். குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அமைப்பு ரீதியற்ற 83 தொழில் இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், குழு முறை அல்லது அறிவிக்கை முறையை பின்பற்றி அரசானது குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறு நிர்ணயம் செய்கிறது. முதன் முதலாக அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில் இனத்திற்கு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் குழு முறையில் நிர்ணயம் செய்வது என்பது உள்ளது. ஏனெனில், அந்த நடைமுறையில், தொழிலின் தன்மைக் குறித்தும் தொழிலகங்களின் தாங்கும் சக்தி குறித்தும் ஆழமாக ஆராய்ந்து செய்து முடிவெடுக்க வேண்டியுள்ளது. இதற்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியங்கள் மறுநிர்ணயம் குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படுகிறது. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அறிவிக்கை முறை பின்பற்றப்படுகிறது. விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம், மறுநிர்ணயம் செய்யும்பொழுது அடிப்படை ஊதியத்துடன், விலைவாசிக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட மாறுகின்ற அகவிலைப்படி என்கிற அகவிலைப்படியையும் அரசு நிர்ணயம் செய்கிறது.

3.2 குறைந்தபட்ச ஊதியம் மாற்றம் செய்யப்பட்டு, அறிவிக்கை செய்யும் சமயங்களில் இந்த அறிவிக்கைகளுக்கு எதிராக வேலையளிப்பவர்கள் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்து தடையுத்தரவு பெறுகின்றனர். இதன் விளைவாக அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் தொழிலாளர்களுக்குக் கிடைப்பது தடுக்கப்படுகிறது. இந்தத் தடையிலிருந்து விடுபட தமிழ்நாடு அரசு, இந்திய தொழிலாளர்கள் மாநாடு, தொழிலாளர் அமைச்சர்கள் மாநாடு போன்ற அமைப்புகளின்

மூலம் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தினை இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்க பரிந்துரை செய்துள்ளது. இதனால், நீதிமன்றத்தின் முன்பு தடையுத்தரவு பெற இயலாது. மேலும், உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கில் எந்த ஒரு நிறுவனம் குறைந்தபட்ச ஊதியம் வழங்க இயலாத நிலையில் உள்ளதோ, அந்நிறுவனம் இயங்குவதற்கு உரிமையுடையதல்ல என்று கூறியதை இங்கு சுட்டிக்காட்டலாம். குறைந்தபட்ச தினக்கூலி ரூ.40-க்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்பதே மத்திய அரசின் கொள்கையாகும். 1999 ஆம் ஆண்டில் அரசு 4 தொழில்களுக்குக் குறைந்த பட்ச ஊதியங்களை மறுநிர்ணயம் செய்துள்ளது. விவசாயத் தொழிலாளர்களுகக நலத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த கோலப்பன் குழுவின் பரிந்துரைக்கேற்ப குறைந்தபட்ச ஊதியம் விவசாய தொழிலாளர்களுக்காக மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 24 தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியங்களை மறுநிர்ணயம் செய்வதற்கான முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்ட 3 தொழில் இனங்களை அரசு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் சேர்ப்பதற்கான முதனிலை அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது:

(1) பாய் பின்னுதல் மற்றும் கூடை பின்னுதல்

(2) நிட்டிங் தொழில்

(3) காளான் வளர்ப்புத் தொழில்

3.3 கிரானைட் தொழிலுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் செய்வதற்காக அரசு ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது.

3.4 வர்த்தக ரீதியில் அரசு மானியம் பெறாமல் நடைபெறும் சிறார் பள்ளிகள், டுடோரியல் கல்லூரிகள், தொழில் நுட்ப நிலையங்கள் போன்ற பயிற்சி நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு ஓர் ஆலோசனைக் குழு அமைத்துள்ளது.

3.5 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டபிரிவு 20 (1)-ன்படி கேட்பு மனுக்களை விசாரணை செய்ய 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.



# அத்தியாயம்-4

## சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

### வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923

4.1 தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தன்மையைப் பொறுத்து இழப்பீடு வழங்கவும், இறக்க நேரிட்டால், அவர்தம் சார்ந்தோருக்கு இழப்பீடு அளிக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் வேலையாள் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

4.2 ஆணையர்களால் வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்பட்டு, மனுதாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. தீர்ப்பளிக்கப்பட்ட தொகை வேலையளிப்பவரால் வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், துணை ஆணையர்கள் மாவட்டாட்சியர்கள் மூலம் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

### பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

4.3 தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை வழங்குவதற்கான திட்டம் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 5 வருடம் தொடர்ச்சியாகப் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியில் இருந்து விடுவிக்கும் சமயம் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும்.

1. வயது முதிர்வு காரணமாக,

2. பணிமுடிவு (அ) இராஜினாமா,

3. இறப்பு (அ) விபத்து (அ) நோய் காரணமாக இயலாமை.

பொதுவாக இறுதியாக பெற்ற அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் பணிக்கொடை வழங்கப்படுகிறது. அது கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

[2000 ஏப்ரல் 19

**மாத வருமானம்/26 x 15 x பணி செய்த வருடங்கள்**

4.4 இச்சட்டபடி, அதிகபட்சம் வழங்கப்பட வேண்டிய பணிக்கொடை தொகை ரூ.2.5 இலட்சத்திலிருந்து 3.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

4.5 இச்சட்டத்தின் கீழ் வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள 8 தொழிலாளர் உதவி ஆணையர்கள் கட்டுப்பாட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். தொழிலாளர் இணை ஆணையர்கள், சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகியோர் முறையே சென்னை, கோவை மற்றும் மதுரை மண்டலங்களுக்கு இச்சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

4.6 தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில், வேலையளிப்பவர் இச்சட்டப்படி பிழைப்பூதியம் வழங்க வேண்டி இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர் முதல் 90 நாட்களுக்கு இறுதியில் பெறப்பட்ட ஊதியத்தில் 50 சதவிகிதமும் வேலை நீக்கக் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தால், 90 நாட்களுக்கு மேல் 180 நாட்கள் வரை 75 சதவிகிதமும், 180 நாட்களுக்கு மேல் முழு ஊதியமும் பெறத் தகுதியுடையவராகிறார்.

4.7 இச்சட்டத்தின் கீழ் 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்திலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் அதிகாரமுடையவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 9 வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**போனஸ் வழங்குதல் சட்டம், 1965**

4.8 இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்குப் பொருந்தும். தொழிலாளர்கள் எண்ணிக்கை 10-க்குக் குறையும் நேர்வுகளில், இந்நிறுவனங்கள் போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச போனஸ் (8.33%) வழங்க வேண்டும்.



2000 ஏப்ரல் 19]

4.9 பணியாளர் என்பவர் எந்தவொரு நபரோ பயிற்சியாளராக இல்லாமலும் (அல்லது) பணி நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்பார்வையாளர்கள், மேலாண்மை மற்றும் நிர்வாகப் பிரிவு பணியாளர்கள் மற்றும் அவர்களது சம்பளம் மாதம் ரூ.3,500-க்கு மிகைப்படாமலும் இருக்க வேண்டும். எந்தவொரு பணியாளரும் மாதம் ரூ.3,500-க்கு மிகைப்படாமல் சம்பளம் பெற்றுக் கொண்டு, குறிப்பிட்ட கணக்காண்டில் 30 தினங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்திருப்பின், போனஸ் பெறத் தகுதியுடையவராகிறார். இருப்பினும், ரூ.2,501 முதல் ரூ.3,500 வரை மாதச் சம்பளம் பெறும் பணியாளர்களின் சம்பளம் போனஸ் வழங்கலுக்காக, ரூ.2,500 என கணக்கிடப்பட வேண்டும். மேலும், அதிகபட்சமாக சம்பளத்தில் 20% போனஸாகப் பெற இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4.10 தமிழ்நாட்டில் இச்சட்டத்தை அமல்படுத்த தொழிலாளர் இணை ஆணையர்கள், தொழிலாளர் துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், தொழிலாளர் அலுவலர்கள் அவரவர் ஆட்சி எல்லைக்கேற்ப ஆய்வராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**மகப்பேறு நலச் சட்டம், 1961**

4.11 மகப்பேறு கால நேரங்களில் பெண் தொழிலாளர் பணிகளை முறைப்படுத்துதலுக்கும், மகப்பேறு கால சலுகைகள் வழங்குவதற்கும் ஏதுவாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் விடுப்பு, மருத்துவச் சான்றின்பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, குறைபேறு காலத்திற்காக 6 வார விடுப்பு வழங்குதல் முதலிய சலுகைகள் உள்ளன. பேறுகாலத்தில் முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் அக்கறைகொண்டு ரூ.250 மருத்துவ போனஸாக வழங்க இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ், சென்னை, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள மகளிர் தொழிலாளர் ஆய்வாளர்கள், தொழிலாளர் ஆய்வர்கள், தோட்ட நிறுவன ஆய்வர்கள், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள் ஆகியோர் ஆய்வர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

**சம ஊதியச் சட்டம், 1976**

4.12 சம ஊதியச் சட்டம், 1976, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கவும் மற்றும் வேலைவாய்ப்புத் தொடர்புடைய இனங்களில் பாலியலின்

அடிப்படையிலான வேற்றுமையைத் தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. பெண் தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்புப் பெற்றுத் தரும் வகையில் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழு அரசால் இச்சட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வேலை இனங்கள் மற்றும் நிறுவனங்களில் பெண்களின் பணி தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகள் வழங்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறைச் செயலாளரைத் தலைவராகவும், தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களைச் செயலாளராகவும் கொண்டு மாநில அளவில் இச்சட்டத்தின்கீழ் ஓர் ஆலோசனை குழு இயங்கி வருகிறது.

*4.13* இச்சட்டத்தின் அமலாக்கம் தொடர்பாக அரசு இத்துறையில் கீழ்க்கண்ட அலுவலர்களை இச்சட்டத்தின்கீழ் ஆய்வர்களாக நியமித்துள்ளது:-

1. தொழிலாளர் ஆணையர்,

2. தொழிலாளர் இணை ஆணையர்கள்,

3. மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர்கள்,

4. தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்),

5. தொழிலாளர் துணை ஆணையர்கள் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர்,

6. தொழிலாளர் ஆய்வர்கள்,

7. தோட்ட நிறுவன ஆய்வர்கள்,

8. தொழிலாளர் துணை ஆய்வர்கள்,

9. தொழிலாளர் உதவி ஆய்வர்கள்,

10. தொழிலாளர் ஆய்வர்கள் (மகளிர்), சென்னை, மதுரை மற்றும் கோவை.



*4.14* சம வேலைக்கு சம ஊதியம் தொடர்பாக தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களைத் தீர்வு செய்யும் அதிகாரமுடையவர்களாக தொழிலாளர் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் உதவி ஆணையர்களை அரசு அறிவிக்கை செய்துள்ளது. இவ்வாறு தீர்வு செய்யப்படும் தொகைகள் வசூல் செய்யப்படாமலிருக்கும் பட்சத்தில், தொழிற்தகராறு சட்டப் பிரிவு 33(சி)(1)-ன்கீழ் நில வருவாய் வசூல் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

*4.15* மேலும், இச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய முரண்பாடுகளை உரிய அரசு மற்றும் அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட அதிகாரி மட்டுமல்லாமல், இம்முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர் அல்லது அங்கீகாரம் பெற்ற நல நிறுவனம் அல்லது அமைப்பு மூலம் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யலாம் என்பதே இச்சட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

[2000 ஏப்ரல் 19

# அத்தியாயம்-5

## சட்டரீதியான வாரியங்களின் செயல்பாடுகள்

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994.

5.1 கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்களின் நலனுக்காக இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அரசு அமைத்துள்ளது. 1-11-1994 முதல் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு, முதற்கட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு, அதன் பிறகு இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் 15-6-1997 முதல் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

5.2 கட்டுமானத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களை அமல்படுத்துவதற்காக "உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1982 ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8ஏ-ன்படி. தமிழ்நாட்டில் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை இந்நிதிக்குச் செலுத்த வேண்டும். அரசுத் துறை மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள், மேற்படி தொகையினை தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் பொது நல நிதிக்குச் செலுத்தி வருகின்றன. இதர தனி நபர்கள் கட்டடம் கட்டும்போது, அவர்களிடமிருந்து கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் 0.3 சதவிகிதத்தினை உள்ளாட்சி அமைப்புகள் வசூலித்து, அத்தொகையினை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்குச் செலுத்தி வருகின்றன. இந்த வாரியத்திற்கு 31-12-1999 வரை ரூ.16,74,52,803 சந்தாவாகப் பெறப்பட்டுள்ளது. 1,93,601 கட்டுமானத் தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.



2000 ஏப்ரல் 19]

**வாரியத்தின் நோக்கம்**

5.3 இவ்வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம், ஈமச்சடங்கு உதவித் தொகைத் திட்டம், கல்வி உதவித் தொகைத் திட்டம், திருமண உதவித் தொகைத் திட்டம், மகப்பேறு/கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம் ஆகிய நலத் திட்டங்கள் வாரியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

5.4 இவ்வாரியத்தில் 31-12-99 வரை பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரம் கீழே தரப்பட்டுள்ளன:

| வ. எண். | பதிவு செய்து கொண்ட இடம். | 01-01-96 முதல் 31-12-96 வரை. | 1-1-97 முதல் 31-12-97 வரை. | 1-1-98 முதல் 31-12-98 வரை. | 1-1-99 முதல் 31-12-99 வரை. | 31-12-99 வரை மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 10,348 | 11,923 | 17,337 | 22,672 | 62,280 |
| 2. | கோவை | 8,391 | 1,586 | 3,042 | 5,804 | 18,823 |
| 3. | மதுரை | 6,121 | 1,923 | 11,351 | 15,413 | 34,808 |
| 4. | திருச்சி | - | 2,989 | 7,011 | 10,790 | 20,790 |
| 5. | சேலம் | - | 6766 | 9,120 | 15,343 | 31,229 |
| 6. | திருநெல்வேலி | - | 7,875 | 4,111 | 13,685 | 25,671 |
| | **மொத்தம்** | **24,860** | **33,062** | **51,972** | **83,707** | **1,93,601** |

5.5 இவர்களிடமிருந்து தலா ரூ.25 வீதம் மொத்தம் ரூ.48,40,025 பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது. பதிவினை இரண்டாண்டுக்குப் பின் ஒவ்வோர் ஆண்டும், ரூ.10 புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும். வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 19

**வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்**

1. பதிவு செய்து கொண்டுள்ள அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் குழு விபத்துத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளனர். காப்பீடு செய்வதற்கான ப்ரிமியத் தொகையை வாரியச் செலவில் வாரியமே செலுத்தி வருகிறது. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் இறந்தால் ரூ.1. இலட்சம் காப்பீடுத் தொகையாகவும், விபத்தில் ஊனமுற்றால் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூபாய் ஒரு இலட்சம் வரை காப்பீடுத் தொகை வழங்கப்படுகிறது.

2. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றால் ரூ.750-ம், 12 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றால் ரூ.1,000-ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

3. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்கு ரூ.1,000 திருமண உதவித் தொகை வழங்கப்படுகிறது.

4. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி மகப்பேறு/கருச்சிதைவுக்கு ரூ.2000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

5. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் ஈமச் சடங்கிற்கு ரூ.2000-ம் இயற்கை மரணத்திற்கு ரூ.5000-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

6. பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் [இயற்கையில் (அ) விபத்தில்] மரணமடைந்தால் ஈமச் சடங்கிற்கு ரூ.2000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 19]

**1999 ஆம் ஆண்டில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வாரியத்தால் அளிக்கப்பட்ட நலத்திட்டங்கள்**

| வ. எண் | நலத் திட்டம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | மரண விபத்து | 16 பேர்கள் | ரூ.15,50,000 |
| | | (ஒரு நபர் 10-5-1998 தேதிக்கு முன்பு விபத்து மரணம் அடைந்ததால் ரூ.50,000 வழங்கப்பட்டது.) | |
| 2 | காய விபத்து | 3 பேர்கள் | ரூ.85,000 |
| 3 | ஈமச் சடங்கு உதவித் தொகை | 105 பேர்கள் | ரூ.52,500 |
| 4 | கல்வி உதவித் தொகை | 63 பேர்கள் | ரூ.1,22,250 |
| | | 89 பேர்கள் | ரூ.89,000 |
| | 10 ஆம் வகுப்பு | | |
| | 12 ஆம் வகுப்பு | | |
| 5 | திருமண உதவித் தொகை | 158 பேர்கள் | ரூ.1,58,000 |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | 1 நபர் | ரூ.1000 |

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 1999**

5.6 மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களின் நலனைப் பேண “வேளாண்மை மற்றும் பிற வகையான தொழிலாளர்களின்” பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களுக்கு உரிய தீர்வு கர்ண வழிமுறைகளை எடுத்துரைக்க தனிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று 05-03-1997 அன்று சட்டப் பேரவையில் நிதிநிலை உரையில் அறிவிப்பினை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 27-8-1997 அன்று அரசு வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குழு

[2000 ஏப்ரல் 19

ஒன்றையும், தொழிலாளர்கள் நலச் சட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்ட அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கான குழு ஒன்றையும், தொழிலாளர்களின் நலச் சட்டங்களின் கீழ் கொண்டு வரப்படாத அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கான குழு ஒன்றையும் ஆகிய மூன்று குழுக்களை அமைத்து ஆணையிட்டது.

57 இரண்டு குழுக்கள் அரசுக்கு அளித்த அறிக்கையின் அடிப்படையில் பெரும்பான்மையான அமைப்பு சாராத் தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கான தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தின் பிற்சேர்க்கையில் ஏற்கெனவே உள்ள 12 தொழில்களோடு மேலும் 43 தொழில்களைச் சேர்த்து 21-8-1998 அன்று அதனை இவ்வரசு உறுதி செய்தது. அப்பிற்சேர்க்கையில், சைக்கிள் பழுதுபார்த்தல் மற்றும் வீட்டு வேலைத் தொழில் ஆகிய இரு தொழில்களும் மேலும் சேர்க்கப்பட்டுள்ளன.

5.8 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சட்டத்தின் பிற்சேர்க்கையில், வரிசை எண் 6, 10 மற்றும் 11-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைத் தவிர்த்து பிற்சேர்க்கையில் உள்ள பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கான திட்டம் வகுக்கும் பொருட்டும், அத்திட்டச் செலவை ஈடுகட்ட, நிதியினைப் பெறும் பொருட்டும், சுய தொழிலில் ஈடுபட்டுள்ள அமைப்புறாத தொழிலாளர்களுக்குப் பயன்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கான சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்தது. அதன்படி, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் என்ற பொருளுக்கான வரையறையை (Definition) விரிவுபடுத்தியும், வேலையளிப்பவர்களிடம் இருந்து அவர்தம் பங்குத் தொகையை வசூல் செய்ய ஏதுவாக பிரிவு 8பி என்ற ஒரு சரத்தையும் சட்டத்தில் சேர்த்தது.

5.9 25-3-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைப்புறாத தொழிலாளர்களின் நலன் காக்கும் பொருட்டு ஒரு முதன்மை வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம் 17-3-1999 தேதியன்று அமைத்து ஆணையிடப்பட்டது. அமைப்புறாத தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 28-04-1999 அன்று அரசால் வகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு



2000 ஏப்ரல் 19]

உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதியை உருவாக்கவும், இந்நிதிக்கு நிதி ஆதாரம் சேர்க்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**5.10 இத்திட்டத்தின் நோக்கம்**

1. தனிநபர். குழு விபத்து நிவாரணத் திட்டம்,
2. மகப்பேறு நலத் திட்டம்,
3. பணிமுடிப்பு நலத் திட்டம் ஆகியவைகளாகும்.

5.11 இந்த நலத் திட்டங்களை, தொழிலாளர்கள் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு செய்த பன்னிரெண்டு மாதங்களுக்குப் பின்னர் பலனைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இவ்வாரியம், 5-11-1999 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வாரியத்தில் அமைப்பு ரீதியற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களை உறுப்பினராகச் சேர்க்கும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய மண்டல அளவிலான வாரியப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பதிவு செய்யும் தொழிலாளர்களுக்கு வாரியத்தின் சார்பாக வழங்கும் பொருட்டு, அடையாள அட்டைகள், பாஸ் புத்தகங்கள், இரசீது புத்தகங்கள் போன்றவை அச்சடித்து வழங்கப்பட்டுள்ளன.

5.12 இத்திட்டத்தின்படி, தொழிலாளர்கள் மாதா மாதம் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூ.20 (ரூபாய் இருபது மட்டும்) பங்களிப்புத் தொகையை பெறும் பொருட்டு, மாநில அளவிலான வங்கிகளின் குழுமத்துடன் (எஸ்.எல்.பி.சி) பேசி அமலாக்கப்படும் வங்கிகளுடன் இணக்கக் குறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 15 வங்கிகள் அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

5.13 இவ்வாரியத்தில் பதிவுப் பணி 26-1-2000 முதல் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. பதிவு செய்த தொழிலாளர்களுக்கு இவ்வாரியத்தின் சார்பாக அடையாள அட்டை, பாஸ்புத்தகம் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய இத்திட்டம் விரைந்து பெரும் அளவிலான தொழிலாளர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடன் பதிவுப் பணி ஒவ்வொரு மாவட்ட

அளவிற்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இப்பணியைச் சிறப்புப் பணியாக மேற்கொள்ள தொழிலாளர் துறைப் பணியாளர்கள் உத்திரவிடப்பட்டுள்ளார்கள். இவ்வாரியத்திற்கு அரசு அளித்த நாற்பது இலட்ச ரூபாய் மானியத் தொகைக்கு மேலாக, மோட்டார் போக்குவரத்து வாகன வரி செலுத்துவோரிடமிருந்து பெறப்படும் வாகன வரியில், ஒரு சதவிகிதத் தொகை சேகரிப்பின் மூலம் 02-03-2000 வரையில் ரூ.47.00 இலட்சம் வாரிய நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. வாரியப் பணிகளை கணினிமயமாக்க வேண்டி "எல்காட்" நிறுவனம் மூலம் இப்பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள்**

5.14 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் இந்த மாநிலத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972-ன்கீழ் வசூலிக்கப்படும் தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கிறது.

5.15 தொழிலாளர்களிடமிருந்து வருடாந்திரம் சந்தா ரூ.5-ம் வேலை அளிப்பவரிடமிருந்து ரூ.10-ம் அரசின் பங்காக ரூ.5-ம் வசூலிக்கப்படுகிறது. இந்த வாரியத்தில் 19 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் அரசு தரப்பு உறுப்பினர்கள்-4, வேலையளிப்பவர் தரப்பு உறுப்பினர்கள்-5, தொழிலாளர் தரப்பு உறுப்பினர்கள்-5, சட்டமன்ற உறுப்பினர்கள்-3, மகளிர் பிரதிநிதிகள்-2 ஆகும். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த வாரியத்தின் தலைவர் ஆவார்.

5.16 பல நலத் திட்டங்களை இந்த வாரியம் செயல்படுத்துகின்றது. 01-01-1999 முதல் 31-12-1999 முடிய ரூ.28,50,660 நலத் திட்டங்களுக்காக செலவிடப்பட்டு, அதன்மூலம் 5,552 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

5.17 தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தமிழகம் முழுமையும், 52 தொழிலாளர் நல மையங்களையும், 71 தையல் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகிறது. ஒவ்வொரு தொழிலாளர் நல மையமும், தொழிலாளர்களைச் சார்ந்த பெண்களுக்கான ஒரு தையல் பயிற்சி வகுப்பையும் ஒரு குழந்தைகள் காப்பகத்தையும் கொண்டுள்ளது. மேற்படி, தையற் பயிற்சி வகுப்புகளில், தொழிலாளர்களைச் சார்ந்த அவர்களது மனைவி, மகள், திருமணமாகாத சகோதரிகளுக்கும் தையற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, 2279 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தையல் பயிற்சிக் காலங்களில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், உதவித் தொகையாக பிரதி மாதம் ரூ.80



வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணம் செலுத்தி தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு தலா ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. இவ்வாரியத்தால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகளுக்கு இலவச தொடக்கக் கல்வியும், சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. தவிர, அனைத்து குழந்தைகளுக்கும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும், இரண்டு ஜோடி டெரிகாட்டன் சீருடைகள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், 10 மற்றும் 12-வது வகுப்புத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களில் வரும் தொழிலாளியின் குழந்தைகளுக்கு ரூ.1000 மற்றும் ரூ.500 பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ரூ.1.89 இலட்சம் இவ்வாண்டு இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழகத்தில் 9 இடங்களில் இலவச படிப்பகங்களை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

5.18 மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது. சென்னையில், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் சந்பந்தப்பட்ட வழக்கு/விசாரணை/பேச்சுவார்த்தை ஆகியவற்றிற்காக வருபவர்கள் தங்குவதற்காக "ஜீவா இல்லம்" என்ற ஓய்வு இல்லம், தேனாம்பேட்டையில் கட்டப்பட்டுள்ளது. காச நோயால் அவதியுறும் தொழிலாளர்கள் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதற்காக தாம்பரம் (26 படுக்கைகள்), திருப்பூர் (26 படுக்கைகள்), ஆசாரிபள்ளம் (30 படுக்கைகள்), ஆஸ்டின்பட்டி (26 படுக்கைகள்) மற்றும் கீழ்பெண்ணாத்தூர் (24 படுக்கைகள்) ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் இவ்வாரியம் தனிப் பிரிவினைக் கட்டியுள்ளது.

5.19 தொழிலாளர்கள் சுற்றுலா செல்கையில் தங்குவதற்காக, ஊட்டி, கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தங்கும் விடுதிகள் கட்ட, நிலம் ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உழைப்பவர் உலகம்**

5.20 உழைப்பவர் உலகம் என்ற பெயரில் தொழிலாளர் நல மாத இதழ் ஒன்று இவ்வாரியத்தால் 1978 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வருகிறது.

5.21 இவ்விதழில் தொழிலாளர் தொடர்பான நீதிமன்ற தீர்ப்புகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், சட்டத் திருத்தங்கள், வாசகர் கேள்வி பதில் போன்றவை இடம் பெறுகின்றன.

5.22 உழைப்பவர் உலகம் மாத இதழ் சந்தா விவரம்:

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | .. | ரூ. 300 |
| ஆண்டு சந்தா | .. | ரூ. 36 |
| ஓர் இதழின் விலை | .. | ரூ. 3 |

5.23 சந்தாதாரர்களின் எண்ணிக்கை (உத்தேசமாக)—4200



## அத்தியாயம்-6

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை-5

6.1 தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ம் ஆண்டு நிறுவப்பட்டது. 1978-ம் ஆண்டில் இந்த நிலையம் முதன்மை நிலையமாக உயர்த்தப்பட்டது. இக்கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கங்கள்:-

1. தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்.
2. நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்.
3. தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.
4. தொழிலாளர் குறித்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.
5. தொழிலாளர் மேலாண்மையில் பட்டயப் படிப்புகள் நடத்துவதன் வாயிலாக எதிர்கால தொழில் நிர்வாகத்திற்குத் தகுதியானவர்களை உருவாக்குதல் முதலியன ஆகும்.

6.2 இக்கல்வி நிலையம், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சிகள், கருத்தரங்குகள், புத்தாக்கப் பயிற்சிகள் ஆகியவற்றை பொது மற்றும் தனியார் தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும் நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சிகள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி வருகிறது.

6.3 இதைத் தவிர, இந்நிலையம், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப் படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ), பகுதி நேரம் (ஓராண்டு) மற்றும் அஞ்சல் வழி (இரண்டாண்டு) மூலமாகவும், தொழிலாளர் நிர்வாக இளங்கலைப் பட்டப் படிப்பு (பி.எல்.எம்.) (3 ஆண்டுகள்) நிர்வாக முதுகலைப் பட்டப் படிப்பு (எம்.எல்.எம்) (இரண்டு வருடம்) நடத்தி வருகிறது. சென்னை பல்கலைக்கழகம் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் தொழிலாளர் மேலாண்மை இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பிற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

6.4 இக்கல்வி நிலையம் 1999-ம் ஆண்டில் இதுவரை 34 கருத்தரங்குகள் மற்றும பயிற்சிகள் நடத்தியுள்ளது. இதன்மூலம் மொத்தம் 2250 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்றுப் பயனைடந்துள்ளனர். இக்கல்வி நிலையத்தால் ஒவ்வொரு வருடமும் பொது நுழைவுத் தேர்வின் மூலம் தொழிலாளர் மேலாண்மை இளங்கலை பட்டப் படிப்பிற்கு 50 மாணவர்களும், முதுகலைப் பட்டப் படிப்பிற்கு 30 மாணவர்களும் சேர்க்கப்படுகின்றனர்.

6.5 இக்கல்வி நிலையத்திற்கு விடுதியுடன்கூடிய சொந்தமான கட்டடம் கட்டும் பொருட்டு, சென்னையை அடுத்த காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், எண் 129, பள்ளிக்கரணை கிராமத்தில் (சர்வே எண் 657/18, பகுதி IA), (வேளச்சேரி-தாம்பரம் நெடுஞ்சாலை) 12 ஏக்கர் நிலத்தை இக்கல்வி நிலையத்திற்குப் பெற்றுத் தர தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



# அத்தியாயம்-7

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

**நிர்வாகம்:**

7.1 தமிழக அரசின் தலையாய கோட்பாடு, தொழிலகங்களில் பாதுகாப்பினை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உடல்நலன் பாதுகாத்தல், தொழிலாளர்களுக்கு முறையான நல வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவை ஆகும். இந்தக் கொள்கையினை, தொழிற்சாலைகளில் செயல்படுத்துவதில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. இத்துறை தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர 13 தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்துகிறது.

7.2 தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தி, நிர்வகிக்கும் இத்துறைக்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் தலைவர் ஆவார். அவருக்கு உதவியாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 51 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 45 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர், 8 உதவி மருத்துவ அலுவலர்கள், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் ஒரு நிர்வாக அலுவலர் ஆகியோர் உள்ளனர்.

7.3 இத்துறை தமிழக அரசின் கோட்பாடுகளை நிறைவேற்றுவ்தற்கு கீழ்க்கண்ட இரு பிரிவுகளாக செயல்படுகிறது:-

1. முறைப்படுத்தும் செயல்பாடுகள்.
2. உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

### முறைப்படுத்தும் செயல்பாடுகள்

**ஆய்வுகள்**

7.4 தொழில்நுட்பம் நிறைந்த தொழிற்சாலைகள் சட்டம் தொழிலகங்களில் தொழிலாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு,

நலவசதிகள் போன்றவற்றை உறுதி செய்கிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்துப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் முழுமையாகச் சென்றடையும்வண்ணம், தற்போதுள்ள அலுவலர்களின் எண்ணிக்கையைக்கொண்டு, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக, தொழிற்சாலைகள் சட்டப் பிரிவிற்கு உட்பட்ட அனைத்து தொழிற்சாலைகளும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அபாய செயல்முறைகள் இல்லாத சிறு தொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து புகார்கள் ஏதும் இல்லாத நிலையில், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. எனினும் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு இரண்டையும் உறுதி செய்ய வேண்டி அபாய செயல்முறைகள் அடங்கிய தொழிற்சாலைகள், சிறு தொழில் நிறுவன சான்று பெற்றிருந்தாலும் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உள்ள அபாயத்தைக் கருத்தில் கொண்டு குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதை கண்டறியவும், இத்தொழிற்சாலைகள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. மேலும், பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் நல வசதிகள் குறித்து, சீரான கண்காணிப்பு மேற்கொள்ள சிறப்பு ஆய்வுகள், விடுமுறை நாள் ஆய்வுகள் மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.

7.5 சிறுதொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ள மாநில அளவில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளர் தலைவராகவும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலராகவும், தொழில் முனைவோர் மற்றும் தொழிற்சங்கப் பிரிதிநிதிகள் உறுப்பினர்களாகவும் உள்ளனர். சிறுதொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களின் செயலாக்கம் குறித்து இக்குழு மனநிறைவினைத் தெரிவித்துள்ளது.

**சிறப்புக் குழு ஆய்வுகள்:**

7.6 பட்டாசுத் தொழிற்சாலைகளில் தீபாவளிப் பண்டிகையை ஒட்டிய காலகட்டத்தில் அதிக உற்பத்திச் செயல்பாடுகளின் காரணமாக வெடி விபத்துக்கள் நிகழ்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே,



இதுபோன்ற காலங்களில் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பான பணி நிலையையும் வேலைமுறையையும் கண்காணித்து சீர்படுத்துவதற்காக 'சிறப்புக் குழு' ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.7 மேலும் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் 'சிறப்புக் குழுக்கள்' அமைக்கப்பட்டு, ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதை முழுமையாக தடுக்கும் பொருட்டு, சிறப்புக் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**புகார் விசாரணை:**

7.8 தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்து பெறப்படும் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, குறைபாடுகளுக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1999-ஆம் ஆண்டில் பெறப்பட்ட 616 புகார்களும் விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களில் தொழிற்சங்கங்களின் பிரிதிநிதிகளுடன் மாதாந்திரக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் வைக்கப்படும் குறைபாடுகள் குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

**ஊறு விளைவிக்கும் செயல்முறைத் தொழில்கள்:**

7.9 1988ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் 'பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தடுப்புக் குழு' ஒன்று கூடுதல் தலைமை தொழிற்சாலைகள் ஆய்வரின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

7.10. அபாயம் விளைவிக்கக்கூடிய செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளில் பேரபாயத்தைத் தடுக்கக்கூடிய செயல்முறைகளை உருவாக்குவதற்கு இந்தக் குழு வழிகாட்டுவதுடன் அவை நிறைவேற்றப்படுவதற்கான தொடர் நடவடிக்கைகளும் இக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

7.11 தொழிற்சாலைகள் சட்டத்தில் ஊறு விளைவிக்கும் செயல்முறைத் தொழில்களாக 29 தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள்,

[2000 ஏப்ரல் 19

உற்பத்திப் பொருட்கள், துணை உற்பத்திப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கழிவுப் பொருள் மற்றும் நீர் வெளியேற்றங்கள் ஆகியவைகளால் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் உடல் நலத்திற்கும், சுற்றுச் சூழல் தூய்மைக்கும் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படுத்தும் அபாய நிலை உள்ளது. இத்தகைய தொழிற்சாலைகள் “பெரும் விபத்து, மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்” என பகுக்கப்பட்டு, இவைகளில் செயல்முறைப் பாதுகாப்பு குறித்து ஆய்வகத் துறை தனிக் கவனம் செலுத்துகிறது. நமது மாநிலத்தில் இதுபோன்ற 89 தொழிற்சாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

7.12 தமிழகத்தில் “பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள்” நிறைந்துள்ள பகுதிகளாக 1) மணலி 2)நெய்வேலி, 3)கடலூர், 4) ராணிப்பேட்டை, 5) மேட்டூர், 6) தூத்துக்குடி போன்ற 6 மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பெரும் விபத்துக்களினால் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் பேரபாயத் தடுப்பு மற்றும் நிர்வாகத் திட்டங்கள் தயாரிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. 1999 ஆம் ஆண்டில் பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து 88 உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் பெறப்பட்டு, அவை சில நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான அவசரகால ஆயத்த நிலைக் குழுவிற்கு மாவட்ட ஆட்சியாளர்கள் பொறுப்பாளர்களாகவும், தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் செயல்பாட்டிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 23-04-1998 தேதியிட்ட அரசாணை எண் எம்.எஸ்.109 இல் மாநில மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும் இராசாயனத் தொழிற்சாலைகளில் ஏற்படக்கூடிய பெரும் விபத்துக்கள் மற்றும் அபாய நிலை அழிவுகளைத் தடுத்து, கட்டுப்படுத்துவதற்கான வழிவகைத் திட்டங்களை உருவாக்க அரசுக்கு இக்குழுக்கள் உதவுகின்றன. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மாவட்ட அளவிலான நெருக்கடி நிலைக் குழுக்களில் உறுப்பினர் செயலாளர்களாகவும், மாநில அளவிலான நெருக்கடி நிலைக் குழுவிற்கு தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் உறுப்பினர் செயலாளராகவும் செயல்படுகின்றனர்.



2000 ஏப்ரல் 19]

7.13 உண்மையில் ஏற்படக்கூடிய அபாய நிலை அவசரகால கட்டத்தில் தேவைப்படும் ஏற்பாடுகள் குறித்து ஆவன செய்வதற்கு, அவ்வப்போது தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை அலுவலர்களின் மேற்பார்வையில் தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு, ஆயத்த நிலைத் திட்டங்கள் சீர்படுத்தப்படுகின்றன. 1999 ஆம் ஆண்டில், இதுபோன்ற 89 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த, மேம்பட்ட கண்காணிப்பு கருதி, ஊறு விளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகளில் இருந்து பாதுகாப்பு அறிக்கைகள் கோரப்பட்டு, தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

7.14 தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 41 அ-வில் குறிப்பிட்டுள்ள மனை மதிப்பீட்டுக் குழு “பெரும் விபத்து மற்றும் பேரபாயம்” விளைவிக்கக் கூடிய செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான மனைப் பொருத்தம் மற்றும் சுற்றுப்புற சூழ்நிலைகள் குறித்து ஆராய்ந்து ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. மனை மதிப்பீட்டுக் குழுவில் பல்வேறு அரசுத் துறை அலுவலர்களும், வல்லுநர்களும், சுற்றுச் சூழல், வானிலை மற்றும் தொழிலியல் உடல்நிலை பிரிவுகளின் விஞ்ஞானிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த ஒப்புதல்களில் அரசு விதிக்கும் நிபந்தனைகள் கடைபிடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு தொடக்க நிலையிலிருந்து ஆலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது. இதுவரை பேராபாயம் விளைவிக்கக்கூடிய செயலில் ஈடுபடும் 49 தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மனை மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன. அவற்றில் 45 விண்ணப்பங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கம்:

7.15 குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் 73 தொழில்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் 50 தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் கிடைப்பது இத்துறையின் மூலம்தான் செயலாக்கப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தை, தீவிரமாக செயல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச

ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. ஆய்வின்போது காணப்படும் சட்ட முரண்பாடுகளுக்கு நீதிமன்ற நடவடிக்கை தொடரப்படுகின்றன.

நிலைப் நீதிமன்றங்கள் டு உடல் பாதிப்பு சாலைகள் நக்கப்பட்டு, முறை தனிக் ான்ற 89

7.16 1999ஆம் ஆண்டில் 61 நீதிமன்ற வழக்குகளும், 15 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இவைகளில் 10 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, 39.5 தொழிலாளர்களுக்கு பெற்று வழங்கப்பட்டது.

**குழந்தைத் தொழிலாளர்முறை நீக்குதல்:**

7.17 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் பல்வேறு சட்ட விதிமுறைகளுள் ஒன்றான பிரிவு 67-ன்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் தொடர்பாக இத்துறை மிகவும் சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி சட்ட விதிகளை கடைபிடிக்க தவறிய தொழிற்சாலை நிர்வாகங்கள் மீது தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளுக்கு குழந்தைத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் பொருந்தாது என்பதாலும் தொழிற்சாலை சட்டப் பிரிவு 92-ல் விதிக்கப்பட்ட தண்டனையைவிட கடுமையானதாகக் கருதப்படும் குழந்தைத் தொழிலாளர் சட்டம் பிரிவு 14-ன்கீழ் தண்டனை விதிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறாக 1999ஆம் ஆண்டு 105 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ரூ. 5,48,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

7.18 குழந்தைத் தொழிலாளர் பணிமுறை நீக்குதல் மற்றும் மறுவாழ்வு குறித்து இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த சிறப்பு மிகுந்த தீர்வாணையில் சில கட்டளைகளை வழங்கியுள்ளது. இந்தக் கட்டளைகளின் அடிப்படையில் ஊறு விளைவிக்கும் செயல்முறைகள் உள்ள தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிமுறையை நீக்க, கூர்ந்த நடவடிக்கைகளை தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை எடுத்து வருகிறது. இதன்படி, இதுவரை குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்தியதற்காக 6430 சட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டு அந்த நிர்வாகங்கள் பணிக்கமர்த்திய ஒவ்வொரு குழந்தைத் தொழிலாளிக்கும் ரூ.20,000/- இழப்பீட்டுத் தொகையாக வழங்க கோரப்பட்டது. மேலும் குழந்தைத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்ட விதிகளை



7.1ாக 6430 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தேவை ஆண்டில் இம்முறையில் ரூ. 10,000/- அபராதத் தொகையாக தொழிற்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.1,60,000/- தொழிற்சாதொழிலாளர்களை பணிக்கமர்த்திய நிர்வாகங்களிடமிருந்து திட்டங்கட்டுள்ளது. மேலும் இன்னும் இந்த இழப்பீட்டுத் தொகை மாதிரி வர்களிடமிருந்து அத்தொகையை வசூலிக்க சட்டபூர்வமான செயல்முறைகள் தொடரப்பட்டு வருகின்றன.

விளைவிக்கிய உச்ச நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, அறிக்கைகளு 7 மாவட்டங்களில் தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு கண்காணி பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு நல நிதிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் 6 மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும், விருதுநகர் மாவட்டத்திற்கு அந்த மாவட்ட நீதிபதி தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அக்குழுவின் உறுப்பினர் செயலர்களாக சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நல நிதிக் குழுவின் முக்கிய செயல்திட்டம், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு, மருத்துவ மற்றும் நல வசதிகள் அமைத்துத் தருவதே ஆகும். இத்திட்டம் அந்தத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் குடும்பத்தினருக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. விருதுநகரில் உள்ள இந்த நல நிதிக் குழு, குழந்தைகளுக்குப் போதிய கல்வி அளிப்பதே எல்லா வகையிலும் சிறந்த நிவாரணம் எனத் தீர்மானித்து விருதுநகரில் ரூ.28,40,600/- செலவில் இலவச உறையுள் பள்ளி அமைப்பதென முடிவெடுத்து அரசிற்கு பரிந்துரைத்துள்ளது. அப்பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த நல நிதிக் குழு எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிறதா, அதன்படி அந்தப் பயன்கள் பதிவுபெற்ற பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்குச் சென்றடைகிறதா என்பனவற்றை கவனத்துடன் இத்துறை கண்காணித்து வருகிறது.

7.20 மேற்குறிப்பிட்டுள்ள செயல்பாடுகள் தவிர குழந்தைத் தொழிலாளர் பணிமுறை ஒழிப்பு சம்பந்தமாக தன்னார்வு மற்றும் தொண்டு நிறுவனங்களின் திட்டங்களின் நம்பகத் தன்மை மற்றும் தொடர்ந்து நிலைக்கக்கூடிய தன்மை சம்பந்தமாக பரிசீலித்து, மத்திய அரசுக்கு பரிந்துரைக்க இத்துறை ஒரு பாலமாக செயல்படுகிறது.

7.21 மேலும், பொதுமக்கள், தொழில் முனைவோர் மற்றும் பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வண்ணம், குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக காணப்படும் சிவகாசி, திருப்பூர் மற்றும் தூத்துக்குடி போன்ற இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970:**

7.22 தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணிநிலையை ஒழுங்குபடுத்தி, நேரடி தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளையும், சலுகைகளையும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் பெற்றுத் தருவதே இந்த அரசின் கொள்கையாகும். ஒப்பந்த முறையில் தொழிலாளர்களை பணிக்கமர்த்தும் பதிவு பெற்ற தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை முதன்மை வேலையளிப்பவராக பதிவு செய்தும், ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமம் வழங்கியும் இச்சட்டம் செயல்படுத்தப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியம், வேலை நேரம், சம்பளத்துடன்கூடிய விடுப்பு, விடுமுறை நாள் சம்பளம் போன்ற நேரடி தொழிலாளர்கள் பெறுகின்ற அனைத்து சலுகைகளும், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு கிடைக்க உறுதி செய்யப்படுகிறது. 1999ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர்மீது 7 நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குதல் சட்டம், 1981:**

7.23 24 தொடர்மாதங்களில் 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிரந்தர அந்தஸ்து வழங்குவதை இச்சட்டம் உறுதி செய்கிறது. இத்துறையின் சீரிய நடவடிக்கையால் 1999 ஆம் ஆண்டில், 25,060 தொழிலாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

**இதரச் சட்டங்கள்:**

7.24 மேற்குறிப்பிட்ட சட்டங்களைத் தவிர சம்பளப்பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.





## அத்தியாயம்-8

### உடல்நலம், பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மேம்பாடு

**உடல்நல மேம்பாடு:**

8.1 தமிழகத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகளில் ஒவ்வாமை, நச்சுத்தன்மை, புற்றுநோய்க் காரணிகள் போன்ற பல்வேறு கேடு விளைவிக்கும் தன்மையுள்ள இரசாயனப் பொருட்கள் அதிக அளவில் கையாளப்படுகின்றன. இதன் காரணமாக, தொழிலாளர்களின் உடல்நலத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய அபாய சூழ்நிலைகள் அதிகரித்துள்ளன. எனவே, தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் சுகாதார மேம்பாடு குறித்து கண்காணிக்கவும், சீர்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகிறது. இதன் அடிப்படையில், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அடங்கிய மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவ அலுவலர்கள் தொழிற்சாலைகளில், சுகாதார அளவீடுகள் மேற்கொண்டு, அதன்படி தொழிலாளர்களின் உடல்நல மேம்பாடு குறித்து தக்க தடுப்பு நடவடிக்கைகளையும் மற்றும் அவர் தம் நல மேம்பாட்டு வழிவகைகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

8.2 மேலும், சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார சீர்கேடு விளைவிக்கும் தன்மையுள்ள அமோனியா, குளோரின், சல்பர்-டை ஆக்ஸைட், ஹைட்ரஜன் சல்பைடு போன்ற இரசாயனப் பொருட்களால் தொழிலாளர்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இத்துறையில் இயங்கி வரும் “தொழில் நலவியல் ஆய்வகம்” இப்பாதிப்பினைத் தடுக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. சிவில் சர்ஜன் தகுதியில் உள்ள மருத்துவ அலுவலரின் தலைமையில் இந்த ஆய்வகம் இயங்குகிறது. இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல்நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளை, காற்றுச் சோதனை மற்றும் அளவீட்டின் வழி கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் இந்த ஆய்வகத்தால் வழங்கப்படுகின்றன. ஒலி, தூசி மற்றும் காற்றோட்டம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக்கூடிய விளைவுகள் குறித்தும் இந்தத் தொழில் நலவியல் ஆய்வகம் ஆய்வு மேற்கொள்கிறது.

8.3 மாநில தொழிலாளர் காப்பீட்டுக் கழகம் தற்போது அளித்து வரும் மருத்துவ வசதிகளுடன் தென்னிந்திய வேலையளிப்போர்

[2000 ஏப்ரல் 19

இணையத்துடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 62ஒ-வில் குறிப்பிட்டுள்ளபடி அமைக்கப்பட வேண்டிய "தொழிலியல் மருத்துவ மையம்" அமைப்பது குறித்து இத்துறை ஆலோசித்து வருகிறது.

8.4 தொழிற்சாலைகளில் ஏற்படும் அதிகப்படியான இரைச்சல் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் காதுகள் செவிடாகும் வாய்ப்பு ஏற்படுவதுடன் அவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள இத்துறை சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழிற்சாலைகளின் பல்வேறு பகுதிகளில் ஏற்படும் சப்தத்தினை அளவீடு செய்ய, தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கு ஒலி அளப்பான் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளில் எங்கெல்லாம் அதிகளவு இரைச்சலால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் இத்துறை ஆய்வாளர்கள் அந்தச் சப்தத்தினை இந்த அளவீட்டு கருவி மூலம் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க வழிமுறைகள் தெரிவித்து வருகின்றனர்.

**சோதனை மற்றும் பாதுகாப்புப் பணிகள்:**

8.5 துரித தொழில் வளர்ச்சியின் காரணமாக இரசாயனத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் தொடங்கப்படுகின்றன. இதன் காரணமாக தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, தொழிற்சாலைகள் சட்டத்தைச் செயல்படுத்துவதுடன் தொழிலாளர் பாதுகாப்பு, தொழிலாளர் உடல்நலம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற பிரிவுகளிலும் தனது பணிகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளது.

8.6 இதன் அடிப்படையில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் 1988 ஆம் ஆண்டு முதல் 10 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் இயங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும், அதிக அழுத்தத்தில் இயங்கும் அழுத்தக் கலன்களின் இயக்கப் பாதுகாப்பை உறுதி செய்வதே சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்களின் முதன்நிலை பணியாக வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் தொழிலாளர் மற்றும் நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு, பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தும் பொறுப்பும் இக்கோட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. விபத்துக்கள் அதிகம் ஏற்படும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் செயல் நிறைவேற்றங்கள் குறித்த பாதுகாப்பு



2000 ஏப்ரல் 19]

அளவீடுகள் இக்கோட்டங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கோட்டங்களின் 8 உதவி மருத்துவ அலுவலர்கள் அபாய செயல்முறை உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய உடல்நலப் பாதுகாப்பு குறித்து கண்காணிப்பு மேற்கொள்கின்றனர்.

8.7 நச்சுத் தன்மை வாய்ந்த பொருட்களைக் கையாளும் தொழிற்சாலைகளில், முறையான காற்றுச் சோதனை மேற்கொண்டு, சுற்றுச் சூழல் பாதுகாப்பினையும், தொழிலாளர் உடல்நலத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் தொழில் நலவியல் ஆய்வகம் வழங்குகிறது.

**மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்குதல்:**

8.8 தொழிற்சாலைகளில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிர்வாகத்தினரை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழக அரசு ஆண்டுதோறும், பாதுகாப்பு விருதுகள் வழங்கி வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில், அவை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் மேற்கொண்ட சீரிய முயற்சிகள் விளைவாக ஏற்பட்ட பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதம் குறைத்தல், நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ் எண்ணிக்கை, மிக அதிகமாக விபத்து நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், ரூ.2,500 மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள், 90 நிறுவனங்களுக்கு முதல் பரிசாகவும், ரூ.1,500 மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் 90 நிறுவனங்களுக்கு இரண்டாம் பரிசாகவும் வழங்கப்படுகின்றன.

8.9 இதேபோன்று விபத்து தடுப்பு நடவடிக்கையில் முக்கிய பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும்வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசின் "உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை உயர்த்துதல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைப் பற்றி பயன்மிக்க கருத்துக்கள் தரும் தொழிலாளர்களுக்கு, இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்:**

8.10 தமிழ்நாட்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக தொகுதி தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

8.11 இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமின்றி, 24 மணிநேர அடிப்படையில் மற்ற விபத்து நேர்வுகளுக்கும் அளிக்கப்படும். 1999ஆம் ஆண்டில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1,19,913 தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் இறப்பு ஏற்பட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000 வழங்கப்படும். 1999ஆம் ஆண்டில் 20 கோரிக்கைகள் பெறப்பட்டு ரூ. 8,52,500 ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு:**

8.12 போபாலில் 1984 இல் ஒரு இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவினால் நேரிட்ட பேரழிவிற்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள அபாயகரமான இரசாயனத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் ஊறு நேரிடாவண்ணம் அத்தொழிற்சாலைகளில் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் அமைக்கப்பட்டு வருகின்றனவா என்பதனை ஆய்ந்தறிந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு 1985ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்களைத் தலைவராகக் கொண்டு வல்லுநர் குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது. இக்குழு பயனுள்ள பல பரிந்துரைகளை அரசுக்குத் தெரிவித்தது.

8.13 இக்குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் மிகவும் ஊறு விளைவிக்கும் இரசாயனம் மற்றும் உயர்ந்த நச்சுத் தன்மை உள்ள கலவைகள் அடங்கிய பொருட்களை உபயோகிக்கும் இரசாயனம் மற்றும் இதர தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பான உற்பத்திமுறைகளை நடைமுறைப்படுத்தவும், தொழில் வழி நோய்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி தொழிலாளர்களின் உடல்நலனைப்



பாதுகாத்திடவும், தமிழக அரசு கீழ்க்கண்ட இரு குழுக்களை ஏற்படுத்தியது:—

1. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு *(அரசு ஆணை எண் 153, தொழிலாளர் துறை நாள் 26-2-1988)*

2. மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழு *(அரசு ஆணை எண் 154, தொழிலாளர் துறை நாள் 26-2-1988)*

**மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு**

8.14 மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவில் பல்வேறு அரசுத் துறைகளின் பிரதிநிதிகள், அபாயகரமான தொழிற்சாலை நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புக்கான பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகச் செயல்படுகிறார்.

8.15 மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன:-

(அ) மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலன் குறித்த நிலைகளின்மீது கொள்கை அளவிலான முடிவுகளை வகுத்திடல்.

(ஆ) உழைப்புப் படை/வல்லுநர் குழுவினரால் திரட்டப்படும் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி இரசாயனம் மற்றும் அபாயகரமான தொழிற்சாலைகளில் முழுமையான பாதுகாப்பு நிலையை அடைதல்.

(இ) இரசாயனம் மற்றும் அபாயகரமான தொழிற்சாலைகளில் பேரழிவுக் கட்டுப்பாடு அமைப்பினை (Disaster Control System) அறிமுகப்படுத்துதல்.

(ஈ) அபாயகரமான தொழிற்சாலைகளின் அமைவிடம்/ மனைப் பகுதியில் உற்பத்தி முறையால் ஏற்படும் அபாயங்கள் குறித்து ஆராய்ந்து அது தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகள் அமைத்திடல்.

[2000 ஏப்ரல் 19

8.16 அரசு ஆணை எண் 97 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 3-7-99-ன்படி இக்குழுவானது 1-7-1999 முதல் 30-6-2000 வரை ஓராண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழு**

8.17 மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுவில் அரசின் பல்வேறு துறையைச் சார்ந்த பிரதிநிதிகளும், தொழில் நிறுவனங்களது கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளும், தொழிற்சாலைப் பாதுகாப்பு வல்லுநர்களும் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலர் இக்குழுவின் தலைவராவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் / உறுப்பினர் செயலர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகச் செயல்படுகிறார்.

8.18 இக்குழுவானது அரசாணை எண் 96, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 8-7-88-ன்படி 1-7-1999 முதல் 30-6-2000 வரை ஓர் ஆண்டு காலத்திற்கு மீள அமைக்கப்பட்டுள்ளது.

8.19 மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுவின் முக்கியமான பணிகள் கீழ்க்காண்பவைகளாகும்:-

(அ) ஆபத்து விளைவிக்கக்கூடியதும், நச்சுத் தன்மை கொண்டுள்ளதுமான இராசயனப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய மற்றும் கையாளக்கூடிய தொழிற்சாலைகளில் துரித அளவீடு மேற்கொண்டு நடைமுறையில் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விவரங்கள் சேகரித்தல்.

(ஆ) அபாயகரமான தொழிற்சாலைகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளின் அவசியத்தினை ஆராய்ந்து அவற்றின் மேம்பாட்டிற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

(இ) தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் பிரிவு 40-பி (2)-ன்கீழ் பாதுகாப்பு அலுவலர்கள் (Safety Officers) நியமனம் செய்யப்பட வேண்டிய தொழிற்சாலைகளைக் கண்டறிதல்.

(ஈ) தொழில் வழி நோய்கள், உடல்நல அபாயங்கள் குறித்து தகவல்களை நாளது தேதி வரையில் சேகரித்து, பாதுகாப்பு மேம்பாட்டினை நிறைவேற்றிட உதவுதல்.



2000 ஏப்ரல் 19]

(உ) நச்சுத் தன்மை, வாயுக்கள், கசிவு, தீப்பிடித்தல், வெடிவிபத்து, போன்ற தொழிற்சாலை அபாயங்களை எதிர்நோக்கி அவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கான அவசரநிலை ஆயத்தங்களின் மேம்பாடு குறித்து ஆலோசனை வழங்குதல்.

(ஊ) தொழிற்சாலைகள் சட்டம், இந்திய நீராவிக் கலன் (கொதிகலங்கள்) சட்டம், மாசுக் கட்டுப்பாடுச் சட்டம், இந்திய மின்சாரச் சட்டம் போன்ற சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வருதல் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

8.20 உழைப்புப் படை/வல்லுனர் குழுவின் அறிக்கைகள் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுவின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டு அதன் பின்பு முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

8.21 21-6-1990 அன்று நடைபெற்ற மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது காகிதத் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் சுற்றுப்புறம் மாசுபடுதல் போன்ற அம்சங்களை ஆய்ந்து அறிந்து உரிய பரிந்துரைகள் செய்யும் பொருட்டு உபக்குழுக்கள் அமைப்பது என முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர்/உறுப்பினர் செயலர், சென்னை-6 அவர்களைத் தலைவராகவும் தொழிற்சாலைகள் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய துறைகளிலுள்ள மூன்று நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டும், உபக் குழுக்கள், முறையே தோல் பதனிடும் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள், சர்க்கரை எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலைகள், பெரும் விபத்து மற்றும் பேரபாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய அம்சங்கள் போதுமானவையாக உள்ளனவா, கூடுதல் பாதுகாப்பு அம்சங்கள் வழங்கப்பட வேண்டுமா என்பவை பற்றி ஆய்ந்தறிந்து உரிய பரிந்துரைகளுடன் அரசுக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டன. இந்த உபக் குழுக்களும் இத்தொழிற்சாலைகளில் ஆய்வுகள் நடத்தி அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்து, அதன்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

8.22 27-10-99 அன்று மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுக் கூட்டம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் காகிதத்

[2000 ஏப்ரல் 19

தொழிற்சாலைகள் மற்றும் சர்க்கரை, எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய அம்சங்கள் குறித்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட உபக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் அறிக்கைகள்மீது விவாதம் மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி காகித தொழிற்சாலைகள் மற்றும் சர்க்கரை, எரிசாராயம் மற்றும் மதுபானத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்த உபக் குழுவின் பரிந்துரைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**8.23 எதிர்காலத் திட்டங்கள் 2000-2001.**

(அ) தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன்கீழ் பிரிவு 40பி (i) (ii)-ன்படி அபாயகரமான மற்றும் பெரும் விபத்து ஏற்படக்கூடும் உற்பத்தி முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளில் இந்த அபாயங்களைக் களைந்தெடுக்கும் பொருட்டு, பாதுகாப்பு அலுவலர்களை (Safety Officers) நியமித்தல் தொடர்பான நடவடிக்கை.

(ஆ) கட்டடத் தொழிலாளர்கள் (பணிமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) தொடர்பான, 1996ஆம் வருடத்திய மத்திய அரசுச் சட்டத்தின்கீழ் மாநில விதிகள் உருவாக்கி, கட்டடத் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் பணிச்சூழலை மேம்படுத்திட உரிய நடவடிக்கை எடுத்தல்.

(இ) பேரபாயத் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்படும் பாதுகாப்புத் தணிக்கை அறிக்கைகளை (Safety Audit Reports) கூர்ந்தாய்வு செய்யும் பொருட்டு பாதுகாப்புத் தணிக்கைப் பிரிவு (Safety Audit Cell) அமைத்திடல்.

(ஈ) அனல் மின் நிலையங்கள் மற்றும் நூற்பாலைகள் ஆகிய தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்து ஆய்வுகள் நடத்தி அதன் பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு இரு துணைக் குழுக்கள் அமைத்தல்.

8.24 மேற்கூறிய திட்டங்களுக்கு உரிய வடிவம் தரும் வகையில் விரைவில் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மற்றும் மாநில அளவிலான உழைப்புப் படை/வல்லுநர் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன.



2000 ஏப்ரல் 19]

**பயிற்சி மற்றும் கருத்தரங்கு:**

**(அ) பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்:**

8.25 தொழிலகங்களில் விபத்துக்களின் நிகழ்வுகளைத் தடுத்திட சட்டச் செயலாக்க பணிகளுடன் பயிற்சிப் பணிகளை மேற்கொள்வதும் இன்றியமையாததாகிறது. விபத்துக்களைத் தடுத்திட, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு பற்றிய சரியானதொரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இத்தகைய பயிற்சிகளை இத்துறையின் சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டங்கள் ஏற்று செயல்பட்டு வருகின்றன.

8.26 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கவும், பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தொழிற்சாலை வளாகத்திற்கே சென்று, கட்டணம் ஏதுமின்றி பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களாலும், நிர்வாகத்தினராலும் பெரிதும் வரவேற்கப்பட்டு, தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தினரிடையே பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்தி அதன் மூலம் விபத்துக்களைக் குறைப்பதற்கு துணைபுரிந்துள்ளன. 1999 ஆம் ஆண்டில் 221 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 6,053 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(ஆ) சிவகாசி பயிற்சி மையம்:**

8.27 தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் அபாயகரமான வேதிப் பொருட்களைக் கையாளுகின்றனர். இவற்றைப் பாதுகாப்பாகக் கையாளும் வழிமுறைகள் இவர்களுக்குத் தெரிவதில்லை. இதன் காரணமாக தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் தவிர்த்திருக்கக்கூடிய பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. எனவே, பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேதியல் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுவதற்கும், செயல்படுத்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் மற்றும் இருப்பு வைத்துக் கொள்வதற்கும் பல்வேறு வகையான பாதுகாப்பு வழிமுறைகளை தொழிலாளர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென்று, சிவகாசியில் அரசால் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் தலைமையில் ஒரு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டது. இப்பயிற்சி மையத்தின் சீரிய பணியினைத் தொடர்ந்து தீப்பெட்டி மற்றும் பட்டாசு

தொழிற்சாலைகளில் விபத்துக்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. 1999 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தினால் நடத்தப்பட்ட 234 பயிற்சி வகுப்புகளில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலையைச் சார்ந்த 10,002 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**(இ) கருத்தரங்குகள்:**

8.28 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளன்றி தேசிய பாதுகாப்புக் குழுமம் போன்ற தொழிலக பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசு சாரா தன்னார்வ நிறுவனங்களுடன் இணைந்து, தொழிற்சாலை நிர்வாகத்தினரும், தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பாதுகாப்பு விழிப்புணர்வு பெறும்வண்ணம் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. 1999ஆம் ஆண்டில் இதுபோன்ற 16 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தேசிய பாதுகாப்புக் குழுமம், இந்திய இழப்புத் தடுப்பு நிறுவனம் போன்ற இதர நிறுவனங்களுடன் இணைந்து பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இத்துறை கருத்துரு கொண்டுள்ளது.

8.29 தொழிலகப் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் சீரிய பணிகளின் விளைவாக தமிழ்நாட்டில் விபத்துக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. புள்ளிவிவரங்கள் அடிப்படையில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற தொழிலகங்கள் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பணிபுரிந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1998 ஆம் ஆண்டில் முறையே 26,767 தொழிலகங்கள் மற்றும் 11,37,418 தொழிலாளர்கள் என்ற அளவிலிருந்து 1999 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கை முறையே 27,991 தொழிலகங்கள் மற்றும் 11,62,411 தொழிலாளர்கள் என்று உயர்ந்தாலும் விபத்துக்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில், 1998 ஆம் ஆண்டில் 3,766 விபத்து நிகழ்வுகளாக இருந்து 1999 ஆம் ஆண்டில் 2,688 விபத்து நிகழ்வுகளாக குறைந்துள்ளது.

**(ஈ) மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு:**

8.30 மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழுவின் மூன்று முக்கிய செயல்பாடுகளாவன:



(1) வேலை அளிப்பவர்கள் மற்றும் வேலை செய்பவர்களுக்குத் தக்க பயிற்சியும், ஆலோசனையும் தந்து இவர்களுக்கிடையே சுமுகமான, இயல்பான சூழ்நிலையை உருவாக்கி அதன் அடிப்படையில் உற்பத்தித் திறன் பற்றிய இவர்களுடைய மாறுபட்ட சிந்தனைகளுக்கு இடையே ஏற்படும் பெரிய இடைவெளியைக் குறைத்தல்.

(2) வேறுபட்ட சிந்தனை தாக்கங்களைக் கொண்ட உற்பத்தியின் இரண்டு முக்கிய கோட்பாடுகளான பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல என்பதையும் மாறாக அவை ஒன்றை ஒன்று சார்ந்திருப்பவை என்பதையும் வலியுறுத்தி ஒருங்கிணைப்பது.

(3) அரசு, நிர்வாகங்கள், தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து இயங்கும் இயக்கங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கையை ஒவ்வொரு வருடமும் விரிவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

8.31 மேற்கண்ட இயக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை சிறப்பான முறையில் செய்வதற்கு தமிழக அரசால், மாநில அளவிலான உற்பத்தித் திறன் குழு அரசாணை எண் 30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 7-2-1992-ல் உருவாக்கப்பட்டுள்ளது.

8.32. இக்குழு தமிழ்நாட்டில் அமைந்துள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தித் திறன் குறித்த பயிற்சி வகுப்பு நடத்த போதுமான வசதிகள் இல்லாதிருந்தபோதிலும், வருடத்திற்கு வருடம் சிறப்பாகக் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகிறது:

| வருடம் | நடத்திய பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை | பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1998 | 31 | 683 |
| 1999 | 35 | 877 |

8.33 மேலும், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், திருநெல்வேலி, தொழிற்சாலையில் ஒரு வேலை ஆய்வும், ஒரு வேலை பாதுகாப்பு ஆய்வும், இந்த உற்பத்தித் திறன் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8.34 தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர், தங்கள் தொழிற்சாலையில், உற்பத்தித் திறனை அதிகரிக்க அவர்களுக்கு ஊக்கமளிக்கும்

[2000 ஏப்ரல் 19

பொருட்டு, தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தித் திறன் விருது வழங்கி வருகிறது. 1999ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) அவர்களைத் தலைவராகக் கொண்டு இரண்டு துணைக் குழுக்கள் பதிவு செய்யப்பட்ட காகிதத் தொழிற்சாலைகளில் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றி ஆராய அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிற்றுண்டிச்சாலையில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய அறிக்கைகள் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. காகித ஆலைகளில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர் பணிமுறையை நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**மேம்பாட்டுப் பணிகள்**

**நவீனமயமாக்குதல்**

8.35 அந்நிய முதலீடு மற்றும் நவீன தொழில் நுட்பங்களுடன் பல்வேறு தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் தொடங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் ஆலைப் பாதுகாப்பும், தொழிலாளர் பாதுகாப்பும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியுள்ளது. இத்துறையில் பணியாற்றும் பொறியியல் கல்வித் தகுதி பெற்றுள்ள அலுவலர்கள் தற்கால தொழில் நுட்ப மேம்பாட்டுக்கேற்ப தங்களுடைய தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதன் அடிப்படையில் இத்துறையின் செயல்பாடுகள் கணினி, நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி முறைகள் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பின்வரும் முன்னுரிமைப் பகுதிகளில் தொலைநோக்குப் பார்வையுடன் நவீன செயல்பாடுகள் குறித்த எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன:—

(அ) நிர்வாகம்

(ஆ) தொழில்நுட்பத் திறமை

(இ) பயிற்சி மற்றும் மேம்பாடு

**(அ) நிர்வாகத்தை நவீனப்படுத்துதல்**

8.36 தற்போதுள்ள மனித வளத்தைக் கொண்டு, துறையின் செயல்பாடுகளை செம்மைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும், நடைமுறைகளையும் வகுக்க வேண்டியுள்ளது. பயனற்றப் பணிகள் குறைக்கப்பட வேண்டும். முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய இனங்கள் அடையாளம் காணப்பட்டு, அனைத்துப் பணிகளும் பலன் தரத்தக்க வகையில் முடுக்கிவிடப்பட வேண்டும். இவற்றை மனதில் கொண்டு கீழ்க்கண்ட முன்னுரிமைப் பணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன:—



2000 ஏப்ரல் 19]

(1) குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதை ஒழித்தல்.

(2) இரசாயனத் தொழிற்சாலைகளில் தொழில் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல்.

(3) தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறைந்தபட்சக் கூலி போன்ற நல வசதிகளை உறுதி செய்திடல்.

8.37 இம்முன்னுரிமைப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தும் நோக்குடன், குறைந்தபட்ச ஊதியச் சட்டச் செயலாக்கப் பணிகள், தீப்பெட்டி, பட்டாசு மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நிர்வாகச் செயல்முறைகளை எளிதாக்கும் வகையில் ஆய்வுகள், வரைபட ஒப்புதல், உரிமம் வழங்குதல் மற்றும் நிதிநிலை அதிகாரங்கள் ஆகியவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சீரான தகவல் பரிமாற்றத்திற்கு உகந்ததாகக் கணினி மற்றும் தொலை அச்சுக் கருவி போன்ற வசதிகள் இத்துறையில் அமைக்கப்பட்டுள்ளன. அபாய செயல்முறையுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளைக் கையாளுவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பத் தகவல்களைப் பெறும் நோக்குடன் இத்துறையில் கணினி இணையம் ஏற்படுத்தவும் கருத்துரு கொண்டுள்ளது.

**(ஆ) தொழில்நுட்பத் திறமையை நவீனமாக்குதல்**

8.38 சிக்கல் மிகுந்த இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் வளர்ந்து வருவதன் காரணமாக ஆய்வகத் துறை அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையை மேம்படுத்தி நவீனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக பொதுமக்களின் பாதுகாப்பினையும் குறிப்பாக தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. இதற்காக இரசாயனப் பொருட்கள் குறித்த் விபரக் கூறுகள் சேகரித்து, தகவல் பரிமாற்றம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, காலதாமதமின்றி செவ்வனே செயல்பட வேண்டிய நோக்குடன் இதன் அடிப்படையில் பெரும்பாலான அலுவலகங்களில் கணினிகள் நிறுவப்பட்டு, தகவல் விபரக் கூறுகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 19

8.39 மேலும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப ஆய்வகத் துறையின் அலுவலர்களின் தொழில்நுட்பத் திறமையையும் காலத்திற்கேற்ப மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு இத்துறை அலுவலர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பெயர் பெற்ற அமைப்புகளில் தீவிர பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே இப்பயிற்சிகுறித்து முறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட உள்ளன.

**(இ) பயிற்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை நவினமாக்குதல்**

8.40 தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், நிர்வாகத்தினர் ஆகிய அனைவருக்கும் பாதுகாப்புத் தொடர்பான, தரமான, பயனுள்ள பயிற்சியினை வழங்க துணைக் கருவிகள் தேவைப்படுகின்றன. நிழற்படக் கருவிகள், பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய ஒலி மற்றும் ஒளிநாடாக்கள், தொலைக்காட்சி கருவிகள் ஆகியவை பெரிதும் அவசியமாகின்றன. பயிற்சிக் கருவிகள் கூடுதலாகப் பெற்று பயிற்சிப் பிரிவினை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையில் உள்ள நூலகத்தில் புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை அதிகப்படுத்தி மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தொலைநோக்குக் கொள்கை**

8.41 உடனடி மற்றும் பயனுடைய முடிவுகளை எதிர்நோக்கி இத்துறை முறைப்படுத்தும் பணிகளை அன்றாடப் பணியாக மேற்கொண்டுள்ளது. இத்துடன் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் சுற்றுச் சூழல் குறித்த மேம்பாட்டுத் திட்டங்களைச் செவ்வனே செய்து தொழிலகங்களுக்கு துணை புரிய இத்துறை அடிப்படை வசதிகளை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. புதிய தொழில்நுட்பங்களுடன்கூடிய புதிய இரசாயனப் பொருட்களுடன் பல்வேறு தரப்பட்ட தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதன் காரணமாக ஏற்படக்கூடிய இடையூறுகளிலிருந்து மனித சமுதாயத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண்டியுள்ளது.

8.42 இந்நோக்கில் தொலைநோக்குக் கொள்கையுடன் தமிழ்நாட்டில் ஒரு தொழிலகப் பாதுகாப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பயிற்சி மையம் அமைப்பது சம்பந்தப்பட்ட செயல் திட்டத்தினை வகுக்க, தொழிலாளர் மற்றும்



2000 ஏப்ரல் 19]

வேலைவாய்ப்புத் துறை செயலாளர் தலைமையில் செயல் திட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆராய்ச்சி நிலையத்தில் அமையக்கூடிய வசதிகள் மற்றும் திட்டங்கள் தமிழகத் தொழிற்சாலைகளின் தேவைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்**

8.43 ஆய்வகத் துறையின் அனைத்துப் பணிகளிலும் பாராட்டத்தக்க வகையில், முன்னேற்றமான வளர்ச்சியை இத்துறையின் செயல் நிறைவேற்ற அறிக்கையில் காண முடிகிறது. 1999 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 26,767 லிருந்து 27,991 ஆக அதிகரித்து 11,62,411 தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர். அதிக அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 27,914 முறையான ஆய்வுகளும், 1,180 சோதனை ஆய்வுகளும், 91 திடீர் ஆய்வுகளும், 4,714 தனி மற்றும் சிறப்பு, விடுமுறை மற்றும் இரவு வேலை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் கட்டளையின்படி தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களின் பணிமுறையினை நீக்குவதற்கு சிறப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற முறைப்படுத்தும் பணிகளுடன், 221 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளும், 16 கருத்தரங்குகளும் தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பான பணிமுறைகளைச் செம்மைப்படுத்த நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் ஏற்கெனவே குறைந்த அளவில் இருந்த விபத்துக்களின் நிகழ்வுகள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன. விபத்துக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 3,766 லிருந்து இந்த ஆண்டு 2,688ஆக குறைக்கப்பட்டுள்ளது. விபத்து நிகழ் எண்ணிக்கை விகிதமும் ஒரு மில்லியன் மனித நேர அடிப்படையில் 0.99 ஆக மட்டுமே உள்ளது. மேலும் இனி வருங்காலங்களில் தொழிற்சாலைகளில் விபத்துக்களே இல்லை என்னும் சாதனை படைத்திடவும், சிறந்த உற்பத்தித் திறனுடன் தொழிலாளர் நல்லுறவு பராமரிக்கப்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் இத்துறை செயல்படும்.

[2000 ஏப்ரல் 19

# அத்தியாயம்-9

## தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்

9.1 தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்ட ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் (தொழிலாளர்களும், வேலையளிப்போரும்) தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் 1.75 சதவிகிதம் மற்றும் வேலையளிப்போர் 4.75 சதவிகிதத்துக்கு ஈடான ஒரு தொகையை அவர்தம் பங்காக அளிக்க வேண்டும். 1-1-1997 முதல் மாத வருமானம் ரூ.6,500/-க்கும் குறைவாகப் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

9.2 இத்திட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்குப் பின்வரும் உதவிகள் அளிக்கப்படுகின்றன:

1. மருத்துவ உதவி : மருத்துவப் பொருட்களுடன் சிகிச்சை அளித்தல்.
2. உடல் நலமின்மைக்கான உதவி
3. நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி
4. பேறுகால உதவி
5. தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி
6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கான உதவி
7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி
8. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி
9. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை

(2 முதல் 9 வரை) — பணமாக அளித்தல்.

9.3 இத்திட்டத்தின்கீழ் மருத்துவ உதவி அளிக்கும் பொறுப்பு மாநில அரசின் கடமையாகும். இதன் பொருட்டு ஏற்படக்கூடிய செலவினம் மாநில அரசும் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் 1:7



2000 ஏப்ரல் 19]

என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 01-12-1999 முடிய இத்திட்டத்தின்கீழ் நன்மை அடைந்து வரும் நபர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை | 13,29,856 |
| 2. | பயனடைவோரின் எண்ணிக்கை | 51,59,841 |
| 3. | 1998-99 ஆம் ஆண்டு புதிதாகச் சேர்ந்தோர் எண்ணிக்கை | 13,857 |

9.4 தமிழ்நாட்டில் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற அனைத்து பகுதிகளிலுள்ள தொழிலாளர்களின் குடும்பத்தினரும் முழு மருத்துவ சிகிச்சைப்பெற தகுதியுடையவர்கள் ஆவர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மருத்துவ உதவிக்கான தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கின்றது. அதன்படி ஈட்டுறுதி செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிலாளருக்கும் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஓர் ஆண்டிற்கு உச்சவரம்பு ரூ.600/- ஆக 1-4-1999 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. முழு மருத்துவ வசதிக்காக ஓர் ஆண்டிற்கு ஒரு காப்பீட்டு நபருக்கு நிர்வாகச் செலவின் பொருட்டு ரூ. 360/-ம், அம்மாதிரியே மருந்து செலவிற்கு ரூ.170/-ம் மீளப்பெறும் மருத்துவச் செலவிற்கு ரூ. 50/-ம் மற்றும் கருவிகள் பராமரிப்பிற்கென ரூ.20/-ம் வழங்கப்படுகிறது.

9.5 இந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேலும் அதிகமான தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில் தேவையான இடங்கள் கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மேலும் மருந்தகங்களும் மருத்துவமனைகளும் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1999-2000 | : | 14 |
| 2000-2001 | : | 14 |
| 2001-2002 | : | 11 |

[2000 ஏப்ரல் 19

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்திய சிகிச்சை முறை:**

9.6 தற்போதுள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சித்த வைத்திய பிரிவு இயங்கி வருகின்றது. இப்பிரிவினை இம்மாநிலத்திலுள்ள சேலம், மதுரை, சிவகாசி, வேலூர், ஒசூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மேம்படுத்தப்பட்ட சிறப்பு சிகிச்சை வசதிகள்:**

9.7 சென்னை மற்றும் கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் துறைகள் ஏற்படுத்தும் திட்டம் ஆய்வில் உள்ளது.

**விசைத்தறித் தொழிலாளர்களை தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்திற்குள் கொண்டு வருதல்:**

9.8 இதுவரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தால் பயன்பெறாத விசைத்தறித் தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படும்போது மாநிலத்திலுள்ள சுமார் 25,000 விசைத்தறித் தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறுவர்.

**சிவகாசி, வேலூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் தரம் உயர்த்துதல்:**

9.9 தற்போது 50 படுக்கை வசதிகளுடன் இயங்கி வரும் சிவகாசி மற்றும் வேலூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளை 100 படுக்கை வசதிகள் உள்ளதாக தரம் உயர்த்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகா முறை அறிமுகப்படுத்துதல்:**

9.10 முறையான யோகா பயிற்சியின் மூலம் குறிப்பிட்ட சில நோய்கள் குணமடைகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் வழக்கமான சிகிச்சையுடன் யோகா பயிற்சியையும் நோயாளிக்கு அளிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2000 ஏப்ரல் 19]

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் புதிதாக விரிவுபடுத்தப்படவுள்ள பகுதிகள்:**

9.11 பெரியநாயக்கன்பட்டி (சிவகாசி), கடலூர், வடமதுரை மற்றும் தாடிக்கொம்பு (திண்டுக்கல் மாவட்டம்), சிங்கம்புணரி (சிவகங்கை மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்), பாகலூர் (தர்மபுரி மாவட்டம்) ஆலங்குளம் மற்றும் ஆமத்தூர் (விருதுநகர் மாவட்டம்) மற்றும் தென்காசி ஆகிய 11 பகுதிகளில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்க அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் தேவையான மருத்துவ வசதிகள் செய்யப்பட்ட பிறகு மத்திய அரசின் அரசிதழில் அறிவிப்பு வெளிவந்தவுடன் புதிய மருந்தகங்கள் செயல்படத் தொடங்கும். இதன் மூலம் சுமார் 17,609 தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயன்பெறுவர்.

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு நவீன கருவிகள் வழங்குதல்:**

9.12 சென்னை (அயன்புரம்), கோயம்புத்தூர், சேலம், மதுரை, வேலூர், ஒசூர் மற்றும் சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு ரூ.1.07 கோடி மதிப்பிற்கு நவீன கருவிகள் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் காப்பீட்டாளர்கள் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளில் மேற்படி நவீன கருவிகள் மூலம் பயன்பெறுவர்.

**மருத்துவச் செலவு திரும்ப அளித்தல்:**

9.13 நடப்பு ஆண்டில் இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரக அறுவை சிகிச்சைகள் மற்றும் 136 சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் செய்து கொண்டதற்கான ஈட்டுறுதி நபர்கள் செலவழித்த தொகையான ரூ.19,22,028/-ஐ மீளப் பெற்றுள்ளனர்.

**சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டு செயலாக்கப்பட்ட திட்டங்கள்:**

9.14 1999-2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் செயலாக்கப்பட்டுள்ளன.

1. மருத்துவ வசதிக்கான உச்சவரம்பு ரூ.600/-ஆக 1-4-1999 முதல் உயர்த்தப்பட்டது.

[2000 ஏப்ரல் 19

2. திருச்சியில் 50 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தற்போது இயங்கி வருகிறது.
3. மார்த்தாண்டம் பகுதியில் நித்திரவிளை, இடைக்கோடு மற்றும் குழித்துறை ஆகிய 3 இடங்களில் உள்ள முந்திரித் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
4. அவினாசியில் ஒரு மருத்துவர் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 1-2-1999 முதல் இயங்கி வருகிறது.
5. வேடசந்தூரில் ஒரு மருத்துவர் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் 1-11-1999 முதல் இயங்கி வருகிறது.



2000 ஏப்ரல் 19]

# அத்தியாயம்-10

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

**முன்னுரை**

10.1 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திடம் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நிர்வகிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவையாவன (1) தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (2) தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதி (3) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை நிதி ஒதுக்கத் திட்டத்தின்கீழ் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், சமூகப் பாதுகாப்பு அளிப்பதும், தொழிலாளர்கள் பணியாற்றும் காலத்திலேயே அவர்களிடம் சேமிப்பு உணர்வினைத் தூண்டுவதும், அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவர்கள் பயன்பெறவும், அவர்கள் பணியிலிருக்கும்போது இறந்தால் அவர்களுடைய குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் நிதி ஒதுக்கம் செய்வதும் இம்மூன்று திட்டங்களின் முதன்மையான நோக்கங்களாகும். கடந்த 48 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்பட்டு வந்த வரலாற்றினை உற்று நோக்கினால் அது படிப்படியாக முன்னேற்றம் கண்டு அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் மென்மேலும் அதிகத் தொழிலாளர்களை அதன் பிடிக்குள் கொண்டு வந்துள்ளது. இம்மூன்று திட்டங்களும் வெவ்வேறு சமூகப் பாதுகாப்பினை அளிக்கின்றன. இதில் அரசு, தொழிலாளர், பணியமர்த்துவோர் ஒன்றிணைந்து செயல்படுகின்றனர். கடந்த ஆண்டுகளில் இம்மூன்று திட்டங்களின்கீழ் கிடைத்த பயன்கள் கணிசமாக அதிகரிக்கப்பட்டு தொழிலாளர்களுக்குக்கூடுதல் பலன்களை அளித்துள்ளன.

10.2 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களின் தேவைகளை தமிழ்நாட்டில் உள்ள மண்டல வருங்கால வைப்பு நிதி நிறுவனம் கவனித்து வருகிறது.

**தமிழ்நாடு வட்டாரத் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் வட்டார அலுவலக, துணை வட்டார அலுவலக, துணைக் கணக்கு அலுவலகங்களின் அமைப்பு**

10.3 தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கான வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் வட்டார அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது.

இதற்கு மண்டல வருங்கால வைப்பு நிதி ஆணையர், நிலை-1 தலைவராவார். அவருக்கு உதவியாக 5 வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள், நிலை-2, 10 உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள் மற்றும் செயலாக்க அலுவலர்கள், உதவி கணக்கு அலுவலர்கள், பிரிவு கண்காணிப்பாளர்கள், மேல்நிலை எழுத்தர், கீழ்நிலை எழுத்தர் மற்றும் 'டி' பிரிவு ஊழியர்கள்-ஆக மொத்தம் 737 பணியாளர்கள் இவ்வலுவலகத்தில் பணிபுரிகின்றனர்.

10.4 வருங்கால வைப்பு நிதி ஆணையர் நிலை-1-ன் கட்டுப்பாட்டின் கீழ் நிலை-2 வட்டாரத் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர்களைத் தலைவராகக் கொண்டு 6 துணை வட்டார அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னையின் புறநகர்களான அம்பத்தூர் மற்றும் தாம்பரத்தில் அமைந்துள்ள துணைக் கணக்கு அலுவலகங்கள் உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர்கள் பொறுப்பின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

**தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் 1952**

10.5 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டமானது, 3 ஆண்டுகளுக்கு மேற்பட்டு செயல்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அல்லது நிறுவனங்களுக்கு அவை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தியிருந்தால் அவற்றிற்குப் பொருந்தும். இந்த திட்டத்திற்கு 22-9-1997 முதல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி அறிவிக்கை வெளியிடப்பட்ட தொழிற்சாலைகள் பட்டியலின்கீழ் உள்ள 20 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்கள் அவை அமைக்கப்பட்ட நாள் முதல் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். எனினும் மின்சக்தி உதவியின்றி மற்றும் 50 தொழிலாளர்களுக்குக் குறைவாக பணிபுரியும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

**செயல்வரம்பு**

10.6 இந்த வட்டார, அலுவலக வாரியாக 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின் செயல்வரம்பின்கீழ் வரக்கூடிய தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை வருமாறு:



| | | |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 10851 |
| 2. | துணை வட்டார அலுவலகம், கோயம்புத்தூர் | 5894 |
| 3. | துணை வட்டார அலுவலகம், மதுரை | 6117 |
| 4. | துணை வட்டார அலுவலகம், திருச்சி | 5378 |
| 5. | துணை வட்டார அலுவலகம், திருநெல்வேலி | 3703 |
| 6. | துணை வட்டார அலுவலகம், சேலம் | 3378 |
| 7. | துணை வட்டார அலுவலகம், வேலூர் | 3514 |
| 8. | துணைக் கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 2411 |
| 9. | துணைக் கணக்கு அலுவலகம், தாம்பரம் | 1719 |
| | மொத்தம் | **42965** |

**செயல்வரம்பின் வளர்ச்சி**

10.7 இந்த வட்டாரத்தில், இதன் செயல்வரம்பிற்குள் வரும் பணி நிறுவனங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. அதனை கீழே உள்ள அட்டவணையிலிருந்து அறியலாம்.

| ஆண்டு | செயல்வரம்பிற்குட்பட்ட மொத்த நிறுவனங்கள் | வளர்ச்சி |
|---|---|---|
| 1996-97 | 34,311 | 2,092 |
| 1997-98 | 37,869 | 3,558 |
| 1998-99 | 41,331 | 3,462 |
| 1999-2000 (1999 டிசம்பர் வரை) | 43,423 | 2,092 |

**சந்தாதாரர்கள் பற்றிய விவரம்**

10.8 கடந்த ஆண்டுகளில், உறுப்பினர்கள் பதிவு செய்து கொள்வதானது படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. 30-12-1999 ஆம் நாள் நிலவரப்படி, இந்த வட்டாரத்தில் வருங்கால வைப்பீட்டு நிதி உறுப்பினர்களாக 37.18 இலட்சம் பேர் உள்ளனர். வட்டார/துணை கணக்கு அலுவலர்களுக்கிடையே பரவியிருக்கும் உறுப்பினர்கள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

[2000 ஏப்ரல் 19

| தொடர் எண். | அலுவலகம். | உறுப்பினர்கள் (இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. | மண்டல அலுவலகம், சென்னை | 11.41 |
| 2. | துணை வட்டார அலுவலகம், கோயம்புத்தூர் | 3.82 |
| 3. | துணை வட்டார அலுவலகம், மதுரை | 4.28 |
| 4. | துணை வட்டார அலுவலகம், திருச்சி | 2.72 |
| 5. | துணை வட்டார அலுவலகம், திருநெல்வேலி | 5.31 |
| 6. | துணை வட்டார அலுவலகம், சேலம் | 2.24 |
| 7. | துணை வட்டார அலுவலகம், வேலூர் | 2.01 |
| 8. | துணைக் கணக்கு அலுவலகம், அம்பத்தூர் | 2.38 |
| 9. | துணைக் கணக்கு அலுவலகம், தாம்பரம் | 3.01 |
| | மொத்தம் | 37.18 |

**வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகைகள்**

10.9 தமிழ்நாடு வட்டார, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (கணக்கு எண் 1) தொழிலாளர் வைப்பு நிதி இணைந்த காப்புறுதி நிதி (கணக்கு எண் 21) தொழிலாளர் ஓய்வூதிய நிதி (கணக்கு எண் 10) நிர்வாகக் கட்டணம் (கணக்கு எண் 2 மற்றும் 22) ஆகியவற்றிற்காக பின்வரும் தொகைகளை வசூலித்துள்ளது:-

| | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (நவம்பர் வரை) |
|---|---|---|---|---|
| கணக்கு எண் 1 | 34,71.65 | 44,402.75 | 58,925.78 | 43,655.36 |
| கணக்கு எண் 21 | 951.36 | 1058.42 | 1231.66 | 891.66 |
| கணக்கு எண் 10 | 30,694.76 | 35,118.01 | 38,306.65 | 27,680.63 |
| கணக்கு எண் 2 | 2,005.40 | 2,254.32 | 3,486.41 | 3,167.95 |
| கணக்கு எண் 22 | 39.38 | 43.65 | 67.70 | 44.40 |



2000 ஏப்ரல் 19]

10.10 ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவரது கணக்கில் நிலுவையிலுள்ள அவரது மற்றும் வேலையளிப்போரின் சந்தாத் தொகைக்கு ஆண்டு வருமான பங்கீட்டுப் பங்கு வட்டியாகப் வழங்கப்படுகிறது. 1952-53-ல் ரூ.3 ஆக இருந்த வட்டி விகிதம் தற்போது ரூ.12 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராவதற்குத் தேவையான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர், அவர்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களுக்காக வருங்கால வைப்பு நிதியில் முன்பணம் வழங்கப்படுகிறது.

1. உறுப்பினர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்திற்கு சந்தா செலுத்துவதற்காக.
2. உறுப்பினர் மற்றும் அவருடைய குழந்தைகள், சகோதரர்/சகோதரி ஆகியோரின் திருமணச் செலவுக்காக.
3. குழந்தைகளின் கல்வி
4. வீடு அல்லது வீட்டு மனை வாங்க
5. குறிப்பிட்ட முகவர்களிடமிருந்து வீடு கட்டுவதற்காக பெற்ற வீட்டுக் கடன்களைத் திரும்பச் செலுத்த
6. உடல் நலமின்மைச் செலவுக்காக
7. தற்காலிகமாக வேலையில்லாதபோது ஏற்படும் செலவை ஈடுகட்ட
8. உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக
9. இயற்கை காரணங்களினால் ஏற்படும் சேதத்திற்கு ஈடுகட்ட ஆகும் எதிர்பாராச் செலவு

இந்நிதியில் உறுப்பினராக உள்ள ஒருவர், அவருடைய பங்குத் தொகையை முழுவதுமாக/பகுதியாக பின்வரும் நேர்வுகளில் திரும்பப் பெற உரிமையுடையவராகிறார்.

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது நிரந்தரமாக மற்றும் முழுவதுமாக பணி செய்ய இயலாதபோது அல்லது ஆள் குறைப்பு செய்யப்படும்போது.
2. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் பணி முடிவு செய்யப்படும்போது.
3. சில சூழ்நிலை காரணமாக உறுப்பினர் தகுதியை விலக்கிக் கொள்ளும்போது.

[2000 ஏப்ரல் 19

10.11 கடந்த மூன்று ஆண்டுகளில் 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் உறுப்பினர்களுக்கு பல்வேறு வகைகளின்கீழ் பின்வரும் தொகைகள் வழங்கப்பட்டன:

| | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (டிசம்பர் வரை) |
|---|---|---|---|---|
| தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிலுவைகள் இறுதியாகத் தீர்க்கப்பட்டவை. | 1,73,361 | 1,93,421 | 2,22,667 | 1,80,822 |
| ஒரு பகுதி பெறுதல் முன்பணங்கள். | 73,978 | 71,509 | 75,063 | 44,293 |
| மாற்றங்கள். | 20,484 | 21,755 | 24,434 | 24,295 |

10.12 கடந்த மூன்று ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு பின்வரும் எண்ணிக்கையில் ஆண்டு கணக்கு விவர அறிக்கைகள் வழங்கப்பட்டன:

| 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (டிசம்பர் வரை) |
|---|---|---|---|
| 32,46,057 | 34,53,586 | 42,35,174 | 34,61,801 |

### தொழிலாளர் நல வைப்பீடுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976, செயல்வரம்பு

10.13 இத்திட்டம் 1-8-1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. இது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டம் பொருந்தக்கூடிய அனைத்துத் தொழிற்சாலைகள், ஏனைய வர்த்தக நிறுவனங்களின் தொழிலாளர்களுக்குப் பொருந்துகிறது.



2000 ஏப்ரல் 19]

10.14 காப்புறுதி நிதிக்கு தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லையென்று இருக்கும்போது, வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக இருக்கக்கூடிய தொழிலாளர்களின் சம்பளத்தில் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் தொழிலதிபர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியுள்ளது. மத்திய அரசும் இந்தக் காப்புறுதி நிதிக்கு சந்தா செலுத்துகிறது. இது, தொழிலதிபர்களின் சந்தாத் தொகையில் பாதிக்கும் சமமான தொகையாக இருக்கும்.

10.15 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராக இருக்கும் ஒருவர் இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்துவிட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் கடந்த 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரி தொகைக்குச் சமமாகக் கூடுதல் தொகை வழங்கப்படும். இது அதிகபட்சத் தொகை அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

10.16 கடந்த மூன்று ஆண்டுகளில் இறந்துவிட்ட உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு, தொழிலாளர் நல வைப்பீடுடன் இணைந்த காப்புறுதித் திட்ட பயன்வகையில் பின்வரும் அளவிற்கு தொகைகள் வழங்கி தீர்க்கப்பட்டுள்ளன.

| | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (டிசம்பர் வரை) |
|---|---|---|---|---|
| தொகை வழங்கி தீர்க்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை. | 3075 | 3372 | 3222 | 2536 |

### தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995

10.17 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை மாற்றிவிட்டு உருவாக்கப்பட்ட 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 16-11-1995 ஆம் நாளன்று 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், பின்வரும் பயன்களுக்கு வகை செய்கிறது:-

[2000 ஏப்ரல் 19

**ஓய்வூதிய வகைகள்:**

| | | |
|---|---|---|
| அ. | பணியில் இருந்தாலும் அல்லது இல்லாவிடினும், 58 வயது நிரம்பியதன்பேரில் | வயது முதிர்வு ஓய்வூதியம் |
| ஆ. | 50 வயது நிரம்பியதன்பேரில் ஆனால் 58 வயதுக்குக்கீழ் பணியைவிட்டுச் சென்று விட்டிருத்தல். | குறைக்கப்பட்ட ஓய்வூதியம் |
| இ. | முழுமையாக மற்றும் நிரந்தரமாக இயலாமை அடைந்ததன்பேரில் பணியைவிட்டுச் சென்று விட்டிருத்தல். | இயலாமை ஓய்வூதியம் |
| ஈ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில் | விதவை-சிறார் ஓய்வூதியம் |
| உ. | பெற்றோர் இறந்துவிடுவதன் பேரில்/அல்லது உறுப்பினர் இறந்தபிறகு தம்பதியர்களில் ஒருவர் மறு திருமணம் செய்து கொள்வதன் பேரில். | அனாதை ஓய்வூதியம் |
| ஊ. | உறுப்பினர் இறந்து விடுவதன் பேரில், தம்பதியர் இல்லாத போது உறுப்பினர் இறந்துவிடும் நாளன்று 25 வயதுக்குக் குறைவாக உள்ள தகுதிவாய்ந்த சிறார். | நியமனதாரர் ஓய்வூதியம் |

**10.18. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 16-11-1995 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

இது 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதிய பழைய திட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் மற்றும் 16-11-1995 ஆம் நாளன்று



2000 ஏப்ரல் 19]

அல்லது அதற்குப் பின்னர் வருங்கால வைப்பு நிதியில் உறுப்பினராகும் நபர்களுக்கும் பொருந்தும்.

1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் முன்னர் சேர விரும்பாத வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களும், இன்னும் பணியாற்றி வருபவர்களும் தற்போது 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர விரும்பலாம். அவ்வாறு விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு கால வரையறை ஏதுமில்லை.

1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய பழைய திட்டத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களும், 1-4-1993 ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் வேலையை விட்டுச் சென்றவர்களும் 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் சேர விருப்பம் தெரிவிக்கலாம்.

ஓய்வூதியத் திட்டத்தின் பங்குத் தொகை வீதம், அடிப்படை ஊதியம், அகவிலைப்படியில் 8.33 சதவீதம் ஆகும்.

வேலையளிப்பவரின் வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகையிலிருந்து ஓய்வூதியப் பங்குத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

ஓய்வூதியத் திட்ட உறுப்பினர்களின் ஊதியத்தில் 1.16 சதவீதம் என்ற வீதத்தில் மத்திய அரசும் ஓய்வூதிய நிதிக்கு பங்குத் தொகை அளிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற அதன் உறுப்பினர்கள், குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாவது தகுதிவாய்ந்த பணி புரிந்திருக்க வேண்டும்.

தகுதியுடைமையைத் தீர்மானிக்க, 1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய பழைய திட்டத்தின் கீழ் ஆற்றிய பணியும், தகுதியுள்ள பணிக்காலத்தின் ஒரு பகுதியாக அமையும்.

1971 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய பழைய திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஆற்றிய கடந்த காலப் பணிக்காக, அதாவது 15-11-1995 வரையில் ஆற்றிய பணிக்காக ஓய்வூதியப் பயன்கள் அளிக்கத்தக்கதாகும்.

16-11-1995 ஆம் நாளிலிருந்து தொடங்குகின்ற கால அளவுக்கான ஓய்வூதியத் தொகையின் அளவைத் தீர்மானிக்க வரையறுக்கப்பட்ட விதி வருமாறு:—

[2000 ஏப்ரல் 9

**ஓய்வூதியம் அளிக்கத்தக்க சம்பளம் x ஓய்வூதியத் திட்ட உறுப்பினர் பணிக்காலம்**

*70*

குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை, விதவை ஓய்வூதியம், குழந்தை ஓய்வூதியம் வழங்குவதற்குப் பொருந்தாது.

ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒரு மாதப் பங்குத் தொகையாக உறுப்பினர் செலுத்தியிருந்தாலும்கூட, இயலாமையுற்றோருக்கான ஓய்வூதியம் வழங்கத்தக்கதாகும்.

வழக்கமாக 58 வயதை அடைவதன் பேரிலேயே ஓய்வூதியம் வழங்கத் தக்கதாகும்.

50 வயதை அடைவதன் பேரிலும் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற உறுப்பினர் விரும்பலாம்.

உறுப்பினர் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெற விரும்புகிறபோது, முதலீட்டிற்கான வருவாய் என்ற பெயரில் ஒட்டு மொத்தத் தொகை ஒன்று மனைவி நியமனதாருக்கு வழங்கத்தக்கதாகும்.

10 ஆண்டுகளுக்கும் குறைவாக பணிபுரிந்துள்ள காரணத்தால் ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவராக இருக்கும் ஓர் உறுப்பினர் ஓய்வூதியப் பயனைத் திரும்பப் பெறுவதற்கு அல்லது திட்டச் சான்றிதழ் பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கலாம்.

உறுப்பினர், வேறிடத்தில் பின்னர் பணியாற்றியிருந்தால், ஓய்வூதியம் பெறுவதற்கு அவருடைய முந்தைய பணிக்காலத்தைக் கணக்கிட திட்டச் சான்றிதழ் வகை செய்கிறது.

திட்டச் சான்றிதழ் வைத்துள்ள உறுப்பினர் வேலையை விட்டுச் சென்ற காலத்தில் மரணமடைந்தால் கூட, அவருடைய குடும்ப உறுப்பினர்கள், ஓய்வூதியப் பயனைப் பெறுவர்.

ஒரே சமயத்தில் அதிக பட்சம் இரண்டு குழந்தைகளுக்கு குழந்தை ஓய்வூதியம் வழங்கலாம் என்ற வரையறைக்கு உட்பட்டு, விதவை ஓய்வூதியத்துடன் குழந்தை ஓய்வூதியம் வழங்கத்தக்கதாகும்.



2000 ஏப்ரல் 19]

திருமணமான மகள்களைப் பொறுத்த நேர்வில், 25 வயது வரை குழந்தை ஓய்வூதியம் வழங்கத் தக்கதாகும்.

விதவை/மனைவியை இழந்தவர் ஓய்வூதியம் பெறும் காலத்தில் மரணமடையும்போது அல்லது மறுமணம் புரிந்து கொள்ளும்போது, உயர்த்தப்பட்ட விகிதத்தில் ஆதரவற்றோர் உதவித் தொகை அனுமதிக்கத்தக்கதாகும்.

குடும்பம் ஒன்றும் இல்லாத உறுப்பினர் ஒருவர், ஓய்வூதியப் பயன்களைப் பெற எந்தவொரு நபரையும் நியமிக்கலாம்.

ஓய்வூதியத்தைத் தொகுத்துப் பெறுவதற்கான வழிவகை உள்ளது. அதிகபட்சமாக ஓய்வூதியத்தின் மூன்றில் ஒரு பங்கினைத் தொகுத்துப் பெறலாம். உறுப்பினர், ஓய்வூதியத்தின் தொகுக்கப்பட்ட மதிப்பில் 100 மடங்கிற்குச் சமமான தொகையினை ஒட்டு மொத்தத் தொகையாகப் பெறுவார். இம்முறை 16-11-1998 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

தொழிலபதிபர், ஓய்வூதிய நிதியில் பங்குத் தொகையினைச் செலுத்தத் தவறினால் கூட, தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிவகை உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பயன்களை ஆய்வு செய்வதற்காக, ஆண்டு ஆய்வு நிதி மதிப்பீடு செய்யப்படும்.

வங்கி மூலம் பயனடைவோருக்கு ஓய்வூதியம் தானாகவே வழங்கத்தக்கதாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கத் தக்க அதிகபட்ச சம்பளம் ரூ.5000/- ஆகும். இருப்பினும், தொழிலதிபர் மற்றும் தொழிலாளர் விருப்பத்தின் பேரில், திங்களொன்றுக்கு ரூ.5,000-க்கு மேற்பட்ட சம்பளத்திற்கு, இத்திட்டம் தொடங்கிய நாளிலிருந்து அல்லது சம்பளம் ரூ.5000-க்கு மேற்படும் நாளிலிருந்து (இவையிரண்டில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து) ஓய்வூதியப் பங்குத் தொகை செலுத்தப்படலாம்.

15-11-1995 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி, உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் சேர்ந்து வந்த தொகை தொழிலாளர், உறுப்பினர் தொழிலதிபர் ஆகிய இருவரின் பங்குகள் உட்பட, தொகையைத் திரும்பப் பெறக்கிடைக்கும். அதிலிருந்து எந்தவொரு பகுதியும் ஓய்வூதிய நிதிக்கு அளிக்கப்பட மாட்டாது.

1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் அவற்றின் வட்டார அலுவலகங்கள்,

துணை வட்டார அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் திறம்பட்ட வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியங்களின் எண்ணிக்கை.

***31-12-1999* ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி ஓய்வூதியம் பெறுபவர்கள்**

| உறுப்பினர் ஓய்வூதியம் | கணவர்/ மனைவி (விதவை/ மனைவியை இழந்தவர்) ஓய்வூதியம் | குழந்தை ஓய்வூ தியம் | ஆதர வற்றோர் ஓய்வூதியம் | நியமன தாரர் ஓய்வூதியம் | இயலாமை யுற்றோர் ஓய்வூதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| *46,340* | *16,871* | *20,515* | *223* | *98* | *71* | *84,118* |

1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், ஆண்டுதோறும் ஓய்வூதிய நிதியை மதிப்பிட வகை செய்கிறது. முதலாமாண்டு மதிப்பீடு செய்வதன் விளைவாக ஓய்வூதியம் பெறுபவர்கள், அவர்களுடைய ஓய்வூதியத்தில் 4 சதவிகிதத்தை இடைக்கால நிவாரணத் தொகையாகப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலுள்ள இந்தியன் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

சில பெரிய நிறுவனங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நாளன்றே ஓய்வூதியம் வழங்கல் ஆணை வழங்கப்படுகிறது. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்கின்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியப் பயன்களுடன் திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தின் பணியில் சேருவதன்பேரில் அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும். 10 ஆண்டுகளுக்குக் குறைவாகப் பணிபுரிந்த உறுப்பினர்கள், அவர்கள் பெற்ற சம்பளம், அவர்கள் பணியிலிருந்து வெளியேறிய நாளில் அவர்களுடைய பணிக்கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் ஓய்வூதியப் பயனைத் திரும்பப்பெற அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.



கடந்த மூன்று ஆண்டுகளில் கீழ்க்காணும் எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் ஓய்வூதியப் பயனைத் திரும்பப் பெற்றுள்ளனர்.

| | *1996-97* | *1997-98* | *1998-99* | *1999-2000 (1999 டிசம்பர் வரை)* |
|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | *1,42,799* | *1,63,058* | *1,55,246* | *1,57,791* |

**நிலுவை வசூல் நிர்வாகம்**

10.19 வேலையளிப்பவர்கள், ஒவ்வொரு மாதமும் பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்துச் சீட்டு ஒன்றின் மூலம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஓய்வூதிய நிதி, தொழிலாளர் வைப்பீட்டுத் தொகையுடன் இணைந்த ஈட்டுறுதி நிதி ஆகியவற்றுக்கான பங்குத் தொகைகளை, அந்தந்தக் கணக்குகளில் செலுத்துகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறுகிறபோதெல்லாம், தொகை செலுத்தத் தவறியவர் கண்டறியப்பட்டு, நிலுவைத் தொகை மதிப்பீடு செய்யப்பட்டு, நிலுவைத் தொகையை வசூலிக்க சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள கட்டாய மற்றும் தண்டனை விதிமுறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு நிதியாண்டின்போது இவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்ற கேட்புத் தொகை வழக்கமாக அந்த நிதியாண்டிலேயே வசூலிக்கப்படுகிறது. அவ்வாறு வசூலிக்கச் சாத்தியமில்லாத சில நேர்வுகளில் அது, கேட்புத் தொகை நிலுவையாகக் கருதப்பட்டு, வசூல் பணியாளரமைப்பினால் வசூலிக்கப்படுகிறது.

10.20 வசூல் பணியாளரமைப்பு 1991 ஆம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. கேட்புத் தொகை நிலுவையை வசூலிக்க, வட்டாரம் முழுவதற்கும் முதலில் ஒரு வசூல் அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர், பகுதி செயலாக்க அதிகாரிகளின் உதவியுடன் செயல்பட்டு வந்தார். பின்னர், சட்டத்தின்கீழ் உதவி ஆணையாளர்கள் (செயலாக்கம்) அனைவரும் வசூல் அதிகாரிகளாக அறிவிக்கையிடப்பட்டுள்ளனர். மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக கீழேயுள்ள விவர அறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு நிலுவை வசூலில் படிப்படியான முன்னேற்றம் காணப்பட்டது.

[2000 ஏப்ரல் 19

| ஆண்டு | நிலுவைத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | வசூலிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1996-97 | 2040.25 | 637.95 |
| 1997-98 | 2321.63 | 519.15 |
| 1998-99 | 3782.38 | 1416.02 |
| 1999-2000 (1999 டிசம்பர் வரை) | 5011.60 | 1202.11 |

**10.21** 31-12-1999 அன்றுள்ள நிலவரப்படி சந்தா செலுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கையும், நிலுவைத் தொகை வசூலிக்கப்படாததற்குரிய காரணங்களும் பின்வருமாறு:

| வரிசை எண் | நிலுவைத் தொகை வசூல் செய்யப்படாததற்கான காரணம் | சந்தா செலுத்தாத நிறுவனங்கள் |
|---|---|---|
| 1. | கலைக்கப்பட்ட நிறுவனங்கள் | 22 |
| 2. | உயர்நீதிமன்ற இடைக்கால தடைபெற்றது | 199 |
| 3. | தேசிய துணித் தொழில் கழகத்தால் முன்னரே எடுத்துக்கொள்ளப்பட்டவை | 6 |
| 4. | பிஐஎப்ஆர்/ஏஏஐஎப்ஆர் நேர்வுகள் | 45 |
| 5. | உடைமைக் காப்பாளர்/பாதுகாவலர் | 1 |

**10.22 நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்:**

நிலுவைத் தொகையைக் குறைக்க தனி ஊக்கம் அளிக்கும் வகையில், வசூல் செய்யும் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. வட்டார/துணை வட்டார அலுவலகங்களில் தற்போது இருக்கும் அனைத்து உதவி ஆணையாளர்களும் வசூல் செய்யும் அலுவலர்களாகச் செயல்படுகின்றனர். தற்போது அனைத்து துணை வட்ட



2000 ஏப்ரல் 19]

அலுவலகங்களும் சம்பந்தப்பட்ட வசூல் அலுவலர்கள் மூலம் அவர்களுடைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வசூல் செய்யும் பணியைத் தொடங்கியுள்ளது.

1999-2000 நிதியாண்டு வசூலிக்கத்தக்க நிலுவைத் தொகைகள், வசூலிக்க இயலாத நிலுவைத் தொகைகள் உட்பட நிலுவையாக இருந்த கேட்புத் தொகை ரூ.50.12 கோடியாகும். இதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பிஐஎப்ஆர் மற்றும் நீதிமன்றத் தடையின் பேரில் நலிந்த நிறுவனங்களாக, கலைக்கப்பட்ட நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தால் ரூ.23.68 கோடி வசூலிக்க முடியாததவையாக உள்ளது. இதில் எஞ்சிய ரூ.26.44 கோடி மட்டுமே வசூலிக்கத்தக்கதாகும். இதிலும் வசூலிக்கத்தக்க நிலுவைத்தொகை ரூ.14.42 கோடி போக ரூ.12.02 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவைத் தொகையை வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**10.23 பொதுமக்கள் குறைகளைப் பற்றிக் கேட்டறியும் வழி முறைகள்:**

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை, பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் நாளாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் திட்டத்திற்குரிய ஒருங்கிணைப்பு அலுவலராக உதவி ஆணையாளர்/வட்டார ஆணையாளர் பதவித் தரத்தில் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் அவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் வட்டார அலுவலகத்தில் மட்டுமல்லாது துணை வட்டார அலுவலகத்திலும் பொதுமக்கள் குறைகளை உரியவாறு தீர்த்து வைப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன:

(1) பொதுமக்கள் குறைகளைப் பதிவு செய்வதற்கு நிரந்தரப் பதிவேடு ஒன்று வைத்து வரப்படுகிறது.

(2) வட்டார ஆணையாளர்/உதவி ஆணையாளர்/பொதுமக்கள் தொடர்பு அதிகாரியைச் சந்திப்பதற்கு மனுதாரர்களுக்கு/ புகார்தாரர்களுக்கு இருக்கை ஏற்பாடு செய்யப்படுகிறது.

(3) சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு/பிரிவுக்கு பொறுப்பு வகிப்பவருக்குக் குறைகள் சம்பந்தப்பட்ட படிவத்தை உரியவாறு கொண்டு செயல்படுவதை உறுதி செய்யத் தேவையான ஏற்பாடு செய்யப்படுகிறது.

(4) வருபவரின் குறை பற்றிய நிலவரம் உரியவாறு சம்பந்தப்பட்டவருக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுத்த கணினி முனையம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[2000 ஏப்ரல் 19

(5) புகார் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதோடு புகார்தாரருக்கு/ மனுதாரருக்கு அம்முன்னேற்றம் குறித்து தெரிவிக்கப்படுகிறது.

(6) புகார்கள்/மனுக்கள் உரியவாறு வகை செய்யப்படுகின்றன. அப்பொழுதுதான் திட்டவட்டமாக உரியவாறும் அதுபற்றித் தெரிவிக்க முடிகிறது.

***10.24*** வட்டார அலுவலகத்திலுள்ள பொதுமக்களின் குறைகள் பற்றிய தகவல் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறப்பான சேவையைச் செய்து கொடுப்பதற்காக தற்பொழுது குறை தீர்க்கும் பிரிவில் கணினி முனையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் குறைகள் விரைவாகவும், தக்கவாறும் தீர்த்து வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு செய்வது, பொதுமக்கள் மிகுந்த மனநிறைவு அடைய வழிகோலுகிறது.

***10.25*** உள்ளூர் வட்டார அலுவலகங்களிலிருந்தும், துணை வட்டார அலுவலகங்களிலிருந்தும் வரப்பெறும் தகவல் குறை தீர்க்கும் அமைப்பு செயல்படுகிறது என்பதையும், இப்பணி நடைபெறும் பகுதியில் உரிய கவனம் செலுத்தப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. இது தொடர்பாக மைய அலுவலகம் பிறப்பிக்கும் உத்தரவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

***10.26*** நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்படும் குறைகள் குறை தீர்ப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு அவற்றிற்கு ஒப்புகை அளிக்கப்படுகின்றன.

***10.27*** குறை தீர்ப்பதற்கான படிவம் ஒன்று வடிவமைக்கப்பட்டு, குறைகள் அந்தப் படிவத்தில் பதிவு செய்யப்படுகிறது. இனம் பற்றிய விவரங்கள் சம்பந்தப்பட்ட கணக்குப் பிரிவிடமிருந்து அண்மை நிலவரத்திற்கு ஏற்பப் பெறப்பட்டு படிவத்தில் பதிவு செய்யப்படுகிறது. இந்த நிலவரம் குறித்து மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட நபருக்குத் தெரிவிக்கப்படுகிறது. மக்கள் தொடர்பு அலுவலரின் பதிலில் இதில் சம்பந்தப்பட்ட உறுப்பினர்/பார்வையாளர் மன நிறைவு அடையவில்லையெனில், அதிகாரிகளைப் பார்ப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். குறிப்பிடப்படும் இனங்களை அவர் கவனித்து கொடுக்கப்பட்ட கால அளவிற்குள் அதற்குத் தீர்வு காண்கிறார்.



2000 ஏப்ரல் 19]

***10.28*** ஒட்டுமொத்த வட்டாரத்திலும் கடந்த மூன்றாண்டுகளில் குறை தீர்க்கப்பட்ட புகார்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

| ஆண்டு | குறை தீர்க்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996-97 | 59,170 |
| 1997-98 | 36,829 |
| 1998-99 | 27,741 |
| 1999-2000 | 37,031 |

(1999 டிசம்பர் வரை)

10.29 லோக் அதாலத்தின் கூட்டம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் நாளில் வட்டார அலுவலகத்தில் வட்டார ஆணையாளர்-1 மூலமாகவும், துணை வட்டார அலுவலகங்களில் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் மூலமாகவும் நடத்தப்பட்டு, தமிழ்நாடு, பாண்டிச்சேரி வட்டாரம் குறித்த விவரங்கள் அடங்கிய தொகுப்பு அறிக்கை ஒன்று ஒவ்வொரு மாதமும் 20-ம் நாளில் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது.

**நிறுவனம் அளவிலான விரிவான தகவல் தொழில் நுட்பவியலை ஏற்படுத்துவதற்கான வருங்கால வள வாய்ப்புத் திட்டம் குறித்த குறிப்பு:**

10.30 பின்வரும் ஆய்வு வரம்புகளுடன், நிறுவனம் அளவிலான விரிவான தகவல் தொழில் நுட்பவியல் சீர்திருத்தத்திற்கான வரைபடம் ஒன்றைத் தயாரிப்பதற்கான பல்நோக்கு பணிக்குழு ஒன்றை பணியாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் ஏற்படுத்தியுள்ளது.

(1) தற்பொழுதுள்ள பணிமுறைகள், நடைமுறைகள், தேவைகள் முதலியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்துப் பரிசீலித்தல்.

(2) முக்கியத்துவம் வாய்ந்த ஊக்கமளிக்கும் கொள்கையின் சூழ்நிலையில் நிறுவனம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது என்பது பற்றியும் அடுத்து வரும் 2-5 ஆண்டுகளில் அது எந்நிலையில் இருக்க வேண்டும் என்பது பற்றியும் மதிப்பீடு செய்தல்.

(3) பயன்படுத்துவோரின் தேவைகளைத் தொகுத்தல்.

(4) நிறுவனத்துடன் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் குறித்த தகவல் தொழில் நுட்பவியல் முறைகளின் மரபுரிமைப் பயன் குறித்து மதிப்பீடு செய்தல்.

[2000 ஏப்ரல் 19

(5) பொருத்தமானதொரு கணினி வன்பொருள் வடிவமைப்பு உருவாக்குதல்.

(6) முன் முடிவு (Front end) மற்றும் பின் முடிவு (Back end) பயன்பாடுகள் குறித்து பொருத்தமான இயக்க முறைகளை இனம் கண்டறிதல்.

(7) பொருத்தமான பயன்பாட்டு கணினி மென்பொருள் மற்றும் அமைப்பு முறையை இனங்கண்டறிதல்.

(8) திட்டங்களை நிறுவனம் அளித்துவரும் சூழ்நிலையில் ஒவ்வொரு செய்முறைகள் குறித்து இனங்கண்டறிதலும், தேவைக்கும் அதிகமானவற்றை நீக்கி, திறனை மேம்படுத்தும் வகையில் அலுவல் செய்முறையை மீண்டும் வகுத்தமைப்பதற்கான விருப்புரிமைகள் குறித்து பரிசீலித்தலும்.

(9) சாதகமான தொழில்நுட்ப முறை இருக்கின்ற சூழ்நிலையில் தற்போதுள்ள மனித ஆற்றல் திறன்கள் பற்றி மதிப்பீடு செய்தலும் மனித ஆற்றல் தேவைகள் மற்றும் மேம்பாட்டிற்கான பரிந்துரைகள் செய்தலும்.

(10) தகவல் தொழில் நுட்பவியல் சீர்திருத்தங்களுக்குத் துணைபுரிவதற்காக பொருத்தமான தொழில்நுட்ப மனித ஆற்றல் அமைப்பு குறித்துப் பரிந்துரை செய்தல்.

(11) நன்கு தெளிவாக இனங்கண்டறியப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களுடன் நிலை வாரியாகச் செயல்படுத்தும் திட்டத்தை ஏற்படுத்துதல்.

(12) கொள்முதல் செயல்முறைகளை வெளிப்படையானதாகவும், சிக்கனமானதாகவும், நேர்மையானதாகவும் ஆக்க இயலும் வகையில் கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள், பணியமைப்பு முறை முதலியவற்றில் தொழில்நுட்ப சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கான நடைமுறைகள் ஏற்படுத்துதல்.

(13) ஒன்றோடொன்று செயல் விளைவுகளை ஏற்படுத்துகின்ற மற்றும் செயல் விளைவுகளை ஏற்படுத்தாத பணிகளுக்காகப் பொருத்தமான ஏற்பாட்டு முறையைத் தெரிவு செய்வதற்கான எல்லைக் குறியீட்டை வகுத்தல், வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

(14) பல்நோக்கு பணிக்குழு தேவையெனக் கருதுகிற வேறு ஏதேனும் தொடர்புடைய பிரச்சினைகள்.



2000 ஏப்ரல் 19]

# அத்தியாயம்-11

## வேலைவாய்ப்புப் பணிகள்

### வேலைவாய்ப்புப் பணிகளின் தோற்றமும், மூலமும்.

11.1 இரண்டாம் உலகப் போருக்குப்பின் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட படைவீரர்களின் மறுவாழ்வு குறித்து தொண்டாற்றிடும் நோக்கத்திற்காகவே பாரதத்தில் வேலைவாய்ப்பு பணி தொடங்கப்பட்டது. இவ்வாறு தொடங்கப்பட்ட பணி 1946 ஆம் ஆண்டு வரை, போர்ப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் போர் வீரர்கள் நலம் மற்றும் மறு வாழ்விற்காக மட்டுமே செயல்பட்டு வந்தது. 1946-க்குப் பிறகு இப்பணி சிறிது சிறிதாக விரிவுபடுத்தப்பட்டு, இப்பணியின் தொண்டு 1948 ஆம் ஆண்டின் இறுதியில் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்படும் வகையில் விரிவாக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இந்திய அரசின் நிர்வாக அமைப்பின் கீழ் செயல்பட்டு வந்த இந்தப் பணி 1-11-1956 முதல் 'சிவராவ் கமிட்டி'யின் பரிந்துரைகளுக்கு ஏற்ப மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு, மாநில அரசின் முக்கிய துறைகளில் ஒன்றாக இயங்கி வருகிறது.

11.2 1-11-1956-ல் அரசின் கீழ் கொண்டு வரப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 1963 வரை தொழிலாளர் துறை ஆணையரின் கண்காணிப்பில் செயல்பட்டு வந்தன. வேலைச் சந்தையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வகித்து வரும் மகத்தான பணியினைக் கருத்தில் கொண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களைச் சீரான முறையில் இயக்கிட புதிய துறை ஒன்று முழு நேர இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு 1963 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு புதியதாக உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கொண்டு வரப்பட்டன. 1963 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

### வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு:

11.3 வேலைவாய்ப்புப் பிரிவின் இயக்குநர் அவர்களது பணியில் உதவிட இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில் ஆராய்வு) மற்றும் இணை இயக்குநர் (வேலைவாய்ப்புத் திட்டங்கள்) என மூன்று இணை இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாவட்ட

[2000 ஏப்ரல் 19

அளவில் ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் என்ற விகிதத்தில் 29 முழு அளவிலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வருகின்றன. இந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முதன்மைப் பணியானது, வேலை தேடுவோரைப் பதிவு செய்து, அவர்களை வேலையளிப்பவரால் குறிப்பிடப்படும் பணிக்காலியிடங்களுக்குப் பரிந்துரை செய்வதாகும். இந்தப் பணியமர்த்தல் வேலையைத் தவிர இந்த வேலைவாய்ப்பு அலுவலகங்கள், வேலை தேடும் இளைஞர்களுக்கு வேலைச் சந்தையில் உள்ள நிலவரத்திற்குத் தகுந்தாற்போல், தங்களது வாழ்க்கை நெறியை வகுத்துக் கொள்ள உதவிடும் நோக்கத்துடன், தொழில் நெறி வழிகாட்டும் பணிகளைச் செயல்படுத்துகின்றன. இது தவிர, வேலை நிலவரத் தகவல் திட்டத்தைச் செயல்படுத்துவதும் இவ்வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் அனைத்து வேலைவாய்ப்பு நிலவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் காலாண்டு இடைவெளிகளில் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, அவை வேலைச் சந்தையில் குறுகிய கால இடைவெளியில் நேரிடும் வேலை நிலவர ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிய ஆராயப்படுகின்றன.

11.4 மேலே குறிப்பிடப்பட்ட 29 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களைத் தவிர கீழ்க்காணும் சிறப்பு அலுவலகங்களும் வேலைவாய்ப்புத் துறையில் ஒரு முக்கியப் பகுதியாக தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை | 1 |
| 2. | தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை | 1 |
| 3 | தொழில் நுட்பப் பணியாளர்களுக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (சென்னை மற்றும் கோவை) | 2 |
| 4 | உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை | 1 |
| 5 | துணை வேலைவாய்ப்பு அலுவலகம், ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) | 1 |
| 6 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (கடலூர், கோவை, திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி) | 5 |
| 7 | பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிக்காட்டும் சிறப்பு நிலையங்கள் (சேலம், சங்கராபுரம் (விழுப்புரம்), திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம், | 4 |
| | மொத்தம் | **15** |





11.5 மேலே கூறப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணியினை மேற்பார்வையிட சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மண்டலங்களில் 4 மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள், வருவாய் மாவட்டங்களின் அடிப்படையில் மாவட்டங்களைத் தமது நிர்வாக எல்லைகளாகக் கொண்டு செயல்படுகின்றன.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகள்:**

11.6 தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் உயிர்ப் பதிவேட்டில் வேலைக்காகப் பதிவு செய்து காத்திருக்கும் அனைத்து வகை மனுதாரர்களுக்கும் பாரபட்சமற்று இலவசமாகப் பணியமர்த்தல் தொண்டினைச் செயலாற்றி வருகின்றன. 1999 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் ஆற்றப்பட்ட முக்கிய பணிகளின் விவரம்.

**பதிவு செய்தல்**

11.7 1999 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு உதவி கோரி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 6,66,515 ஆகும். இதே ஆண்டில் 31,327 பணிக்காலியிடங்கள் வேலை அளிப்பவரால் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அக்காலியிடங்களுக்கு 2,74,070 மனுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இந்த முயற்சியின் பயனாக 25,506 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இச்செயல்பாட்டினால் 1999 ஆம் ஆண்டில் பதிவு செய்தலுக்கும் பணியமர்த்தலுக்குமான விகிதாச்சாரம் 26.1 என அமைந்துள்ளது.

[2000 ஏப்ரல் 19

11.8 1999 ஆம் ஆண்டு இறுதியில் (அதாவது 31-12-1999 அன்று) வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப்பதிவேட்டில் வேலைவாய்ப்பு தேடி பதிவு செய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 43.7 இலட்சமாக அமைந்துள்ளது. இவர்களில் 14.9 இலட்சம் பேர் பெண்கள். 9.8 இலட்சம் பேர் ஆதிதிராவிடர், 10,968 பேர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் ஆவர்.

**கிராமப்புற பள்ளிகளைத் தத்து எடுத்து தொழில் நெறி வழிகாட்டிப் பணியினை அப்பணிகளில் தீவிரமாகச் செயல் படுத்தும் முன்னோடித் திட்டம்**

11.9 இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமப்புற மேல்நிலைப்பள்ளி, கல்வித் துறையின் ஆலோசனைப்படி தேர்வு செய்யப்பட்டு தத்து எடுத்துக் கொள்ளப்பட்டு அப்பணியில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டிப்பணி தீவிர முறையில் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கான கல்வி ஆண்டின் திட்டத்தின்கீழ் 21 பள்ளிகள் தத்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் முயற்சிகள்.**

11.10 மாதச் சம்பள வேலைவாய்ப்புகள் அரிதாகிக் கொண்டே வரும் இன்றைய வேலைச் சந்தை சூழலில் சுய வேலை முறையில் வாழ்க்கை நெறியினை உருவாக்கிக் கொள்வது வேலைவாய்ப்பின்மையைப் போக்க உதவும் முக்கிய நெறிமுறையாக வளர்ந்து வருகிறது. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வேலைதேடுவோரின் மாபெரும் பட்டியலைக் கொண்ட உயிர்ப்பதிவேடுகளைப் பராமரிக்கும் நிறுவனங்கள் அதலால், வேலை தேடும் இளைஞர்களில் சுய வேலைவாய்ப்பில் நாட்டம் கொண்ட நபர்களைக் கண்டறிந்து அவர்களை சுயதொழில் முறையில் வாழ்க்கை நெறியை அமைத்துக் கொள்ள உதவுவது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கியமான ஒரு பணியாகக் கருதப்படுகிறது. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தத்தம் அளவிலேயே கூட்டுக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்து, சுயவேலை வாழ்க்கை நெறி பற்றி இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்வை உருவாக்கவும், சுய வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க மைய மாநில அரசுகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அளித்து வரும் உதவிகள் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல் வழங்கவும் நடவடிக்கை எடுத்தன. இத்தகைய சிறப்பு முயற்சியினால் 1999 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட 355



2000 ஏப்ரல் 19]

இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட வகையில் உற்பத்தி மற்றும் வாணிப நிறுவனங்களைத் தொடங்குவதற்கு ரூ.222.03 இலட்சம் தொகை வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கான இலவசப் பயிற்சி மற்றும் முன்னோடித் தேர்வு பயிற்சி வகுப்புகளை நடத்துதல்**

11.11 தற்போது தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து நகரங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிடர் இளைஞர்களிடையே சுய வேலைவாய்ப்பு நெறி பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்கள் சுய தொழில் தொடங்க அனைத்து வகையான உதவிகளையும் இந்த மையங்கள் நல்கி வருகின்றன.

11.12 இத்தகைய வழிகாட்டல் பணிகள் மட்டுமின்றி மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற பல்வேறு தேர்வு நிறுவனங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிடர் இளைஞர்களுக்கு முன்னோடிப் பயிற்சி அளிப்பதற்கான வகுப்புகளையும் மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற தொழில் படிப்புகளுக்கு நபர்களை சேர்க்கைக்கு நடத்தப்படும் நுழைவு தேர்வுகளை எழுதும் மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகளையும் இந்த மையங்கள் நடத்துகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் ஐந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் மூலமாக நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்புகள் வாயிலாக 1999 ஆம் ஆண்டில் மொத்தம் 7,240 ஆதிதிராவிடர் இளைஞர்கள் பயனுடைந்தள்ளனர்.

**வேலைக்காகக் காத்திருக்கும் உடல் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள்.**

11.13 விழிப்புலன் இழந்தவர், செவிப்புலன் இழந்தவர் மற்றும் உறுப்பு நலம் குறைந்தோர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் ஆகிய ஐந்து வகையான உடல் ஊனமுற்ற மனுதாரர்களை தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் பதிவு செய்து அவர்களுக்கு

வேலைவாய்ப்பு உதவி அளித்து வருகின்றன. சென்னை 40-ல் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும் மற்றும் காஞ்சீபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, தஞ்சாவூர், நாகர்கோவில், கோயம்புத்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஈரோடு, உதகமண்டலம் மற்றும் கடலூர் ஆகிய 13 மாவட்டங்களில் இயங்கி வரும் சிறப்பு உடல் ஊனமுற்றோர் பிரிவுகளும் சிறப்புப் பணியமர்த்தல் உத்தியினைக் கையாண்டு உடல் ஊனமுற்ற பதிவாளர்கள் பணியில் அமர்த்தப்பட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

11.14 இந்த முறையில் 1999 ஆம் ஆண்டில் மொத்தமாக பதிவு செய்யப்பட்ட 5,988 ஊனமுற்ற நபர்களில் (429 பார்வையற்றோர், 301 செவிப்புலன் இழந்தோர் மற்றும் 5,258 உறுப்புநலன் குன்றியோர்) 1,032 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்கள் சம்பளம் பெறும் வேலையில் பணியமர்த்தப்பட்டனர். (20 விழிப்புலன் இழந்தோர், 34 செவிப்பலன் இழந்தோர் மற்றும் 978 உடல் உறுப்பு நலன் குறைந்தோர்) 31-12-1999 நிலவரப்படி மொத்தமாக 61,679 ஊனமுற்ற நபர்கள் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள உயிர்ப் பதிவேடுகளில் வேலைவாய்ப்பு உதவி கோரி காத்திருக்கின்றனர். இவர்களில் 6,312 பார்வையற்றோரும், 4,964 செவிப்புலன் இழந்தோரும் மற்றும் 50,403 இதர உறுப்பு நலன் குறைந்தோரும் அடங்குவர்.

**பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பு நிவாரணம்.**

11.15 தமிழ்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு **அலுவலகங்கள் மூலம்** செயல்படுத்தப்படும் பிறிதொரு முக்கியத் திட்டம் பார்வையற்ற மனுதாரர்களுக்கு வேலையற்றோருக்கான நிவாரணத்தொகை **வழங்கும்** நலத்திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் **அனைத்து வேலைவாய்ப்பு** அலுவலகங்களிலும் பதிவு செய்து உயர்ப் பதிவேட்டில் ஓராண்டிற்கும் மேல் காத்திருக்கும் 40 வயதிற்குட்பட்ட பார்வையற்ற நபர்களுக்கு (ஆதிதிராவிட/பழங்குடியினர்-45 வயது) பின்வரும் விகிதத்தில் 5 ஆண்டுகளுக்கு பார்வையற்றோர் நிவாரணத் தொகை வேலைவாய்ப்பு அலுவலகங்களால் வழங்கப்படுகிறது.

1. பட்டதாரி/முதுகலை பட்டதாரிகள் ரூ.300/- மாதம்
2. புகுமுகவகுப்பு/மேல்நிலைப்பள்ளி ரூ.250/- மாதம்
3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக் கீழ் ரூ.200/- மாதம்



11.16 1999 ஆம் ஆண்டு இந்த நிவாரணத் தொகையினை 1,344 பார்வையற்ற நபர்கள் பெற்று பயன் அடைந்துள்ளனர். 31-12-1999 வரை மொத்தமாக ரூ.1605 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் பார்வையற்ற நபர்களின் நலனுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினி மயமாக்குதல்.**

11.17 திறமையான, குறைபாடற்ற நிறைவான பணிச் சேவையை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்துள்ள மனுதாரர்களுக்கும் மற்றும் வேலையளிப்போருக்கும் அளிப்பதற்கு ஏதுவாகவும், மனுதாரர்களைத் தேர்வு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினைக் குறைப்பதற்கு ஏதுவாகவும் 1986-87 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினி மயமாக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு 27 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளிலிருந்து எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை விவரங்கள்.

**1. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோருக்கு வயது வரம்பில் சலுகைகள்.**

11.18 30-4-1999 அன்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது சட்டமன்ற பேரவையில், எஸ்.எஸ்.எல்.சி-க்கு குறைவான கல்வித் தகுதி உடைய வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுதாரர்களுக்கு உச்ச வயது வரம்பில் சலுகை வழங்க அரசு பரிசீலிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின்படி எஸ்.எஸ்.எல்.சி-க்கும் குறைவான கல்வித் தகுதியுடைய வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்களுக்கு வயது வரம்பில் சலுகையை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு முடிவுற்ற 3 ஆண்டுகளுக்கும் ஒரு வருடம் என்றும் அதிக பட்சமாக 5 ஆண்டுகள் (Maximum of 5 years) வரையும் அளிக்க அரசு ஆணை நிலை எண் 21, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 2-2-2000 வாயிலாக ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையின் வாயிலாக வேலவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள 5 இலட்சத்திற்கும் அதிகமான விண்ணப்பதாரர்கள் பயனடைய உள்ளனர்.

[2000 ஏப்ரல் 19

## 2. வேலைவாய்ப்பு அலுவலங்களில் புதுபிக்கத் தவறியவர்களுக்குப் புதுப்பித்தல் சலுகை அளித்தல்

11.19 இதேபோன்று, பல்வேறு காரணங்களினால் தங்களின் பதிவுகளை வேலைவாய்ப்பு அலுவலகங்களில் 1996, 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் புதுபிக்கத் தவறியவர்களுக்கு சலுகை அளிக்கும் நோக்கத்தில் பதிவைப் புதுபிக்க அவகாசம் அளிக்கப்படும் என அரசு அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து இதற்கான ஆணைகள் அரசாணை நிலை எண் 67, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-5-1999 வாயிலாக வெளியிடப்பட்டன. இச்சலுகையின் பயனாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருந்த 51,886 பதிவுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3. பயிலும் வட்டங்கள் ஏற்படுத்துதல்

11.20 இதேபோன்று, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் அரசு ஆணை நிலை எண் 106, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20-7-1999-ன் வாயிலாக 24 மாவட்டங்களில் வேலை நாடுவோர்களின் பயிலும் வட்டங்கள் ஏற்படுத்துதல் தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, மொத்தம் 24 மாவட்டங்களிலும் பயிலும் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதுவரை 1,200 மனுதாரர்கள் தங்கள் பெயர்களை பயிலும் வட்டங்களில் பதிவு செய்து பயனடைந்து வருகின்றனர். மொத்தம் இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.8.40 இலட்சத்தில் 31-3-2000 வரை ரூ.8.08 இலட்சங்கள் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 19]

# அத்தியாயம் -12

## கைவினைஞர் பயிற்சித் திட்டம்

### கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் தோற்றம்

12-1-1940 ஆம் வருடம் இந்திய அரசால் பாதுகாப்புப் படைகளின் ஆயுதங்கள் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் தேசிய அளவில் "போர் தொழிற்நுட்பப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டது. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு போர்ப்படை கலைப்பு வீரர்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட படை வீரர்களின் மறுவாழ்வு நலன் கருதி, அவர்களுக்காக இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கங்கள் இந்திய அரசால் மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

12-2-1947-ல் இந்தியாவின் பிரிவினைக்குப் பிறகு இத்திட்டமானது அகதிகளுக்கும், பிறகு 1950-ல் இராணுவத்தில் இல்லாத முதியவர்களுக்கும் பயனளிக்கும் விதத்தில் தேசிய அளவில் "முதியோர்கள் பயிற்சித் திட்டம்" என்னும் புதிய பெயரில் செயலாக்கப்பட்டது. பின்னர், இத்தொழிற்சாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, "கைவினைஞர் பயிற்சித் திட்டம்" என அழைக்கப்பட்டது.

12.3 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை உருவாவதற்கு முன்னர் வேலைவாய்ப்புப் பிரிவு தொழிலாளர் ஆணையரகத்துடனும், பயிற்சிப் பிரிவு தொழில் மற்றும் வணிகத் துறை இயக்ககக் கட்டுப்பாட்டின் கீழும் 1963 வரை செயல்பட்டு வந்தன. 1963 ஆம் ஆண்டு வேலவாய்ப்புப் பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவு ஆகியவைகள் ஒன்று சேர்க்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது.

### துறையின் நோக்கம்

12.4 நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. தொழில் நிறுவனங்களின் நிரந்தர செயல்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் திறமையான மனித ஆற்றல் தேவைப்படுகிறது. பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களின் தேவையினை ஐந்தாண்டுத் திட்ட செயலாக்கம் உருவாக்கியுள்ளது. நிறுவனங்களுக்கு நல்ல தொழில் முன்னேற்றத்திற்கேற்ப, பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்ற மனித ஆற்றல் தேவைப்படுகிறது. கைவினைஞர் பயிற்சித் திட்டமானது,

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பலதரப்பட்ட தொழிற் பிரிவுகளில் முறையான தொழிற் பயிற்சி மூலம் திறமை வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கி, தொழிற்சாலைகளுக்கான மனித ஆற்றலைத் தருவதில் முக்கிய பங்காற்றுகிறது.

**12.5 கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் அடிப்படை மற்றும் நீண்டகால குறிக்கோள்கள்:**

1. கல்வி கற்ற ஏழை, எளிய இளைஞர்கள் பயனடைய வேலைவாய்ப்புகள் பெறும் வகையில் தொழிற்பயிற்சி அளித்தல்;
2. செயல்திறன் முன்னேற்றப் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தத் தேவையான உள்ளமைப்புகளை உருவாக்குதல்;
3. தொழிற்சாலைகளில் தேவைக்கேற்ப பல்வேறு தொழிற் பிரிவுகளில் சிறந்த பணியாளர்களை உருவாக்குதல்;
4. ஊரக இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறவும், சுய வேலைவாய்ப்பு பெறவும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தோற்றுவிப்பதை ஊக்குவித்தல்;
5. தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சியாளர்கள் இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் பயன்கருதி, பணிமனைகளில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் இவைகளைப் பரிமாற்றம் செய்ய தொழிற்சாலைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பினைத் தோற்றுவித்தல்;
6. பணிபுரியும் தொழிலாளர்களின் கருத்தியல் பாடம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்த பயிற்சி அளித்தல்;
7. தொழிற் பயிற்சி இல்லாத நபர்களின் திறமையினை ஊக்குவிக்க கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படாத தொழிற் பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி அளித்தல்;
8. தொழிற் துறையின் முன்னேற்றத்தில் அதிக அளவு மகளிர் பங்கேற்கச் செய்தல்.



**அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்:**

12.6 கைவினைஞர் பயிற்சித் திட்டம் தமிழ் நாடெங்கும் அமைந்துள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலம் கைவினைஞர்களை உருவாக்குகிறது. தமிழ் நாடெங்கும் 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 36 பொறியல் மற்றும் 15 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 17,200 மாணவ மாணவியர் இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். தொழிற் பிரிவின் இயல்புக்கேற்றவாறு பயிற்சியின் கால அளவு ஒரு வருடம் முதல் மூன்று வருடங்கள் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள மொத்தம் 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மகளிருக்கென 10 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களும், ஆதிதிராவிடருக்கென சிதம்பரத்தில் ஒன்றும், மலைவாழ் மக்களுக்கென ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் சங்கராபுரத்திலும் இயங்குகின்றன.

12.7 தொழிற் பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் ஆகியவை தேசிய வாழ்வியல் கல்வி பயிற்சித் திட்டக் குழுவால் அகில இந்திய ரீதியில் ஒரே மாதிரியாக இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது நாள்வரை தொழிற் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளின் பாட நூல்கள் ஆங்கிலத்திலேயே பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. இதனால் குறைவான ஆங்கில அறிவு உள்ள பள்ளி மாணவர்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கருத்தியல் பாடங்களைப் பயிலுவதில் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர். இதனை உணர்ந்த இவ்வரசு பள்ளிக் கல்வியில் செய்தது போன்று, தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கி முதற் கட்டமாக 7 பொறியியல் தொழிற் பிரிவுகளின் கருத்தியல் மற்றும் செய்முறை குறித்த பாடப் புத்தகங்களை தமிழாக்கம் செய்ய ஆணை வழங்கியுள்ளது. தற்போது மொழி பெயர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. பயிற்சியின் முடிவில் தொழிற் தேர்வுகள் வருடத்திற்கு இரு முறை அகில இந்திய அளவில் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு தேசிய தொழிற் சான்றுகள் வழங்கப்படுகின்றன.

12.8. சமீபத்தில் இத்துறை இந்திய தொழிலியல் நேசக் கட்டமைப்புடன் (C.I.I.) கருத்து மற்றும் நோக்கங்களை ஒப்புக் கொள்ளும் சுருக்கக் குறிப்பு ஒப்பந்தம் செய்துள்ளதன் மூலம் தொழிற் நிறுவனங்களுடன் நல்லுறவை மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 19

12.9 கிராமப்புற மக்களின், குறிப்பாக, கிராமப்புற இளைஞர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையினை உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இவ்வரசு ஏற்கெனவே செயல்படுத்தி வந்த இட ஒதுக்கீடு முறையினை உள்ளடக்கி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கையின்போது கிராமப்புற இளைஞர்களுக்கு 15% இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இவ்வாணை ஆகஸ்ட் 1999 சேர்க்கையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

12.10 கடந்த 37 ஆண்டு காலமாக பயிற்சியாளர்களுக்கு உயர்த்தப்படாமல் இருந்து வந்த உதவித் தொகையை கீழ்க்கண்டவாறு ஆகஸ்ட் 1999 முதல் முதன்முதலாக உயர்த்திய அரசு இவ்வரசு என்பது குறிப்பிடத்தக்கது:

| பயிற்சியாளர் விவரம் | உதவித் தொகை விவரம் |
|---|---|
| 1. மொத்த பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினரின் பெற்றோர் வருமானம் ஆண்டிற்கு ரூ.16,100-க்கு மிகாமல் இருத்தல். | உதவித் தொகை மாதந்தோறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.25-ல் இருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. |
| 2. ஆதிதிராவிட பயிற்சியாளர்களுக்கு | மாதந்தோறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.55-லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. |
| 3. பழங்குடி பயிற்சியாளர்களுக்கு | மாதந்தோறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.82.50-லிருந்து ரூ.175 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. |

12.11 மாநில அளவில் உயர் திட்டக் கொள்கை உருவாக்குதல் மற்றும் அறிவூட்டுக் குழுவான மாநில வாழ்வியல் பயிற்சிக் குழுவின், கடந்த 15 ஆண்டு காலமாக கூட்டப்படாமலிருந்த கூட்டம் 10-3-2000 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னை-17, தியாகராய நகரிலுள்ள ஜீ.ஆர்.டி கிராண்ட் டேஸ் ஓட்டலில் கூட்டப்பட்டது. அதில், கைவினைஞர் பயிற்சித் திட்டத்தினை மேலும் திறமையாகச் செயலாக்கம் செய்வது பற்றியும் புதிய தொழில் பிரிவுகள் அறிமுகப்படுத்துவது குறித்தும், பிரபலமற்ற தொழில் பிரிவுகளை நீக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.



2000 ஏப்ரல் 19]

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்:**

12.12 தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற கைவினைஞர்களை உருவாக்கிடும் அரசின் சீரிய முயற்சிகளை நிறைவு செய்திடும் வகையில், தொழிற் பயிற்சி அளிக்க தனியார் துறையினர் பங்கு ஊக்குவிக்கப்படுகிறது. இம்முயற்சியின் பயனாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க ஊரக இளைஞர்கள் தொழிற் பயிற்சியின் பயனை அடையும் வகையில் தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லாத அனைத்து 216 ஊராட்சி ஒன்றியங்களிலும் புதிய தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்க ஒரு முதன்மைத் திட்டம் செயலாக்கப்பட்டது. கடந்த மூன்று ஆண்டு காலங்களில் 152 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய வாழ்வியல் மேம்பாட்டுப் பயிற்சிக் குழுவின் ஒப்புதலுடன் நடைபெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 590 ஆக 60,756 இருக்கைகளுடன் உயர்ந்துள்ளது. இவ்வருடம் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படாத மீதமுள்ள 95 நகராட்சி ஒன்றியங்களில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

12.13 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்/ தொழிற் பிரிவுகளின் விவரங்கள் மண்டல அளவில், பிரபல நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்கள் தங்களது சிறார்களை அரசால் அங்கீகரிக்கப்படாத தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களிலும், தொழிற் பிரிவுகளிலும் சேர்க்க வேண்டாம் என்றும், அவ்விதம் அரசால் அங்கீகரிக்கப்படாத தொழிற் பிரிவுகள் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படும் பயிற்சியாளர்கள் தேசிய வாழ்வியல் கல்விப் பயிற்சி திட்டக்குழுவால் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது.

**அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல்:**

12.14 கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் கைவினைஞர்களின் திறனை அதிகரிக்கும் வகையில் தொழிற் கல்வியின் தரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் வளர்ந்துவரும் கணினி முறை

மற்றும் புதிய தொழில் நுட்பங்களுக்கு ஈடாக கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பயிற்சியில் புதிய மாற்றம் தேவைப்படுகிறது.

12.15 தொழிற் துறையில் காணப்படும் புதிய தொழில் நுட்ப வளர்ச்சிக்கு இணையாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களைக் கொண்டு பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உலக வங்கி நிதி உதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தின் கீழ் ரூ.33.22 கோடி செலவிலும் 21 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.12.24 கோடி மாநில அரசின் செலவிலும் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

12.16 தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ளமைப்பு வசதிக்கான கட்டடம் கட்டுதல், கூடுதல் வகுப்பறைகள், மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு விடுதி கட்டுதல், சுற்றுச்சுவர் எழுப்புதல், தடையில்லா முழுநேர மின்வசதி, பழுதடைந்த மின் இணைப்புகளை மாற்றுவது, புதிய தொழிற் பிரிவுகளை தொடங்குதல் போன்றவைகள் மிகவும் அத்தியாவசியமாகும். எனவே, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப்பணிகளைப் பூர்த்தி செய்து இலக்கினை அடைய இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

**அகில இந்திய தொழிற் தேர்வும், சாதனைகளும்:**

12.17 பாடத் திட்டம், தொழிற் தேர்வு நடத்துதல் மற்றும் தொழிற் தேர்வு சான்றிதழ் வழங்குதல் ஆகிய பணிகள் அகில இந்திய அளவில் தரமாகவும் மற்றும் சீராகவும் அமைத்திட தேசிய வாழ்வியல் பயிற்சிக் குழுவின் அதிகாரத்திற்குட்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

12.18 இத்துறையினரால் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தேசிய தொழிற் சான்றினை பெற்றவர் நம் நாட்டில் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் அதிக அளவு வேலை வாய்ப்புகளை பெற்றும் நன்மதிப்பு அடைவதால் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேர்வதற்கு விரும்புபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

12.19 தொழிற் கல்வியின் தரத்தைப் பேணிடவும், வெகு விரைவில் தேர்வு முடிவுகளை அறிவிக்கவும், அகில இந்திய தொழிற் தேர்வு விடைத்தாட்களை ஒரே சீராக மதிப்பீடு செய்திட ஜீலை 1979 முதல் மைய மதிப்பீடு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விடைத்தாட்களை



மதிப்பீடு செய்வதில் இரகசியம் பேணிட மாற்று எண்ணிட்டு மதிப்பீடு செய்யும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 45 ஆயிரம் பயிற்சியாளர்கள் தொழிற் தேர்வு எழுதுவதால், தேர்வு முடிவுகளை முடிவு செய்துகொள்ளவும், சான்றிதழ் வழங்கவும் கணினிகள் கொண்ட தேர்வுப் பிரிவு ஒன்றினை உருவாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள்:**

12.20 ஒவ்வொரு ஆண்டும் திறனாய்வுப் போட்டிகள் அகில இந்திய அளவில் 10 தொழிற் பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. இதில் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு தலா ரூ.10,000 ரொக்கத் தொகையும் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. 1999 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 35 திறனாய்வு தேர்வுப் போட்டிகளில் 16 முறை தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இது இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி சீரிய முறையில் அளிக்கப்படுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

**மாண்புமிகு முதலமைச்சர் விருது:**

12.21 பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு ஆண்டுதோறும் மாநில அளவில் 14 தொழிற் பிரிவுகளில் தொழிற் திறனாய்வுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சி பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு ரொக்கத் தொகையாக ரூ.5,000-மும் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. இவ்விதம் சிறந்த பயிற்சியாளரை உருவாக்கும் பயிற்றுநர்களுக்கு ரொக்கத் தொகை கீழ்க்கண்டவாறு பரிசாக வழங்கப்படுகிறது:

| | |
|---|---|
| 1. சிறந்த பயிற்சியாளர் | ரூ.5,000 ஒவ்வொரு தொழிற் பிரிவிற்கும். |
| 2. முதல்வர் | ரூ.1,000 |
| 3. இளநிலை பயிற்சி அலுவலர்/ உதவி பயிற்சி அலுவலர் | ரூ.1,750 |
| 4. பணிமனை கணிதம் மற்றும் அறிவியல் பயிற்றுநர் | ரூ.500 |
| 5. பொறியியல் வரைபட பயிற்றுநர் | ரூ.500 |

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடம் வகிக்கும் பயிற்சியாளர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 19

**டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது:**

12.22 பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளித்து முன் மாதிரியாக விளங்கும் பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-4) இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. இம்மாநில அரசு சென்ற நிதியாண்டிலிருந்து இவ்விருதினை அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும் அளிக்க ஆணை வழங்கியுள்ளது.

**தொழிற் பள்ளிகள்:**

12.23 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைத் தவிர இம்மாநிலத்தில் 6,500 இருக்கைகள் கொண்ட 251 தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இத்தொழிற் பள்ளிகள் பெரும்பாலும் அறக்கட்டளையினால் நடத்தப்பட்டு வருகின்றன. 8 ஆம் வகுப்பு முதல் மேல்நிலை பள்ளி வரையில் கல்வி பயின்றவர்கள் பல்வேறு பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு மாநில அரசின் தொழிற் பள்ளிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. 251 தொழிற் பள்ளிகளில் 50 பள்ளிகள் பணியாளர் ஊதியம், பயிற்சி செலவினத்தில் 75 விழுக்காட்டினை அரசின் பராமரிப்பு மானியமாகப் பெறுகின்றன.

**தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம்:**

12.24 தொழிற் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு தொழிற் பழகுநர் சட்டம் 1961-ன் கீழ் தொழில் நிறுவனங்களில் ஒன்று முதல் நான்கு ஆண்டுகள் வரை தொழிற் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு தொழில் நிறுவனத்தில் தமது செயல் திறத்தை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. தொழிற் பயிற்சி நிலையகங்களினால் உருவாக்கப்படும் அனுபவம் குறைவான தொழிலாளர்களை, தொழிற் பழகுநர் பயிற்சி நிலையங்கள் அனுபவம் மிகுந்த திறமையான தொழிலாளர்களாக மாற்றி அமைக்கிறது. தொழிற் பழகுநர்கள், தொழிற் பழகுநர் பயிற்சிக் காலத்தில் பணிமனை செய்முறை திறனை தொழிற் நிறுவனங்களிலும், கருத்தியல் பாடத்தினை, தொடர் அறிவுரை மையங்களிலும் பெறுகின்றனர். தொழிற் பழகுநர் பயிற்சி காலத்தில், தொழில் பழகுநர்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.680 முதல்



2000 ஏப்ரல் 19]

ரூ.1,020 வரை உதவித் தொகையாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் வழங்குகின்றன.

12.25 இத்தொழிற் பழகுநர் பயிற்சி 122 தொழிற் பிரிவுகளில் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 17,820 தொழிற் பழகுநர்கள் 2,115 தொழில் நிறுவனங்களில் தொழில் பழுகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர். அகில இந்திய தொழிற் தேர்வு ஆண்டுதோறும் ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறுகிறது. தேர்ச்சி பெற்ற தொழில் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. சுமார் 8,000 தொழிற் பழகுநர்கள் ஒவ்வொரு தொழிற் தேர்விலும் கலந்து கொள்கின்றனர்.

12.26 ஆண்டுதோறும் தொழிற் பழகுநருக்காக அகில இந்திய திறனாய்வு போட்டிகள் 11 தொழிற் பிரிவுகளில் மண்டலம் மற்றும் அகில இந்திய ரீதியில் நடைபெறுகின்றன. சிறந்த தொழிற் பழகுநர்களுக்கு மண்டல அளவில் நற்சான்றிதழும், அகில இந்திய அளவில் ரூ.10,000 ரொக்கத் தொகையும், நற்சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகள்:**

12.27 மாலை நேர வகுப்புகள் திட்டம் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள அம்பத்தூர், கிண்டி, வட சென்னை, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. தாம் பணிபுரியும் தொழிற்சாலைகளில் போதிய அளவு பணிமனை செயல் திறனை அடையும் தொழிலாளர்களுக்கு தொழிற் பிரிவுகளில் கருத்தியல் பாடங்கள் இந்த அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாலை நேர வகுப்புகளில் கற்பிக்கப்படுகிறது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**பயிற்றுநர்களுக்கு பயிற்சி:**

12.28 மிக விரைவாக முன்னேறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சியினை அறிந்து கொள்ள பயிற்றுநர்கள் மத்திய பயிற்சி நிலையங்கள்/முன்னோடி பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். அப்பயிற்சியினால் பயிற்றுநர்கள் தங்களது செயல் திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை தெரிந்து கொண்டு, அவற்றை பயிற்சியாளர்களுக்கு போதிப்பதற்கும் ஏதுவாகின்றது.

[2000 ஏப்ரல் 19

12.29 இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர்களுக்கு ஒலி, ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் இரு வார கால பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இந்த மறு பயிற்சி அவர்களின் கல்வி கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

**வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்டம்:**

12.30 வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சித் திட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், அம்பத்தூர் மற்றும் கோவையில் தொழிலாளர்களின் பயிற்சிக்காக நடைபெற்று வருகிறது. நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாட்டினை தொழிற்சாலைப் பணியாளர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வரை இப்பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. இதனால் சமீப கால தொழில்நுட்பத்துடன் தொழிலாளர்கள் பணிபுரிய ஏதுவாகின்றது.

**மகளிர் நலன்:**

12.31 தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கிண்டி, அம்பத்தூர், சேலம், கடலூர், கோவை, திண்டுக்கல், புள்ளம்பாடி, திருப்பூர், மதுரை மற்றும் நாகர்கோவில் ஆகிய பத்து இடங்களில் மகளிருக்காகவே அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவை தவிர, ஏனைய 43 தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 30 விழுக்காடு இருக்கைகள் மகளிருக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன.

12.32 தற்போதுள்ள 10 மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில், 7 நிரந்தர கட்டடங்களில் இயங்குகின்றன. மீதமுள்ள தொழிற் பயிற்சி நிலையங்கள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. இப்போது திருப்பூரில் உள்ள மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.40.00 இலட்சம் செலவில் நிரந்தர கட்டடம் 1999-2000-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

12.33 இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாவது, தொழிற்சாலைகள், சேவை நிறுவனங்கள் மற்றும் குடும்ப வருவாய் பெருக்க உதவும் தொழிற் நிறுவனங்கள் ஆகியவற்றில் திறமை மிக்க மகளிர் தொழிலாளர்கள் தேவையைப் பூர்த்தி செய்தல் ஆகும். இத்திட்டம்



000 ஏப்ரல் 19]

ாகளிருக்கு சுய வேலைவாய்ப்பு நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது.

**ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் நலன்:**

12.34 சிதம்பரத்தில் இயங்கும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஆதிதிராவிட வகுப்பினருக்கென்றே உள்ளது. அதேபோல் ங்கராபுரத்திலும் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ழங்குடியினர் நலனுக்காக இயங்குகின்றது. இதைத் தவிர அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் ஆதிதிராவிட வகுப்பினருக்காகவும் ஒரு விழுக்காடு இருக்கைகள் ழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

12.35 ஆதிதிராவிட பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை 5.55-லிருந்து ரூ.150 ஆகவும், பழங்குடியினருக்கு ரூ.82.50-லிருந்து ரூ.175 ஆகவும் ஆகஸ்ட் 1999 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**ின் கம்பி உதவியாளர் தகுதிகாண் தேர்வு:**

12.36 21 வயதானவர்கள், மின்சார ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரிந்து றைந்தது 5 வருட முன் அனுபவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட றுவனங்களில் பணியாற்றி 5 வருட முன் அனுபவம் டையவர்களாயின், அவர்கள் இத்தேர்விற்கு தகுதியுடைவர்கள் ஆவர். த்தேர்வு மூன்று வருடத்திற்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. அடுத்த தர்வு ஜூன் 2001-ல் நடைபெற உள்ளது. தேர்ச்சி பெற்றவர்களுக்கு ின் கம்பி உதவியாளர் தகுதிகாண் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டம்:**

**(முதல் நிலைத் திட்டம்)**

12.37 தொழில் நிறுவனங்களில் திறமையான தொழிலாளர்கள் தவையினைப் பூர்த்தி செய்திடவும் பயிற்சித் திட்டத்தினை மேம்படுத்தும் நாக்குடனும் உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் மேம்பாட்டுப் யிற்சித் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டம் கைவினைஞர் யிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, மகளிர் வாழ்வியல் தொழிற் பயிற்சி ற்றும் திறமைமிகு தொழிலாளர்களுக்கான வாழ்வியல் மேம்பாட்டுப் யிற்சி ஆகியவைகளைக் கொண்டதாகும்.

[2000 ஏப்ரல் 19

12.38 இத்திட்டம் கீழ்க்காணும் நீண்ட கால நோக்கங்களைக் கொண்டது:

1. தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர்கள் மற்றும் தொழிற் பழகுநர்கள் பயிற்சித் திட்டத்தில் தொழிற் பழகுநர்கள் பயிற்சி தரம் மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்தல்.
2. முன்னோக்குப் பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல் மற்றும் மாற்றியமைத்தல்.
3. தொழில் முன்னேற்றத்தில் மகளிரை அதிகமாகப் பங்கு கொள்ளச் செய்தல்.

12.39 மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் உலக வங்கி நிதியுதவியுடன் 1989 முதல் 1998 வரை ரூ.33.22 கோடி செலவில் செயல்பட கீழ்க்காணும் திட்டங்கள் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தின் மூலம் செயலாக்கப்பட்டன:

**மகளிருக்கான வாழ்வியல் பயிற்சித் திட்டம்:**

12.40 தொழிற்சாலைகளில் திறமை மிகுந்த மற்றும் திறமை குறைவான மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மகளிர் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்தவும், தரமுள்ளதாகவும் செய்திட 472 இருக்கைகள் கொண்ட ஐந்து மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**இயந்திரப் பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை:**

12.41 இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு மிகவும் அவசியமானதொன்றாகும். எனவே, அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சீராகப் பராமரிப்பதற்கு வட சென்னை, சேலம், கோவை, மதுரை, திருச்சி மற்றும் பேட்டையில் உள்ள ஆறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரப் பராமரிப்பு மையங்களும், அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாநில அளவில் இயந்திரப் பராமரிப்பு பணிமனை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 19]

**வாழ்வியல் தொழிற் பயிற்சி விரிவாக்கம்:**

12.42 மாறிவரும் தொழில்நுட்பம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கேற்ப கைவினைஞர்கள் மிகுதியாகத் தேவைப்படுவதனைக் கருத்தில் கொண்டு தேவைக்குத் தகுந்தவாறு 25 புதிய தொழிற் பிரிவுகள் 16 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**வாழ்வியல் முன்னேற்றப் பயிற்சி விரிவாக்கம்:**

12.43 புதுமை மிகு நவீன இயந்திரங்களைக் கையாள மேம்பட்ட தொழில்நுட்பவியலை தெரிந்து பயனடையும் வகையில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கோவை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் மூன்று தொழிற் பிரிவுகளுடன் போதுமான வசதிகளுடன் விரிவாக்கப்பட்டுள்ளது.

**ஒலி, ஒளி சாதன வசதிகள் அமைத்தல்:**

12.44 பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உபயோகம் உள்ளதாகவும் திறம்பட அமையவும், வகுப்பறை பயிற்று முறையினை மேம்படுத்தவும், 38 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒலி, ஒளி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருவிகளைக் கையாளுவதற்கான பயிற்சி அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களிலே உள்ள பயிற்றுநர்களுக்கு மத்திய அரசு பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்பட்டுள்ளது.

**அடிப்படைப் பயிற்சி மையங்கள்/தொடர் அறிவுரை மையங்கள்:**

12.45 தொழிற் பழகுநர் சட்டம் 1961-ன்படி தொழிற் பழகுநர் திட்டம் தொழிற் நிறுவனங்களில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களால், அமர்த்தப்படும் புதிய பயிற்சியில்லா தொழிற் பழகுநர்களுக்கு அடிப்படைப் பயிற்சி தொழிற் பழகுநர் திட்டத்தில் இந்த அடிப்படை பயிற்சி மையங்களில் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி உலக வங்கி நிதியுதவியுடன் முதல் நிலை திட்டத்தில் உணவாக்கம் மற்றும் பரிமாறுதல் தொழிற் பிரிவிற்கு அம்பத்தூரில் ஒன்றும் இரசாயன தொழிற் பிரிவிற்கு இராணிப்பேட்டையில் ஒன்றும் ஆக இரு அடிப்படை பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் தொழிற் பழகுநர்கள் உணவாக்கம் மற்றும் இரசாயன தொழிற் பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி பெற்று பயன் அடைகின்றனர்.

**இயந்திரங்களை நவீனப்படுத்துதல்:**

12.46 நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்களைக் கையாளும் தொழில்நுட்பப் பணியாளர்களையே நிறுவனங்கள் விரும்புகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வழக்கொழிந்த மற்றும் பழுதடைந்த இயந்திரம் மற்றும் கருவிகள் மாற்றியமைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகிறது.

**உயர் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்:**

12.47 உயர்தொழில்நுட்பத் திறத்தின் முன்னேற்றம் தொழில் வளர்ச்சியிலும் தானியங்கிக் கருவிகளிலும் பெருகி வருகிறது. இதனால் திறமையான தொழிலாளர் தலைமுறைக்கு இயந்திரங்கள் இயக்குவதிலும், பராமரிப்பதிலும் மற்றும் புதிய செயல்திறன் கொண்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகளில் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயிற்சி பெறும் பொருட்டு கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் உயர் தொழில்நுட்ப பயிற்சித் திட்டம் அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் தொடங்கப்பட்டது:

1. தானியங்கி இயந்திரத் தொழில்.
2. கணினி சார் வரைவு.
3. எழுத்து மற்றும் எண் மின்னணுவியல்.
4. தனி கணினி பராமரிப்பு.

**வேளாண்மை நிர்வாக தகவல் முறை அறிமுகப்படுத்துதல்:**

12.48 உலக வங்கியின் பரிந்துரையின்படி இவ்வியக்ககத்திற்கு மேலாண்மை நிர்வாகத் தகவல் முறை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த மேலாண்மை நிர்வாகத் தகவல் முறை, இம்மாநிலத்தில் உள்ள 53 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களின் செயலாக்கம் தொழிற் பிரிவுகள், தொழிற் பயிற்சி நிலையங்களுக்குத் தேவையான மூலதனம், தொழிற்சாலைகளில் பணிக்குத் தேவையான தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துவதற்குத் தொடர்பான நடவடிக்கை ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செயலாக்க வகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு கணினி மற்றும் இதர சார்பு கருவிகளும் புதுடெல்லி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தலைமை இயக்குநரகத்தில் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர் சேர்க்கை, வரவு, செலவு, தொழிற்தேர்வு, பயிற்றுநர் பயிற்சி போன்ற 15 வகையான மென்பொருள் நிரல்கள் தயாரிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**எதிர்காலத் திட்டங்கள்:**

12.49 தற்போது இயங்கிவரும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை இனிவரும் காலங்களில் மேன்மேலும் வலுப்படுத்தவும், அவைகளின் செயலாக்கத்தினை விரிவுபடுத்துவதற்கும் கீழ்காணும் முன்னோடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு வருகிறது:

**அத்திட்டங்களாவன:**

1. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனமாக்குவதைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.
2. தொழிற்சாலைகளில் அவ்வப்போது மாறிவரும் தேவைக்கேற்ப பல்வகை திறம் வாய்ந்த தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்.
3. முன்மாதிரியான தொழிற் பயிற்சி நிலையங்களை உருவாக்குதல்.
4. வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு இணையாக பாடத் திட்டங்களில் அவ்வப்போது மாற்றங்கள் செய்தல்.
5. தேர்வு முறைகளில் கணினி மயமாக்கம் செய்தல்.
6. தொழிற் பிரிவுகளை மாற்றியமைத்தல்.
7. முன்னாள் தொழிற் பயிற்சியாளர்கள் பயனடைய கீழ்க்காணும் குறுகிய கால தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்துதல்.
   1. சி.என்.சி. செயல்முறைத் திட்டம்.
   2. சி.ஏ.டி. செயல்முறைத் திட்டம்.
   3. சி.இ.டபிள்யு. மோட்டார் வாகன பொறியியல் மற்றும்
   4. டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆப்பரேட்டர்.
8. தொழில்நுட்ப முன்னேற்ற பயிற்சி, திட்டமிடுதல் மற்றும் நிர்வாகத் திறன் போன்றவைகளை வலுப்படுத்த உலக வங்கி நிதியுதவியுடன் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் நிலை செயலாக்கம் மாநில அரசு மற்றும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2000 ஏப்ரல் 19

# அத்தியாயம் -13

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

13.1 அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். இது முற்றிலும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானதாகும்.

13.2 இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம் இந்தியர்களுக்கு அயல்நாடுகளில் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெற பதிவு செய்வதாகும். இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.50 இலட்சம் ஆகும். அதன் வழங்கப்பட்ட மூலதனம் ரூ.15 இலட்சமாகும்.

13.3 கடந்த எட்டு ஆண்டுகளாக இந்நிறுவனம் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இன்னும் கணக்கு முடிக்கப்படாமல் உள்ள 1999-2000 ஆம் ஆண்டிலும் இந்நிறுவனம் இலாபம் ஈட்டும் நிலையிலேயே உள்ளது. 31-3-1999 அன்று அமைந்தவாறு, இந்நிறுவனத்தின் மொத்த இலாபம் ரூ.14.52 இலட்சமாகும். இந்நிறுவனம் 1995-96 முதல் 1998-99 வரையுள்ள ஆண்டுகளில் 2 விழுக்காடு இலாபப் பங்கு அறிவித்துள்ளது.

13.4 தொடங்கிய காலம் முதல் 31-1-2000 வரை இந்நிறுவனம் மொத்தம் 5,438 நபர்களுக்கு அயல்நாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தந்துள்ளது.

13.5 இந்நிறுவனம் சவூதி அரேபிய நாட்டின் நலவாழ்வு அமைச்சகத்திற்காக அதிக எண்ணிக்கையில் மருத்துவர்களைத் தேர்வு செய்து வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக இத்தேர்வுகளுக்கான மையம் தில்லியாகவே இருந்து வந்தது. ஆயினும், 2000 ஆவது ஆண்டின் இத்தேர்வுக்கான மையங்களில் ஒன்றாக சென்னையைக் குறிப்பிட்டு பெறுவதில் இந்நிறுவனம் வெற்றி பெற்றுள்ளது. அதற்கிணங்க, இந்நிறுவனம் பிப்ரவரி, 2000-ல் இத்தேர்வுக்கான நேர்க்காணல்களைச் சென்னையில் நடத்தியுள்ளது. இது, இந்நிறுவனம் விண்ணப்பதாரர்களின் ஏற்பு விழுக்காட்டையும் தேர்ந்தெடுக்கப்படுவோரின் எண்ணிக்கையையும் மேம்படுத்த உதவியுள்ளது.

13.6 இந்நிறுவனம் தற்போது இந்திய மென்பொருள் தொழில் வல்லுநர்களை அமெரிக்காவில் பணியமர்த்துவதற்கேற்ப குறிப்பிடத்தக்க தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்தத் தேர்வுகளுக்கான செய்முறைகளில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.



2000 ஏப்ரல் 19]

13.7 தன் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்ததன் மூலம் இந்நிறுவனம் விமானப் பயணச் சீட்டுத் தொழிலும் செய்து வருகிறது. இச்செயல்பாட்டில் கூட அது நல்ல இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனத்திற்கு உலக விமானப் பயணியர் கழக (IATA) விண்ணப்பதாரர் தகுதிநிலை வழங்கப்பட்டுள்ளதால், அது தன் விமானப் பயணச்சீட்டுத் தொழிலை இன்னும் மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது. இந்நிறுவனம் விரைவில் தனக்கென விமானப் பயணச்சீட்டு இருப்பு வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. விமானப் பயணச்சீட்டு தொழில் தவிர, இந்நிறுவனம் அதன் மனுதாரர்களுக்கு மட்டுமின்றிப் பொதுமக்களுக்கும்கூட பாஸ்போர்ட் பெற்றுத்தரும் பணியையும் செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் அனைத்துப் பணிகளிலும் கணினி பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் இணைய (Internet) தொடர்பைப் பெற்றுள்ளது. தன் இணைய தளத்தையும் நிறுவியுள்ளது. இந்நிறுவனம் தன் செயல்திறனை இன்னும் மேம்படுத்தும் வகையில் தன் செயல்பாடுகளைக் கீழ்க்குறித்த இனங்களில் விரிவாக்கம் செய்வது பற்றி ஆய்வு செய்து வருகிறது:

**தனியார் நிறுவனங்களின் உள்நாட்டு ஆள் தேவையை நிறைவு செய்தல்:**

ஆஸ்திரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளுக்குக் குடிபெயர்வதற்கான ஆலோசனைப் பணிகளை வழங்குவது.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அளிக்கப்படும் தொழில் சார்ந்த மேற்படிப்புகளைத் தொடர விரும்பும் விண்ணப்பதாரர்களுக்குப் பயிற்சியும் வழிகாட்டுதலும் அளிப்பது.

223301

## அத்தியாயம்-14

### 2000-2001 ஆம் ஆண்டிற்கான அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பகுதி-2 திட்டங்கள்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளின்கீழ் தொழிலாளர், தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைகளுக்கென்று 2000-2001 ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் பகுதி-2 திட்டப் பணிகளை நிறைவேற்ற அரசு ரூ.15.40 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

| வரிசை எண் | விவரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | தொழிலாளர் துறை | |
| 1 | தலைமை அலுவலகம் மற்றும் வட்டார அலுவலகங்களில் கணினி நிறுவுதல் | 2.25 |
| 2 | கோயம்புத்தூரில் துறையின் மையக் கட்டடத்தில் ஒரு தானியங்கி மின்னணு தொலைபேசி இணைப்பகம் அமைத்தல் | 1.40 |
| | தொழிற்சாலைகள் துறை | |
| 3 | சென்னை மண்டல II, III, IV மற்றும் ஈரோடு ஆகிய நான்கு தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகங்களைக் கணினி மயமாக்குதல். | 3.00 |
| | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | |
| 4 | கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை கணினி மயமாக்கல் | 2.25 |
| 5 | கணினியில் பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் | 1.00 |
| 6 | தர்மபுரி தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு முழுநேரமும் மின்சாரம் வழங்குதல் | 5.50 |
| | மொத்தம் | **15.40** |